# இலங்கைப் பொருளாதாரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L. Edward. Perris
Main Street
Pesalai

# இலங்கைப் பொருளாதாரம்

ஆர். ஜெயரத்தினராசா, B. A. Hons. (Cey.), M. A. (Cey.)
விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
இலங்கைப் பல்கலைக்கழகம்,
கொழும்பு வளாகம்,
கொழும்பு 3.

1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு டிசெம்பர் 1978.

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L. Edward Pieris
Main Street
Pesalai.

## சமர்ப்பணம்

இந்நாட்டில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்ற
புதியதொரு பொருளியலாளர் பரம்பரை
யினரை உருவாக்குவதற்கு அயராதுழைத்த
ஆரம்ப முன்னோடிகளும்
எனது பேராசான்களுமான

**பேராசிரியர் செல்வரத்தினம் இராசரத்தினம்**
பொருளியற்றுறைத் தலைவர்,
யாழ் வளாகம்,

**திரு. நா. பாலகிருஷ்ணன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
யாழ் வளாகம்

ஆகிய இருவருக்கும்

**என் நன்றி கலந்த இதயக் காணிக்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

என்னுரை vii

1. பொருளாதார அமைப்பும் தேசியவருமானப் பங்கீட்டு முறையும் 1
2. கிராமியப் பொருளாதாரம் 22
3. பெருந்தோட்ட விவசாயம் 56
4. காணிச் சீர்திருத்தம் 75
5. கைத்தொழிலாக்கம் 94
6. சனத்தொகை வளர்ச்சியும், சனத்தொகைக் கொள்கையும் 117
7. வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதிநிலுவைப் பிரச்சினைகளும் 141
8. 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை 168

உசாத்துணை நூல்கள் 179

கச்சாய் வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## முன்னுரை

இன்று பொருளியல் என்பது பல்கலைக்கழக மாணவர்களும், பாடசாலை உயர்வகுப்பு மாணவர்களும் கற்கும் ஒரு பாடமாக மட்டுமன்றி, ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்தின் பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்பச் செம்மையான ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதற்கு அவசியமான ஒரு இயலாகவும் காணப்படுகின்றது. ஆனாலும் எமது நாட்டின் பொருளாதாரத்தினைச் சிறப்பான முறையில் அறிந்துகொள்வதற்கான சாதனங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எமது நாட்டுப் பொருளியலாளர்களினால் எழுதப்படும் நூல்களும் கட்டுரைகளும் கூட பெருமளவிற்கு ஆங்கிலத்திலேயே எழுதப்படுகின்றன. இதற்குக் காரணம் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆங்கிலம் தெரியாதவனால் விளங்கவும் விமரிசிக்கவும் முடியாது என்ற மனப்பான்மையாக அல்லது ஆங்கிலத்தில் எழுதுவதன் மூலம் அதனைப் படித்துப் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்ற எதிர்பார்க்கையாக இருக்கலாம்.

இலங்கைப் பொருளாதாரம் பற்றித் தமிழில் எழுதப்பட்ட இந்நூல் பொருளியல் மாணவர்களை மட்டும் கருத்திற் கொள்ளாது இந் நாட்டின் பொருளாதாரத்தினை அறிவதற்கு ஆர்வமுள்ளவர்களையும் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளது. இத்தகைய முறையில் பொருளியல் நூலொன்றை எழுதுவது இலகுவானதொன்றல்ல. புள்ளி விபரங்களையும் தகவல்களையும் பூரணமாகப் பெறுவதில் ஏற்பட்ட சிரமங்கள் எனது இம் முயற்சியினை மேலும் கடினமாக்கிற்று, இது எனது முதலாவது நூலாக இருப்பதனால் இதனைப் படிப்பவர்களால் எனக்கு எடுத்துக்காட்டப்படும் குறைபாடுகளும் கண்டனங்களும் பாராட்டுக்களும் கூட எனது முயற்சிக்கு ஊக்கத்தினையும், சிந்தனைக்குத் தெளிவினையும், போக்கில் நிதானத்தினையும் அளிப்பதாக அமையுமென நம்புகிறேன்.

## நன்றியுரை

உலகிலுள்ள மனித ஆக்கங்கள் அனைத்துமே கூட்டு முயற்சிகளின் விளைவேயாகும். மனித சிந்தனைகளும் இதற்குப் புறநடையானதல்ல. இந்நூலில் எழுதப்பட்டுள்ள பல அம்சங்களை எனது தனியுடைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என உரிமைபாராட்டும் சின்னத்தனமான மனப்பான்மை எனக் கில்லை. இவற்றில் பெரும்பாலானவை பலநூல்களிலிருந்தும், பலரது கலந்துரையாடல்களிலிருந்தும் பெறப்பட்டவையாகும். இந்த அடிப்படையில் நன்றி கூறுவதானால் அது ஒரு நீண்ட பட்டியலாகவே அமைந்துவிடும். எனவே எனது முயற்சி நூலுருப் பெறுவதற்கு நேரடியாக உதவிபுரிந்தவர்களை மட்டுமே இங்கு குறிப்பிட்டிருக் கிறேன்.

இந்நூல் எழுதுவதற்கு ஆரம்பத்திலிருந்தே என்னை ஊக்குவித்து அச்சிடுவதற்கும் பலவகையில் உதவி புரிந்த எனது நண்பரும் சகபாடியுமான கே. எஸ். நடராசாவுக்கு நான் பெரிதும் கடப்பாடு உடையேன். மேலும் இந்நூலிற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதிலும், புள்ளிவிபர அட்டவணைகளைத் தயாரிப்பதிலும் பெரும்பங்கு கொண்ட எனது சுவேந்திரினியின் உதவியும், சகிப்புத் தன்மையும்கூட எனது நன்றிக்குரியன. அடுத்து இந்நூலின் கைப் பிரதியினைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்துதவிய ஸாஹிறாக் கல்லூரித் தமிழ்ப்பிரிவு மேற்பார்வையாளர் ஜனாப் எம். எஸ். அல்லா பிச்சைக்கும் என் நன்றிகள். மேலும் பயன்மிகு ஆலோசனைகள் கூறிப் பல வகையிலும் ஊக்குவித்த எனது நண்பன் ஜனாப் ஏ. முகம்மது நகியா என் நினைவுக்குரியவர். அட்டைப்படத்தை அழகுற வரைந்த வீரகேசரி நிறுவனத்தைச் சேர்ந்த மொறுயஸ் அவர்களுக்கும், ஆக்க பூர்வமான உதவிகளைச் செய்த எனது மாணவர்களான ஐ. நடேசன், செல்வி த. நந்தினி ஆகியோருக்கும், அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கு வதில் உதவிபுரிந்த வி. எஸ். ஜேசுதாசன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**ஆர். ஜெயரத்தினராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 1

# பொருளாதார அமைப்பும் தேசிய வருமானப் பங்கீட்டு முறையும்

இன்றைய சர்வதேசப் பொருளாதார அமைப்பினது பிரதான அம்சங்களில் ஒன்றாக, வளர்ச்சியடைந்த அல்லது செல்வந்த நாடுகளுக்கும், குறைவிருத்தி அல்லது அபிவிருத்தியடைகின்ற அல்லது வறிய நாடுகளுக்குமிடையே அகன்று செல்லுகின்ற இடைவெளி காணப்படுகின்றது. மேலும், பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வருமான ஏற்றத்தாழ்வில் காணப்படும் இடைவெளி அதிகரித்துச் செல்வது மற்றுமொரு குறிப்பிடக்கூடிய அம்சமாக உள்ளது. ''அகன்று செல்லும் இடைவெளி'' என்ற தத்துவம் சர்வதேச ரீதியாக மட்டுமன்றி தேசிய ரீதியாகக் கூட இன்று பல நாடுகளுக்குப் பொருத்தமுடையதாகவுள்ளது. எனவேதான், இந்த நாடுகளைப் பொறுத்தமட்டில், 'மெய்த் தேசிய வருமானத்தினை அல்லது தலா வருமானத்தினை அதிகரித்தலே பொருளாதார வளர்ச்சி' என மரபு ரீதியான பொருளாதார பண்டிதர்களினால் வரையறை செய்யப்படும் வரைவிலக்கணம் பொருத்தமற்றதாக உள்ளது,

பொருளாதார வளர்ச்சி என்பது நவீனமயத்தினைக் குறித்து நிற்கின்றது. இது மக்களின் அடிப்படையான மனப்பான்மையிலும், சமூக பொருளாதார அரசியல் நிறுவன முறையிலும் ஏற்படும் மாற்றங்களையுமே முக்கியமாகக் கருதுகின்றது. அத்துடன் உற்பத்தி நுகர்வு, பங்கீடு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களினால் சமூகத்தின் சிறுபான்மையினரா அல்லது பெரும்பான்மையினரா நன்மை அடைகின்றார்கள் என்பதே இங்கு மிகவும் முக்கியமானதாகும். வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில் தலா வருமானம் அதிகரிக்கும்போது மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் ஓரளவு ஏற்படத்தான் செய்யும். ஆனால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தலா வருமானம் அதிகரிக்கும் போது இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவதற்குத் தடையாக அதன் அமைப்பு ரீதியானதும் நிறுவன ரீதியானதுமான பலவீனமும் குறைபாடுகளும் காரணமாக அமைந்துள்ளன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரம்

இலங்கையின் பொருளாதாரத்தினைப் பொதுவாக அபிவிருத்தியடைந்துவரும் அல்லது குறைவிருத்திப் பொருளாதாரம் என வரையறை செய்வது மரபாகும். இவ்வாறு உலக நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் என தலா வருமானத்தினை அடிப்படையாகக்கொண்டே பாகுபடுத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிபுணர்களின் வரைவிலக்கணப் படி ஐக்கிய அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் தலா வருமானத்துடன் ஒப்பிடும்போது ¼ பங்கிற்குக் குறைவான வருமானத்தினைப் பெறுகின்ற நாடுகளைக் குறிப்பதாகும். பேராசிரியர் இடட்லி சியர்ஸ் (Prof. Dudley Seers) 500 டொலருக்குக் குறைவான தலா வருமானத்தினைப் பெறுகின்ற நாடுகளையே வளர்ச்சிகுன்றிய நாடுகள் என வரையறை செய்கின்றார்.

### அட்டவணை 1. I

உலக நாடுகளின் தலா வருமானம்
(அமெரிக்க டொலர்களில்)

| நாடுகள் | 1968 | 1973 |
|---|---|---|
| அமெரிக்கா | 3980 | 5918 |
| கனடா | 2460 | 5673 |
| ஜப்பான் | 1190 | 3562 |
| இங்கிலாந்து | 1790 | 3072 |
| சிங்கப்பூர் | — | 1660 |
| மலேசியா | 330 | 482 |
| இலங்கை | 180 | 189 |
| பாகிஸ்தான் | 100 | 121 |
| இந்தியா | 100 | 103 |

மூலம்: U. N. Statistical Year Book 1975
World Bank Atlas 1970

அட்டவணை 1. I இல் 1968ஆம், 1973ஆம் ஆண்டுகளில் உலக நாடுகள் சிலவற்றினது தலா வருமானம் காட்டப்பட்டுள்ளது. இவ் வட்டவணையின்படி அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளினது தலா வருமானம் இலங்கையின் தலா வருமானத்தினை விட 30 மடங்கு அதிகமானதாகவும் இந்தியாவினதைவிட 59 மடங்கு அதிகமாகவும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 1968ஆம் ஆண்டு தலா வருமானத்தினையும் 1973ஆம் ஆண்டு தலா வருமானத்தினையும் ஒப்பிடும்போது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குமிடையிலான அகன்றுசெல்லும் இடைவெளியினையும் இலகுவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 1968ஆம் ஆண்டு இலங்கையின் தலா வருமானம் அமெரிக்காவின் தலா வருமானத்தினைவிட 22 மடங்கு குறைவாகவும், கனடாவினதைவிட 13 மடங்கு மட்டுமே குறைவாகவும் இருந்துள்ளது. இதேபோன்றே இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகட்கும் வளர்ச்சியடைந்த நாடுகட்குமிடையிலான தலா வருமான இடைவெளியானது விரிந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

தலா வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலையினை ஒப்பிடுதலும், வகைப்படுத்தலும் பூரணத்துவம் வாய்ந்ததொன்ருக அமையமாட்டாது. ஏனெனில் ஒவ்வொரு நாடும் விலை மட்டம், தேசிய வருமானத்தைக் கணிக்கும் முறை, பொருளாதார அமைப்பு, உற்பத்திசெய்யும் பொருட்கள், நுகர்வுத் தேவை, சமூக கலாசார நிலை ஆகியவற்றில் வேறுபட்டிருப்பதுடன் நாணய மாற்று விகிதமும் ஒரே பெறுமதியில் இருப்பதில்லை. தலா வருமானம் கூடிய நாடுகளில் மூலவளங்களும், மனித சக்தியும் சிறப்பாகவும் பெருமளவிலும் பயன்படுத்தப்படுவதாகவும் குறைந்த தலா வருமானமுடைய நாடுகளில் இதற்கு எதிர்மாருன நிலை இருப்பதாகவும் கருதுவது தவருனதாகும். தலா வருமானம் குறைந்த நாடுகளான இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பெருந்தோட்டத்துறை, நவீன கைத்தொழில்துறை ஆகியனவற்றில் நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப முறைகள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இந்தியாவினது நவீன கைத்தொழில் துறையானது சர்வதேசரீதியாகப் போட்டியிடக்கூடியதாக வளர்ச்சியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தலா வருமானம் கூடிய நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்த நிலையிலிருப்பதாகவும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள மக்கள் எல்லோரும் வறுமைச் சகதிக்குள் அகப்பட்டுத் தத்தளிப்பதாகவும் கருதமுடியாது. மிகக் கூடிய தலா வருமானத்தினை உடைய நாடாகிய குவைத்தில் ஏற்றத் தாழ்வான வருமானப் பங்கீட்டின் காரணமாகப் பெருமளவு மக்கள் பிழைப்பு மட்டத்தில் வாழும் நிலையினைக் காணக்கூடியதாகவுள்ளது. இதே போன்று இலங்கையில் கறுவாத் தோட்டத்திலும் (Colombo 7.) மிகப் பெருஞ் செல்வர்களையும் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையில் இலவசக் கல்வி, இலவச சுகாதார மருத்துவ சேவைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு மானியம், உணவுப் பங்கீட்டுமுறை, சமூக பாதுகாப்புகள் ஆகியன நடைமுறையிலிருப்பதால் தலா வருமானம் குறைவான நிலையில் கூட பெருமளவு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகக் கீழான நிலையிலிருப்பதாகக் கூறமுடியாது.

எனவேதான் இன்று தலா வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிநிலையினையும், வாழ்க்கைத் தரத்தினையும் ஒப்பிடுதலில் குறைபாடுகள் இருப்பதால் வேறு பல சுட்டெண்களும், தரவுகளும் இதனுடன் சேர்க்கப்படுகின்றன. மக்களினது தலா புரதச்சத்து, கலோரிப் பெறுமானம் ஆகியவற்றின் நுகர்வு, தலா மருத்துவ வசதிகள், கல்விநிலை, வருமானப் பங்கீட்டு முறை, சிசுமரண விகிதம், தலா அரசாங்கச் செலவீடுகள் போன்றவற்றினையும் கருத்திற்கொள்ளும்போது மட்டுமே நாட்டு மக்களினது உண்மையான வாழ்க்கைத் தரத்தினை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். இலங்கையில், சுதந்திரமடைந்த காலம்தொட்டு ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் பொருளாதார வளர்ச்சியினை விட சமூக நலனுக்கே கூடிய முக்கியத்துவம் கொடுத்துவந்துள்ளன. இதனுல் தலா வருமான ரீதியாக நாடுகளின் நிலையினை ஒப்பிடும் போது காணப்படும் வாழ்க்கைத்தர வேறுபாட்டினை விட, இத் தரவுகளைக் கருத்திற்கொண்டு ஒப்புநோக்கும்போது காணப்படும் வேறுபாடு குறைவாகவே காணப்படும்.

சமீபகாலத்தில் பேராசிரியர் இடட்லி சியர்ஸ் உலகநாடுகளை (1) வளர்ச்சியடைந்த நாடுகள், (2) பொது உடைமை நாடுகள், (3) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எனப் பாகுபடுத்தும் மரபு ரீதியான மூன்று அகிலக் கோட்பாடானது இன்றைய சூழ்நிலையில் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ளார். இன்று உலக நாடுகள் எதிர்நோக்கும் மூன்று முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளான எரிபொருள் (சக்தி), உணவு, தொழில்நுட்பம் ஆகியவற்றில் எவ்வளவு தூரம் தன்னிறைவு பெற்றுள்ளன என்பதனை அடிப்படையாகக் கொண்டே புதிய பாகுபாடானது அமையவேண்டும் எனக் கூறுகிருர். நாடுகள் எவ்வளவுதூரம் தன்னிறைவு கண்டுள்ளன என்ற அம்சமே முக்கியமானதாகும் என்பதே இவரது வாதத்தின் அடிப்படையாகும். இந்த அடிப்படையில் நோக்கின் அமெரிக்கா, ரூசியா, சீன ஆகிய மூன்றுமே இத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நாடுகளாக உள்ளன என இடட்லி சியர்ஸ் கூறுகின்ருர். ஏனைய உலக நாடுகள் அனைத்தினையும் இம்மூன்று அம்சங்களைப் பொறுத்த மட்டிலும் தன்னிறைவு கொண்டிராத நாடுகள் என்ற அடிப்படையில் பொதுமைப்படுத்த சியர்ஸ் முனைகின்ருர். இந்த வகையில் கனடா, ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளையும், எத்தியோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியா, பங்காளதேஷ், இலங்கை போன்ற நாடுகளையும் ஒரே வகைப் பிரச்சினைகளைக் கொண்ட நாடுகளாகப் பொதுமைப்படுத்துதல் முற்றிலுமே பொருத்தமற்றதொன்றாகும். இன்றைய நிலையில் இலங்கை போன்ற நாடுகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எனக் கூறுவது மட்டுமே ஓரளவு பொருத்தமானதாகும்.

## இரட்டைப் பொருளாதாரமா? அல்லது முத்தன்மைப் பொருளாதாரமா?

இலங்கையின் பொருளாதார அமைப்பானது ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்தினைப் போன்று இரட்டைத் தன்மை வாய்ந்தது எனப் பல பொருளியலாளர்களாலும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இரட்டைப் பொருளாதாரம் எனும்போது தொழில்நுட்பம், மூலவளங்களின் பயன்பாடு, நாணயமயம் ஆகியவற்றினைப் பொறுத்தமட்டில் அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்ட இருபெரும் துறைகளைக் கொண்ட அமைப்பினைக் குறிப்பதாகும். இதில் நவீன துறையானது பெருந்தோட்டம், வர்த்தகம், நிதி, போக்குவரத்து, பொதுத் தொடர்புகள் போன்ற ஏனைய சேவைகளையும் கொண்ட அரசாங்க தனியார் துறைகளை உள்ளடக்கியதாகும் என வரையறை செய்யப்படுகின்றது. மரபுரீதியான துறையெனும்போது, மரபுரீதியான தொழில்நுட்பத்தினைக் கொண்டிருப்பதுடன் இதன் பிரதான தொழிலாக கிராமிய விவசாயமானது அமைந்திருக்கும். இத் துறையில் நாணயமயமாக்கம் குறைவாக இருப்பதுடன் சந்தைச் சக்திகளின் செயற்பாடுகளும் சிறிய அளவிலேயே அமைந்திருக்கும். இந்தப் பொருளாதார இரட்டைத்தன்மையானது பிரதேச ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் கூட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இரட்டைத் தன்மையினை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. விருத்தியடைந்த பிரதேசம், விருத்தியடையாத பிரதேசம் என்ற அடிப்படையிலும் மேற்கத்தேய கலாசாரம், மரபுரீதியான கலாசாரம் என்ற வகையிலும் இது விளக்கப்படுகிறது.

பல பொருளியலாளர்களால் விளக்கப்படுகின்ற இரட்டைத் தன்மையானது, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்ட காலனித்துவ ஆட்சியின் விளைவாக வளர்ச்சியடைந்த சர்வதேச வர்த்தகத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகுமென்பதில் சந்தேகமில்லை. இலங்கையில் நவீன துறையின் வளர்ச்சியானது ஆரம்ப காலங்களில் மரபுரீதியான துறையில் சிறிதளவு பாதிப்புக்களை மட்டும் ஏற்படுத்துவதாக இருந்தது. மரபுரீதியான துறையானது, அந்நியர் ஆட்சிக்காலம் முழுவதும் தனது அடிப்படையான தன்மைகளிலிருந்து பெருமளவு மாற்றமின்றியே இருந்துவந்துள்ளது. இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் பொருளாதாரத்தினை இரட்டைத் தன்மை வாய்ந்தது என விளக்கும் மேற்கத்தேய மரபு சார்ந்த பொருளியலாளர்கள் இந்த அடிப்படையிலேயே வரையறைசெய்து வரலாற்று ரீதியாகவும் விளக்கம்கொடுக்க முனைகின்றார்கள்.

வேறு சில மேற்கத்தேய பொருளியலாளர்கள் இலங்கைபோன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முத்தன்மைப் பொருளாதார அமைப்பினைக்கொண்டதென வாதிடுகின்றார்கள். இந்த முத்தன்மை யானது (1) நகர்ப் பொருளாதாரம், (2) பெருந்தோட்டப் பொருளாதாரம், (3) கிராமியப் பொருளாதாரம் என வகைப் படுத்தப்படுகின்றது. நகர்ப்பொருளாதாரம் எனும்போது, வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள், அரசாங்க காரியாலயங்கள் ஆகியவற்றினை அதிகளவில் கொண்ட நவீன பணப் பொருளாதாரத்தினைக் குறிப்ப தாகும். பெருந்தோட்டப் பொருளாதாரம் ஏற்றுமதி விவசாயத் துறையினையும், கிராமியப் பொருளாதாரம் மரபுரீதியான விவசா யத்துறையினையும் பெருமளவு உள்ளடக்கியதாகவிருக்கும். பெருந் தோட்டத்துறை, கிராமியத்துறை என்பனபற்றி பின்னைய அத்தி யாயங்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் பல நகரங்கள் இருப்பினும் நகர்ப் பொருளாதா ரத்துக்குரிய முக்கிய தகமைகள் பல கொழும்புக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது. நகர்ப் பொருளாதாரத்தில் ஒரு ஈர்ப்புச் சக்தியும், கிராமியப் பொருளாதாரத்திலிருந்து நகருக்கு ஒரு உந்தற் சக்தியும் இயங்கிக்கொண்டிருக்கும் என்ற அம்சம் இலங்கையில் கொழும்புநகருக்கு மட்டுமே பொருத்தமாகவுள்ளது. இலங்கையில் கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பெருமளவு அரசாங்கக் காரியாலயங்கள், கைத்தொழிற்சாலைகள், உள்நாட்டு வெளிநாட்டுப் பெரும் வர்த்தக நிறுவனங்கள் அமைந்திருப்பதனால் கூடிய வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய இடமாக இது காணப்படு கின்றது. மேலும் நகர்ப்புறத்தில் கூடிய வாழ்க்கைச் செலவு, தொழிற்சங்க இயக்கங்களின் வளர்ச்சி ஆகியனவும் கிராமப்புறத் துடன் ஒப்பிடும்போது உயர்ந்த வேதனம் இங்கு வழங்கப்படு வதற்கு மற்றுமொரு முக்கிய காரணியாக அமைந்திருக்கிறது. எனவே கொழும்பு நகர் கூடிய வேலை வாய்ப்பினையும், உயர்ந்த வேதன மட்டத்தினையும் வழங்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதனால் மட்டும் அது ஈர்ப்புச் சக்தியினைக் கொண்டிருப்பதாகக் கருதமுடி யாது. அத்துடன் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது கல்வி சுகாதார வைத்திய சேவைகளும், போக்குவரத்து, மின்சா ரம், நீர் விநியோகம் போன்ற வசதிகளும் பெருமளவிற் கொழும்பு நகருக்கும் ஏனைய சில நகரங்களுக்குமே மேற்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சுதந்திரமடைந்தபின்பு கிராமப்புறங்கட்கு ஓரளவு இவ் வசதிகள் அதிகரிக்கப்பட்டமையினுல் கொழும்பு நகரின் ஈர்ப்புச் சக்தியானது அண்மைக்காலத்தில் சிறிதளவு குறைவடைந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார அமைப்பினை இரட்டைத் தன்மை வாய்ந்தது என்று கூறுவதனைவிட முத்தன்மை வாய்ந்தது என்று கூறுவது கூடியளவிற்குப் பொருத்தமுடையதாக இருப்பினும் யதார்த்தநிலையினைப் பூரணமாகப் பிரதிபலிப்பதாகக் கூறமுடியாது. இம்மூன்று துறைகட்குமிடையேயும் மேலும் பல புதிய பிரிவுகளை அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. மரபு ரீதியான கிராமியத்துறைக்குள் நவீன தொழில்நுட்ப முறையில் அமைந்த முதலாளித்துவ விவசாய முறையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று கிராமிய பொருளாதாரத்திற்குள் இவ்விரு வேறுபட்ட அமைப்புக்களைத் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. நகர்ப் பொருளாதாரத்திற்குள் கறுப்புப் பொருளாதாரம், வெளிப்படையான பொருளாதாரம் என இருபெரும் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறைக்குள்ளேயே ஒரு சிற்றுடைமை விவசாய உற்பத்தி முறையானது இலங்கையிலுண்டு. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஒவ்வொன்றும் சில தனித்துவமான தன்மைகளைக் கொண்டிருப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட கோட்பாடுகளைப் பயன்படுத்தும்போது அது யதார்த்த நிலையினைப் பூரணமாகப் பிரதிபலிப்பதாக இருக்கமாட்டாது.

### தேசிய வருமானமும் தலா வருமானமும்

தேசிய வருமானமானது குறிப்பிட்ட ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப்பொருட்கள் சேவையினது பணரீதியிலமைந்த பெறுமதியினைக் குறிப்பதாகும். இலங்கையின் தேசிய வருமானக் கணிப்பீட்டு முறையானது 1947இல் தாஸ். குப்தா (Das Gupta) என்பவரினுல் ஆரம்பிக்கப்பட்டதெனலாம். இவரது கணிப்பீடு சுய விருப்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் 1937, 1938, 1942, 1943, 1944ஆம் ஆண்டுகாலப் பகுதிகளைக் கொண்ட கணிப்பீடாக இருந்தது. ஆனுல், 1952ஆம் ஆண்டு கே. வில்லியம்ஸ் (K. Williams) என்பவரால் திருத்தி வெளியிடப்பட்ட முறையினை அடிப்படையாகக்கொண்டே இன்றைய கணிப்பீடானது அமைந்திருக்கின்றது. இது மொத்தத் தேசிய உற்பத்தி, மொத்தத் தேசியவருமானம் ஆகியவற்றைக் கொண்ட கணிப்பீடாக இருப்பதுடன் காரணிச் செலவினுல் கணிப்பிட்டு சந்தை விலைக்கு மாற்றும் முறையாகவும் அமைந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியானது 1959இல், 5,893·3 மில்லியன் ரூபாவாக இருந்து, 1977ஆம் ஆண்டு 11,951·8 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. பதினெட்டு வருடங்களிலே இலங்கையின் தேசிய வருமானமானது 103 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளது. வருடமொன்றுக்குத் தேசிய வருமான அதிகரிப்பானது சராசரியாக 5·7 சதவீதமாக அதிகரித்துச் சென்றுள்ளது என்பது பொருளாதாரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிப்பினையோ அல்லது உயரிய வளர்ச்சி வீதத்தினையோ குறிப்பதாகக் கருதமுடியாது. ஏனெனில், சனத்தொகையானது அதிகரித்துச் செல்லும் ஒரு பொருளாதாரத்தில் சேவைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பினுலும் மொத்தத் தேசிய உற்பத்தியானது அதிகரித்துச் செல்வதாக அமைந்திருக்கும்.

## அட்டவணை 1. II

நிலையான காரணிச் செலவு விலைகளில் (1959)
மொத்தத் தேசிய உற்பத்தி, தலா வருமானம் ஆகியவற்றின் மாற்றம்
1959 — 1977

| காலம் | மொத்தத் தேசிய உற்பத்தி (மில்லியன் ரூபாய்களில்) | தலா வருமானம் (ரூபாய்களில்) |
|---|---|---|
| 1959 | 5,893·3 | 612 |
| 1965 | 7,550·6 | 676 |
| 1970 | 9,686·4 | 774 |
| 1975 | 11,114·8 | 822 |
| 1977 | 11,951·8 | 855 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

ஒரு பொருளாதாரத்தினது மொத்தத் தேசிய உற்பத்தியினது மாற்றத்தினைவிட தலா வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினைப் பற்றிய ஆய்வே இதனை விளக்குவதற்குக் கூடியளவு பொருத்தமுடையதாகவிருக்கும். தலா வருமானம் எனும்போது அது தலைக்குரிய வருமானம் என்ற கருத்தில் ஒரு நாட்டினது மொத்தத் தேசிய வருமானத்தினை மொத்தச் சனத்தொகையினுல் பிரித்துக் கணிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆனுல் மொத்தச் சனத்தொகையெனும்போது சிறுவர்கள், வயோதிபர்கள் தவிர்ந்த ஏனையோர் என்ற கருத்தினையே குறித்து நிற்கின்றது. இவ்வாறு நாட்டின் உற்பத்தியில் பங்குகொள்ளாத சிறுவர்களையும், வயோதிபர்களையும் தவிர்த்துக் கணிக்கும்போது மட்டுமே தலா வருமானமானது நாட்டின் உற்பத்தித்திறனை ஓரளவு பிரதிபலிப்பதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தலா வருமானமானது 1959இல் 612 ரூபாவாக விருந்து 1977இல் 855 ரூபாவாக அல்லது 40 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்துள்ளது. இக்காலப் பகுதியில் வருட மொன்றுக்கு ஏறக்குறைய 2·2 சதவீதமான அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு வருடமொன்றுக்கு 5·7 சதவீதமாக இருக்கும் நிலையில் தலா வருமானத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 2·2 சதவீதமாக இருப்பதற்குச் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணியாகும். இலங்கையின் பொருளாதாரமானது மொத்தத் தேசிய உற்பத்தி, தலா வருமானம் என்ற இரு வகையில் நோக்கும்போது கூட மிகக் குறைந்த வளர்ச்சி வேகத்தினையே கொண்டிருக்கின்றது. இக்காலப் பகுதியில் உற்பத்தித் திறனிலே கூடிய அதிகரிப்பு ஏற்படாமை, பொருளாதார அமைப்பில் குறிப்பிடக்கூடியளவு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதனையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

## துறைரீதியான தேசிய வருமானப் பங்கீட்டு முறை

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி, தலா வருமானம் ஆகியவற்றில் வேகமான அதிகரிப்பு ஏற்படாமைக்கு இதனது விருத்தியடையாத உற்பத்தித்திறன் குறைந்த துறைகளே காரணமாகவுள்ளது. பொதுவாக ஒரு பொருளாதாரத்தினைப் பரந்த அடிப்படையில் விவசாயத்துறை, கைத்தொழிற்துறை, சேவைகள் என மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்த முடியும். எந்த ஒரு பொருளாதாரத்திலும் உற்பத்தித்திறன் கூடிய அல்லது கூடிய வருமானத்தினை அளிக்கக்கூடிய துறையாக கைத்தொழிற்துறையும் குறைந்தளவு உற்பத்தித் திறன் கொண்ட துறையாக விவசாயத் துறையும் அமைந்திருக்கும்.

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியினை துறை ரீதியாக நோக்கும்போது உற்பத்தித்திறன் குறைந்த துறைகளான விவசாயமும் சேவைகளும் மிகக்கூடிய பங்கினை வகிக்கின்றன. 1955ஆம் ஆண்டு மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயமும் சேவைகளும் ஏறக்குறைய 85 சதவீத பங்கினை வகித்துள்ளன. ஆனால் 1976ஆம் ஆண்டு கூட இவ்விருதுறைகளும் மொத்தத் தேசிய உற்பத்தியில் 79 சதவீத பங்கினைக் கொண்டுள்ளன. கைத்தொழில் துறையானது 1955இல் 14·8 சதவீதமாக இருந்து 1976இல் 21 சதவீதமாக மட்டுமே அதிகரித்துள்ளது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 21 வருடங்களில் உற்பத்தித் திறன் குறைந்த துறைகளில் ஏறக்குறைய 6 சதவீத வீழ்ச்சி மட்டுமே ஏற்பட்டுள்ளது. அத்துடன் கைத்தொழிற் துறையிலும் பெரும் அதிகரிப்பு இக்காலப் பகுதியில் ஏற்படவில்லை எனலாம். இலங்கையின் குறைந்த தலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்திற்கு மொத்தத் தேசிய உற்பத்தியில் உற்பத்தித் திறன் குறைந்த துறைகள் மிகக்கூடிய பங்கினை வகிப்பதே காரணமாகும். மேலும் கைத்தொழிற்றுறையில் கூடிய அதிகரிப்பு இக்காலத்தில் ஏற்படாமையே தலா வருமானத்தில் பெரும் அதிகரிப்பு ஏற்படாமைக்குப் பொறுப்பாக இருந்திருக்கின்றது.

அட்டவணை 1. III

துறைரீதியாக மொத்தத் தேசிய உற்பத்தி 1955 — 1976
(சத வீதமாக)

| துறை | 1955 | 1965 | 1976 |
|---|---|---|---|
| 1. விவசாயம் (மீன்பிடி, காட்டுத்தொழில், வேட்டையாடல்) | 50·7 | 36·7 | 31·2 |
| (அ) பெருந்தோட்ட விவசாயம் | 26·4 | 20·9 | 12·8 |
| (ஆ) கிராமிய விவசாயம் | 24·3 | 15·8 | 18·4 |
| 2. கைத்தொழில் | 14·8 | 16·6 | 21·0 |
| (அ) தயாரிப்புத் தொழில் | 8·5 | 12·4 | 13·0 |
| (ஆ) ஏனையவை | 6·3 | 4·2 | 8·0 |
| 3. சேவைகள் | 34·5 | 46·7 | 47·8 |
| (அ) போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித் தொடர்பு | 4·6 | 9·8 | 10·0 |
| (ஆ) வங்கி, காப்புறுதி | 0·4 | 1·1 | 1·7 |
| (இ) ஏனையவை | 29·5 | 35·8 | 36·1 |
| | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்
குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்

விவசாயத்துறையானது மொத்தத் தேசிய உற்பத்தியில் வகித்த பங்கானது அண்மைக் காலத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருப்பது குறிப்பிடக்கூடியதொரு அம்சமாக அமைந்திருக்கிறது. 1955இல் 50·7 சத வீதமாக இருந்த விவசாயத்துறையானது 1976இல் 31·2 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. விவசாயத் துறையானது வீழ்ச்சியடைந்து சென்றமைக்குப் பெருந்தோட்ட விவசாயத்தின் வீழ்ச்சிப் போக்கே முக்கிய காரணியாக உள்ளது. இலங்கையின் தேசிய உற்பத்தியில் பெருந்தோட்ட விவசாயம் கொண்டுள்ள முக்கியத்துவமானது படிப்படியாகக் குறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் தன்மையுடையதாகவுள்ளது. 1955ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மொத்த விவசாய உற்பத்தியில் பெருந்தோட்ட விவசாய மானது அரைவாசிப் பங்கினைக் கொண்டிருந்தது. பெருந்தோட்ட விவசாயமானது கிராமிய விவசாயத்தினைப் போலன்றி நவீன தொழில்நுட்ப, விஞ்ஞான முறைகள் அதிகளவில் பயன்படுத்தப் படுவதால் உற்பத்தித் திறன் கூடிய விவசாயமாகும். தென்கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூர், மலேசியாவிற்கு அடுத்ததாக இலங்கை கூடிய தலா வருமானத்தினைக் கொண்ட நாடாக இருப்பதற்கு நன்கு வளர்ச்சியடைந்த பெருந்தோட்டத் துறையே முக்கிய காரண மாகும். ஆனால் 1976இல் பெருந்தோட்ட விவசாயம் 12·8 சதவீத மாகவும் கிராமிய விவசாயமானது 18·4 சதவீதமாகவுமுள்ளது. இலங்கை, பெருந்தோட்ட விவசாயநாடு என்ற கருத்து மாறி விவசாய நாடு என்ற கருத்து வலுவடைந்து செல்வதனையே அண்மைக்காலப் போக்குகள் உணர்த்துவதாகவுள்ளன.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்லுகின்றபோது மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறையானது கொண் டுள்ள பங்கானது படிப்படியாகக் குறைந்து செல்வதும் கைத் தொழிற்றுறையும், உற்பத்தித்திறன் கூடிய சேவைகள் துறையும் படிப்படியாக அதிகரித்துச் செல்வதும் பல வளர்ச்சியடைந்த நாடு களின் பொருளாதார வரலாற்றில் ஒரு இயற்பண்பாகக் காணப் படுகின்றது. இந்த அம்சத்தினை இலங்கையிலும் ஓரளவு அவதா னிக்கக்கூடியதாக உள்ளது. கைத்தொழிற்றுறையானது 1955இல் 14·8 சதவீதமாக இருந்து 1976இல் 21 சதவீதமாக அதிகரித் திருப்பினும் கூட அதில் தயாரிப்புத் தொழில்கள் 13 சதவீதமாக வும், கட்டிடவாக்கம், மின்சாரம், நீர் விநியோகம், வாயு, எரி பொருள் போன்ற உற்பத்திகள் 8 சதவீதமாகவும் காணப்படு கின்றன. தயாரிப்புத் தொழில்களில் ஏற்படுகின்ற அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் ஒரு அம்சமாக அமைந்திருக்கமுடியும்.

இலங்கையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறை யானது கொண்டுள்ள பங்கினது வீழ்ச்சியானது பெருமளவிற்கு சேவைகளின் அதிகரிப்பினாலேயே ஈடுசெய்யப்பட்டிருக்கிறது. 1955இல் 34·5 சதவீதமாக இருந்த சேவைகளின் பங்கானது 1976இல் 47·8 சதவீதமாக அதிகரித்துள்ளது. சேவைகளில் உற் பத்தித் திறன் அல்லது கூடிய வருமானத்தினை அளிக்கக்கூடிய சேவைகளான வங்கி, காப்புறுதிச் சேவைகள், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்பு போன்றவற்றின் பங்கு மிகவும் குறைவாகவேயுள்ளன. இச் சேவைகள் 1955இல் 5 சத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமாக இருந்து 1976இல் 11·7 சதவீதமாக மட்டுமே அதிகரித்துள்ளன. சேவைகளில் குடும்பப் பணிகள், சில்லறை வர்த்தகம் போன்றவையே கூடிய பங்கினை வகிக்கின்றன. இலங்கையில் சனத் தொகையிலேற்படுகின்ற அதிகரிப்பானது இத்தகைய சேவைகளின் பங்கினையே அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

மொத்தத் தேசிய உற்பத்தியில் உற்பத்தித் திறன் குறைந்த துறைகள் கூடிய பங்கினை வகிப்பது மட்டுமன்றி இத் துறையில் கூடிய ஊழியப்படை தங்கியிருப்பதும் குறைந்த தலா வருமானத்திற்கு மற்றுமொரு காரணியாக அமைந்துள்ளது. 1953ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய 50 சதவீதமான ஊழியப்படையானது நேரடியாகவும், மறைமுகமாகவும் விவசாயத் துறையிலேயே தங்கியிருக்கின்றன. 1953ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பின்படி ஊழியப்படையில் 53 சத வீதமானவர்கள் விவசாயத் துறையில் தங்கியிருக்க, மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத் துறை கொண்ட பங்கானது ஏறக்குறைய 54 சதவீதமாக அமைந்திருந்தது. 1971ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டின்படி விவசாயத் துறையின் ஊழியப்படை 50·4 சதவீதமாகக் காணப்பட்டது. ஆனால், மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறை கொண்டுள்ள பங்கானது 1965இலிருந்து 30—35 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாகவே அமைந்திருக்கின்றது. இலங்கை மக்களில் பெரும் பகுதியினர் மிகக்குறைவான வருமானத்தினைப் பெறுவதற்கு விவசாயத்துறையில் கூடிய ஊழியப்படையிருத்தலே காரணமாகும்.

## அட்டவணை 1. IV

துறைரீதியாக ஊழியப்படைப் பரம்பல் 1953 — 1971
(குடிசன மதிப்பீட்டு ஆண்டினை அடிப்படையாகக் கொண்டது)

| துறை | 1953 % | 1963 % | 1971 % |
|---|---|---|---|
| 1. விவசாயம், மீன்பிடி, காட்டுத்தொழில் | 53·0 | 52·9 | 50·4 |
| 2. கைத்தொழில் | 12·4 | 12·7 | 13·4 |
| 3. சேவைகள் | 34·6 | 34·4 | 36·2 |
| | 100 | 100 | 100 |

மூலம்: Statistical Abstract of Ceylon 1973.

கைத்தொழில் துறையிலுள்ள ஊழியப்படையினைவிட மொத்தத் தேசிய உற்பத்தியில் இத் துறை கொண்டுள்ள பங்கானது அதிகமாகக் காணப்படுகின்றது. இது கைத்தொழில் துறையினது கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தித் திறனை மட்டுமன்றி இத் துறையிலுள்ள ஊழியம் ஏனைய துறைகளை விடக் கூடிய வருமானத்தினைப் பெறுவதனையும் பிரதி பலிப்பதாகவுள்ளது. கைத்தொழிற் றுறையின் ஊழியப்படையானது 1953இல் 12·4லிருந்து 1971இல் 13·4 சதவீதமாக மட்டுமே அதிகரித்துள்ளது. ஆனல் இக்காலப் பகுதியில் கைத்தொழிற் றுறையின் உற்பத்தியானது 5 சத வீதத்திற்கு மேலாக அதிகரித்துள்ளது. கைத்தொழிற் றுறையில் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கமானது முதல் செறிவான உற்பத்தி முறையினுல் ஏற்பட்டதாலேயே இத் துறையினுல் கூடிய ஊழியப்படைக்குப் புதிதாக வேலைவாய்ப்பினை வழங்கமுடியவில்லை. சேவைகள் துறையில் 1953இல் 34·6 சத வீதமாக இருந்த ஊழியப்படையானது 1971இல் 36·2 சத வீதமாக மட்டுமே அதிகரித்துள்ளது.

1955ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்துறை கொண்டுள்ள பங்கில் ஒரு வீழ்ச்சிப் போக்கையும், கைத்தொழில் சேவைகள் துறைகளைப் பொறுத்தமட்டில் அதிகரித்துச் செல்லும் போக்கினையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இக்காலப் பகுதியில் ஒவ்வொரு துறையிலும் உள்ள ஊழியப்படையானது கொண்டுள்ள பங்கினைப் பொறுத்தமட்டில் பெருமளவு மாற்றமின்றியே இருக்கின்றது. பொருளாதார வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு துறையும் கொண்டுள்ள ஊழியப்படையினளவில் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும். இலங்கையினைப் பொறுத்தமட்டில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் எதுவும் ஊழியப்படைப் பரம்பலில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் போதிய இயக்கு விசைகளாகச் செயற்படவில்லை.

இலங்கையினது துறைரீதியான தேசிய வருமானப் பங்கீட்டினை ஏனைய வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது பொருளாதாரத்தின் வளர்ச்சி குன்றிய நிலையினைத் தெளிவாக அவதானிக்கமுடியும். எப்பொழுதும் வளர்ச்சியடைந்த அல்லது தலா வருமானம் கூடிய நாடுகளில் விவசாயத் துறையின் பங்கு மிகக் குறைவாகவும் கைத்தொழில் துறையின் பங்கு அதிகமாகவும் அமைந்திருக்கும். மொத்தத் தேசிய வருமானத்தில் விவசாயத் துறை கொண்டுள்ள பங்கானது 10 சதவீதத்திற்குக் குறைவாகவும் கைத்தொழிற்றுறை கொண்டுள்ள பங்கானது 30 சதவீதத்திற்கு அதிகமானதாகவும் இருக்கிறது. ஆனல் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் விவசாயத்துறையின் பங்கானது 30 சதவீதத்திற்கு அதிகமாகவும், கைத்தொழிற் றுறையானது 25 சதவீதத்திற்குக் குறைவாகவுமிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1. V

துறை ரீதியாக உலக நாடுகளின் தேசிய வருமானப் பங்கீடு
(சதவீதமாக)

| காலம் | நாடுகள் | விவசாயம் | கைத்தொழில்* | ஏனையவை |
|---|---|---|---|---|
| 1973 | அமெரிக்கா | 4 | 34 | 62 |
| 1972 | இங்கிலாந்து | 3 | 37 | 60 |
| 1973 | கனடா | 5 | 32 | 63 |
| 1973 | சிங்கப்பூர் | 2 | 34 | 64 |
| 1970 | இந்தியா | 44 | 19 | 37 |
| 1973 | இலங்கை | 33 | 20 | 47 |
| 1971 | பாகிஸ்தான் | 34 | 19 | 47 |
| 1973 | பர்மா | 38 | 14 | 48 |

மூலம் :, U. N. Statistical Year Book 1975

* கைத்தொழில் துறைக்குள் கட்டிட நிர்மாணமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சேவைகள் துறையானது வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கூட கூடிய பங்கினைக் கொண்டுள்ளதாக இருக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சேவைகள் கொண்டுள்ள பங்கானது 50 சதவீதத்திற்குக் குறைவாகவும், வளர்ச்சியடைந்த நாடுகளில் 50 சதவீதத்திற்கு மேலாகவுமுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சேவைகளில் பெரும் பங்கினை உற்பத்தித்திறன் குறைந்த குடும்பப்பணிகள், சிறு வர்த்தகம் ஆகியனவே வகிக்கின்றன. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகளில் வங்கி, காப்புறுதிச் சேவைகள், வர்த்தகம், விமான-கப்பல் போக்குவரத்து, பொதுத் தொடர்புகள் போன்றவையே முக்கிய பங்கினை வகிப்பதாகவிருக்கும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்லும்போது விவசாயத்துறையின் பங்கு குறைந்துசெல்வதாகவும், கைத்தொழில் துறை, சேவைகள் ஆகியனவற்றின் பங்கு அதிகரித்துச் செல்வதாகவும் இருக்கும்.

## நபர் ரீதியாக வருமானப் பங்கீட்டுமுறை

இன்று நாடுகளினது பொருளாதார வளர்ச்சி நிலையினை ஒப்பிடும்போது வருமானப் பங்கீட்டு முறையும் மிக முக்கியமான ஒரு அளவீடாகப் பயன்படுத்தப்படுகின்றது. நீண்டகாலமாகப் பொருளாதார வளர்ச்சி நாட்டினது உற்பத்திப் பெருக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட மொத்தத் தேசிய உற்பத்தி அல்லது தலா வருமானமுறை மூலமே ஒப்பீடு செய்யப்பட்டது. ஆனால் ஒரு நாட்டில் ஏற்படுகின்ற உற்பத்திப் பெருக்கத்தினை சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையினரா அல்லது சிறுபான்மையினரா பங்கீடு செய்து கொள்ளுகின்றார்கள் என்ற ஆய்வு பல நாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது. இலங்கையின் வருமானப் பங்கீட்டு முறையினை ஆராய்வதற்கு அளவீடுகளோ அல்லது புள்ளி விபரங்களோ போதியளவு இன்மையால் இதனைப் பூரணமாக ஆய்வதற்குத் தடையாகவுள்ளது. பத்து வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் நுகர்வோர் நிதி அளவீடும், 1969—1970இல் மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார அளவீடுமே இதுபற்றி ஆராய உள்ள மெய்ச் சான்றுகளாகவுள்ளன.

இலங்கையினது வருமானப் பங்கீட்டுப் பரம்பலானது ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் போன்று ஏற்றத் தாழ்வான தன்மையினைக் கொண்டிருக்கின்றது. மிகக் குறைந்த வருமானத்தினைப் பெறுபவர்கள் சனத்தொகையில் கூடிய பங்கினராக இருப்பதுடன் தேசிய வருமானத்தில் அவர்கள் பெறும்பங்கு குறைவானதாகவும் காணப்படுகின்றது. 1953ஆம் ஆண்டு 95·7 சதவீத மானவர்கள் 400ரூபாவிற்குக் குறைந்த வருமானத்தினைப் பெற்றவர்களாக இருக்க, இது மொத்த வருமானத்தில் 70·6 சத வீதமாக இருந்தது. ஆனால் 1973ஆம் ஆண்டு 80·8 சதவீதமானவர்கள் 400க்குக் குறைவான வருமானத்தினைப் பெற்றதுடன் இது மொத்த வருமானத்தில் 56·7 சதவீதமாகவும் இருக்கிறது. இருபது வருட காலத்தில் குறைந்த வருமான வகுப்பினது எண்ணிக்கையில் குறிப்பிடக்கூடியளவு வீழ்ச்சியானது ஏற்பட்டுள்ளது.

அட்டவணை 1. VI

இலங்கையில் வருமானப் பங்கீட்டு முறை 1953—1973

| | 1953 | | 1973 | |
|---|---|---|---|---|
| வருமான வகுப்பு | வருமானத்தினைப் பெற்றவர்களின் சதவீதம் | பெற்ற மொத்த வருமானத்தின் சதவீதம் | வருமானத்தினைப் பெற்றவர்களின் சதவீதம் | பெற்ற மொத்த வருமானத்தின் சதவீதம் |
| 100க்குக் குறைவு | 42·1 | 15·6 | 8·3 | 1·7 |
| 100—200 | 38·5 | 31·2 | 35·3 | 13·7 |
| 200—400 | 15·1 | 23·8 | 37·2 | 41·3 |
| 400—800 | 2·9 | 9·3 | 15·7 | 28·2 |
| 800—1000 | 0·5 | 2·7 | 1·7 | 4·7 |
| 1000க்கு மேல் | 0·9 | 17·4 | 1·8 | 10·4 |
| | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி, நுகர்வோர், நிதி அளவீடுகள் 1953; 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் இலங்கையில் மத்திய வகுப்பினரதும் உயர் வருமான வகுப்பினரதும் தொகை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து வருகின்றது. 1953ஆம் ஆண்டு 400 ரூபாவுக்கும் 1000 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானத்தினைப் பெற்றவர்கள் 3·4 சதவீதமாகவும் மொத்த வருமானத்தில் இவர்களின் பங்கு 12 சதவீதமாகவும் இருந்தது. 1973ஆம் ஆண்டு இவ் வருமானப் பிரிவினர் 17·4 சதவீதமாக அதிகரித்ததுடன், மொத்த வருமானத்தில் இவர்களின் பங்கு 32·9 சதவீதமாகவும் அதிகரித்திருந்தது. உயர் வருமான வகுப்பினர் அல்லது 1000க்கு மேல் வருமானம் பெறுபவர்கள் 1953இல் 0·9 சதவீதமாகவும் மொத்த வருமானத்தில் இவர்களின் பங்கு 17·4 சதவீதமாகவுமிருந்தது. 1973இல் உயர் வருமான வகுப்பினர் 1·8 சதவீதமாக அதிகரித்ததுடன் மொத்த வருமானத்தில் 10·4 சதவீதமாகவும் இருக்கிறது. இலங்கையில் வருமானப் பங்கீட்டுப் பரம்பலை அவதானிக்கும்போது, கூடிய வருமானத்தைப் பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவும், ஆனால், மொத்த வருமானத்தில் அவர்கள் பெறும் பங்கு வீதாசார ரீதியாக ஒப்பிடும்போது மிக அதிகமாகவும் காணப்படுகின்றது.

இலங்கை மக்கள் பெறுகின்ற வருமானத்தினை (1) கூலியும் சம்பளமும், (2) இலாபமும் சொத்து வருமானமும், (3) பண ரீதியற்ற வருமானம் என்ற மூன்று வகையாகப் பிரிக்கமுடியும். பணரீதியற்ற வருமானம் எனும்போது சொந்த உற்பத்தியினை நுகர்தல், இலவச சேவைகளைப் பெறுதல் போன்றவையாக அமைந்திருக்கும். எந்த நாட்டிலும் வருமானப் பங்கீட்டில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வானது, ஏற்றத்தாழ்வான சொத்துப் பங்கீட்டினது விளைவின் காரணமாக அமைந்திருக்கும். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகமுக்கியமான சொத்தாக நிலம் இருப்பதனல் நில உடைமையில் காணப்படும் வேறுபாடு ஏற்றத்தாழ்வான வருமானப் பங்கீட்டிற்கு முக்கிய காரணமாகும். மேலும், ஏனைய துறைகளில் சிலரது கைகளில் பொருளாதார தனியுரிமை ஒன்று சேருவதனல் இவ் ஏற்றத் தாழ்வானது மேலும் தீவிரமடைகின்றது.

வருமானப் பங்கீட்டு முறையினை துறைரீதியாக ஆராய்வதன் மூலம் முத்தன்மைப் பொருளாதார அமைப்பினது அடிப்படையான குறைபாடுகளையும் ஓரளவு விளங்கிக்கொள்ளமுடியும். இலங்கையில் 1969—1970ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார அளவீட்டின்படி முழு இலங்கையிலும் 200க்குக் குறைவான மாத வருமானத்தினைப் பெறுபவர்கள் 75·7 சதவீதமாகவும் நகரப் புறத்தில் 50·4 சதவீதமாகவும், கிராமத்தில் 76·1 சதவீதமாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத்துறையில் 97·5 சதவீதமாகவும் காணப்படுகின்றது. முழு இலங்கையிலும் 600 ரூபாவுக்கு அதிகமான வருமானத்தினைப் பெறுபவர்கள் 1·9 சதவீதமாகவும், நகரத்தில் 7·3 சதவீதமாகவும், கிராமத்தில் 1 சதவீதமாகவும், பெருந்தோட்டத்துறையில் 0·1 சதவீதமாகவுமுள்ளது. மிகக் குறைந்த வருமானம் பெறுபவர்கள் முழு இலங்கையின் சதவீத அளவினை விட நகரத்தில் குறைவாகவும், கிராமத்திலும் பெருந்தோட்டத்திலும் மிக அதிகமாகவும் காணப்படுகின்றனர். ஆனல் உயர்ந்த வருமானத்தினைப் பெறுபவர்கள் முழு இலங்கையின் சதவீத அளவினை விட நகரத்தில் அதிகமாகவும், கிராமத்திலும் பெருந்தோட்டத்திலும் மிகக் குறைவாகவும் உள்ளனர்.

## அட்டவணை I. VII

### துறைவாரியாக வருமானப் பங்கீட்டு முறை (சதவீதமாக)

| மாத வருமானம் | முழு இலங்கை | நகரம் | கிராமம் | பெருந்தோட்டம் |
|---|---|---|---|---|
| 00—199 | 75·7 | 50·4 | 76·1 | 97·5 |
| 200—599 | 22·4 | 42·3 | 22·9 | 2·4 |
| 600—999 | 1·4 | 4·7 | 0·9 | 0·1 |
| 1000க்கு மேல் | 0·5 | 2·6 | 0·1 | 0·0 |
| | 100 | 100 | 100 | 100 |

மூலம்: Socio Economic Survey of Sri Lanka 1969—1970.

இலங்கையில் வறுமைநிலையினை ஒப்பீட்டு ரீதியாக நோக்கும்போது, நகரத்தினை விட பெருந்தோட்டத்துறையிலும், கிராமியத் துறையிலும் அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் பலாபலன்கள் அதிகளவு நகரத்துறையினையே சென்றடைவதாக உள்ளது. பெருந்தோட்டத் துறையிலுள்ள ஊழியர்கள், தோட்டங்களில் நிரந்தர வேலைவாய்ப்பினைப் பெற்று ஊதியம் பெறுகின்றவர்களாக இருந்தபோதும்கூட குறைந்த கூலியே இவர்களின் வறுமைக்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. கிராமப்புற மக்களுடன் ஒப்பிடும்போது பெருந்தோட்ட மக்களுக்குப் பண ரீதியற்ற வருமானம் மிகவும் குறைவானதாகும். எனவே, இலங்கையில் வாழ்க்கைத்தரத்தில் மிகவும் குறைந்த நிலையிலுள்ள மக்கள் பெருந்தோட்டத்துறையிலேயே காணப்படுகின்றனர். பொருளாதாரரீதியில் முக்கியம் வாய்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அரசியல்ரீதியில் அனாதைகளாக நீண்டகாலம் இருந்தமையே இவ் இழிந்த நிலைக்குக் காரணமாகும். இலங்கையில் நகரத்தினைவிட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம, பெருந்தோட்டத்துறைகளுக்கிடையிலான வருமானப் பங்கீட்டில் பெருமளவு ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது.

வருமானப் பங்கீட்டில் காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வானது முதலாளித்துவ நாடுகள், சமூக உடைமை நாடுகள் என்பவற்றை விட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. ஏனெனில், வருமான ஏற்றத்தாழ்வினை நிர்ணயிக்கும் பிரதான காரணியான தனியார் சொத்துடைமையானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகவும் அதிகமாகக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும். அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உடைமையானது சமூக உடைமை நாடுகளில் 90 சதவீத

## அட்டவணை 1. VIII

உலகப் பொருளாதாரத்தில் துறைரீதியான உடைமைப் பங்கீடு
(சதவீதமாக)

| பொருளாதாரத் துறைகள் | முதலாளித்துவ நாடுகள் | சமூக உடைமை நாடுகள் | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் |
|---|---|---|---|
| அரசாங்க உடைமை | 15 | 60 | 10 |
| கூட்டுத்தாபனத்தின் உடைமை | 10 | 30 | 5 |
| தனியார் உடைமை | 75 | 10 | 85 |
| | 100 | 100 | 100 |

மூலம்: Csikös - Nasy, **Socialist Economic Policy**, (London, 1976), p. 67.

மாகவும், முதலாளித்துவ நாடுகளில் 25 சதவீதமாகவும் காணப்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 15 சதவீதமாக மட்டுமேயுள்ளது. ஆனால் தனியார் உடைமையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 85 சதவீதமாகவும், முதலாளித்துவ நாடுகளில் 75 சதவீதமாகவும், சமூக உடைமை நாடுகளில் 10 சதவீதமாகவுமே காணப்படுகின்றது. மேலும் நிலையான சம்பளம், கூலி ஆகியவற்றினைப் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைவிட முதலாளித்துவ, சமூக உடைமை நாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனாலேயே வருமான ஏற்றத்தாழ்வின் அகன்ற இடைவெளியினைக் குறைத்தல் என்பது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வறுமையினையும், வருமான ஏற்றத்தாழ்வினையும் குறைப்பதற்கு நான்கு முக்கிய பரிகாரங்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரசாங்கத் துறையினை விரிவாக்கல்
2. சிறு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றினை விருத்தி செய்தல்
3. காணிச் சீர்திருத்தம்
4. விருத்திமுறை வரிகள்

1948க்குப் பின்பு வந்த அரசாங்கங்கள் இக் கொள்கைகளை ஓரளவு நடைமுறைப்படுத்த முயன்றதாலேயே குறைந்த வருமான வகுப்பினரது வருமானத்தில் அண்மைக்காலங்களில் ஓரளவு அதிகரிப் பேற்பட்டுள்ளது.

### சேமிப்பும் முதலீடும்

ஒரு நாட்டினது உற்பத்திப் பெருக்கமானது அந்த நாட்டினது முதலீட்டு அளவுடன் நேரடியான தொடர்புடையதாகும். முதலீடானது பெருமளவிற்குச் சமூகத்தின் சேமிப்பிலிருந்து பெறப்படுவ தொன்றாகும். சேமிப்பு, முதலீடு ஆகிய இரண்டும் சமூகத்தின் இரு வேறுபட்ட பகுதியினரால் இரு வேறுபட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுவதாகும். நுகர்வோர்கள் அல்லது வீட்டுத்துறையினரது செலவிடப்படாத வருமானமாகிய சேமிப்பானது எதிர்காலப் பாதுகாப்பு அல்லது எதிர்கால நுகர்வு கருதி மேற்கொள்ளப்படுவதாகும். உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்படும் முதலீடானது எதிர்கால இலாப எதிர்பார்க்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். சமூகத்தின் சேமிப்பு முழுவதும் ஒன்று திரட்டப்பட்டு சிறந்த முறையில் முதலீடுகளாகப் பாய்ச்சப்படுவதில்லை. அதே போன்று சமூகத்தின் முதலீடுகள் முழுவதும் அச் சமூகத்தின் சேமிப்பிலிருந்து பெறப்பட்டதுமாக இருக்கவேண்டுமென்பதுமில்லை. நன்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களில் முதலீடுகள் பெருமளவிற்கு அச் சமூகத்தின் சேமிப்பிலிருந்து பெறப்பட்டதாக இருப்பதுடன் முதலீடுகள் சேமிப்பினை விடக் குறைவாகவும் அமைந்திருக்கும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சேமிப்பினைவிட முதலீடுகள் அதிகமாக இருப்பதுடன் முதலீட்டின் ஒரு பகுதி வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டதாகவுமிருக்கும்.

இலங்கையின் மொத்த உள்நாட்டுச் சேமிப்பானது 1976ஆம் ஆண்டு வரை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15 சதவீதத்திற்குக் குறைவாகவே அமைந்திருந்தது. அநேகமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மொத்த உள்நாட்டுச் சேமிப்பானது 15 சதவீதத் திற்குக் குறைவாகவும், வளர்ச்சியடைந்த நாடுகளில் 20 சதவீதத் திற்கு அதிகமாகவும் காணப்படுகின்றது. இந் நாடுகளிலுள்ள மக்கள் குறைவான வருமானத்தினைப் பெறுவது பொதுப்படையான உண்மையேயொழிய பூரணமான காரணமாகக் கருதமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் வருமான ஏற்றத்தாழ்வு அதிகமாகக் காணப்படும் போது, சமூகத்தின் பெருமளவு வருமானம் குறைந்தளவு சனத் தொகையிடம் செல்வதனுல் கூடிய சேமிப்பு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமானதாகும். ஆனுல் இலங்கை போன்ற நாடு களிலுள்ள உயர்வருமான வகுப்பினர் மேற்கத்தேய நாகரிக மோக உந்தலினுல் ஏற்படும் காட்சி விளைவினுல் (Demonstration Effect) வீண் ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்பவர்களாக உள்ளனர். மேலும், எமது நாட்டில் மக்கள் தமது சேமிப்புக்களை தங்க நகைகள், நிலம் போன்றவற்றின் கொள்வனவிற்காகப் பயன் படுத்துவதாலும் பெருமளவு சேமிப்புக்கள் உற்பத்தித் திறன் வாய்ந்த முதலீடுகளாக வருவதில்லை. அத்துடன் வருமானம், இலாபம் போன்றவற்றில் கூடிய வரிகள் விதிக்கப்படுவதாலும் சேமிப்புக்கள் கறுப்புப்பணமாகவும் மாற்றமடைகின்றன. இலங்கை யில் குறைந்த சேமிப்பு ஒரு பிரச்சினையாக இருப்பது போன்று சமூகத்தின் சேமிப்புக்களை உற்பத்தித் திறன் வாய்ந்த முதலீடுக ளாக மாற்றுவதும் மற்றுமொரு பிரச்சினையாக உள்ளது. 1977ஆம் ஆண்டு சேமிப்பில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பு அரசாங்கம் தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்புக்களின் ஆகக்கூடிய வட்டியினை 18 சதவீதமாக அதிகரித்ததன்விளைவாக ஏற்பட்ட வட்டி வீதங்களின் அதிகரிப்பினுல் ஏற்பட்டதொன்றுகும்.

### அட்டவணை 1. IX

#### மொத்த உள்நாட்டுச் சேமிப்பும், மூலதன ஆக்கமும்
(சந்தை விலையில் அமைந்த
மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக)

| | 1966 | 1968 | 1970 | 1972 | 1974 | 1977 |
|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு | 10·4 | 11·0 | 15·4 | 14·0 | 9·2 | 19·4 |
| 2. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 13·8 | 14·2 | 18·1 | 16·0 | 13·1 | 13·4 |
| அ. தனியார் துறை | 6·7 | 7·5 | 10·2 | 9·9 | 8·1 | 7·0 |
| ஆ. அரசாங்கத் துறை | 7·1 | 6·7 | 7.9 | 6·1 | 5·0 | 6·4 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

இலங்கையில் 1976ஆம் ஆண்டு வரை உள்நாட்டுச் சேமிப்பினை விட உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் அதிகமாகக் காணப் பட்டது. எனவே, முதலீட்டுக்கும் சேமிப்பிற்கும் இடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளியானது வெளிநாட்டு முதலினாலேயே ஈடுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு முதலானது பெருமளவிற்கு கடனாக வருகிறதேயொழிய முதலீடாக வருவது குறைவாகும். இதனால் ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டுக் கடனின் ஒரு பகுதியினையும், கடனுக்கான வட்டி போன்ற சேவைக் கட்டணங்களையும் திருப்பிக் கொடுக்கவேண்டியிருப்பதனால் இது மேலும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை அதிகரிப்பதாக இருக்கின்றது. 1977ஆம் ஆண்டு மட்டுமே முதன் முதலாக உள்நாட்டுச் சேமிப்பினை விட உள்நாட்டு நிலையான மூலதனவாக்கமானது குறைவாகக் காணப்பட்டது.

இலங்கையில் உள்நாட்டு நிலையான முதலீடானது துரித பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு பற்றாக்குறையாக இருப்பது மட்டுமன்றி அண்மைக்காலம் வரை இதில் ஒரு தொடர்ச்சியான ஏற்றப் போக்கினையும் காணமுடியவில்லை. 1966ஆம் ஆண்டு 13·8 சதவீதமாக இருந்த நிலையான மூலதனவாக்கமானது 1970ஆம் ஆண்டு வரை 18·1 சதவீதமாக அதிகரித்துச் சென்று பின் 1977இல் 13·4 சதவீதத்திற்குப் படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது: இலங்கையில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தில் அரசாங்கத் துறை, தனியார்துறை ஆகிய இரண்டுமே ஏறக்குறைய சமனான பங்கினை வகிக்கின்றன. ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை விட இலங்கையில் அரசாங்கத்துறை நன்கு வளர்ச்சியடைந்ததொன்றாகக் காணப்படுகின்றது. எனவே, நாட்டின் முதலீட்டு அதிகரிப்பானது இரு துறைகளினது முதலீட்டு முயற்சிகளினாலும் நிர்ணயிக்கப்படுவதாக உள்ளது. 1966ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை தனியார் துறையின் முதலீட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பே உள்நாட்டு மூலதனவாக்கம் அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆனால், 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு தனியார் துறையின் முயற்சிகளுக்குப் பெருமளவு ஊக்கங்கள் காணப்படாமையினால் அதில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தனியார்துறையின் மூலதனவாக்கத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினை அரசாங்கத்துறை ஈடுசெய்திருக்குமானால் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் வீழ்ச்சியினைத் தடுத்து அதிகரிப்பினை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால். இலங்கையில் 1970க்குப் பின்பு தனியார் முயற்சிகளைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளைவிட அரசாங்கத்துறையில் முதலீட்டினை அதிகரிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒப்புரீதியில் குறைவாகவே காணப்பட்டன. எனவே, எதிர்காலத்தில் அரசாங்கத்துறை, தனியார்துறை ஆகியவற்றில் முதலீட்டு முயற்சிகள்அதிகரிக்கப்படுவதுடன் தனியார் துறைகளைச் சிறந்தமுறையில் ஒழுங்குபடுத்தி நிருவகித்தல் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 2

# கிராமியப் பொருளாதாரம்

இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரக் கொள்கையில் கிராமியப் பொருளாதார வளர்ச்சி என்ற அம்சம் பொருளாதாரரீதியான காரணங்களால் மட்டுமன்றி சமூக அரசியல் ரீதியான காரணங்களாலும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகக் கருதப்படுகின்றது. கிராமியத்துறையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகைரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தபோதிலும்கூட அந்நியர் ஆட்சியில் நீண்டகாலமாக நிராகரிக்கப்பட்டதொரு துறையாகவும் அமைந்திருந்தது. பல சமூக உடைமை நாடுகள் ஆரம்பகாலப் பொருளாதார வளர்ச்சியில் கிராமப்புறம், நகரப்புறம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டினை நீக்குவதன் மூலமே சோசலிசப் பாதையில் துரித பொருளாதார வளர்ச்சியுடன் முன்னேற முடியுமெனக் கருதிச் செயற்பட்டன. இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதன்மூலம் பொருளாதார வளர்ச்சியினை மட்டுமன்றிப் பிரதேசரீதியாகவும், சமூக பொருளாதார ரீதியாகவும் இந்நாடுகட்கிடையே அகன்று செல்லுகின்ற இடைவெளியினையும் ஓரளவு குறைக்கக்கூடியதாக அமைந்திருக்கும்.

### கிராமியப் பொருளாதாரம் என்ருல் என்ன?

கிராமியப் பொருளாதாரமென்னும்போது சுயதேவைப் பூர்த்திக் குறிக்கோளையும் குறைந்த வருமானத்தினையும் கொண்ட பொருளாதாரத்தினைக் குறித்து நிற்கிறது. கிராமியப் பொருளாதாரத்தின் உற்பத்தி ஏற்றுமதிக்காகவன்றி சொந்த நுகர்விற்காகவே நடைபெறுகிறது. இப்பொருளாதாரமானது சுயதேவையினைப் பூர்த்தி செய்தலைக் குறிக்கோளாகக் கொண்டபோதிலும், இன்று, இதனைத் தன்னிறைவுத்தன்மை கொண்ட பொருளாதாரமாகக் கருத முடியாது. ஏனெனில், நவீன பணப் பொருளாதாரத்தின் தோற்றத்துடன் தன்னிறைவுத்தன்மையினைக் கிராமியப் பொருளாதாரம் கடந்து பணப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நிலையினை அடைந்துள்ளது. இலங்கையின் கிராமியப்பொருளாதாரத்தில் ஏறக்குறைய 50 சதவீதத்திற்கு மேற்பட்டோர் வேதனம் பெறும் ஊழிய வகுப்பினராகக் காணப்படுகின்றனர். இன்று, கிராமியப் பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திகள் சந்தையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன் உற்பத்திக்குத் தேவையான பல உள்ளீடுகளும் (உரம், கிருமிநாசினிகள், இயந்திரம், ஏனைய உபகரணங்கள்) சந்தையிலிருந்து பெறப்படுவதாகக் காணப்படுகின்றன.

இன்று கிராமியப் பொருளாதாரமானது ஒரு பிழைப்பு மட்டப் பொருளாதாரம் என்பதே பொருத்தமான வரைவிலக்கணமாகவுள்ளது. பிழைப்பு மட்டப் பொருளாதாரம் என்னும்போது கிராமிய மொத்த உற்பத்தியானது மொத்தச்சனத்தொகையின் அடிப்படைத் தேவைகளை மட்டும் நிறைவேற்றப் போதுமானது என்பதே இதன் தாற்பரியமாகும். கிராமியப்பொருளாதாரத்தின் இந்நிலையினை அதனது வறுமை விஷசக்கரம், இலாப நோக்கற்ற தன்மை, குறைந்த வாழ்க்கைத்தரத்துடன் திருப்திப்படும் மனப்பான்மை என்ற அடிநிலை உண்மைகளுக்கூடாகவே விளங்கவேண்டும். கிராமியப் பொருளாதாரத்தின் வறுமை விஷசக்கரமானது குறைந்த கிராமிய உற்பத்தி, குறைந்த சந்தை வாய்ப்புக்கள், குறைந்த பேரம் பேசும் திறன், குறைந்த வருமானம், குறைந்த சேமிப்பு, குறைந்த முதலீடு என்ற அடிப்படைகளிலேயே அமைந்திருக்கின்றது. இந்த வறுமை விஷசக்கரம் உடைக்கப்படவேண்டுமேயானால் இதன் அடிப்படைக் காரணியாகிய குறைந்த உற்பத்தியிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். இக் குறைந்த உற்பத்தியானது நிலம், ஊழியம், முதல் என்ற மூன்றுடனும் தொடர்புபட்டதாக அமைந்திருக்கும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிலம், முதல் ஆகிய இரு காரணிகளும் பற்றுக்குறையாகவிருப்பது இவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் தடைகளாக அமைந்திருக்கின்றன.

இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தினை நுணுக்கமாக வரையறை செய்வதானால் அது பெருந்தோட்ட நகரப் பொருளாதாரங்களின் எல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. ஆனால், பொருளியல் ரீதியாக வரையறை செய்யும்போது இவற்றினைத் தவிர்த்தே வரையறை செய்யவேண்டும். கிராமியப் பொருளாதாரமானது பெருந்தோட்ட நகரப் பொருளாதாரங்களுடன் பலவகையில் தொடர்புபட்டதாகவுள்ளது:

அ. பல கிராமிய மக்கள் பெருந்தோட்டங்களிலும், புகையிரத சேவை, வீதிப் போக்குவரத்து போன்றவற்றிலும் வேலை செய்வோர்களாக இருக்கிறார்கள்.

ஆ. பல கிராமிய மக்கள் பெருந்தோட்ட உற்பத்திகளைச் சிறிய அளவில் பயிரிடுபவர்களாக இருக்கின்றார்கள். உதாரணமாக, தெங்குப் பயிர்ச்செய்கையையும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களையும் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பல கிராமிய உற்பத்திகள் நகரப் பொருளாதாரத்தில் விற்கப்படுவதுடன் நகரப் பெருந்தோட்ட உற்பத்திகள் கிராமிய மக்களின் நுகர்வில் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றன. கிராமப்புறத்தில் உற்பத்தி செய்யப்படும் பாய், கூடை, பானை, கருப்பட்டி, றேந்தைகள், முகமூடி, வெண்கலப் பொருட்கள் போன்றவை நகரப்புறச் சந்தையினை அடிப்படையாகக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகின்றன. இதேபோன்று தேயிலை, தெங்கு உற்பத்திகள், ஆடைவகைகள் போன்றன கிராமிய மக்களின் நுகர்வில் இடம்பெறுகின்றன.

இத்தகைய பல பிரச்சினைகள் இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தினை வரையறை செய்யும்போது ஏற்படுவதனுல் தொழில்களை அடிப்படையாகக்கொண்டே கிராமியப் பொருளாதாரத்தினை வரையறை செய்வது இலகுவானதும், பொருத்தமானதுமாக உள்ளது. பொதுவாக, இலங்கையின் கிராமியப் பொருளாதாரம், என்னும்போது நெல்விவசாயம், உப உணவுப் பயிர்ச்செய்கை, மீன் பிடித்தல், வேட்டையாடுதல், காட்டுத்தொழில் போன்றவற்றினையும் இதனுடன் தொடர்புபட்ட கைத்தொழில்களையும் குறிக்கின்றது. இவ்வாறு பல தொழில்களையும் கிராமியப் பொருளாதாரமானது உள்ளடக்கிய போதிலும் கூட இலங்கையில் கிராமியப் பொருளாதாரம் என்னும்போது அது நெல் விவசாயத்தினையும் அதனுடன் தொடர்பாக எழும் பிரச்சினைகளையும் கொண்டதாகக் காணப்படுகிறது. இதற்கு, நெல்லுற்பத்தி கிராமிய உற்பத்திகளில் மிகக் கூடிய பங்காகவும், இலங்கை மக்களின் முக்கிய உணவுத் தானியமாகவும் இருப்பது மட்டும் காரணமன்று. இலங்கைக் கிராமிய மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கை முறை, சமய ஆசாரங்கள் போன்றவையெல்லாம் நெல்விவசாயத்துடன் தொடர்புபட்டிருப்பதும் மற்றுமொரு காரணமாகும்.

கிராமியப் பொருளாதாரமானது பெருமளவிற்கு விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருப்பதனுல் இதனடிப்படையில் கிராமியச்சமூகத்தினை ஆறு வகுப்புக்களாக வகைப்படுத்த முடியும்.

அ. நிலச் சொந்தக்கார வகுப்பினர்.

ஆ. குத்தகை நிலத்தில் பயிர்செய்யும் விவசாயிகள்.

இ, நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள்

ஈ. கிராமிய கைத்திறக் கைத்தொழிலாள வகுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. கடன் கொடுப்போரும் சிறு கடைக்காரரும்.

ஊ. தனிப்பட்ட சேவைகளை அளிப்போர் (மருத்துவர், மதகுரு)

இவ்வாறு ஆறு வகுப்பினராகப் பிரிப்பது பூரணமான பாகுபாடாக எப்பொழுதும் அமைந்திருக்க முடியாது. ஏனெனில் நிலச் சொந்தக்காரனே கடன் கொடுப்போனுகவும், தரகனுகவும் செயற் படலாம். அதே போன்று விவசாயத் தொழிலாளர், கைத்திறக் கைத்தொழிலாளராகவும் குத்தகை நிலத்தில் பயிர் செய்பவர்களாகவும் இருக்கமுடியும். இப் பாகுபாடானது கிராமியப் பொருளாதாரச் செயற்பாட்டினை அறிந்துகொள்வதற்கான ஒரு பரந்த அடிப் படையிலமைந்த பாகுபாடு எனக் கருதுவது மட்டுமே பொருத்தமானதாகும்.

## கிராமியப் பொருளாதாரத்தின் அடிப்படையான பிரச்சினைகள்

கிராமியப் பொருளாதாரத்தின் அடிப்படையான பிரச்சினைகள் என்னும்போது அது நெல் விவசாயத்துடன் தொடர்புபட்ட பிரச் சினைகளாகவே அமைந்திருக்கின்றன. கிராமியப் பொருளாதாரத்தின் பிரச்சினைகள் அதனது பொருளாதாரத் தேக்க நிலையினது விளைவினுல் ஏற்பட்டதொன்ருகும். மேலும், இப் பிரச்சினைகள் ஒவ் வொன்றும் மற்றப் பிரச்சினைகளுடன் நெருங்கிய தொடர்புகொண் டிருப்பது மட்டுமன்றி, இவற்றிற்கான தீர்வுகள் கூட இணைத்து மேற்கொள்ளப்படவேண்டிய தொன்ருகவும் அமைந்துள்ளது. இப் பிரச்சினைகளை நிலம், உற்பத்தித் திறன், ஊழியம், கொடுகடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாகப் பரந்த அடிப்படையிலும், உற்பத் திக் காரணிகள் பற்றிய பிரச்சினைகள் எனக் குறுகிய அடிப்படையி லும் வரையறை செய்யமுடியும்.

### 1. நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

விவசாயத்துறையில் முக்கிய உற்பத்திக் காரணியாக நிலம் இருப்பதனுல் இப் பிரச்சினையானது கிராமியப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினையாக அமைந்துள்ளது. இலங்கையின் கிராமிய விவசாயத்துறையில் கூடிய பகுதியினர் அல்லது 35·7 சதவீதமான விவசாயிகள் ½ ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பினைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும், ஏறக்குறைய 82·2 சதவீதமான விவசாயிகள் 2 ஏக்கருக்குக் குறைவான நில உடைமையைக் கொண்டவர்களாவர். 1946ஆம் ஆண்டு குடி மதிப்புத் திணைக்கள வரைவிலக்கணப்படி 20 ஏக்கருக்குக்குறைவான நிலப்பரப்பே சிற்றுடைமை விவசாய நிலப்பரப்பு என வரையறை செய்யப்பட்டுள்ளது. 10 ஏக்கருக்கு உட்பட்ட நிலமே சிற்றுடைமை நிலம் என வரையறை செய்தால்கூட 99 சதவீதமான விவசாயிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றுடைமையாளர்களாகக் காணப்படுவர். சுருக்கமாகக் கூறுவதாஞல், இலங்கையின் கிராமிய விவசாயத்தினைச் சிற்றுடைமை விவசாயம் என வரையறை செய்வது பொருத்தமானதாகும்.

அட்டவணை 2. I

கிராமிய விவசாயத்தில் நில உடைமைப் பங்கீடு
(சதவீதமாக)

| நில அளவு | உடைமையாளர் | மொத்த நிலப்பரப்பு |
|---|---|---|
| ½ ஏக்கருக்குக் குறைவானது | 35·7 | 7·6 |
| ½ — 1 | 29·4 | 13·4 |
| 1 — 2 | 17·1 | 19·8 |
| 2 — 5 | 14·2 | 34·6 |
| 5 —10 | 2.9 | 15·2 |
| 10—ஏக்கருக்கு மேலானது | 0·7 | 9·4 |
| | 100 | 100 |

மூலம்: இலங்கை கமத்தொழில் சேவை இலாகா

கிராமிய விவசாய நிலமானது சிற்றுடைமையாக இருப்பதனை விட சிக்கனமற்ற நிலஉடைமையாக இருப்பதே கிராமிய விவசாயத் துறையின் அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. சிக்கன நில உடைமை என்னும்போது அது மூன்று முக்கியஅம்சங்களை உள்ளடக்கியதாகும்.

அ. விவசாயியின் நில உடைமையானது குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

ஆ. அவ்வுடைமையிலிருந்து கிடைக்கும் உற்பத்தி அல்லது வருமானம் விவசாயி கடன்படாமல் வாழ்வதற்குப் போதுமானதாக இருக்கவேண்டும்.

இ. இறுதியாக, விவசாயியானவன் தொடர்ந்து விவசாய உற்பத்தியினை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் மூலதனத்தினைக் கடனுலன்றி சொந்தச் சேமிப்புக்களால் திரட்டுவதற்கு ஏற்ற வருமானத்தை அளிக்கக்கூடிய நில உடைமையாக இருக்கவேண்டும்.

இம் மூன்று நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தக்கூடிய நிலப் பரப்பினளவே பொதுவாக, சிக்கன நிலஉடைமையென வரையறை செய்யப்படுகிறது. குடியேற்றத்திட்ட ஆரம்ப காலங்களில் சிக்கன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலஉடைமை என்று 8 ஏக்கர் நிலத்தினையும், பின்பு 5ஏக்கரையும், இன்று, 3 ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரையுள்ள நிலத்தினைக் குறிக்கு மெனவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இதற்கு விவசாய நிலத்திற்கு ஏற்பட்ட பற்றுக்குறை மட்டும் காரணமன்று. நவீன விவசாய உற்பத்தி முறைகளினால் நிலத்தினது உற்பத்தித் திறன் அதிகரித்தது மட்டுமன்றி, உணவுப் பொருட்களின் விலையேற்றமும் நிலத்திலிருந்து பெறப்படும் பணரீதியான வருமானத்தில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டமையுமே முக்கிய காரணமாகும். மொத்த விவசாயிகளில் 82 சதவீதத்திற்கு மேலானவர்கள் சிக்கனமற்ற நிலஉடைமையினைக் கொண்டிருப்பது மட்டுமன்றி 40 சதவீதமான விவசாயிகள் நிலமற்ற விவசாயிகளாகவும் இருப்பதிலிருந்து கிராமியப் பொருளாதாரத்தில் நிலவுகின்ற கொடூர காணிப் பசியினை ஓரளவு புரிந்துகொள்ளமுடியும்.

கிராமியப் பொருளாதாரத்தில் இன்று காணப்படும் காணிப் பசியானது ஏற்றத்தாழ்வான நில உடைமை முறையினாலேயே பெருமளவு உக்கிர நிலையினை அடைந்ததொன்றாகக் காணப்படு கின்றது. மொத்த நில உடைமையாளர்களில் 5 ஏக்கருக்குக் குறை வான நில உடைமையினைக் கொண்டவர்கள் 96·4 சதவீதமாகவும், மொத்த நிலப்பரப்பில் இவர்களின் பங்கு 75·4 சதவீதமாகவும் உள்ளது. ஆனால், 5 ஏக்கருக்கு மேலான நில உடைமையினைக் கொண்டவர்கள் 3·6 சதவீதமாகவும், மொத்த நிலப்பரப்பில் இவர்களின் பங்கு 24·6 சதவீதமாகவும் உள்ளது. இதிலும் 10 ஏக்கருக்குக் கூடிய நில உடைமையாளர்கள் 0·7 சதவீதமாகவும், மொத்த நிலப்பரப்பில் இது 9·4 சதவீதமாகவும் உள்ள நிலையில் ½ ஏக்கருக்குக் குறைவான நிலத்தைக் கொண்டுள்ள 35·7 சதவீதமான உடைமையாளர்கள் மொத்த நிலப்பரப்பில் 7·6 சதவீதத்தினை மட்டுமே கொண்டுள்ளனர். கிராமியப் பொருளாதாரத்தில் இந் நிலஉடைமையில் காணப்படும் இப்பெரும் ஏற்றத்தாழ்வே வருமானப் பங்கீட்டிலும் கூடிய ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

அண்மைக் காலங்களில் கிராமியச் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பானது ஒருபுறம் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதுடன் மறுபுறம் விவசாய நிலப்பரப்பினைத் துண்டாடுவதற்கும் வழி வகுத்துவிடுகிறது. கிராமப் புறத்தில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு நகர, பெருந்தோட்டத் துறைகளினால் போதிய வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடியளவிற்கு இத் துறைகளின் வளர்ச்சி காணப்படவில்லை. கிராமப்புறத்திலும் வேறு உற்பத்தித் துறைகள் விருத்தி செய்யப்படாமையினால் அதிகரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையானது விவசாய நிலத்துடன் பிணைக்கப்பட்டதாகி விடுகின்றது. கிராமிய விவசாயத்துறையில் நிலம் துண்டாடப்படுதலைத் தடுத்தல், சிக்கனமற்ற நில உடைமைகளைச் சிக்கன நில உடைமைகளாக மாற்றுதல் ஆகியன இத்துறையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும்.

கிராமிய விவசாயத்துறையில் காணப்படும் காணிப் பசியுடன் நிலக் குடியுரிமை முறையும் விவசாயிகளின் வறுமைநிலையினை மேலும் தீவிரப்படுத்தும் மற்றுமொரு காரணியாக அமைந்துள்ளது. இலங்கையில் கிராமியப்புறத்திலுள்ள நிலக் குடியுரிமை முறை ''அந்த முறை'' (Ande System) யெனக் கூறப்படுகின்றது. இம்முறையின்படி நிலச்சுவான் நிலத்தினை விவசாயிக்குச் சாகுபடிக்குக் கொடுத்து வாடகையினைப் பெறுதலையே குறித்துநிற்கின்றது. இது பிரதேசத்திற்குப் பிரதேசம் சில வேறுபாடுகளைக் கொண்டதாகும். பொதுவாக நிலச்சுவான் விவசாயிகளுக்கு விதைநெல், எருதுகள், உரம், மற்றும் வேலி அடைத்தல் போன்ற செலவுகளைக் கொடுத்து மொத்த விளைச்சலில் ½ வாசிக்கும் 2/3 பங்கிற்கும் இடையில் ஒரு பங்கினைப் பெற்றுக்கொள்வான். இந்த அளவானது நிலப் பற்றுக் குறை, அதற்கான கேள்வி ஆகிய காரணிகளால் பெருமளவு தீர்மானிக்கப்படுவதாகும். நிலத்தின் பற்றுக்குறை அதிகமாகவும் கேள்வி கூடியதாகவும் இருக்கின்ற நிலையில் 2/3 பங்கு உற்பத்தியினையும், நிலத்தின் கேள்வி குறைவாக இருக்கும் நிலையில் ½ பங்கு உற்பத்தியினையும் நிலச்சுவான் பெற்றுக்கொள்வான். சில சந்தர்ப்பங்களில் நிலச்சுவான் எவ்வித உள்ளீடுகளையும் கொடாது உற்பத்தியில் ½ பங்கிற்கு உரிமை உடையவனாகவும் இருப்பதுண்டு. இந் நிலக் குடியுரிமை முறையானது நிலச்சுவான், விவசாயியைச் சுரண்டுவதற்குச் சாதகமானதொன்றாகும்.

இலங்கையின் சில மாவட்டங்களில் நிலத் துண்டாடலைத் தடுக்கும் ஒரு முறையாகத் ''தட்டுமாறி'' (Thattumaru) முறையானது காணப்படுகின்றது. இம் முறையானது கூட்டுடைமை முறைக்கு உத்தரவாதமளிப்பதுடன் தனி நபர் சாகுபடி முறையினையும் இணைத்ததொன்றாகும். இது ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறு வேறுபாடுகளைக் கொண்டதாகும். சில இடங்களில் ஒரு விவசாய நிலம் நான்கு பேரின் உடைமையாக இருக்கும்போது ஒவ்வொரு சாகுபடிக் காலத்திலும் ஒருவன் மட்டும் சாகுபடியில் ஈடுபட்டு முழு உற்பத்தியினையும் எடுத்துக்கொள்வான். இவ்வாறு ஏனைய மூவரினது முறைகளும் முடிந்தபின் மீண்டும் முதலாம் நபர் நிலத்தில் சாகுபடி செய்யும் சந்தர்ப்பத்தினைப் பெறுவார். வேறு சில இடங்களில் இச் சாகுபடி நிலத்தினை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொருவரும் ஒவ்வொரு பகுதியினையும் ஒவ்வொரு காலப்பகுதிக்கு மாற்றி மாற்றிச் சாருபடி மேற்கொள்வர். இலங்கையின் மொத்த நெல் விவசாய நிலத்தில் 6 சதவீதமான நிலம் மட்டுமே இம் முறையின்கீழ் உண்டு. ஆனால் சில மாவட்டங்களில் இம் முறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் 50 சதவீதமான நிலப்பரப்பும், கேகாலை மாவட்டத்தில் 32 சதவீதமான நிலப்பரப்பும் இம்முறையின் கீழ் உள்ளது.

அட்டவணை 2. II

மாவட்ட மொத்த நெல் நிலப்பரப்பில் தட்டுமாறி முறைக்குட்பட்ட நிலத்தின் சதவீதம்—1972

| மாவட்டம் | நிலப்பரப்பு |
|---|---|
| இரத்தினபுரி | 50 |
| கேகாலை | 32 |
| களுத்துறை | 23 |
| காலி | 17 |
| மாத்தளை | 15 |
| குருணகலை | 6 |
| கொழும்பு | 5 |

மூலம்: தட்டுமாறும், கட்டுமாறும் முறை பற்றிய குழு அறிக்கை 1972.

இம் முறையானது பெருமளவு விருத்தி அடைந்த பிரதேசங்களில் அல்லது உற்பத்தித் திறன் கூடிய பிரதேசங்களிலேயே ஓரளவு அதிகமாகக் காணப்படுகின்றது. பெருமளவு மாவட்டங்களில் இம்முறை மிகக் குறைவாகவே உள்ளது. எனவேதான், மொத்தரீதியாக நோக்கும்போது இம்முறையானது இன்று கிராமிய பொருளாதாரத்தில் அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதில்லை. ஆனால் நிலக் குடியுரிமை முறையினைப் போன்று தட்டுமாறு முறையும் நிலத்தினைச் சீர்திருத்தும் நீண்டகால முதலீட்டு முயற்சிகளுக்குத் தடையாக இருக்கின்றது.

**2. குறைந்த உற்பத்தித் திறன்**

கிராமியத்துறையினது குறைந்த வருமானத்திற்கு குறைந்த உற்பத்தித்திறனே முக்கிய காரணமாகும். விவசாயத்துறையின் உற்பத்தித்திறனை நிலத்தினது உற்பத்தித்திறன், ஊழியத்தினது உற்பத்தித்திறன் என இரு வகைகளாக வகைப்படுத்த முடியும். கிராமிய விவசாய நிலத்தினது உற்பத்தித்திறன் அதிகரிப்பானது விவசாய உள்ளீடுகளைத் தொகைரீதியாகவும், தரரீதியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பதன் விளைவாக ஏற்படுவதாகும். நல்ல இன விதை நெல்லைப் பயன்படுத்தல், செயற்கை உரப் பயன்பாட்டினைக் கூட்டுதல், கிருமிநாசினி, பூச்சிக்கொல்லி போன்றவற்றினைஉபயோகித்தல், நாற்றுநடுதல், பரம்படித்தல் என்ற வகையிலேயே இது அமைந்திருக்கும். இலங்கையில் ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலானது ஜப்பான், எகிப்து, அமெரிக்கா போன்றவற்றினைவிட மிகக் குறைவானதாகக் காணப்படுகின்றது. எகிப்தின் ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலானது 1971இல் 75·2 புசலாகவும், அமெரிக்காவினது 71·9 புசலாகவும், ஜப்பானினது 72·6 புசலாகவும் காணப்பட, இலங்கையினது 45·9 புசலாகமட்டுமே காணப்படுகின்றது. இலங்கையின் சராசரி ஏக்கருக்குரிய உற்பத்தி குறைவாகக் காணப்பட்டாலும் சில மாவட்டங்களில் (கேகாலை, குருணுகலை, பொலநறுவை, கண்டி) ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலானது 100 புசலுக்கும் 150 புசலுக்கும் இடைப்பட்டதாக உள்ளது.

## அட்டவணை 2. III

நெல்லினது ஏக்கருக்குரிய சராசரி விளைச்சல்
(புசல்களில்)

| நாடுகள் | 1948—1952 | 1971 |
|---|---|---|
| அமெரிக்கா | 35·4 | 71·9 |
| இந்தியா | 15·3 | 23 6 |
| ஜப்பான் | 58·8 | 72·6 |
| பாகிஸ்தான் | 19·0 | 22·1 |
| எகிப்து | 52·4 | 75·2 |
| இலங்கை | 19·6 | 45·9 |

மூலம்: F. A. O. Production year Book, 1971.

கடந்த இருபது வருட காலங்களில் இலங்கையின் சராசரி ஏக்கருக்குரிய நெல் உற்பத்தித்திறனில் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1950ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஏக்கருக்குரிய சராசரி நெல் உற்பத்தி அமெரிக்காவில் 35·4 புசல்களாக இருந்து 1971இல் 71·9 புசல்களாகவும், ஜப்பானில் 58·8 புசல்களாக இருந்து 72·6 புசல்களாகவும் அதிகரித்துள்ளது. ஆனல், இலங்கையில் இக்காலப் பகுதியில் 19·6 புசல்களாகவிருந்து 45·9 புசல்களாக அதிகரித்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இவ்வளவு பெரும் அதிகரிப்பு உற்பத்தித்திறனில் ஏற்படவில்லை எனலாம். இலங்கையிலே அண்மைக் காலத்தில் பல புதிய நிலங்கள் சாகுபடிக்குள்ளாக்கப்பட்டமையும், நிலத்தினது சராசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும். ஏனெனில் புதிய கன்னி நிலங்களில் கூடிய வளம் இருப்பதனுல் உற்பத்தித் திறன் உயர்வாக இருப்பது இயல்பாகும். ஆயினும், விவசாயத் துறையில் ஏற்பட்ட நவீனமயமே இவ்வுற்பத்தித் திறன் அதிகரிப்ப தற்குப் பொறுப்பு வாய்ந்த காரணியாக அமைந்துள்ளது.

நிலத்தினது சராசரி உற்பத்தித் திறனைப் போன்றே சராசரி ஊழியத்தினது உற்பத்தித் திறனும் மிகக் குறைவாக இருந்த போதிலும், இதில் வேகமான அதிகரிப்பு அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை. 1948இல் ஒரு அலகு ஊழியத்தினது சராசரி உற்பத்தித் திறனுனது 58 புசலாக இருந்து 1970இல் 116 புசல்களாக அல்லது இரண்டு மடங்காக அதிகரித் துள்ளது. நிலம், ஊழியம் என்ற இருவகைகளிலும் குறைந்த உற்பத்தித் திறனைக் கொண்ட கிராமிய விவசாயத்துறையில் பெரு மளவு சனத்தொகை தங்கியிருப்பதனுல் கிராமிய மக்களின் வாழ்க்கை நிலையானது தொடர்ந்து பிழைப்பு மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே, பெருமளவு கிராமிய மக்களைப் பொறுத்தமட்டில் பணமானது கொடுக்கல் வாங்கல்களுக்கான மாற்று ஊடகமாக மட்டும் பணியாற்றுகிறதேயொழிய பெறு மானத் திரட்டாகப் பயன்படுத்தப்படவில்லை.

கிராமிய விவசாயத்தினது உற்பத்தித் திறனை அதிகரிக்க முனை யும்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய நிலை காணப்படு கின்றது.

அ. உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு இயந்திரமயமாக்கல் அல்லது முதல் செறிவான உற்பத்தி முறையினைப் பயன் படுத்தல் அவசியமானதாகும். ஆனுல், கிராமியப் பொரு ளாதாரத்தில் பெருமளவு சனத்தொகை வேலையற்றிருப் பதனுல், முதல் செறிவான உற்பத்தி முறையானது வேலை யின்மையினை மேலும் அதிகரிப்பதாக இருக்கும்.

ஆ. கிராமிய விவசாயிகளில் பெரும்பகுதியினர் சிற்றுடைமை யாளர்களாகவும், சிக்கனமற்ற நில உடைமையாளர்களாக வும் இருப்பதனுல் இவர்களிடம் பெருமளவு முதல் தட்டுப் பாடு காணப்படுகின்றது. இதனுல் இயந்திரங்கள் போன்ற வற்றினைக் கொள்வனவு செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்.

இ. நவீன விவசாய முறைகளைப் பின்பற்றுவதற்கு விவசாயி கள் பெருமளவிற்குக் கல்வியறிவு உடையவர்களாக இருக்கவேண்டும். பெருமளவு விவசாயிகள் கல்வியறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றவர்களாகவும், மரபுகள், சம்பிரதாயங்கள் போன்ற வற்றினுல் பிணைக்கப்பட்டவர்களாகவும் காணப்படு கின்றனர்.

ஈ. பெருமளவு விவசாய நிலப்பரப்பானது சிறிய துண்டுக ளாக இருப்பதனுல் நவீன இயந்திரங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தல் சிக்கனமான உற்பத்தியாக இருக்க மாட்டாது.

உ. நிலக் குடியுரிமை முறை, தட்டுமாறி முறை போன்றன வும், நிலத்தினை நீண்டகால நோக்குடன் திருத்தி விருத்தி செய்வதற்குத் தடையாக உள்ளன.

## 3. கீழுழைப்பும் பருவகால வேலையின்மையும்

குடும்ப அங்கத்தவர்களை அடிப்படையாகக்கொண்டு இலாப நோக்கற்ற ரீதியில் உற்பத்தி மேற்கொள்ளப்படும் கிராமிய விவ் சாயத்துறையில் இயல்பானதொரு பிரச்சினையாக கீழுழைப்பானது அமைந்துள்ளது. கீழுழைப்பில் வேலையின்மையானது, வெளிப்படை யாகத் தோன்றுவதில்லை. எல்லை உற்பத்தித் திறனுனது பூச்சியமாக விருக்கும். ஊழியத்தினையே பொதுவாக விவசாயத்துறையில் கீழுழைப்பு என வரையறை செய்வர். உதாரணமாக, ஒரு விவசாய நிலத்தில் 3 பேர் வேலை செய்வதன்மூலம் 120 புசல் உற்பத்தி கிடைக்கும் நிலையில் குடும்ப அங்கத்தினர்கள் 5 பேர் இதில் ஈடுபட்டு இதேயளவு மொத்த உற்பத்தி பெறப்படும்போது கடைசி இரண்டு ஊழியத்தினது எல்லை உற்பத்தியானது பூச்சியமாக அமைந்திருக்கும். கடைசி இரண்டுபேரும் பௌதீக ரீதியாக மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டவர்களாவர். ஆனுல், பொருளாதாரரீதியில் இவர்கள் உற்பத்தியில் ஈடுபட்டவர்களாகக் கருதப்படுவதில்லை. அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளிலுள்ள கிராமிய விவசாயிகளின் சனத் தொகையில் கீழுழைப்பானது ஏறக்குறைய 25 சதவீதமாக இருப்ப தாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை அளிக்கும் பிரதான சாதனமாக விவசாயமே அமைந்திருக்கிறது. 1971ஆம் ஆண்டுச் சனத்தொகைக் கணிப்பீட்டின்படி மொத்தக் கிராமிய ஊழியப்படையில் 79·9 சதவீதமானேர் நெற்சாகுபடி யிலும் ஏனைய விவசாய உற்பத்திகளில் 19·6 சதவீதமானேரும் ஈடுபட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தக் கிராமிய ஊழியப்படையில் 99 சதவீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதே, கீழுழைப்பு, கிராமியப் பொரு ளாதாரத்தில் அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2. IV

**கிராமியத்துறையிலுள்ள உழைக்கும் ஊழியப்படையினது உற்பத்தித் தொழில்ரீதியான பரம்பல்—1971**

| உற்பத்தித் தொழில் | தொகை (000) | சதவீதம் |
|---|---|---|
| நெற்சாகுபடி | 802·8 | 79·9 |
| ஏனைய தானிய உற்பத்தி | 1·8 | 0·1 |
| மரக்கறியும் பழவகையும் | 62·2 | 6·2 |
| ஏனைய பயிர்கள் | 132·4 | 13·3 |
| கால்நடை வளர்ப்பு | 4·7 | 0·5 |
| | 1003·9 | 100 |

மூலம்: சனத்தொகை மதிப்பீடு, 1971.

கிராமியப் பொருளாதாரத்திலுள்ள ஊழியப்படையில் கணிசமான ஒரு பகுதி கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றில் ஈடுபட்டிருக்குமேயானல் கீழுழைப்பானது ஓரளவு குறைவாக அமைந்திருக்கும். கிராமியப் பொருளாதாரத்தில் அதிகரிக்கும் சனத்தொகைக்கு நகரப்புறக் கைத்தொழில்களினுல் போதிய வேலைவாய்ப்பினை வழங்கமுடியாதுள்ளது. இதே போன்று போதியளவு விவசாய நிலப்பரப்பினைச் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்பச் சாகுபடிக்குள் கொண்டுவர முடியாதுள்ளது. இதனுல் அதிகரிக்கும் சனத்தொகையானது ஏற்கனவேயுள்ள விவசாய நிலப் பரப்பிற்குள் அமுங்கியிருப்பதே கீழுழைப்பிற்குக் காரணமாகும். இலங்கையின் கிராமிய விவசாயமானது ஒரு தொழிலாகவன்றி வாழ்க்கை முறையாகவே அமைந்துள்ளது. எனவே, குடும்ப ஊழியத்திற்குக் கூலி வழங்கப்படாமையே இக் கீழுழைப்பு தொடர்ந்து இருப்பதற்குக் காரணமாகும். ஆனுல், இலாப நோக்குடன் கூலி வழங்கப்படும் முதலாளித்துவ உற்பத்தி முறையானது கிராமியப் பொருளாதாரத்தில் பெருமளவு வளர்ச்சியடையும்போது கீழுழைப் பானது வெளிப்படையான வேலையின்மையாக மாற்றமடையும்.

எந்த நாட்டிலுமே விவசாயத்துறையில் பருவகால வேலையின்மை என்பது ஒரு இயல்பான அம்சமாகும். எப்பொழுதும் விவசாயத்தில் விதைப்பு, அறுவடை ஆகிய இரு காலப் பகுதிகளில் மட்டுமே விவசாயிகளுக்குக் கூடிய வேலையிருக்கும். ஏனைய பருவங்களில் விவசாயிக்கும் அவனது குடும்ப அங்கத்தினர்களுக்கும் பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளவு வேலையிருப்பதில்லை. இத்தகைய பருவகால வேலையின்மையானது வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு பிரச்சினையாக இருப்பதில்லை. ஏனெனில் அவ் விவசாயிகளுக்கு விளைச்சலின் மூலம் கிடைக்கும் வருமானம் வருடம் முழுவதிலும் சீவியம் நடத்துவதற்குப் போதுமானதாக இருக்கும். மேலும் இப் பருவ வேலையின்மையின்போது பண்ணைத்தொழில், குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றினை மேற்கொள்வதன்மூலம் கூடிய வருமானத்தினைப் பெறுகின்றனர். இலங்கையின் கிராமிய விவசாயிகளுக்கு உற்பத்தியின்மூலம் கிடைக்கும் வருமானம் போதியதாக இன்மையே பருவகால வேலையின்மை ஒரு பிரச்சினையாக இருப்பதற்குக் காரணமாகும். மேலும், பண்ணைத்தொழிலைச் சிறந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு நிலப் பற்றுக்குறையானது தடையாக அமைந்துள்ளது. இதேபோன்று குடிசைக் கைத்தொழில்களை மேற்கொள்வதற்குத் தடைகளாகப் போதிய மூலதனமின்மை, மூலப் பொருட்களின் தட்டுப்பாடு, தகுந்த சந்தை வாய்ப்பின்மை போன்றவை காணப்படுகின்றன. விவசாயிகள் பருவகால வேலையின்மையின்போது பெருந்தோட்டங்கட்கு வேலைக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் 1930ஆம் ஆண்டிற்குப் பின்பு பெருந்தோட்டங்கள் பெருமளவு வளர்ச்சியடையாமையினால் கிராமிய விவசாயிகட்குப் போதிய வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய ஆற்றல் படைத்தவையாக அவை இருக்கவில்லை. இத்தகைய காரணங்களினாலேயே பருவகால வேலையின்மையானது கிராமிய விவசாயிகட்கு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

**4. கிராமியக் கடன் பிரச்சினை**

நவீன தொழில் முயற்சிகள் எல்லாம் பெருமளவிற்குக் கடனை எதிர்பார்த்தே தொழிற்படுகின்றன. ஆனால் கிராமிய விவசாயத் துறையின் கடன் பிரச்சினையானது விவசாயிகளுக்குத் தேவைப்படும் பெருமளவு கடன் என்ற அடிப்படையில் மட்டும் எழுவதில்லை. அத்துடன் அக் கடன்களை நிரம்பல் செய்யும் நிறுவனங்கள், பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை என்பவற்றுடனும் தொடர்புபட்ட பிரச்சினையாகவும் இது அமைந்திருக்கின்றது. விவசாயிகட்குத் தேவைப்படும் கடன்களை உற்பத்திக்கான கடன் நுகர்வுக்கான கடன் என இருவகையாக வகைப்படுத்தமுடியும். உற்பத்திக்கான கடன்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ. **நிலையான முதலீட்டுக் கடன்:** நிலம், இயந்திர உபகரணங்களின் கொள்வனவு, களஞ்சியம் போன்றவை கட்டுவதற்கான கடன்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. நடுத்தர முதலீட்டுக் கடன்கள்: நிலம் திருத்துதல், இயந்திர உபகரணங்களைப் பழுதுபார்த்தல், கால்வாய் வெட்டுதல் போன்றவற்றிற்கான கடன்கள்.

இ. மாறும் முதலீடு: விதைநெல், கிருமிநாசினி, உரம், கூலி போன்றனவற்றிற்கான செலவுகள்.

நுகர்வுக்கான கடன்களையும் மூன்று வகைகளாகப் பாகுபடுத்த முடியும்.

அ. அன்றாட நுகர்வுக் கடன்: விவசாயிகளின் வருமானம் குறைவாக இருப்பதனால், பருவகால வேலையின்மையின்போதும் பயிர்களின் அழிவு ஏற்படும் காலங்களிலும் நுகர்விற்கான கடன்கள்.

ஆ. நெடுவாழ்வுப் பொருட்கள் கொள்வனவுக்கான கடன்கள்: வீடுகட்டுதல், ஆபரணம் போன்றவற்றினைக் கொள்வனவு செய்வதற்கான கடன்கள்.

இ. எதிர்பாராத கடன்கள்: சமயச் சடங்குகள், நோய், மரணம், பிறப்பு போன்றவற்றிற்கான கடன்கள்.

இவ்விருவகைக் கடன்களுக்கு அப்பால் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குக் கூட விவசாயிகளுக்குக் கடன் தேவைப்படுகின்றது. கிராமிய விவசாயிகளின் குறைந்த வருமானம் மட்டுமன்றி, கிராமிய சமூக வாழ்க்கையின் விறைப்புத்தன்மை மிக்க விதிகள்கூட விவசாயி தனது வருமானத்திற்கு மேலாகச் செலவுசெய்யுமாறு நிர்ப்பந்திக்கப் படுவதற்குக் காரணமாகின்றன. எமது கிராமிய மக்கள் கருவிலிருந்து கல்லறை ஈறாக சமய ஆசாரங்களுக்கும், கொண்டாட்டங் களுக்கும் கூட வீணான செலவுகளைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இந்த நிலையானது குறைந்த வருமானத்தினை உடைய விவசாயியினைக் கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்துவிடும் நிலைக்குள்ளாக்கிவிடுகின்றது.

கிராமிய விவசாயிக்கு நீண்டகாலக் கடன்கள், நடுத்தரகாலக் கடன்கள், குறுங்காலக் கடன்கள் ஆகிய மூன்று வகையான கடன் களுமே தேவைப்படுகின்றது. குறுங்காலக் கடன்களை விவசாயி யானவன் அறுவடையின்மூலம் திருப்பிக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். எனவே, இக் கடன்களின் முதிர்ச்சிக் காலம் விதைப்பிற் கும் அறுவடைக்கும் இடையேயுள்ள காலப்பகுதியினைக் கொண்ட தாக இருக்கும். மேலும் விவசாயியின் நுகர்வுக் கடனையும், மாறும் முதலீட்டினையும் சில சமயங்களில் வேறுபடுத்துவது கஷ்டமானதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஏனெனில், விவசாயியானவன் உற்பத்தியினை மேற்கொள்ளும் ஊழியமாகவும் செயற்படுவதனால் இவன்பெறும் நுகர்வுக் கடன், கூலி என்ற அடிப்படையில், மாறும் முதலாகவும் இருக்க முடியும். விவசாயிக்குத் தேவைப்படும் நீண்டகால முதலீட்டுக் கடனின் ஆயுட்காலம் மிக அதிகமானதாகவும் அமைந்திருக்க வேண்டும். ஏனெனில், விவசாயியின் வருமானம் மிகக் குறைவாக இருப்பதனால் மிகச் சிறுதொகையினையே மாதாமாதம் விவசாயி செலுத்தக்கூடியதாக இருக்கும்.

கிராமியத் துறைக்குக் கடனை வழங்குவதற்குப் பல வங்கியியலாளர்கள் காணப்படுகின்றனர். ஆனால் வங்கிகளே இல்லை என்ற அச்சத்துடனேயே கிராமியக் கடனை நிரம்பல் செய்யும் நிறுவனங்கள் பற்றிய பிரச்சினை தொடர்புபட்டதாகும். கிராமிய விவசாயிகள் பெறும் கடனில் சிறுபகுதியினையே ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களான வணிக வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து பெறுகின்றார்கள். 1957இல் கிராமிய விவசாயிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களிடம் 7·8 சதவீதமான கடனையும் 1969இல் 25 சதவீதமான கடனையுமே பெற்றிருக்கின்றார்கள்.

## அட்டவணை 2. V

### கிராமியத்துறைக்குக் கொடுகடன்களை வழங்கும் நிறுவனங்களின் பங்கு (சதவீதமாக)

| கடன்வழங்கும் நிறுவனங்கள் | வழங்கப்பட்ட கடன் 1957 | 1969 |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்கள் | 2·6 | 2·7 |
| கூட்டுறவுச் சங்கங்கள் | 4·1 | 3·5 |
| வணிக வங்கிகள் | 1·1 | 12·9 |
| ஏனைய நிதி நிறுவனங்கள் | — | 5·9 |
| இனத்தவர், நண்பர்கள் போன்றவர்களினால் வழங்கப்பட்ட கடன் | 44·2 | 25·8 |
| நிலச்சுவான் | 8·0 | 0·7 |
| கடனீவோன் | 15·5 | 28·8 |
| வர்த்தகர்கள்/தரகர்கள் | 11·5 | 14·3 |
| ஏனையவைகள் | 13.0 | 5·4 |
| | 100 | 100 |

மூலம்; கிராமியக் கடன்படு நிலை அளவீடு 1957, கிராமியக் கடன், கிராமியக் கடன்படு நிலை பற்றிய அளவீடு 1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு கடன்களை ஒழுங்குபடுத்தப்படாத நிதி நிறுவனங்களான நிலச்சுவான், கடனீவோர், வர்த்தகர்கள், தரகர்கள், இனத்தவர்கள் போன்றவர்களிடமே பெற்றுக்கொள்ளுகின்றார்கள். விவசாயிகள், ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் பெறும் கடன்கள் குறைந்த முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருப்பதுடன் 100இலிருந்து 250 சதவீதம் வரை வட்டியினைச் செலுத்துமாறும் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். மேலும், தனது உற்பத்திகளை மிகக் குறைந்த விலையில் தரகர்களிடம் விற்கும் நிலைக்குள்ளாவதுடன், கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாதவிடத்து தனது ஒரே சொத்தான நிலத்தினைக் கூட இவர்களிடம் இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகிறார்கள்.

இத்தகைய பல ஆபத்துக்கள் இருந்தும்கூட கிராமிய விவசாயிகள் ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் பெருமளவு கடனைப் பெறுவதற்குப் பல காரணங்கள் உள. எமது நாட்டு வணிக வங்கிகள் நீண்டகாலமாக நகர—பெருந்தோட்டத் துறைக்குக் கடனைக் கொடுக்கக் கூடிய முறையில் அமைக்கப்பட்டுத் தொழிற்பட்டனவேயொழிய கிராமிய மக்களைக் கருத்திற்கொள்ளவில்லை. வணிக வங்கிகள் கடன்பத்திரங்கள், ஆவணங்கள் போன்ற அசையும் ஆதனங்களை அடிப்படையாகக்கொண்டு கடனை வழங்குகின்றனவே ஒழிய, நிலம், விவசாயியின் விளைச்சல் போன்றவற்றினை அடிப்படையாகக்கொண்டு கடன் வழங்குவதில்லை. ஆனால், ஒழுங்குபடுத்தப்படாத துறை, நிலம், விளைச்சல் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டும் கடன் வழங்குவதுடன் விவசாயிகளுக்குத் தேவைப்படும் பல்வேறு வகையான கடன்களையும், இலகுவாக, தேவைப்படும் நேரத்தில் வழங்குகின்றது. கிராமிய விவசாயிகளுக்கு இவ்வொழுங்குபடுத்தப்படாத நிறுவனங்கள் நன்கு பழக்கப்பட்டனவாயிருப்பதுடன் கிராமியச் சூழ்நிலைக்கு ஏற்ப நெகிழ்ச்சித் தன்மை மிக்க கடன் முறைகளையும் பின்பற்றுவனவாகக் காணப்படுகின்றன. மேலும், அண்மைக்காலத்தில் தானிய விலையேற்றம், சனத்தொகை அதிகரிப்பு போன்றவற்றினால் நிலத்தினது பெறுமதி அதிகளவு உயர்ந்துள்ளதால் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் கூடிய கடன்களை விவசாயிகளினால் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இவ்வாறு ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் விவசாயி கடன்பெற முனைவதால் அவன் தொடர்ந்து கடன் சுமைக்குள்ளாகவேண்டிய நிலைக்குள்ளாகின்றான்.

விவசாயியானவன் தான்பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையானது அவனால் பெற்றுக்கொள்ளப்படும் பெருந்தொகையான கடன்கள், கடனைக் கொடுக்கின்ற நிறுவனங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபந்தனைகள் என்ற இரு அம்சங்களுடன் ஓரளவு தொடர்புபட்டவை யாகும். ஏனெனில் விவசாயியானவன் தனது சக்திக்கு அப்பாற் பட்ட தொகையினைக் கூடிய செலவில் கடனாகப் பெறுவதும் பொறுப்பு வாய்ந்த காரணி என்பதனை மறுப்பதற்கு இல்லை. மேலும் கிராமிய விவசாயியின் அடிப்படையான பிரச்சினைகள் கூட இதற்குப் பெருமளவு பொறுப்பாக உள்ளன எனலாம். 1972ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் படி கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமைக்கு மிக முக்கிய காரணங்களாக பயிர் விளையாமை, குறைந்த வருமானம் ஆகியனவே எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனைய காரணங் களான திருப்பிக் கொடுக்க மனமின்மை, கூட்டுறவு அதிகாரிகளின்

அட்டவணை 2. VI

கடன் மீளப் பெறுமைக்கான காரணங்கள்
(சதவீதமாக)

| கடனைத் திருப்பிக் கொடுக்காமைக்கான காரணம் | தொகை |
|---|---|
| பயிர் விளையாமை | 26·4 |
| குறைந்த வருமானம் | 17·2 |
| திருப்பிக் கொடுப்பதற்கு மனமின்மை | 12·0 |
| நலமின்மை, இறப்பு | 8·9 |
| கூட்டுறவு அதிகாரிகளின் கவனமின்மை | 8·8 |
| கூட்டுறவின் ஊழல்கள் | 7·8 |
| கூடிய செலவு (சமயச் சடங்குகள்) | 2·3 |
| ஏனையவை | 16·6 |
| | 100 |

மூலம்: Survey of Defaults in the Repayment of New Agricultural Loans 1972.

கவனமின்மை, கூட்டுறவின் ஊழல்கள் போன்றவை அரசாங்கத் தினால் வழங்கப்படும் கடன்கள் திருப்பிப் பெற முடியாமைக்குக் காரணங்களாகும். கிராமிய விவசாயிகள் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமையானது கிராமிய விவசாயத்துறையின் அடிப் படையான பிரச்சினைகளிலிருந்து தோன்றுவது என்பதில் சந்தேக மில்லை.

### பொருளாதார வளர்ச்சியில் கிராமியப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் நவீன மயத்துடன் துரித பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்குக் கிராமியப் பொருளா தாரத்தினை விருத்தி செய்தல் அவசியம் என்ற கருத்து இன்று பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தியினையும் சனத்தொகை யினையும் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறை யாகவும் கிராமியப் பொருளாதாரம் காணப்படுகின்றது. இலங்கை யின் தேசிய வருமானத்தில் ஏறக்குறைய 20 சதவீதம் கிராமியத் துறை சார்ந்ததாக இருப்பதுடன் மொத்தச் சனத்தொகையில் ஏறக் குறைய 65 சதவீதத்தினர் கிராமிய சனத்தொகையாகவும் காணப் படுகின்றனர். இலங்கையில் மிகப்பெரும் உற்பத்தித் துறையாகக் கிராமியத்துறை உள்ளது. எனவே மொத்தத் தேசிய உற்பத்தி யினை அதிகரித்தல், தலா வருமானத்தினைக் கூட்டுதல் போன்றவை கிராமியத்துறை உற்பத்திப் பெருக்கத்துடனும், நவீன மயத்துட னும் தொடர்புபட்டதாகும். மேலும், எமது நாட்டின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல் போன்றவை யாவும் கிராமிய சனத் தொகையின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மூலமே சாத்தியமான தாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெரும்பான்மையானவை விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக மட்டு மன்றி, உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் உள்ளன. இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 40 சதவீதத்திற்கு மேலான தொகையை உணவு இறக்குமதிக்கே செலவிடுகின்றது. உலக சனத்தொகை அதிகரித்துச் செல்வதனால் உணவுப்பொருட்களின் விலைகள் மேலும் எதிர்காலத்தில் தொடர்ந்து அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. இந்நிலையில் இலங்கை யின் சனத்தொகையும் அதிகரிக்கும்போது அதிகளவு உணவுப் பொருட்களைக் கூடிய விலையில் இறக்குமதி செய்யவேண்டி ஏற்படுவ தால் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் செலவிடும் வெளிநாட்டுச் செலாவணியின் பங்கு அதிகரிப்பதாக இருக்கும். எனவே உள் நாட்டில் கிராமியத் துறையினை விருத்தி செய்து உணவு உற்பத்தி யினைப் பெருக்குவதன் மூலம் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி யினைச் சேமிக்க முடிவதுடன் இச் செலாவணியினைக் கைத்தொழி லாக்கத்திற்குத் தேவையான முதலீட்டு, மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை யில் ஏற்பட்ட அதிகரிப்பானது கிராமப் புறத்தில் பெரும் வேலை யின்மையினை ஏற்படுத்தியிருப்பதுடன் கிராமிய சனத்தொகையானது நகரப்புறங்களை நோக்கி நகருவதற்கும் காரணமாகி விடுகின்றது. நகரப்புறத்தில் இச் சனத்தொகைக்கு வேலை வாய்ப்பினை அதிகரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்குக் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும்போது நகரப் புறத்தின் சூழல் மாசுபடுத்தப்படுவதுடன், பல சமூக ரீதியான பிரச்சினைகளும் தோன்றுவதற்கு வழிவகுக்கும். ஆனால் கிராமப் புறத்தில் பெருமளவு விருத்தி செய்யப்படாத மூலவளங்கள் காணப் படுகின்றன. இலங்கையின் கிராமிய சனத்தொகையில் பெரும்பகுதி நெல் விவசாயத்திலேயே முடங்கியிருக்கின்றது. கிராமப்புறங்களில் உப உணவுப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, காட்டுத் தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றினை விருத்தி செய்வதன் மூலம் அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு வேலை வாய்ப் பினை மட்டுமன்றி உற்பத்திப் பெருக்கத்தினையும் ஏற்படுத்த முடியும்.

இன்று கைத்தொழிலாக்கத்திற்கு மூலதனமானது மிக இன்றியமை யாத தொன்றாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் பெருமளவு மக் களின் குறைந்த வருமானமானது குறைந்த சேமிப்பிற்கும் குறைந்த மூலதனவாக்கத்திற்கும்கூட காரணமாகும். கிராமியப் பொருளா தாரத்தினை விருத்தி செய்வதன் மூலம் பெருமளவு மக்களின் வரு மானத்தினை உயர்த்த முடிவதுடன் கூடிய சேமிப்புக்களை முதலீடுக ளாகவும் பெற முடியும். பல நாடுகள் பொருளாதார வளர்ச்சி யின் ஆரம்ப காலங்களில் கைத்தொழிலாக்கத்திற்குத் தேவையான முதலை விவசாயத்துறையிடமிருந்தே பெற்றுக்கொண்டன. சோவியத் யூனியன், ஜப்பான் போன்ற நாடுகள் விவசாயத்துறையினை விருத்தி செய்வதன் மூலம் கைத்தொழிலாக்கத்திற்குத் தேவையான முத லினைப் பெற்றுக்கொண்டன. கிராமப் புறத்தில் குறைந்த காட்சி விலைவு, குறைந்த வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் காரணமாக வருமான அதிகரிப்பானது கூடிய சேமிப்பினை ஏற்படுத்துவதற்கும் சாதகமாக இருக்கும். எனவே மூலதனவாக்கத்தினை அதிகரிப் பதற்கும் கிராமிய பொருளாதார விருத்தி இன்றியமையாததாகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மக்களின் வருமானம் குறைவாக இருப்பதனால் கைத்தொழிற் பொருட்களுக்கான கேள்வியானது மிகக் குறைவாகக் காணப் படுகின்றது. இக் குறைந்த கேள்வியானது புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தடையாகவும், ஏற்கனவே உள்ள கைத் தொழில்கள் முழு இயலளவில் உற்பத்தியினை மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பதற்குக் காரணமாகவும் உள்ளது. கிராமியப் பொருளாதார விருத்தியின் மூலம் கிராமப்புற மக்களின் வரு மானத்தில் அதிகரிப்பேற்படுவதனால் கைத்தொழிற் பொருட்கட்கான கேள்வியில் பெரும் அதிகரிப்பு ஏற்பட முடியும். நகரப் புறத்தினையே பிரதான சந்தையாகக் கொண்டிருந்த கைத்தொழிற் பொருட் களுக்கு பரந்த அடிப்படையில் கிராமப் புறங்களிலும் சந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு உருவாகுவதாக அமைந்திருக்கும். கிராமியப் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழிலாக்கத்திற்கு இன்றியமையாத சந்தை வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுப்பதாக இருக்கும்.

ஒரு நாடு கைத்தொழில் வளர்ச்சியின் மூலம் துரித பொருளாதார வளர்ச்சியினை அடைந்து செல்லும்போது உணவுத் தேவையானது பெருமளவு அதிகரித்துச் செல்லும். இதற்குக் கிராமிய சனத் தொகையானது நகரப்புறத்தினை நோக்கி நகர்வது மட்டும் காரண மன்று. மேலும், இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் குறைந்த வருமானமுடைய மக்கள் தமது உணவுத் தேவையினைப் பூரணமாகப் பூர்த்தி செய்வதில்லை. எனவே, பொரு ளாதார வளர்ச்சியின்போது மக்களின் வருமானம் அதிகரிப்பதனுல் உணவுப் பொருட்களின் கேள்வியும் அதிகரிக்கும். இதனுல், மக்களின் பிழைப்பு மட்ட வாழ்க்கைநிலையை அதிகரிக்கச்செய்து ஒரு ஆரோக்கியமான சனத்தொகையினை உருவாக்குவதற்கும் கிராமியப் பொருளாதாரவிருத்தி இன்றியமையாததாகும். கிராமியப் பொரு ளாதார வளர்ச்சியானது கிராமிய மக்களின் சுபீட்சத்திற்கு மட்டு மன்றி துரித பொருளாதார வளர்ச்சியினை முடுக்கிவிடும் ஒரு இயக்கு விசை என்ற ரீதியிலும் இன்றியமையாததாகும்.

**கிராமியப் பொருளாதார வளர்ச்சி**

இலங்கையின் கிராமியப் பொருளாதார வளர்ச்சி பெருமள விற்கு நெற்சாகுபடியினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது நீண்டகால வழக்கமாகும். இதற்கு நெற்சாகுபடி கிராமியப் பொரு ளாதாரத்தில் முக்கிய இடத்தினைப் பெறுவது மட்டுமன்றி, இது பற்றிய புள்ளி விபரங்கள் மட்டுமே பெருமளவு கிடைக்கக் கூடிய தாக இருப்பதும் கூட காரணமாகும். ஆனுல் நெற் சாகுபடி மட்டு மன்றி ஏனைய பல தொழில் முயற்சிகளும் கிராமியப் பொரு ளாதாரத்தில் காணப்படுகின்றன. இவை சிறந்த முறையில் விருத்தி செய்யப்படும்போது மட்டுமே கிராமியப் பொருளாதாரத்தில் ஒரு நிலுவையான வளர்ச்சி ஏற்படக்கூடியதாக இருப்பதுடன் அதன் அடிப்படையான பிரச்சினைகட்குக்கூட ஏற்றதொரு தீர்வாக அமைந் திருக்கும். கிராமிய மக்களிற் பெரும்பகுதியினர் நெல் விவசாயத் தில் மட்டும் தங்கியிருத்தலே அதனது தேக்க நிலைக்குக் கூட ஓரளவு காரணமாகும். நெற் சாகுபடியினை அடிப்படையாகக் கொண்டு கிராமியப் பொருளாதார வளர்ச்சியினைப் பூரணமாக ஆராய முடியாதிருப்பினும் இதனை ஒரு அளவீடாக மட்டுமே கொள்ளுதல் தவருக இருக்கமுடியாது.

இலங்கையில் நெல் உற்பத்தியானது 1950ஆம் ஆண்டிலிருந்து வேக மான அதிகரிப்பினைக்கொண்டுள்ளது. 1950ஆம்ஆண்டு 22 மில்லியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசல்களாக இருந்த நெல் உற்பத்தியானது 1970இல் 77·5 மில்லியன் புசல்களாகவும், 1977இல் 80·4 மில்லியன் புசல்களாகவும் அதிகரித்துள்ளது. இருபத்தைந்து வருடங்களில் ஏறக்குறைய நெல் உற்பத்தியானது நான்கு மடங்காக அதிகரித்துள்ளது, பொதுவாக, ஒரு பொருளின் உற்பத்திப் பெருக்கமானது அதனது தொகைரீதியான, தரரீதியான உள்ளீடுகளின் அதிகரிப்பின் விளைவாக ஏற்படுவதொன்ருகும். 1950ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் நெற்சாகுபடியினைப் பொறுத்தமட்டில் உள்ளீடுகள் தரரீதியாகவும், தொகைரீதியாகவும் அதிகரிக்கப்பட்டுவந்துள்ளது. சுதந்திரமடைந்த ஆரம்ப காலங்களில் விவசாய விருத்தியானது புதிய நிலத்தினை நீர்ப்பாசனத்திற்கு உட்படுத்தல் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. 1950ஆம் ஆண்டு 1,066,000 ஏக்கர்களாக இருந்த நெற்சாகுபடி நிலமானது 1977இல் 1,930,000 ஏக்கர்களாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. இருபத்தைந்து வருட காலப் பகுதியில் சாகுபடி நிலமானது ஏறக்குறைய இரு மடங்காக அதிகரிக்கப்பட்டமைக்கு, கல்லோயாத் திட்டத்தில் இருந்து மகாவலித் திட்டம் ஈருக அரசாங்கத்திஞல் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே முக்கிய காரணங்களாகும்.

அட்டவணை 2. VII

இலங்கையில் நெல்லினது மொத்த உற்பத்தி, மொத்த நிலப்பரப்பு, சராசரி விளைச்சல், உரப்பயன்பாடு 1950 — 1977

| காலம் | மொத்த நிலப்பரப்பு (000 ஏக்கர்களில்) | மொத்த உற்பத்தி (மில்லியன் புசல்களில்) | ஏக்கருக்குரிய சராசரி உற்பத்தி (புசல்களில்) | மொத்த உரநுகர்வு (000 தொன்களில்) |
|---|---|---|---|---|
| 1950 | 1,066·0 | 22·0 | 20·6 | — |
| 1956 | 1,205·9 | 31·3 | 31·7 | 14·1 |
| 1960 | 1,471·9 | 43·1 | 36·4 | 29·1 |
| 1966 | 1,512·0 | 45·7 | 35·6 | 44·1 |
| 1970 | 1,775·9 | 77·5 | 51·3 | 87·1 |
| 1975 | 1,475·8 | 55·3 | 44·1 | 48·7 |
| 1976 | 1,570·3 | 60·1 | 44·9 | 72·4 |
| 1977 | 1,930·0 | 80·4 | 48·9 | 73·1 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், விவசாய இலாகாவின் நிர்வாக அறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான காரணியான நிலத்தில் மட்டுமன்றி மாறும் காரணியான உள்ளீடுகளில்கூட பெரும் அதிகரிப்பு அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு 1,41,000 தொன்களாக இருந்த பயன்பாடு 1977ஆம் ஆண்டு 7,31,000 தொன்களாக அதிகரித்துள்ளது. மேலும் விளைச்சலை அதிகரிக்கக்கூடிய புதிய வகை விதை நெற்களும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக இலங்கையில் ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலானது 25 வருடங்களில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இலங்கையில் நெல் உற்பத்தியதிகரிப்பானது உரப் பயன்பாடு, உயர்ந்தரக விதைநெல் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்டதாகும். இலங்கையில் மொத்த நெல் உற்பத்தியானது உரப்பயன்பாடு அதிகரிப்புடன் பெருமளவிற்குத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. 1970ஆம் ஆண்டு உரப் பயன்பாடானது 8,71,000 தொன்களாக அதிகரித்திருந்தது. இதே காலப் பகுதியில் நெல் உற்பத்தியும் 77·5 மில்லியன் புசல்களாகக் கூடியுள்ளது. 1975ஆம் ஆண்டு உரப் பயன்பாடு 4,87,000 தொன்களாக வீழ்ச்சி அடைய. மொத்த நெல் உற்பத்தியும் 55·3 மில்லியன் புசல்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதேபோன்று 1977ஆம் ஆண்டு உரப் பயன்பாடு மீண்டும் 7,31,000 தொன்களாக அதிகரிக்க, நெல் உற்பத்தியும் 80·4 மில்லியன் புசல்களாகக் கூடியுள்ளது. இலங்கையில் உரப் பயன்பாடு அதிகரிக்கின்றபோதும், சாதகமான காலநிலை இருக்கும்போதும் மட்டுமே மொத்த உற்பத்தியானது அதிகரித்தல் சாத்தியமானதாகும்.

இலங்கையில் கடந்த 25 வருடங்களில் மொத்த நெல் உற்பத்தியானது நான்கு மடங்காக அதிகரித்தமை எவ்வளவு தூரம் சிறப்பு மிகு சாதனையாகக் கருதப்படமுடியுமென ஆராய்தல் அவசியமானதாகும். கடந்த 25 வருடங்களில் விவசாய நிலப்பரப்பு ஏறக்குறைய இரு மடங்காகவும், உரப் பயன்பாடானது ஐந்து மடங்காகவும் அதிகரிக்க மொத்த உற்பத்தி நான்கு மடங்காக மட்டுமே அதிகரித்துள்ளது. நிலப்பரப்பினை அதிகரிக்காது ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலை 80 புசல்களாக அதிகரித்திருப்பின் இன்றைய மொத்த விளைச்சலை 1950ஆம் ஆண்டு நிலப்பரப்பில் பெற்றிருக்க முடியும். மேலும் புதிய நிலப்பரப்பினைச் சாகுபடிக்கு உள்ளாக்குதல் என்பது மிகக் கூடிய முதலீட்டுச் செலவுகளைக் கொண்டதாகும். காடுகளை அழித்தல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், போக்குவரத்து, மின்சாரம், கல்வி, சுகாதார வசதிகள் போன்றவற்றிற்குப் பெருந்தொகையான பணத்தினைச் செலவுசெய்தே இதனை ஏற்படுத்த வேண்டும். ஆனால் சராசரி விளைச்சலை அதிகரிப்பதற்கு இத்தகைய பெரும் செலவீடுகள் ஏற்படாது. மேலும், இலங்கையில் உரப் பயன்பாடு ஐந்து மடங்காக அதிகரிப்பதற்கு முக்கிய காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட உரமானியத் திட்டமாகும். அரசாங்கத்தினுல் உரப் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கும் புதிய நிலப்பரப்பினைச் சாகுபடிக்குள் கொண்டுவரவும் மேற்கொள்ளப் பட்ட செலவுகளுடன் உற்பத்திப் பெருக்கத்தினை ஒப்பிடும்போது அரசாங்க முயற்சிகள் திருப்திகரமான பலனை அளிக்கவில்லை என்றே கருதவேண்டும். அரசாங்கமானது புதிய நிலங்களைச் சாகுபடிக்குள் ளாக்கும் முயற்சியினைவிட நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப் பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் குறுங்காலத்தில் மிகக்கூடிய பலனை அளிக்கக்கூடியதாக அமையும்.

இலங்கையில் கிராமியப் பொருளாதார வளர்ச்சியின் இறுதி இலக்கு உணவில் தன்னிறைவு அடைதலேயாகும். இலங்கையில் சுயதேவைப் பூர்த்தியானது 1960ஆம் ஆண்டிற்கு முன்பு 50 சத வீதத்திற்குக் குறைவாகவே காணப்பட்டது. ஆனுல் 1960க்குப் பின்பு சுயதேவைப் பூர்த்தியானது 50 சதவீதத்திற்கு அதிகமாக அமைந்துள்ளது. 1972ஆம் ஆண்டு ஏறக்குறைய 72 சதவீத சுய

அட்டவணை 2. VIII

நெல்லினது சுயதேவைப் பூர்த்தி 1952 — 1976
( சதவீதமாக )

| காலம் | மொத்த நுகர்வில் உள்நாட்டு நெல்உற்பத்தி |
|---|---|
| 1952 | 44·9 |
| 1956 | 38·7 |
| 1960 | 47·3 |
| 1964 | 50·7 |
| 1968 | 67·3 |
| 1972 | 72·0 |
| 1976 | 61·3 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்.

தேவைப் பூர்த்தியினை இலங்கை அடைந்திருந்தது. இலங்கையில் கடந்த 25 வருடங்களில் நெல் உற்பத்தியில் நான்கு மடங்கு அதி கரிப்பு ஏற்பட்டாலும் மொத்த உள்நாட்டு நுகர்வில் இவ் உற்பத்தி ஏறக்குறைய 20 சதவீத அதிகரிப்பினை மட்டுமே ஏற்படுத்தியுள் ளது. இதற்கு சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு மட்டுமன்றி இலங்கை மக்களின் அரிசி நுகர்வும் கூடிய நிலையில் இருப்பதே காரணமாகும். இலங்கை மக்களின் அரிசி நுகர்வு அதிகமாக இருப்பதற்குக் குறைந்த வருமானம் மட்டுமன்றி நீண்டகாலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமும்கூட காரணமாகும். எனவே, எமது மக்களின் நுகர்வில் மாற்றம் ஏற்படும்போது நெல்லிற்கான கேள்வியிலும் வீழ்ச்சி ஏற்பட முடியும். ஆனல், இது குறுங்காலத்தில் சாத்தியமானதல்ல.

**கிராமியப் பொருளாதார விருத்திக்கான செயற்திட்டங்கள்**

1930ஆம் ஆண்டைத் தொடர்ந்து சர்வசன வாக்குரிமையானது அளிக்கப்பட்ட காரணத்தினல் சனநாயக அரசியலில் குடியானவர்கள் சக்தி வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இக்காலத்தில் நகரப்புறத் தொழிலாளர் மத்தியில் இடதுசாரிக் கருத்துக்கள் தீவிரமாகப் பரவி வந்தமையினுல் குடியானவர்கள் இக் கருத்தினல் கவரப்படாமல் அவர்களை வேறு திசையில் திருப்புவதற்கும் கிராமியப் பொருளாதார விருத்தி அவசியமாகக் காணப்பட்டது. அத்துடன் 1ஆம் மகாயுத்தத்தின் போது வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதி தடைப்பட்டமை, உள்நாட்டில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தினை வற்புறுத்துவதாக இருந்தது. ஒரு புறம் குடியானவன் பிரச்சினை, மறுபுறம் உணவுப் பிரச்சினை ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டே 1930ஆம் ஆண்டினைத் தொடர்ந்து இலங்கையில் கிராமியப்பொருளாதாரத்தினை விருத்திசெய்வதற்கான பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**1. குடியேற்றத் திட்டங்கள்**

இலங்கையில் குடியேற்றத் திட்டங்கள் 1935ஆம் ஆண்டு காணி விருத்திச் சட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். இக் குடியேற்றத் திட்டங்கள் சனத்தொகை கூடிய விருத்திசெய்யப்பட்ட பிரதேசங்களிலுள்ள குடியானவர்களை சனத்தொகை குறைந்த விருத்திசெய்யப்படாத பிரதேசங்கட்குக் குடியேற்றுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. (இலங்கையில் சில புவியியலாளர்கள் விருத்தி செய்யப்பட்ட பிரதேசம் 75"க்குக் கூடிய மழைவீழ்ச்சியினைக் கொண்டிருப்பதால் ஈரலிப்புப் பிரதேசம் என்றும், விருத்திசெய்யப்படாத பிரதேசம் 75"க்குக் குறைவான மழைவீழ்ச்சியினைக் கொண்டிருப்பதனுல் வரண்ட பிரதேசம் எனவும் வரையறை செய்கின்றனர்.) இப் பாகுபாடு சர்வதேசரீதியான பாகுபாட்டுடன் உடன்பாடுடையதன்று. இப் பாகுபாட்டினை மேற்கொள்ளும் புவியியலாளர்கள், ஆங்கிலேயர் தம் ஆட்சியின்போது விருத்திசெய்யப்படாத பிரதேசத்தினைக் கவனிக்காது கைவிட்டமைக்குக் காரணம் அது வரண்ட வலயமாக இருந்தமையே என்று வலியுறுத்த முனைகிறுர்கள்போலும். இவை விருத்தி செய்யப்பட்ட பிரதேசத்திலுள்ள சனத்தொகை அமுக்கம், வேலையின்மை, பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினல் நிலமிழந்த குடியானவர்கள் பிரச்சினை போன்றவற்றிற்கு முக்கிய பரிகாரமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் ஒரு குடியானவனுக்கு 5 ஏக்கர் நெல் சாகுபடி நிலமும், 3 ஏக்கர் மேட்டு நிலமும், உப உணவுப் பயிர்ச் செய்கை, பண்ணைத்தொழில் போன்றவற்றிற்காகக் கொடுக்கப்பட்டது. பருவகால வேலையின்மையினை நீக்குவதற்கே இவ்வாறு நிலம் வழங்கப்பட்டது. 1939ஆம் ஆண்டளவில் ஒரு குடியானவனைக் குடியேற்ற 855 ரூபாவாக இருந்த செலவுத்தொகையானது 1951இல் 6910 ரூபாவாக அதிகரித்தது. எனவே, இக் கூடிய செலவினைக் குறைப்பதற்காக 1953ஆம் ஆண்டிற்குப்பின் 3 ஏக்கர் நெற்சாகுபடி நிலமாகவும் 2 ஏக்கர் மேட்டு நிலமாகவும் இது குறைக்கப்பட்டது. இதனால், 1956இல் ஒரு குடியானவனைக் குடியேற்ற ஏற்பட்ட செலவு 3356 ரூபாவால் குறைந்தது. ஆரம்பத்தில் குடியானவனுக்கு நீர்ப்பாசன வசதிகள், வீடுகள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டி இருந்தமையினால் ஒரு குடியானவனின் குடும்பத்தைக் குடியேற்ற மொத்தமாக ஏற்பட்ட செலவு ஏறக்குறைய 20,000 ரூபாவாக இருந்தது.

இக்குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பகாலத்தில் எதிர்பார்த்த வெற்றியினை அளிக்கவில்லை. பல குடியானவர் குடியேற்றத் திட்டங்களை விட்டு மீண்டும் தமது இருப்பிடங்கட்குத் திரும்பிவர முற்பட்டனர். இவ்வாறு குடியானவர்கள் திரும்பி வந்தமைக்குப் பல காரணங்களைக் கூறமுடியும்.

அ. விருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த குடியானவனுக்கு விருத்தி செய்யப்படாத பிரதேசம் புதிய ஒரு பிரதேசமாகவே இருந்தது.

ஆ. இக் குடியேற்றத் திட்டங்களில் கல்வி, சுகாதார வசதிகள், சேவை நிலையங்கள் போன்றவை குறைவாக இருந்ததுடன் போக்குவரத்து வசதிகளும் அதிகளவில் காணப்படவில்லை.

இ. இக் குடியேற்றத் திட்டங்களில் பல்வேறு கிராமத்தினைச் சார்ந்த சமுகத்தினரையும் குடியேற்றியதனால் கல்வியறிவு குன்றிய குடியானவரால் புதியதொரு சமூக வாழ்க்கையினை உருவாக்க முடியவில்லை.

ஈ. நீண்டகாலம் தாம் பிறந்து வாழ்ந்த பிரதேசத்தினை விட்டு புதிய பிரதேசத்திற்கு வந்த மக்கள் பெருமளவிற்கு அரசாங்க அதிகாரிகளில் தங்கியிருக்கும் நிலையில் காணப்பட்டார்கள். இவ் அரசாங்க ஊழியர்களின் சேவை மனப்பான்மையற்ற தன்மை, நிர்வாகச் சீர்கேடுகள் போன்றவையும் குடியானவரைக் குடியேற்றத் திட்டத்தில் நிராதரவான நிலைக்குள்ளாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950ஆம் ஆண்டிற்குப் பின்பு வேலையற்ற இளைஞர்கட்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் ஒரு சாதனமாகக் குடியேற்றத் திட்டத்தினைப் பயன்படுத்துவதற்காகப் படித்த இளைஞர்களின் குடியேற்றத் திட்டங்களும் பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டன. இளைஞர் குடியேற்றத் திட்டங்களும் ஆரம்பக் குடியேற்றத் திட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஏறக்குறைய 30,000 ஏக்கர் நிலத்தில் 10,000 திலிருந்து 15,000 வரையிலான இளைஞர்கள் குடியேற்றப்பட்டனர். ஒவ்வொரு திட்டமும் 50—100 இளைஞர்களைக்கொண்டதாக இருந்ததுடன், இளைஞர்களைக்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களே அபிவிருத்தி வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தன. 1970க்குப் பின்பு செலாவணிப் பிரச்சினைகள் காரணமாகப் பல உணவுப் பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டதால் கிழங்கு, மிளகாய், பயறு, உழுந்து, வெங்காயம் போன்ற பயிர்கள் இலாபகரமான உற்பத்திகளாக மாறின. இதனால் குடியேற்றத் திட்டங்களிலுள்ள இளைஞர்களுக்கு விவசாயம் ஒரு இலாபகரமான தொழிலாகவும் மாறியது. மேலும் குடியானவரைப் போலன்றி படித்த இளைஞர்கள் ஓரளவு பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதால் இக்குடியேற்றத்திட்டங்களில் புதியதொரு சமூக வாழ்க்கையினை உருவாக்கும் சக்தி படைத்தவர்களாகவும் காணப்படுவதால் இத்திட்டங்கள் ஓரளவு வெற்றியளித்துள்ளன.

1970ஆம் ஆண்டிற்குப் பின்பு பல்வேறு வகையான கூட்டுப் பண்ணைகள் இலங்கையில் அமைக்கப்பட்டன. 1971இல் அரசாங்கம், 250—500 ஏக்கர் நிலமுடைய இடங்களில் கூட்டுறவுப் பண்ணைகளையும், 25—50 ஏக்கர் நிலமுடைய இடங்களில் பிரதேச அபிவிருத்திச்சபைகள், பண்ணைகளையும் உருவாக்கின. இதற்கான முதலீட்டுச் செலவானது அரசாங்கத்தினால் அளிக்கப்பட்டது. ஆனால், இவை இளைஞர் குடியேற்றத் திட்டங்களைவிடக் குறைவாகவே இருந்தன. மேலும் 1972ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தத்தின் பின்பு ஜனவாசா போன்ற கூட்டுப் பண்ணைகளும் உருவாக்கப்பட்டன. இவை யாவும் கிராமிய விவசாய அமைப்பினில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் எனக் கூறமுடியாது. ஆனால் 1958ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நெற்காணி மசோதாவே கிராமிய விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். இதுபற்றி 4ஆம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்படுகின்றது.

**2. உத்தரவாத விலைத்திட்டம்**

கிராமிய விவசாய உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கும் முகமாக 1948ஆம் ஆண்டு, முதன்முதலாக இலங்கையில் உத்தரவாத விலைத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் மிளகாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்காயம், புளி, பயறு, மிளகு போன்ற பொருட்களும் உத்தரவாத விலைத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டவையாக இருந்தன. இவ் உத்தரவாத விலைத்திட்டமானது மூன்று குறிக்கோள்களைக் கொண்டதாகும்,

அ. உற்பத்தியாளருக்கு நியாயமான விலையினை அளித்தல்.

ஆ. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரித்தல்.

இ. சுயதேவைப் பூர்த்தி என்ற குறிக்கோளின் அடிப்படையில் இறக்குமதி செய்யும் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களைப் பதிலீடு செய்தல்.

நெல்லிற்கு விதிக்கப்பட்ட உத்தரவாத விலையானது உள்நாட்டில் நெல்லினது உற்பத்திச் செலவு, இறக்குமதி செய்யப்பட்ட நெல்லினது விலை ஆகிய இரண்டு அம்சங்களையும் கருத்திற் கொண்டே நிர்ணயிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு ஒரு புசல் நெல்லினது உத்தரவாத விலையானது 8 ரூபாவாக இருந்து 1967இல் 14 ரூபாவாக மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் 1972இல் இவ் விலையானது 18 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதுடன் படிப்படியாகக் கூட்டப்பட்டு 1977இல் 40 ரூபாவாக உயர்ந்துள்ளது. 1948ஆம் ஆண்டிலிருந்து 1972ஆம் ஆண்டு வரை உத்தரவாத விலையானது 10 ரூபாவினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டிருந்தது. அடுத்த 5 வருடங்களில் இவ் விலையானது மேலும் 22 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது;

### அட்டவணை 2. IX

நெல்லிற்கான உத்தரவாத விலை 1948 — 1977
(ரூபாய்களில்)

| காலம் | ஒரு புசல் நெல்லின் விலை |
|---|---|
| 1948 | 8 |
| 1951 | 9 |
| 1953 | 12 |
| 1967 | 14 |
| 1972 | 18 |
| 1973 | 25 |
| 1974 (பங்குனி) | 30 |
| 1974 (ஆடி) | 33 |
| 1977 | 40 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் ஒரு அரசாங்கம் உற்பத்தியாளர் நலன் கருதி உத்தரவாத விலையினை விதிக்கும்போது உற்பத்திச்செலவு, உலக சந்தை விலை ஆகிய இரு காரணிகளையும் மட்டும் கருத்தில்கொள் ளுதல் சிறப்பான விலை நிர்ணயத்திற்கு வழி வகுப்பதாக இருக்க முடியாது. ஒரு பொருளின் உள்நாட்டு நிரம்பல் கேள்வி ஆகிய இரண்டும் சேர்ந்து நிர்ணயிக்கப்படும் விலையினைவிடக் கூடிய விலை விதிக்கப்படும்போது மட்டுமே அது உற்பத்தியாளரை ஊக்கப் படுத்தக்கூடிய விலையாக இருக்கும். இலங்கையில் அரசாங்க மானது நெல்லினை இறக்குமதி செய்து மானியமளிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்தமையால் உள்நாட்டு நெல்லிற்குச் சந்தையில் ஒரு செயற்கை விலையே (குறைந்தவிலை) காணப்பட்டது. இச் செயற்கை விலையினைவிட உத்தரவாத விலை உயர்வாக இருந்தமையினால் நெல்லி னது உள்நாட்டுச் சந்தை விலைக்கு இது ஒரு மேல்எல்லையாக மட்டும் இருந்தது. 1967ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கமானது பங்கீட்டு அரிசியின் அளவினைக் குறைக்க முற்பட்டதைத் தொடர்ந்து வெளிச் சந்தையில் நெல்லினது விலை உத்தரவாத விலையினைவிட அதிகமாக உள்ளது. எவ்வளவிற்கு அரசாங்கம் பங்கீட்டரிசியினைக் குறைக் கின்றதோ அவ்வளவிற்கு நெல்லினது உள்நாட்டுச் சந்தை விலை அதிகரிப்பதாக இருக்கும். எனவேதான் இன்று உத்தரவாத விலை யானது நெல்லினது குறைந்தபட்ச விலையாக இருக்கின்றது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் வெற்றியினை மொத்த உற்பத்தி யில் எவ்வளவு பங்கினை அரசாங்கத்தினுல் கொள்வனவு செய்ய முடியும் என்பதனைக்கொண்டே ஓரளவு மதிப்பீடு செய்யமுடியும். 1954ஆம் ஆண்டளவில் 600 கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் மூலமே அரசாங்கமானது நெற்கொள்வனவை மேற்கொண்டது. 1958இல் விவசாய சேவை இலாகாவிடம் இத் திட்டத்தினை அமுலாக்கும் பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டது. 1971இலிருந்து நெற் சந்தைப்படுத்தும் சபையே உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் உணவுப் பொருட்களின் கொள்வனவிற்குப் பொறுப்பாக உள்ளது. 1950ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நெற் கொள்வனவானது மொத்த உற்பத்தியில் 1 சதவீதமாக இருந்து, படிப்படியாக அதி கரித்தது. 1965இல் 58·9 சதவீதமாகக் கூடியுள்ளது. இதற்கு உத்தரவாத விலையானது உள்நாட்டுச் சந்தை விலையினைவிட அதிக மாக இருந்ததே காரணமாகும். ஆனுல், 1967ஆம் ஆண்டிற்குப் பின்பு உத்தரவாத விலையானது சந்தைவிலையினைவிடக் குறைவாக இருந்தமையினுல் அரசாங்க நெற் கொள்வனவில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. 1970ஆம் ஆண்டு அரசாங்க நெற்கொள்வனவு 48·4 சதவீதமாகவும், 1975இல் இது 20·5 சதவீதமாகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இது உத்தரவாத விலையினைவிட வெளிச்சந்தை

இ - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2. X

### உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற்கொள்வனவு 1950 — 1977
(மொத்த உள்நாட்டு நெல் உற்பத்தியின் சதவீதமாக)

| காலம் | கொள்வனவு |
|---|---|
| 1950 | 1·0 |
| 1954 | 10·8 |
| 1956 | 34·4 |
| 1960 | 50·8 |
| 1965 | 58·9 |
| 1970 | 48·4 |
| 1975 | 20·5 |
| 1977 | 30·6 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், நெற் சந்தைப்படுத்தற் சபை.

விலையானது அதிகரித்துச் சென்றதன் விளைவினால் ஏற்பட்டதாகும். 1977இல் நெற்கொள்வனவானது 30·6 சதவீதமாக அதிகரித்தமைக்கு உத்தரவாத விலை உயர்த்தப்பட்டதே காரணமாகும்.

அரசாங்கமானது விவசாயிகளிடமிருந்து முழு நெல்லையும் கொள்வனவு செய்வதற்கு விலை மட்டுமன்றி வேறு பல காரணிகளும் தடைகளாக அமைகின்றன. ஏனெனில் 1965ஆம் ஆண்டுகூட ஏறக்குறைய 58·9 சதவீதமான நெல்லையே அரசாங்கமானது கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது.

அ. தரகர்கள், கடைக்காரர், நிலச்சுவான் போன்றோர் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதனால் விவசாயியானவன் தனது உற்பத்திகளை இவர்கட்கு விற்கக் கடமைப்பாடுடையவனாக இருக்கின்றான்.

ஆ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல்லைக் கொடுத்து பணத்தினை உடனடியாகப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதனால், விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல்லைக் கொடுப்பதற்குத் தயக்கம் உடையவர்களாக இருக்கின்றனர்.

இ. கூட்டுறவுச் சங்கத்தில் காணப்படும் ஊழல்கள், உதாரணமாக, கூட்டுறவு முகாமையாளர்கள் நெல்லினைக் கொள்வனவு செய்யும்போது பிழையான அளவு முறைகளைப் பயன்படுத்தல், தரம் குறைந்த நெல் என ஏமாற்றுதல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கூட்டுறவுச் சங்கத்திற்கு நெல்லை விற்பதன் மூலம் அரசாங்கத்திடம் பெற்ற கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்ற அச்சத்தினாலும் கூட விவசாயிகள் உத்தர வாத விலையினை விடக் குறைவான விலைக்குத் தரகர்களுக்கு விற்கின்றார்கள்.

உ. கூட்டுறவுச் சங்கங்களிடம் போதிய களஞ்சிய வசதியின்மை காரணமாக விவசாயி கொண்டுவரும் முழுநெல்லையும் கொள்வனவு செய்யமுடியாமை.

ஊ. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டுசென்று நெல்லைக் கொடுப்பதற்குப் போதிய போக்குவரத்து வசதியின்மை.

இத்தகைய பல காரணங்களினால் விவசாயிகளினால் இத் திட்டத்தின் பூரண பலனைப் பெறமுடியாதிருக்கின்றது.

**3. உரமானியமும் பயிர்க் காப்புறுதித் திட்டமும்**

விவசாய நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு 1951ஆம் ஆண்டு உரமானியத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டம் 1958ஆம் ஆண்டு எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கக்கூடியதாக மாற்றியமைக்கப்பட்டது, உரத்தினைக் கமத்தொழிற் சேவை இலாகாமூலம் கொள்வனவு செய்பவர்களுக்கு 50 சதவீத மானியமும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்வனவு செய்பவர்களுக்கு 33 சதவீத மானியமும் அளிக்கப்பட்டது. இலங்கையில் உரப் பயன்பாடு வேகமாக அதிகரித்தமைக்கு இம் மானியத்திட்டமே முக்கிய காரணமாகும். இவ்வாறு உரம் மானியமளிக்கப்பட்ட விலையில் விற்கப்படுவதனால் விவசாயிகள் உரத்தினைக் குறைந்த விலையில் கொள்வனவுசெய்து கூடிய விலைக்கு விற்பதன்மூலம் சாகுபடியினால் பெறப்படும் வருமானத்தினைவிட கூடிய வருமானத்தினைப் பெறும் சாத்தியங்களும் உண்டு. அரசாங்கத்தினால் அளிக்கப்படும் மானியங்கள் கறுப்புச் சந்தையினை உருவாக்கவும் வழி வகுத்துவிடுகின்றது.

இயற்கைக் காரணிகளால் அல்லது நவீன சாகுபடி முறையினைப் பயன்படுத்துவதால் விவசாயிகளின் உற்பத்தியில் ஏற்படும் அழிவிற்கு நஷ்டஈடு வழங்குவதன்மூலம் விவசாயத்தின் நிச்சயமற்ற தன்மையினைத் தவிர்க்கமுடியும். இதனை அடிப்படையாகக்கொண்டே 1958ஆம் ஆண்டு ஐந்து மாவட்டங்களில் ஏறக்குறைய 25,000 ஏக்கர் நிலத்தில் பரீட்சார்த்தமாகப் பயிர்க் காப்புறுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1962இல் இத்திட்டம் 11 மாவட்டங்களில் 65,000 ஏக்கர் நிலத்திற்கு மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இத் திட்டத்தினைக் கமப்பணித் திணைக்களத் தொழில் சேவை இலாகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்திவந்தது. 1975இல் சிறுபோகம் முதல் நெல்லிற்குப் புதிய வேளாண்மைக் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 20 இலட்சம் ஆரம்ப முதலீட்டைக்கொண்ட வேளாண்மைக் காப்புறுதிச் சபையால் நிருவகிக்கப்படுகின்றது. மேலும் இப் புதிய திட்டத்தின்படி குறைந்த, மத்திய, உயர்விளைவுப் பகுதிக்கு ஏற்ப காப்புறுதிக் கொடுப்பனவு 300இலிருந்து 500 ரூபா வரை அதிகரிக்கப்பட்டது. ஆனால், முன்னைய திட்டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 100இலிருந்து ரூபா 180ஆக மட்டுமே இருந்தது. இத்திட்டத்தின்கீழ் மிகக் குறுகியகாலத்தில் பயிர்க்காப்புறுதி விரிவுபடுத்தப்பட்டது. 1978ஆம் ஆண்டு மகாபோகத்தில் ஏறக்குறைய 3,70,520 ஏக்கர் நிலம் இக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. இத்திட்டமானது அரசாங்க உதவி மானியத்தினால் இயங்கும் ஒன்றாக இருப்பதனால் பூரணமான ஒரு காப்புறுதித் திட்டமாகக் கருதமுடியாது. ஆனால், சூதாட்டத்தினை ஒத்த கிராமிய விவசாயத்துறையினைப் பொறுத்தமட்டில் இத்தகைய ஒரு திட்டமானது அரசாங்க மானியமின்றி இயங்கமுடியாததொன்றாகும்.

### 4. கிராமியக் கடன்

கிராமிய விவசாயிகள் பெருமளவிற்கு ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் பெருமளவு கடனைப் பெற்றுக் கொடூரமாகச் சுரண்டப்படுவதனைத் தவிர்ப்பதற்காக 1947இலிருந்து அரசாங்கமானது கிராமியக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டம் ஆரம்பகாலத்தில் கூட்டுறவு சமஷ்டி வங்கி, கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலமே செயற்படுத்தப்பட்டது. ஆனால், இம் முறையானது தோல்வி கண்டதன் விளைவாக 1961இல் கூட்டுறவுச் சமஷ்டி வங்கியினை மக்கள் வங்கியாக மாற்றி பரந்த அடிப்படையில் விவசாயக் கடனை விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள்வங்கி 1964இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை கிராமிய வங்கிகளாக மாற்றி கிராமிய மட்டத்திற்கு விவசாயக் கடனை விஸ்தரிக்க முற்பட்டது. 1967ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விவசாயக் கடன்திட்டமும் மக்கள் வங்கியினை அடிப்படையாகக் கொண்டே அமுலாக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு இலங்கை வங்கி கமத்தொழிற் சேவை நிலையங்களை ஆரம்பித்து விவசாயக்கடனை விஸ்தரிக்க முனைந்தது.

கிராமிய வங்கிகள் விவசாய உற்பத்திக்கு மட்டுமன்றி கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில்கள், வீடமைப்பு, கடன்மீட்பு போன்றவற்றிற்கும் கடன்களை வழங்குகின்றன. கிராமிய வங்கிகளினால் உற்பத்தித் தேவைகளுக்காக 1968ஆம் ஆண்டு வழங்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்கள் 26·9 சதவீதமாக இருந்ததுடன் இதில் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட கடன்கள் 22·5 சதவீதமாகவும் உள்ளது. ஆனால், அண்மைக்காலத்தில் விவசாயக் கடனில் ஒரு படிப்படியான வீழ்ச்சியும், கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில்கள் போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட கடனில் ஒரு அதிகரிப்பும் காணப்படுகின்றது. 1976இல் விவசாயக்கடன் 15·1 சதவீதமாக வீழ்ச்சியடைய குடிசைக் கைத்தொழில் கால்நடை வளர்ப்பிற்கு வழங்கப்பட்ட கடன்கள் 7·5 சதவீதமாக அதிகரித்துள்ளது. கிராமியப் பொருளாதாரமானது நெல் உற்பத்தி செய்யும் ஒரு துறையாக மட்டுமன்றி அது பல்வேறு தொழில்களைக் கொண்ட ஒரு துறையாகப் பன்முகப் படுத்தல் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை ஓரளவு தீர்ப்பதற்கும் வழி வகுக்கும்.

## அட்டவணை 2. XI

நோக்கங்களின் அடிப்படையில் கிராமிய வங்கிக் கடன் 1968—1976
(சதவீதமாக)

| நோக்கம் | 1968 | 1971 | 1974 | 1976 |
|---|---|---|---|---|
| விவசாயம் | 22·5 | 18·8 | 18·7 | 15·1 |
| கால்நடை வளர்ப்பு | 2·0 | 0·8 | 2·4 | 4·4 |
| குடிசைக் கைத்தொழில் | 2·4 | 1·6 | 2·3 | 3.1 |
| வீடமைப்பு | 35·5 | 36·2 | 40·7 | 43·4 |
| கடன்மீட்சி | 26·8 | 25·9 | 24·6 | 19·9 |
| ஏனையவை | 10·8 | 16·7 | 11·3 | 14·1 |
| | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

கிராமிய வங்கிகளினால் வீடமைப்பிற்கு வழங்கப்பட்ட கடன்கள் 1968இல் 35·5 சதவீதமாக இருந்து 1976இல் 43·4 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடன் மீட்புக்கான கடனானது 1968இல் 26·8 சதவீதமாக இருந்து 1976இல் 19·9 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. பொதுவாக கிராமிய வங்கிகளினால் வழங்கப்படுகின்ற உற்பத்திக் கடன்களைவிட நுகர்வுக் கடன்களே அதிகமாக இருக்கின்றன. இதனாலேயே கிராமியப் பொருளாதாரத்தில் உற்பத்திக்கும் கிராமியக் கடனுக்கும் இடையேயுள்ள தொடர்பு மிகக் குறைவாக உள்ளது. 1968ஆம் ஆண்டு கிராமிய வங்கிக் கடன்களில் 73·1 சதவீதமானவையும், 1976இல் 78·4 சதவீதமானவையும் உற்பத்தி சம்பந்தப்படாத கடன்களாகவே இருக்கின்றன.

அரசாங்கமானது கிராமியக்கடனை வெற்றிகரமாக அமுலாக்கத் தடையாக கிராமியக் கடனைத் திருப்பிக் கொடுக்காமையானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. 1967இல் இருந்து 1977ஆம் ஆண்டுவரை நெல்லிற்கும் ஏனைய பயிர்கட்கும் வழங்கப்பட்ட கடன் தொகையில் மீட்கப்பட்ட விதாசாரம் குறைந்து சென்றுள்ளதை அட்டவணை 2. XII மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது.

அட்டவணை 2. XII

கிராமியக் கடன் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட கிராமியக் கடனும் மீட்கப்பட்ட கடனும் 1967—1977

| சாகுபடிக் காலம் | கொடுக்கப்பட்ட கடன் (மில்லியன் ரூபாய்களில்) | | மீட்கப்பட்ட கடன் (சதவீதமாக) | |
|---|---|---|---|---|
| | நெல் | ஏனைய பயிர்கள் | நெல் | ஏனைய பயிர்கள் |
| 1967/68—1969/70 | 180·1 | 19·4 | 71·3 | 79·9 |
| 1970/71—1972/73 | 88·2 | 24·8 | 64·8 | 76·6 |
| 1973/74 | 111·1 | 26·2 | 53·3 | 58·0 |
| 1974/75 | 85·4 | 27·8 | 49·1 | 56·5 |
| 1975/76 | 74·3 | 29·6 | 55·3 | 47·6 |
| 1976/77 | 99·2 | 76·3 | 34·6 | 18·5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1977.

இலங்கையில் பெருமளவான கிராமிய மக்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற கடனானது ஒரு வகை மானியம் என்ற கருத்தினையே தொனித்திருக்கின்றது. மேலும் விவசாயக் கடன் திட்டமானது பயிர்க்காப்புறுதி, உரமானியம், உத்தரவாத விலைத்திட்டம் போன்றவற்றுடன் இணைத்துச் செயற்படும் போது மட்டுமே ஓரளவு வெற்றிகரமாகச் செயற்படுத்தமுடியும்.

5. பிரதேச அபிவிருத்திச் சபைகள்

1972ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய ஒரு சிருஷ்டிப்பாகவே பிரதேச அபிவிருத்திச் சபைகள் அமைந்திருந்தன. இப் பிரதேச அபிவிருத்திச் சபைகள் ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள வளங்களை மக்களின் ஒத்துழைப்புடன் பயன்படுத்துவதுடன் கிராமியப் பொருளாதாரத்தில் உற்பத்திப் பெருக்கத்தினையும், வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. கிராமியப் பொருளாதாரத்தில் விவசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றினை விருத்திசெய்வதற்குப் பரந்த அடிப்படையில் முதன்முதலாக பிரதேச அபிவிருத்திச் சபைகளே பயன்படுத்தப்பட்டன. ஆனால் பிரதேச அபிவிருத்திச் சபைகளுடன் கிராம விருத்தித் திணைக்களம். சிறுகைத்தொழில் திணைக்களம், கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் விருத்திச் சபைகள் ஆகியன நேரடியாகத் தொடர்புடைய தாக இருந்தபோதிலும் இவற்றினைச் சிறந்தமுறையில் செயற்படுத்த முடியவில்லை. இந்த அபிவிருத்திச் சபைகளிடையே மாவட்ட ரீதி யாகவும், பிரதேச ரீதியாகவும் காணப்பட்ட இணைப்பு மிகவும் பல வீனமானதாக இருந்தது. இத் திட்டமானது திட்டமிடல் வேலை வாய்ப்பமைச்சினால் இயக்கப்படும் ஒரு திட்டமாக இருந்ததே ஒழிய கிராமமட்டத்தில் தானாக இயங்கக்கூடிய ஒரு திட்டமாக இருக்க வில்லை.

இத்திட்டத்தில் இருந்த குறைபாடுகளினால் இது எதிர்பார்த்த இலக்கினை அடையமுடியவில்லை. பிரதேச அபிவிருத்திச் சபைகளைச் செயற்படுத்துவதற்காக 1971இலிருந்து 1976ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் மொத்த முதலீடாக 127 மில்லியன் ரூபா செல விடப்பட்டதுடன் 33,271 பேருக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் அரசாங்கத்தினால் 2,619 பிரதேச அபிவிருத்திச் சபைகள் அங்கீகரிக்கப்பட்டாலும் இதில் 666 சபைகள் ஒருபோதும் ஆரம்பிக்கப்படவில்லை. மிகுதியாக இருந்த 1953 சபைகளில் 700 சபைகள் மூடப்பட்டதுடன் 1977இல் மேலும் 500 சபைகள் மூடப் பட்டன. 1977இல் செயற்பட்ட 700 சபைகளில் 5 சதவீதமானவை மட்டுமே தொடர்ந்து நிலைக்கக்கூடிய சக்திவாய்ந்தனவாகக் காணப் பட்டன. இச் சபைகளினால் உருவாக்கப்பட்ட உத்தியோகங்களினால் 55 சதவீதமானவை ஏற்கனவே மரபுரீதியான தொழில்களைச் செய் தவர்களுக்கே அளிக்கப்பட்டன. எனவே, இத் திட்டமானது கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதில் தோல்வி கண்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை.

இலங்கையின் கிராமியப் பொருளாதாரமானது மரபுரீதியான இயற்பண்பினை இழந்து முதலாளித்துவ பொருளாதாரத்தின் தன் மைகளை உடையனவாக வளர்ச்சியடைந்துள்ளது. பணப் பொருளா தாரத்தின் வளர்ச்சி, உணவுப் பொருட்களின் விலையேற்றம் ஆகிய வற்றின் விளைவாகவே இவை ஏற்பட்டதெனலாம். கூலி வழங்கும் ஊழியப் பயன்பாடு, சந்தையினை அடிப்படையாகக்கொண்ட உற் பத்தி, இலாப நோக்கு, உற்பத்திப் பொருட்களைப் பதுக்கிவைத்தல், உத்தேச நடவடிக்கைகள் ஆகியன எல்லாம் இன்று கிராமியப் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்துவிட்டது. சுருங்கக் கூறின் விலைப் பொறிமுறையானது கிராமியப் பொருளாதாரத்தில் ஓரளவு செயற்படத் தொடங்கிவிட்டது. இதனால் கிராமியப் பொருளாதா ரத்தில் விரைவான நவீனமயம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதாக இருப்பதுடன் பல புதிய பிரச்சினைகளும் தோன்றுவதற்கு இவை வழிவகுப்பதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 3

# பெருந்தோட்ட விவசாயம்

பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நவீன பொருளாதாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பெருந்தோட்ட விவசாயத்துடன் தோன்றி வளர்ந்ததொன்றாகவேயுள்ளது. இந்நாடுகளில் மானிய சமுதாயத்தின் சிதைவு, வங்கி நாணயமுறை, வீதிப்போக்குவரத்து, வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் தோற்றம், மத்திய வகுப்பினரது வளர்ச்சி என்பன பெருந்தோட்ட விவசாயத்தின் பின்பே ஏற்பட்டதெனலாம். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பல பெருந்தோட்ட விவசாய உற்பத்திகளில் அல்லது, மூலப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருப்பதனாலேயே மேற்கத்தேய வல்லரசுகளின் நவீன காலனித்துவப் பிடியில் தொடர்ந்து சிக்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ற உண்மையும் இன்று உணரப் பட்டுள்ளது. இந்த உண்மை உணரப்பட்டபோதும் இந்நாடுகளின் பொருளாதாரத்தினைப் பன்முகப்படுத்தி பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தும்போதுகூட பெருந்தோட்ட விவசாயத்தின் முக்கியத்துவத்தை நிராகரிக்கமுடியாததொன்றாக அது வளர்ச்சி அடைந்துள்ளது.

### பெருந்தோட்ட விவசாயத்தின் அமைப்பு

பெருந்தோட்ட விவசாயம் என்னும்போது பரந்த விவசாய நிலப் பரப்பில் பெருமளவு பயிற்றப்படாத ஊழியத்தினைச் சில பயிற்றப் பட்ட மேற்பார்வையாளர்களின் கண்காணிப்பில் உற்பத்தியிலீடுபடுத்துவதுடன், அவ் விவசாய உற்பத்தியானது வர்த்தக நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்ட முறையினையும் குறிப்பதாகும். இவ் விவசாய உற்பத்தி இலாபநோக்கின் அடிப்படையில் உலக சந்தையினை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவதனால் நவீன உற்பத்தி முறை, சிறந்த நிர்வாகமுறை, உயர்ந்ததர உற்பத்தி ஆகியவற்றினைக் கொண்டதாக இருக்கும். பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெருந்தோட்டத் துறையானது, வெற்றிகரமாக வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ முயற்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவும் காணப்படுகின்றது. இப் பெருந்தோட்ட விவசாயத்தில் வெளிநாட்டு மூலதனம், வெளிநாட்டாரின் முயற்சி மட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி மலிவாகத் தருவிக்கப்பட்ட வெளிநாட்டு ஊழியமும் (நீக்கிரோக்கள் அல்லது இந்தியத் தொழிலாளர்கள்) பல நாடுகளில் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் 1830ஆம் ஆண்டிற்குப் பின்பு குடியானவனின் பயிராகப் பயிரிடப்பட்ட கோப்பி ஐரோப்பிய முயற்சியாளரினுல் வர்த்தக அடிப்படையில் பயிரிடப்பட்டதைத் தொடர்ந்தே பெருந்தோட்ட விவசாயத்தின் வரலாறு ஆரம்பமானது எனலாம். 1870க்குப் பின்பு, கோப்பியின் வீழ்ச்சிக்குப் பின்பு முதலில் தேயிலையும் பின்பு றப்பர், தென்னை ஆகிய பயிர்களும் பெருமளவில் பெருந்தோட்ட அடிப்படையில் பயிரிடப்பட்டதைத் தொடர்ந்து, பரந்த அடிப்படையில், இலங்கையில் பெருந்தோட்ட விவசாயமானது வளர்ச்சியடைந்தது. உலகசந்தையில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்களுக்கு ஏற்பட்ட பெரும் கேள்வியும் உயர்ந்த விலையுமே இலங்கையில் இம் மூன்று பயிர்களும் பெருமளவு பயிரிடப்படுவதற்குக் காரணமாகும். இன்று இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 75 சதவீதத்திற்கும், மொத்தத் தேசிய வருமானத்தில் 13 சதவீதத்திற்கும் இம் மூன்று பயிர்களும் பொறுப்பாக இருப்பதுடன், மொத்த ஊழியப்படையில் 25 சதவீதத்திற்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் துறையாகவும் இது காணப்படுகின்றது. நீண்டகாலமாக இத்துறையின் இலாபமானது ஐரோப்பிய உடைமையாளர்கள், தோட்டத்துரைமார்கள், உள்நாட்டு முயற்சியாளர்கள் ஆகியோராலேயே பங்கிடப்பட்டது.

இன்று, இலங்கையின் மொத்தச் சாகுபடி நிலப்பரப்பாகிய 4·6 மில்லியன் ஏக்கரில், தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்று பயிர்களும், 2·3 மில்லியன் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. மொத்தப் பெருந்தோட்டச் சாகுபடி நிலத்தினைப் பொறுத்தமட்டில் 1930ஆம் ஆண்டிற்குப் பின்பு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படவில்லையெனலாம். இதற்கு உலகசந்தையில் இப்பொருட்களுக்குப் பெரும் கேள்வி ஏற்படாமை மட்டுமன்றி இப் பயிர்களைச் சாகுபடி செய்யக்கூடிய நிலத்தின் பெரும்பகுதி ஏற்கனவே சாகுபடிக்குள் கொண்டுவரப்பட்டிருந்தமையும் இதற்குக் காரணமாகும். 1946ஆம் ஆண்டு தேயிலை பயிரிடப்பட்ட நிலமானது 5,50,000 ஏக்கராக இருந்து 1977ஆம் ஆண்டு 5,98,000 ஏக்கராக மட்டுமே அதிகரித்துள்ளது. றப்பரினைப்பொறுத்தமட்டில் 1946ஆம் ஆண்டில் 6,59,600 ஏக்கராகவிருந்த சாகுபடி நிலமானது 1977இல் 5,59,900 ஏக்கராக வீழ்ச்சி அடைந்துள்ளது. றப்பருக்கு கொரிய யுத்தத்தினைத் தொடர்ந்த காலப் பகுதி தவிர ஏனைய காலப்பகுதிகளில் உலக சந்தை பெருமளவிற்குச் சாதகமாகக் காணப்படாமையினுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நிலங்களைச் சாகுபடியின்கீழ்க் கொணர்வதற்கான ஊக்கங்கள் காணப்படவில்லை. மேலும், பழைய இறப்பர்த் தோட்டங்கள் வேறு பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டதால், அல்லது கைவிடப்பட்டமையினாலேயே இவ்வீழ்ச்சி ஏற்பட்டதாகும். தென்னை பயிரிடு நிலத்

### அட்டவணை 3. I

**பெருந்தோட்டப் பயிர்களின் மொத்தச் சாகுபடி பரப்பளவு 1946—1977**
*(000 ஏக்கர்களில்)*

| காலம் | தேயிலை | றப்பர் | தென்னை |
|---|---|---|---|
| 1946 | 550·0 | 659·6 | 1071 |
| 1950 | 561·0 | 655·2 | — |
| 1955 | 569·0 | 661·0 | — |
| 1963 | 587·4 | 569·1 | — |
| 1965 | 597·1 | 570·2 | 1152 |
| 1970 | 597·5 | 568·5 | — |
| 1975 | 597·7 | 562·5 | — |
| 1977 | 598·0 | 559·9 | — |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

தினைப்பற்றி இலங்கையில் சரியான புள்ளி விபரங்கள் இல்லை. ஆனாலும் இதன் சாகுபடி நிலமானது ஏனையவற்றினைவிட அதிகமானதாகும். இன்று ஏறக்குறைய 11,52,000 ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிடப்படுகின்றது. இது இலங்கையில் நீண்டகாலமாகப் பயிரிடப்பட்டதாலேயே ஏனைய பயிர்களின் நிலப்பரப்பினைவிட இதன் நிலப்பரப்பு அதிகமாகவுள்ளது.

இலங்கையில் தேயிலை, றப்பர், தென்னை ஆகிய பயிர்கள் பெருந்தோட்டம், சிற்றுடைமை ஆகிய இரு முறைகளாகப் பயிரிடப்படுகின்றது. 1946ஆம் ஆண்டு இலங்கைக் குடிமதிப்பு அளவீட்டில் சிற்றுடைமை என்ற பதம் 20 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பினையே குறிக்கின்றது. ஆனால் தேயிலை, றப்பர், கட்டுப்பாட்டாளர்களின் அறிக்கையில் 10 ஏக்கருக்குக் குறைவான நிலமே சிற்றுடைமை என வரையறை செய்யப்பட்டுள்ளது. மொத்தத் தேயிலை சாகுபடி நிலத்தில் 18·02 சதவீதமான நிலமும் மொத்த றப்பர் சாகுபடி நிலத்தில் 30·9 சதவீதமான நிலமும் 10 ஏக்கருக்குக் குறைவான உடைமையாகவுள்ளது. ஆனால் 500 ஏக்கருக்கதிகமான நிலப்பரப்பு உடைமையானது மொத்தத் தேயிலை நிலத்தில் 46·44 சதவீதமாகவும், மொத்த இறப்பர் நிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 3. 11

### பரப்பளவுரீதியாக தேயிலை, றப்பர் ஆகியவற்றின் பங்கீட்டு முறை
(சதவீதமாக)

| பரப்பளவு | தேயிலை (1972ஆம் ஆண்டு) | றப்பர் (1968ஆம் ஆண்டு) |
|---|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானது | 18·02 | 30·9 |
| 10—100 | 11·15 | 22·8 |
| 100—500 | 24·39 | 21·9 |
| 500 ஏக்கருக்கு மேலானது | 46·44 | 24·4 |
| | 100 | 100 |

மூலம்: தேயிலை, றப்பர் கட்டுப்பாட்டாளர்களது அறிக்கை.

24·4 சதவீதமாகவும் உள்ளது. 1952ஆம் ஆண்டு புள்ளிவிபர மதிப்பீட்டின்படி தென்னை பயிரிடு நிலப்பரப்பில் 20 ஏக்கருக்குக் கூடிய நிலப்பரப்பினைக்கொண்ட தோட்டங்கள் 32 சதவீதமாகவும் சிற்றுடைமை நிலப்பரப்பு 54·1 சதவீதமாகவும், கிராம நகரத் தோட்டங்கள் 13·9 சதவீதமாகவும் காணப்பட்டது.

தேயிலையைவிட றப்பரில் சிற்றுடைமையின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. ஆனால், தென்னையில், மொத்தச் சாகுபடி நிலத்தில் 68 சதவீதமான நிலப்பரப்பு சிற்றுடைமையாகவே காணப் படுகின்றது. தேயிலை, றப்பர் ஆகிய பயிர்களில், இவற்றின் உற்பத்தியினை உடனடியாகப் பதப்படுத்தல் என்ற அம்சம் மிக முக்கியமானதாகும். மேலும் இவற்றின் உற்பத்தித் தரமானது சாகுபடியினால் மட்டுமன்றி, தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் பதப்படுத்தல் என்பதிலும் தங்கியிருக்கிறது. றப்பரினைவிட, தேயிலை உற்பத்தியில் தொழிற்சாலை மிகக் கூடிய முக்கியத்துவத்தினை வகிக்கிறது. இதனால் இவ் உற்பத்திகளைக் குறைந்த செலவில் மேற் கொள்ளப் பெருந்தோட்டங்களே கூடிய சாத்தியமானதால் இப் பயிர்களின் உற்பத்தியில் சிற்றுடைமை பெரும்பங்கினை வகிக்கமுடிய வில்லை. தென்னைப்பயிர்ச் செய்கையில் தொழிற்சாலை முக்கிய இடத் தினைப் பெறுவதில்லை. எனவேதான், இதில் சிற்றுடைமை விவசாயம் பெருமளவிற்குக் காணப்படுகின்றது.

சில ஆய்வாளர்கள் தென்னையின் மொத்தச் சாகுபடி நிலத்தில் கூடிய சதவீதம் சிற்றுடைமை நிலப்பரப்பாக இருப்பதனால் தென்னை யினை ஒரு பெருந்தோட்டப் பயிராகக் கருதமுடியாது என வாதிடு கின்றனர். இவ்வாறு வாதிடுபவர்கள் 68 சதவீதமான தென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரிடப்படும் நிலப்பரப்பு சிற்றுடைமையாக உள்ளது என்பதனை மட்டுமே கருத்திற்கொண்டுள்ளனர். ஆனால் தென்னையின் மொத்த நிலப்பரப்பில் 20 ஏக்கருக்குக் கூடிய பெருந்தோட்டங்கள் 32 சதவீதமாக இருப்பதுடன், அது ஏறக்குறைய 3,68,000 ஏக்கராக உள்ளது என்பதனைக் கருத்திற்கொள்ளவில்லை. தென்னையானது பெருந்தோட்டரீதியாகச் சாகுபடி செய்யப்படும் மொத்த நிலப்பரப்பும், றப்பர், தேயிலை ஆகிய பயிர்கள் பெருந்தோட்டரீதியாகப் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பும் ஏறக்குறைய சமனானதாகும். தென்னையினது சாகுபடிப் பரப்பளவில் சிற்றுடைமை அதிகமாக இருப்பதனாலேயே சதவீதரீதியில் பெருந்தோட்டப் பரப்பளவு குறைவாகக் காணப்படுகின்றது. எனவே. தென்னையைப் பெருந்தோட்டப் பயிராகக் கருதமுடியாது என்ற வாதம் சதவீதரீதியான நோக்கில் மட்டுமே பொருத்தமாக இருக்கும்.

## அட்டவணை 3. III

### பெருந்தோட்டங்களின் உடைமையாளர் பங்கீட்டு முறை (சதவீதமாக)

| உடைமை வகை | தேயிலை (1974ஆம் ஆண்டு) | றப்பர் (1969ஆம் ஆண்டு) | தென்னை (1952ஆம் ஆண்டு) |
|---|---|---|---|
| 1. ஸ்ரேளிங் கம்பனி | 25·27 | 11·90 | 2·87 |
| 2. ரூபாய் கம்பனி | 21·18 | 13·30 | 7·42 |
| 3. இலங்கையர் அல்லாதவரின் பங்குடைமை | 1·04 | 2·30 | 4·84 |
| 4. இலங்கையரின் பங்குடைமை | 20·38 | 72·50 | 82·90 |
| 5. இலங்கையரினதும், வெளிநாட்டவரினதும் கூட்டுப் பங்குடைமை | 0·56 | — | — |
| 6. அரசவுடைமை | 13·15 | — | 0·85 |
| 7. சிற்றுடைமை | 18·42 | — | — |
| 8. தர்மகத்தாக்களினது உடைமை | — | — | 1·12 |
| | 100 | 100 | 100 |

மூலம்: தேயிலை, றப்பர், தெங்கு கட்டுப்பாட்டாளர்களின் அறிக்கை.

நீண்டகாலமாக இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத்தில் பெரிய வர்த்தக நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்திவந்தன. இவ் வர்த்தக நிறுவனங்களில் இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டவற்றை ஸ்ரேளிங் கம்பனிகள் என்றும், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றினை ரூபாய் கம்பனிகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. 1974ஆம் ஆண்டளவில் மொத்தத் தேயிலை நிலப்பரப்பில் 25·27 சதவீதமானவை ஸ்ரேளிங் கம்பனிகளினதும், 21·18 சதவீத மானவை ரூபாய்க் கம்பனிகளினதும் உடைமையாகவுமிருந்தன. தேயிலை உற்பத்தியானது பெரும் முதலாளித்துவ நிறுவனங்களின் உடைமையாக இருந்தமையும் இலங்கைத் தேயிலையானது உயர்ந்த தரத்தினைக் கொண்டிருந்தமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்ருக அமைந்திருந்தது.

றப்பரில் இரு பெரும் கம்பனிகளும் 25·2 சதவீத உடைமையினையும் தென்னையில் 10·29 சதவீத உடைமையினையும் கொண்டிருந்தன. றப்பர், தென்னை ஆகிய பயிர்கள் பெருமளவிற்குச் சுதேசிகளின் உடைமையாகவே இருந்துவந்துள்ளன. காணிச் சீர்திருத்தச் சட்டமானது எல்லாப் பெருந்தோட்ட நிலத்தினையும் அரசு நட்டஈடு செலுத்திப் பொறுப்பேற்பதற்கு அதிகாரமளித்துள்ளது. இதன் விளைவாக 63 சதவீத தேயிலை நிலமும், 32 சதவீத றப்பர் பயிரிடும் நிலமும், 10 சதவீத தென்னை பயிரிடும் நிலமும் அரசினுல் பொறுப்பேற்கப்பட்டது. இந்நிலங்களிற் பெரும்பகுதியானவை ஜனவசு, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினுலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

பெருந்தோட்ட விவசாய முறையில் சந்தையானது மிக முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. சந்தை என்பது வெளிநாட்டுச் சந்தை உள்நாட்டுச் சந்தை ஆகிய இரண்டினையுமே பொதுவாகக் குறிக்கின்றது. தேயிலை, றப்பர் ஆகிய இரண்டும் பெருமளவிற்கு வெளிநாட்டுச் சந்தையினை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளாகவே இருக்கின்றன. தேயிலையின் உள்நாட்டு நுகர்வு ஏறக்குறைய 20,000 தொன்களாக அல்லது மொத்த உற்பத்தியில் 8 சதவீதமாகவுள்ளது. றப்பரினது உள்நாட்டு நுகர்வு மிகக் குறைவானதாகும். 1950ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் 0·1 சதவீதமே உள்நாட்டு நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்டது.

1967ஆம் ஆண்டு ரயர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதன் உள்நாட்டு நுகர்வு ஓரளவு அதிகரித்துள்ளது. 1974ஆம் ஆண்டு மொத்த உற்பத்தியில் இதன் உள்நாட்டு நுகர்வு 4·7 சதவீதமாக மட்டுமே அதிகரித்துள்ளது. தேயிலை, றப்பர் ஆகிய இரு பயிர்களினதும் வளர்ச்சியானது பெருமளவிற்கு உலக சந்தையிலுள்ள கேள்வி, விலை ஆகிய இரண்டிலுமே தங்கியிருக்கின்றன.

தேயிலை, றப்பரைப்போலன்றி தென்னை உற்பத்திகளுக்கு உள்நாட்டில் கூடிய சந்தை வாய்ப்புக்கள் உண்டு. 1969/70ஆம் ஆண்டு சமூக பொருளாதார அளவீட்டின்படி தலைக்குரிய தேங்காய் நுகர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3. IV

றப்பரின் மொத்த உள்நாட்டு நுகர்வு 1950—1974
(மொத்த உற்பத்தியின் சதவீதமாக)

| காலம் | றப்பரின் உள்நாட்டு நுகர்வு |
|---|---|
| 1950 | 0·1 |
| 1956 | 0·3 |
| 1960 | 0·8 |
| 1965 | 1·6 |
| 1970 | 2·3 |
| 1974 | 4·7 |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்.

வருடத்திற்கு 90 என மதிப்பிடப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டில் தேங்காயின் மொத்த உற்பத்தியில் 47 சதவீதம் உள்நாட்டு நுகர்விற்குப் பயன்படுத்தப்பட்டது. இது 1960இல் 56 சதவீதமாகவும், 1977இல் ஏறக்குறைய 65 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இதனுலேயே தேயிலை, றப்பரை விட உலக சந்தையின் விலைத்தாக்கமானது தென்னைப் பயிர்ச்செய்கையினை மிகக் குறைவாகவே பாதிப்பதாக உள்ளது. இக் காரணத்தினுலேயே தென்னையினை ஏற்றுமதிப் பயிர் என்று கருதமுடியாது எனவும் சிலர் வாதிடுகின்றுர்கள். தென்னை உற்பத்தியில் பெரும்பகுதி உள்நாட்டில் நுகரப்பட்டாலும் கூட நெடுங்காலமாக தேயிலை, றப்பர் ஆகிய பயிர்கட்கு அடுத்ததாக வெளிநாட்டுச் செலாவணியினை உழைத்துத் தரும் பயிராக இது காணப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணியினைப் பெற்றுத் தருதல் என்ற அடிப்படையில் தென்னை மூன்றுவது இடத்தினை வகிப்பதால் இதனை ஏற்றுமதிப் பயிராகக் கருதுவது பொருத்தமானதாகும். இதேபோன்று கொக்கோ, கறுவா, புல்லெண்ணெய், மிளகு, ஏலம், சாதிக்காய் போன்றவையும் ஏற்றுமதிப் பயிர்களாகும்.

### பெருந்தோட்டப் பயிர்களின் மொத்த உற்பத்தி

பெருந்தோட்டப் பயிர்களின் சாகுபடி நிலத்தில் அண்மைக் காலம் வரை பெருமளவு மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும், மொத்த உற்பத்தியிலும் ஏக்கருக்கான சராசரி விளைச்சலிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தேயிலையின் மொத்த உற்பத்தியானது 1945ஆம் ஆண்டில் 277 மில்லியன் இறுத்தல்களாக இருந்து, படிப்படியாக அதிகரித்துச் சென்று, 1965இல், 503 மில்லியன் இறுத்தல்களாக உயர்ந்துள்ளது. ஆனல், 1970ஆம் ஆண்டிற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு மொத்த உற்பத்தியானது வீழ்ச்சி அடையத் தொடங்கி, 1977இல் 460 மில்லியன் இருத்தல்களாகக் குறைந்துள்ளது. றப்பரின் மொத்த உற்பத்தியானது 1945இல் 210 மில்லியன் இருத்தல்க

## அட்டவணை 3. V

**தேயிலே, றப்பர், தென்னை ஆகிய பயிர்களின் மொத்த உற்பத்தி 1945—1977**

| காலம் | தேயிலை (மில்லியன் இருத்தல்களில்) | றப்பர் (மில்லியன் இருத்தல்களில்) | தென்னை (மில்லியன் விதைகளில்) |
|---|---|---|---|
| 1945 | 277 | 210 | — |
| 1950 | 306 | 254 | 1842 |
| 1955 | 380 | 210 | 2381 |
| 1960 | 435 | 218 | 2183 |
| 1965 | 503 | 261 | 2676 |
| 1970 | 468 | 351 | 2510 |
| 1975 | 471 | 328 | 2398 |
| 1977 | 460 | 333 | 1900 |

மூலம்: குடிமதிப்புத் திணைக்களம்.
இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கைகள்

ளாகவிருந்து, 1970இல் 351 மில்லியன் இருத்தல்களாக அதிகரித்தது. ஆனால், 1975இல் 328 மில்லியன் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்து, 1977இல் மீண்டும் 333 மில்லியன் இருத்தல்களாக அதிகரித்துள்ளது. தென்னையின் மொத்த உற்பத்தியானது 1950இல் 1842 மில்லியன் விதைகளாக இருந்து, 1965இல் 2676 மில்லியன் விதைகளாக அதிகரித்தது. 1965இலிருந்து தென்னையின் மொத்த உற்பத்தியில் ஓரளவு வீழ்ச்சி ஏற்படத் தொடங்கி, 1977இல் 1900 மில்லியன் விதைகளாகப் பெரும் வீழ்ச்சியை அடைந்தது.

1950ஆம் ஆண்டைத் தொடர்ந்து இம் மூன்று பயிர்களின் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கும், 1970ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட வீழ்ச்சி நிலைக்கும் இவற்றினது உற்பத்தித் திறனில் ஏற்பட்ட மாற்றமே காரணமாகும். ஏனெனில் மொத்தப் பயிரிடும் நிலப்பரப்பில் பெருமளவு மாற்றம் ஏற்படாத நிலையில் உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றமே மொத்த உற்பத்தியில் பெருமளவு மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியதாயிருக்கும். தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் ஏக்கருக்கான சராசரி விளைச்சலில் 1970ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பேற்பட்டுள்ளது. 1945ஆம் ஆண்டு தேயிலையின் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 404 இறாத்தல்களாகவிருந்து, 1975இல் 920 இறாத்தல்களாக அதிகரித்துள்ளது. இதேபோன்று 1945இல்

## அட்டவணை 3. VI

தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 1945—1977

| காலம் | தேயிலை (இறாத்தல்களில்) | றப்பர் (இறாத்தல்களில்) | தென்னை (விதைகளில்) |
|---|---|---|---|
| 1945 | 404 | 319 | — |
| 1950 | 546 | 388 | 1721 |
| 1955 | 671 | 318 | 2225 |
| 1963 | 824 | 405 | 2258 |
| 1965 | 820 | 431 | 2429 |
| 1970 | 811 | 707 | 2200 |
| 1975 | 920 | 691 | 2081 |
| 1977 | 899 | 708 | 1649 |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

ஏக்கருக்கான றப்பரின் உற்பத்தி 319 இறாத்தல்களாக இருந்து 1970இல் 707 இறாத்தல்களாகக் கூடியுள்ளது. தென்னையினது ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 1950இல் 1721 விதைகளாக இருந்து 1965இல் 2429 விதைகளாக அதிகரித்துள்ளது. 1970க்குப் பின்பு தேயிலை, றப்பர் ஆகியவற்றின் ஏக்கருக்கான சராசரி விளைச்சலின் வீழ்ச்சியினைவிட தென்னையினது விளைச்சலின் வீழ்ச்சி அதிகமாகவுள்ளது. 1965ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 2429 விதைகளாக இருந்து 1977இல் 1649 விதைகளாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் உற்பத்தித் திறன் அல்லது ஏக்கருக்கான சராசரி விளைச்சல், காலநிலை, உரப் பயன்பாடு, பயிரின் தரம், பராமரிப்புப்போன்ற நான்கு காரணிகளிலேயே தங்கியிருக்கின்றது. இவற்றில் உரப்பயன்பாடானது உற்பத்தித் திறனைக் கூட்டுவதில் சக்திவாய்ந்த ஒரு காரணியாக இருக்கின்றது. பெருந்தோட்டப் பயிர்களுக்கான உரநுகர்வானது 1950இலிருந்து பெருமளவிற்கு அதிகரித்துவந்துள்ளது. 1965இல் தேயிலையின் ஒரு ஏக்கருக்கான உரநுகர்வு 5·27 அந்தர்களாக இருந்தது. இதேபோன்று 1965இல் றப்பரினது ஏக்கருக்கான உர நுகர்வானது 0·82 அந்தர்களாகவும் தென்னையினது உரநுகர்வானது 0·84 அந்தர்களாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 3. VII

### தேயிலை, றப்பர், தென்னை ஆகிய பயிர்களின் ஏக்கருக்குரிய சராசரி உரநுகர்வு 1965—1977

(அந்தர்களில்)

| காலம் | தேயிலை | றப்பர் | தென்னை |
|---|---|---|---|
| 1965 | 5·27 | 0·82 | 0·84 |
| 1967 | 4·75 | 0·77 | 0·85 |
| 1969 | 3·72 | 0·71 | 1·02 |
| 1971 | 3·72 | 0·60 | 1·10 |
| 1976 | 3·21 | — | 0·53 |
| 1977 | 2·68 | — | 0·51 |

மூலம் : புள்ளிவிபரத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

1965க்குப் பின்பு தேயிலை, றப்பர் ஆகிய பயிர்களின் உரநுகர்வில் படிப்படியான வீழ்ச்சி ஏற்பட்டுவந்துள்ளது. 1977இல் தேயிலையின் ஏக்கருக்கான உரநுகர்வு 2·68 அந்தர்களாகவும், 1971இல் றப்பரினது நுகர்வு ஏக்கருக்கு 0·6 அந்தர்களாகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. தென்னையினது ஏக்கருக்கான உர நுகர்வு 1971இல் 1·1 அந்தர்களாக அதிகரித்து 1977இல் 0·51 அந்தர்களாக வீழ்ச்சி அடைந்துள்ளது. பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பிற்கும் வீழ்ச்சிக்கும் உரநுகர்வில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் வீழ்ச்சியும் முக்கியகாரணிகளிலொன்றுக அமைந்துள்ளது. 1950ஆம் ஆண்டிற்குப் பின்பு றப்பர், தேயிலை, தென்னை ஆகியவற்றின் புனர் நடுகை மேற்கொள்ளப்பட்டமையும் உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கு மற்றுமொரு காரணமாகும்.

1970க்குப் பின்பு பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உரநுகர்வு குறைக்கப்பட்டமை மட்டுமன்றி, காணிச் சீர்திருத்தத்தினுல் ஏற்பட்ட அசாரண நிலையும் மிக முக்கியமான காரணியாக அமைந்திருந்தது. குறிப்பாக பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் தமது தோட்டங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டு விடும் என்ற அச்சத்தினுல் இவற்றினைச் சிறந்த முறையில் பராமரிக்கவில்லை. தோட்டங்களுக்கு உரமிடுதல் குறைக்கப்பட்டதுமட்டுமன்றி, புல்வெட்டுதல், உழுதல், பண்படுத்தல், மருந்து தெளித்தல் போன்றவையும் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கம் தோட்டங்களைப் பொறுப்பேற்ற பின்பும் உடனடியாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டி இருந்தது. தோட்டங்களில் உபகரணங்கள் பற்ருக்குறை அல்லது முன்னைய தோட்டச் சொந்தக்காரரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல்லப்பட்டமை, முகாமையியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் போன்றவற்றினுல் தோட்டங்களைச் சிறந்தமுறையில் பராமரிக்கமுடியவில்லை. இக்காரணங்களினுலும் தோட்டங்களினது உற்பத்தித் திறனில் வீழ்ச்சி ஏற்படுதல் தவிர்க்கமுடியாததாக இருந்தது.

பெருந்தோட்டப் பயிர்களில் தேயிலையும், றப்பரும் கூடியளவிற்கு ஊழியச் செறிவான உற்பத்திப் பயிர்களாகும். இவற்றினது உற்பத்திச் செலவில் கூலியானது மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இலங்கையின் பெருந்தோட்ட உற்பத்தி உலக மொத்த உற்பத்தியில் சிறிய பங்காக இருப்பதாலும், உலக சந்தையின் போட்டி நிலைமையினுலும் இலங்கையின் உற்பத்தியாளர்கள் விலையினைக் கட்டுப்படுத்தல், நிர்ணயித்தல் ஆகியவற்றில் சக்தியற்றவர்களாக உள்ளனர். எனவே, விலையினை அதிகரிக்க முடியாமையினுல் குறைந்த செலவில் உற்பத்தியினை மேற்கொள்ளுதல் மூலமே இலாபம் பெறுதல் சாத்தியமானதாக உள்ளது. இலங்கையின் பெருந்தோட்ட உற்பத்திகளானது மிகச்சிறந்த உற்பத்தி முறையினையும் மிகக் குறைவான கூலியினையும் கொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திச் செலவானது 1960ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை பெரும் அதிகரிப்பினைக் கொண்டிருக்கவில்லை. 1960ஆம் ஆண்டில் ஒரு இருத்தல் தேயிலைக்கான உற்பத்திச் செலவானது 1 ரூபா 46 சதத்திலிருந்து 1970இல் 1 ரூபா 51 சதமாக மட்டுமே அதிகரித்துள்ளது. இதே காலப் பகுதியில் ஒரு இருத்தல் றப்பருக்கான உற்பத்திச் செலவு 70 சதத்திலிருந்து 1 ரூபா 17 சதமாகவும் 1000 தேங்காயினது உற்பத்திச் செலவு 60 ரூபா 85 சதத்திலிருந்து 76 ரூபா 70 சதமாகவும் மட்டுமே அதிகரித்துள்ளது.

## அட்டவணை 3. VIII

**தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் உற்பத்திச்செலவு 1960—1976**

| காலம் | தேயிலை (ஒரு இருத்தலுக்கு) ரூ. ச. | றப்பர் (ஒரு இருத்தலுக்கு) ரூ. ச. | தென்னை (1000 விதைகட்கு) ரூ. ச. |
|---|---|---|---|
| 1960 | 1.46 | 00.70 | 60.85 |
| 1965 | 1.41 | 00.69 | 63.90 |
| 1970 | 1.51 | 1.17 | 76.70 |
| 1975 | 2.83 | 1.56 | 114.63 |
| 1976 | 3.14 | — | 162.00 |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970இல் இருந்து 1976ஆம் ஆண்டு வரை உற்பத்திச்செலவில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு இறுத்தல் தேயிலைக்கான உற்பத்திச் செலவு 1975இல் 2 ரூபா 83 சதத்திலிருந்து 1976ஆம் ஆண்டில் 3 ரூபா 14 சதத்திற்கு உயர்ந்துள்ளது. இதே போன்று 1000 தேங்காய்கட்கான உற்பத்திச் செலவு 1975இல் 114 ரூபா 63 சதத்திலிருந்து 1976இல் 162 ரூபாவிற்கு அதிகரித்துள்ளது. இதற்கு 1970இற்குப் பின்பு எண்ணெய் விலை உயர்வினுல் ஏற்பட்ட நெருக்கடிகள், உரத்தினது விலை உயர்வு ஆகியனவற்றை மட்டும் முக்கிய காரணங்களாகக் கருதமுடியாது. மேலும் காணிச் சீர்திருத்தத்தின் விளைவாக அரசாங்கம் பெருந்தோட்டங்களைப் பொறுப்பேற்றமையினுல் ஏற்பட்ட வேதன உயர்வு, நிருவாகத் திறமையின்மை ஆகியவற்றையும்பெருமளவிற்குப் பொறுப்புவாய்ந்த காரணிகளாகக் கொள்ளலாம்.

**பொருளாதார வளர்ச்சியில் பெருந்தோட்டத்துறையினது பங்கு**

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டுச் செலாவணியானது இன்றியமையாததொன்ருகும். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குப் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியினை உழைத்துத் தரும் துறையாகப் பெருந்தோட்டத் துறையானது காணப்படுகின்றது. இலங்கையில் வேறு உற்பத்தித் துறைகளை விருத்திசெய்து குறுங்காலத்தில் வெளிநாட்டுச் செலாவணியினைப் பெறுதல் கடினமானதாகும். பெருந்தோட்டத்துறையானது நன்கு வளர்ச்சி அடைந்த துறையாக இருப்பதனுல் உலக சந்தையில் ஏனைய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய சக்தியினைப் பெற்றதொன்ருக உள்ளது. இவ்வாறு ஏனைய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய ஒரு துறையினை இலங்கையில் உருவாக்குதல் இலகுவானதொன்றல்ல. பூரணமான தன்னிறைவு என்பதனை இன்றைய உலகில் எந்த நாட்டிலும் எக்காலத்திலும் அடையமுடியாது. எனவே உயரிய பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்தபின்புகூட வெளிநாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியினை உழைப்பதற்கான ஒரு துறை அவசியமானதாகும். எனவே, நீண்டகால நோக்கில்கூட பெருந்தோட்டத்துறையினை விருத்திசெய்தல் அவசியமாகும்.

பெருந்தோட்ட விவசாயமானது பெருமளவிற்கு ஊழியச் செறிவான உற்பத்திமுறையினைக் கொண்ட ஒரு துறையாகும். இத்துறை பெருமளவிற்கு, கல்வியறிவில் குறைந்த அல்லது பயிற்றப்படாத ஊழியத்திற்கே கூடிய வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடியதாகும். எனவே, சனத்தொகை அதிகமாகவுள்ள இலங்கை போன்ற நாடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு ஊழியத்தினை இத்துறையினுல் உறிஞ்சக்கூடியதாக இருக்கும். இத்துறையின் வளர்ச்சியானது புறக்கணிக்கப்படுமானுல் பெருமளவு ஊழியத்திற்கு வேறு துறைகளில் வேலைவாய்ப்பளித்தல் என்பது இலகுவானதொன்றல்ல. இலங்கை மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக்கூடிய பெரியதொருதுறை என்ற அடிப்படையிலும் இது முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகும்.

உள்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருட்களை இன்று பெருமளவிற்குப் பெருந்தோட்ட விவசாயப் பொருட்களினுல் அளிக்கமுடியும். தென்னையானது பல கைத் தொழில்களைத் தோற்றுவிப்பதுடன் பல கைத்தொழில்களுக்கான மூலப் பொருளாகவும் இருக்கின்றது. தும்பு, பிண்ணுக்கு, தேங்காய் எண்ணெய் போன்றவை தெங்குக் கைத்தொழில்களாகும். இதே போன்று சவர்க்காரம், வினுகிரி, சாராயம் போன்ற தொழில்கட்கு இது மூலப் பொருளாகவும் இருக்கின்றது. றப்பர் பல கைத் தொழில்களுக்கான மூலப் பொருளாக இருப்பதனுல் உள் நாட்டில் பல கைத்தொழில்களை உருவாக்குவதற்கு இது சாதக மானதாகவிருக்கும். றப்பர் மரம் நீண்டகாலம் இலங்கையில் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. ஆனுல் அண்மைக் கால ஆய்வுகளின்படி தளபாடங்கள் போன்றவற்றினை றப்பர் மரத்தினுல் சிறப்பானமுறையில் செய்யமுடியும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே இது ஒருபுறம் நாட்டின் பலகைத் தட்டுப்பாட்டினை நீக்குவதாகவும் மறுபுறம் மரக் கைத்தொழில் விருத்திக்கு ஊக்கம் அளிப்பதாகவும் இருக்கும். தேயிலையானது நுகர்வுப் பொருளாக இருப்பதனுல் இவற்றினைப் பெட்டிகளில் அடைத்தலுக்கும், உடனடித் தேயிலை (Instant Tea) போன்றவற் றினைத் தயாரிக்கவும் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். இதன் மூலம் நாட்டில் வேலைவாய்ப்பினை மட்டுமன்றி கைத்தொழில் வளர்ச்சியினையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

கிராமிய விவசாயத்தினைவிட பெருந்தோட்ட விவசாயமானது தொழில்நுட்ப முகாமையியல் போன்றவற்றில் நன்கு வளர்ச்சி அடைந்த ஒரு துறையாகும். மேலும் பெருந்தோட்ட விவசாயத்தி லுள்ள ஊழியமானது ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த ஊழியமாக இருப்பதுடன் தொழிற்சங்கரீதியாக ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, பெருந்தோட்ட விவசாயத்தில் கூட்டு விவசாய முறைகள், கூட்டுப் பண்ணைகள் போன்றவற்றினை அமைத்து அதில் ஏற்படும் வெற்றிதோல்வியினைக் கொண்டு கிராமிய விவசாயத்துறைக்கும் இதனை விஸ்தரிக்க முடியும். கிராமிய விவசாயத்துறையினை விருத்தி செய்யும்போது பெருந்தோட்ட விவசாயத்துறையில் பெற்ற அனுப வங்களையும் ஓரளவிற்கு இதில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கிராமிய விவசாயத்துறையில் பருவகால வேலையின்மை ஏற்படும்போது பெருந்தோட்டத்துறை வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

பெருந்தோட்ட விவசாயத்துறையின் வளர்ச்சியானது பெருமளவிற்கு அவ்வுற்பத்திகளின் விலையிலேயே தங்கியிருக்கின்றது. தேயிலையானது முடிவுப் பொருளாக இருப்பதால் உலக சந்தையில் ஏற்படும் விலைத்தளம்பல் ஏனைய முதல் விளைவுப் பொருட்களைவிடக் குறைவாகவே காணப்படுகின்றது. றப்பரின் விலையானது பெருமளவிற்கு தளம்பல் உடையதாக இருப்பினும்கூட இது இருபக்க வர்த்தக உடன்படிக்கையில் நடைபெறுவதால் இத் தளம்பல்கள் இதனைப் பெருமளவு பாதிப்பதில்லை. தெங்குப் பொருட்களுக்குப் பெருமளவிற்குச் சாதகமான விலைகளே உலகசந்தையில் காணப்படுவதுண்டு. உலகசந்தையில் தெங்குப் பொருட்களின் விலைகள் பாதகமாக இருந்தாலும் இதற்குக் கூடிய உள்நாட்டுச் சந்தை இருப்பதால் இதன் வளர்ச்சி பெருமளவிற்குப் பாதிக்கப்படமாட்டாது. இன்று பொதுவாகப் பெருந்தோட்ட விவசாய உற்பத்திகளுக்குச் சாதகமான சந்தைநிலையே காணப்படுகின்றது. தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களின் விலைகள் அண்மைக்காலத்தில் அதிகரித்துச் சென்றுள்ளதை அட்டவணை 3. IXஇல் அவதானிக்கமுடிகிறது.

1963ஆம் ஆண்டு தேயிலையின் விலைச் சுட்டெண் 126லிருந்து 1976இல் 214ஆக அதிகரித்துள்ளது. இதேபோன்று 1963இல் றப்பரின் விலைச் சுட்டெண் 176ஆக இருந்து 304 ஆகவும், தெங்குப் பொருளின் விலைச் சுட்டெண் 110ஆக இருந்து 295 ஆகவும் அதிகரித்

## அட்டவணை 3. IX

### பெருந்தோட்டப் பொருள்களின் ஏற்றுமதி, விலை, தொகை ஆகியவற்றின் குறிகாட்டி

(1967ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டது)

| | 1963 | 1965 | 1970 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|
| தேயிலை விலை | 126 | 123 | 113 | 185 | 214 |
| தொகை | 154 | 167 | 96 | 98 | 92 |
| றப்பர் விலை | 176 | 197 | 111 | 191 | 304 |
| தொகை | 101 | 107 | 98 | 121 | 104 |
| தெங்குப்பொருள் விலை | 110 | 141 | 151 | 283 | 295 |
| தொகை | 151 | 161 | 109 | 90 | 84 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. ஆனால் இவ் விலையேற்றத்தினால் ஏற்பட்ட நன்மைகளைப் பூரணமாகப் பெறுவதற்கு ஏற்றுமதித் தொகையில் அதிகரிப்பு ஏற்படுதல் அவசியமானதாகும். தேயிலை, தெங்குப் பொருட்களின் ஏற்றுமதித் தொகையில் 1970க்குப் பின்பு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. றப்பரிலும் இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்படவில்லை. இத்துறையினை விருத்திசெய்வதன்மூலம் கூடியளவு வெளிநாட்டுச்செலாவணியினை உழைப்பதற்குப் பெருமளவு சாதகமான நிலை இன்று காணப்படுகின்றது.

### பெருந்தோட்ட விவசாயத்தின் பிரச்சினைகள்

பெருந்தோட்ட விவசாயத்தின் பிரச்சினைகளைச் சந்தை சம்பந்தமான பிரச்சினைகள், அதன் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் என இருவகைகளாகப் பிரித்து ஆராயமுடியும். உலக சந்தையில் இலங்கையின் பெருந்தோட்ட ஏற்றுமதிப் பொருள்கள் பெருமளவு பங்கினை வகிக்காமையினால் விலையில் ஆதிக்கம் செலுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது. உலக தேயிலை ஏற்றுமதியில் இலங்கைத் தேயிலையின் பங்கு ஏறக்குறைய 25 சதவீதமாகவும் றப்பர் 3 சதவீதமாகவும் மட்டுமே இருக்கின்றது. மேலும் இவ் ஏற்றுமதிப் பொருட்களுக்குப் பல பிரதியீடுகளும் காணப்படுவதால் விலைகள் தளம்பலுடையதாகக் காணப்படுகின்றன. அண்மைக்காலங்களில் இலங்கைத் தேயிலையுடன் தரம் குறைந்த பிறநாட்டுத் தேயிலையையும் கலந்து சில வர்த்தகதாபனங்கள் பிறநாடுகளில் விற்றதால் எமது தேயிலைக்கிருந்த விசேட தரத்தினைத் தொடர்ந்து பாதுகாப்பது கடினமானதாக உள்ளது.

தேயிலை, றப்பர் ஆகிய பொருட்களுக்கான உள்நாட்டுக் கேள்வியானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் இவ்விரு பொருள்களும் பெருமளவிற்கு வெளிநாட்டுச் சந்தையினை நம்பியிருப்பதனால் உலக சந்தைநிலைக்கு ஏற்ப தளம்பலுடையதாகக் காணப்படுகின்றன. தென்னைக்கு மிகக்கூடிய உள்நாட்டுக் கேள்வியிருப்பதும் இவ் உற்பத்திகளின் ஏற்றுமதியினை அதிகரிக்கமுடியாதுள்ளது. தெங்குப் பொருள்களுக்குச் சாதகமான விலை பெருமளவு காணப்பட்டாலும் இதன் ஏற்றுமதியினை அதிகரிப்பதற்குக் கூடிச் செல்லும் உள்நாட்டுச் சந்தையானது பெரும் தடையாக உள்ளது.

1930க்குப் பின்பு பெருந்தோட்ட விவசாயமானது பெருமளவிற்கு விருத்திசெய்யப்படவில்லை. சுதந்திரமடைந்த பின்பும்கூட பெருந்தோட்ட முதலீட்டாளருக்குத் தமதுஉடைமைகளை அரசாங்கம் தேசியமயமாக்கிவிடும் என்ற அச்சம் குடிகொண்டிருந்தது. இதனால் புனர்நடுகை மேற்கொள்வதில் இவர்கள் அக்கறைகொள்ளாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரம் போன்ற உள்ளீடுகளை அதிகரித்து உற்பத்தியினைப் பெறுவதிலேயே கூடிய கவனம் செலுத்திவந்தனர். இன்று இலங்கையில் காணப்படும் றப்பர், தென்னை மரங்கள் பல 40 அல்லது 50 வருடத்திற்கு மேற்பட்ட முதிர்ச்சி உடையனவாக உள்ளன. தேயிலைச் செடிகளும் 25 வருடங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சியினைக் கொண்டவையாக உள்ளன. நல்ல விளைச்சலையும் தரமான உற்பத்தியினையும் கொடுக்கக்கூடிய இனங்கள் அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இவ்வினப் பயிர்கள் இலங்கையில் பரந்த அடிப்படையில் இன்னும் பயிரிடப்படவில்லை. இந்நிலை தொடர்ந்து நீடிப்பின் எமது பெருந்தோட்ட உற்பத்திகளின் தரம் விரைவில் வீழ்ச்சி அடையும் என்பதில் சந்தேகமில்லை.

பெருந்தோட்ட உற்பத்திகளைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் பழைய முறையிலமைந்தவையாகவே காணப்படுகின்றன. இத்தொழிற்சாலைகளில் நவீன இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றினை ஈடுபடுத்துவதன்மூலம் உற்பத்தியினை நவீனமுறையில் மேற்கொள்ளமுடியும். இதன்மூலம் உற்பத்திப் பொருட்களின் தரம் மேலும் உயருவதுடன் கூடியசந்தை வாய்ப்புக்களையும் வெளிநாடுகளில் பெறமுடியும்.

பெருந்தோட்ட விவசாயத்தில் சிற்றுடைமையாளர்கள் மிக முக்கியமான பிரச்சினையாக இன்று காணப்படுகின்றனர். பல தோட்டங்கள் துண்டாடப்பட்டதன் காரணமாக இச் சிற்றுடைமையாளர்களின் எண்ணிக்கையும் இன்று படிப்படியாக அதிகரித்துவந்துள்ளது. சிற்றுடைமையாளர்கள் நவீன உற்பத்திமுறைகளை மேற்கொள்வதற்குப் போதிய மூலதனமற்றவர்களாகக் காணப்படுவதுடன், சிறிய தோட்டங்களில் நவீன உற்பத்தி முறைகளைக் கையாளுதல் சிக்கனமற்றதாகவும் காணப்படுகின்றது. பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்கள் கூடிய விலைத்தளம்பல்களை உடையதாக இருப்பதனுல் விலைவீழ்ச்சி அடையும்போது சிற்றுடைமையாளர்கள் தொடர்ந்து உற்பத்தியினை மேற்கொள்ளமுடியாத நிலையிலிருப்பர். இதனுல் விலைவீழ்ச்சி அடையும்போது இத் தோட்டங்கள் பெருமளவிற்குச் சிறந்த முறையில் பராமரிக்கப்படாது கைவிடப்படுகின்றன. சாதகமான விலை காணப்படும்போது இவர்கள் குறுங்காலத்தில் உற்பத்தியினைப் பெருக்குவதற்கான உற்பத்தி முறைகளைக் கையாண்டு கூடிய உற்பத்தியினைப் பெற முனைவர். எனவே தோட்டங்களை நீண்டகாலநோக்கில் விருத்திசெய்வதற்கான சாகுபடி முறைகளை இவர்கள் கையாளுவதில்லை. இதனுல் சிற்றுடைமை விவசாய நிலத்தில் உற்பத்தித்திறன் மட்டுமன்றி உற்பத்தித்தரமும் வீழ்ச்சி அடைந்து செல்வதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தோட்ட விவசாய விருத்திக்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

### 1. புனர்நடுகை மானிய உதவித்திட்டம்

தேயிலை, றப்பர், தென்னந்தோட்டங்கள் நீண்டகால முதிர்ச்சியினைக் கொண்டவையாக இருப்பதனால் புனர்நடுகைத் திட்டமானது உற்பத்தித்திறனையும், தரத்தினையும் அதிகரிப்பதற்கு இன்றியமையாத தொன்றாகும். இதனாலேயே அரசாங்கமானது பெருந்தோட்ட விவசாயத்தில் புனர்நடுகையினை ஊக்குவிப்பதற்காகப் புனர்நடுகை மானியத்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கவேண்டி இருந்தது. முதன் முதலில் 1953ஆம் ஆண்டு றப்பர் புனர்நடுகை மானியத் திட்டமும், 1959இல் தேயிலை புனர்நடுகை மானியத்திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டது. இன்று தென்னைக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. புனர்நடுகையில் நல்ல புதிய இனக் கன்றுகளை நடுவ தினை ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். புனர் நடுகையினை மேற்கொள்ளும்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானியத்திற்கு மேலாக ஏற்படும் செலவினை அடமான வங்கியில் கடன்பெறுவதற்கு வசதியும் செய்துகொடுக்கப்பட்டது. இதன் மூலம் உற்பத்தியாளருக்குப் புனர்நடுகையின்போது ஏற்படும் நிதி நெருக்கடிகளும் பெருமளவு குறைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் பெருமளவு றப்பர் நிலமானது புனர் நடுகைக்குட்படுத்தப்பட்டது. 1960ஆம் ஆண்டு, 1,51,043 ஏக்கர் நிலம் புனர்நடுகை செய்யப்பட்டது. இத் தொகை 1977இல் 3,36,320ஆக அதிகரித்தது. இத்தொகை மொத்த றப்பர் பயிரிடு நிலத்தில் 60 சதவீதமாகும். தேயிலை புனர்நடுகையானது 1960இல் 1,129 ஏக்கராக இருந்து 1977இல் 73,757 ஏக்கராக அதிகரித் துள்ளது. மொத்தத் தேயிலை நிலத்தில் ஏறக்குறைய 12 சதவீத நிலமே புனர்நடுகைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இப் புனர்நடுகைத் திட்டம் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதற்கான பல நடவடிக்கைகளை அண்மைக்காலத்தில் அரசாங்கம் மேற்கொண் டுள்ளது.

### 2. உரமானியத் திட்டம்

உரமானியத் திட்டமானது சிறுடைமையாளர்களை அடிப்படை யாகக்கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகும். 1950 ஆண்டிற்குப் பின்பு பெருந்தோட்ட விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் அதி கரிப்பிற்கு இம் மானியத்திட்டம் முக்கிய காரணமாகும். தேயிலைக் கான உரமானியத் திட்டம் 100 ஏக்கருக்குக் குறைவான தோட்டங் களை உடையவர்களுக்கு உரத்தின் செலவில் அரைவாசியினை மானிய மாக வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டதாகும். பெருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட உற்பத்திகளுக்கு நல்லவிலை கிடைக்கும்போது சிற்றுடைமையாளர்கள் மானியவிலையில் பெறப்பட்ட உரத்தினை உற்பத்தியில் பயன்படுத்துவது இலாபகரமானதாக இருக்கும். பெருந்தோட்ட உற்பத்திகளின் விலை வீழ்ச்சி அடையும்போது மானியமாகப் பெறப்பட்ட உரத்தினைச் சிற்றுடைமையாளர்கள் உற்பத்தியில் பயன்படுத்துவதனை விட கறுப்புச்சந்தையில் விற்றல் கூடிய இலாபகரமானதாக இருக்கும். எனவே, பெருந்தொகையினை உரமானியமாக அளிக்கும்போது பல மோசடிகள் ஏற்படுவதற்கும்கூட ஓரளவு வழிவகுப்பதாக இருக்கும்.

### 3. தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி மானியத் திட்டம்

தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான திட்டமானது 1962ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமானது. பல தேயிலைத் தொழிற்சாலைகள் 50 வருடத்திற்கு மேற்பட்டதாக இருப்பதனால் இவற்றினை நவீனமயப்படுத்தல் இன்றியமையாததாக இருந்தது. தேயிலைக்குச் சாதகமான சந்தைநிலை 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் காணப்படாமையினால் நில நெருக்கடியினை எதிர்நோக்கிய உற்பத்தியாளர்களுக்கு மானியம் அளித்தல் மூலமே தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் சாத்தியமானதாக இருந்தது. தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தப் பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டதால் அரசாங்கம் முழுத்தொகையினையும் மானியமாகக் கொடுத்தல் இயலாததொன்றாக இருந்தது. இதனால் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்குத் தேவைப்படும் பணத்தினை வங்கிக் கடனாகப் பெறவும் வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டன.

### 4. நிறுவன ரீதியான ஊக்கங்கள்

பெருந்தோட்ட விவசாயப் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகத் தேயிலை ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சி நிலையம், தெங்குஆராய்ச்சி நிலையம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் பயிர்களின் நோய்கள்பற்றிய ஆராய்ச்சிகள், உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான வழிவகைகள் போன்றனவற்றில் பயன்மிகு ஆய்வுகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றன. மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணங்களிலுள்ள முடிக்குரிய காணிகளில் காசுப் பயிர்களைப் பயிரிட்டு விருத்திசெய்வதற்கு 1958இல் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. காணிச் சீர்திருத்தத்தின்பின்பு தோட்டங்களை நிர்வகிப்பதற்கு ஜனவசம போன்ற புதிய நிறுவன அமைப்புக்களும் இன்று உருவாக்கப்பட்டுள்ளன. தேயிலை விற்பனையை வெளிநாட்டில் அதிகரிப்பதற்காகத் தேயிலைச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பயிர் மாற்றுநடுகைத் திட்டம்

சிக்கனமற்ற பெருந்தோட்ட விவசாய நிலங்களைச் சிக்கனமான நிலங்களாக மாற்றுவதே பயிர் மாற்றுநடுகைத் திட்டமாகும். பெருந்தோட்ட விவசாயநிலங்கள் சிலவற்றில் தொடர்ச்சியாக ஒரே பயிரைப் பயிரிட்டதனால் நிலத்தின் வளமானது பெருமளவு குறைவடைந்தநிலை காணப்படுகின்றது. இத்தகைய நிலங்களில் புதிய காசுப் பயிர்களான பப்பாசி, அன்னாசி, முசுக்கட்டைச்செடி, சூரியகாந்தி போன்ற பயிர்களைப் பயிரிடுவதனையே பயிர்மாற்று நடுகைத்திட்டம் குறிக்கின்றது. இதனால் கைவிடப்படக்கூடிய நிலையிலுள்ள பல விவசாயநிலங்களை இலாபகரமான உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடிய நிலங்களாக மாற்றக்கூடியதாக இருக்கும். இவ்வாறு புதிய பயிர்களைப் பயிரிடுவதற்கு ஊக்கமளிப்பதற்காக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மானியத் திட்டமானது பெருமளவிற்கு மத்திய மலைநாட்டிலுள்ள தேயிலை நிலங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனெனில், தேயிலை நிலங்களே பெருமளவிற்கு மண்ணரிப்பிற்குள்ளாகி வளமிழந்த நிலையில் காணப்படுகின்றன. இத்திட்டம் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும்போது பல புதிய காசுப் பயிர்களும் இலங்கையின் ஏற்றுமதியில் முக்கியத்துவம் பெறக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 4

# காணிச் சீர்திருத்தம்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றில் காணிச் சீர் திருத்தமானது பொருளாதாரரீதியான காரணங்களால் மட்டு மன்றி சமூக அரசியல் ரீதியான நெருக்கடிகளாலும் ஏற்படுத்தப் பட்டதொன்ருகும். விவசாயப் பொருளாதாரங்களில் நிலம் முக்கிய மான உற்பத்திக் காரணியாக இருப்பதனுல் காணிச் சீர்திருத்த மானது பொருளாதாரத்தில் அமைப்புரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். சோவியத் யூனியன், மக்கள் சீனக்குடியரசு ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தங்கள் இந்நாடுகளைச் சமூக உடைமைச் சமுதாயத்தினை நோக்கிச் செல்வதற்கு வழிவகுப்பனவாக இருந்தது. இதேபோன்று ஜப்பான், தைவான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தங்கள் இந்நாடுகளில் முதலாளித்துவ பொருளா தார அமைப்புத் தோன்றி வளர்வதற்குக் காரணமாக இருந்தன. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் பலநாடுகளில் நில உடைமை முறைகளிற் காணப்படுகின்ற சிக்கலான தன்மைகள், நில உடைமை வர்த்தகத்தினது சமூக அரசியல் ஆதிக்கம் ஆகியன காணிச் சீர்திருத்தத்தினைப் பேணுமுனையில் விளக்குவதுபோன்று இலகு வாகவும் வெற்றிகரமாகவும் நடைமுறைப்படுத்தமுடியாத நிலையினை உருவாக்கி உள்ளன. இதனுல்தான் சனநாயக முறையில் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் நெடுங்காலமாக இலங்கையில் தீவிரமான காணிச் சீர்திருத்தத்தினை மேற்கொள்வதில் தயக்கம் கொண்டனவாக இருந்தன. இலங்கையில் காணிச் சீர்திருத்தமானது நீண்டகாலமாகப் படிப்படியாக ஏற்படுத்தப்பட்ட ஒன்ருகமட்டும் அன்றி இன்னும் பூரணத்துவம் அடையாத ஒன்ருகவும் காணப்படு கின்றது.

### காணிச் சீர்திருத்தத்தின் பொருளாதாரம்

ஒரு நாட்டினது நிலஉடைமையில் ஏற்படுத்தப்படும் மாற்றமே பொதுவாகக் காணிச்சீர்திருத்தம் எனப்படுகிறது. காணிச் சீர்திருத்த மானது நிலத்தின்மீது ஒரு சிறு பகுதியினர் கொண்ட தனியுரிமையினை நீக்கி, உற்பத்தித் திறனையும், வேலைவாய்ப்பினையும் அதிகரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் மறுபங்கீடு செய்தலே முக்கிய குறிக்கோளாகக் கொண்டதாகும். பொதுவாகக் காணிச் சீர்திருத்தத்தினை மூன்று கட்டங்களாக வகைப்படுத்துவதுண்டு.

அ. நிலச்சுவான், குடியானவனைத் தீவிரமாகச் சுரண்டுவதனைத் தடுப்பதற்காகச் சட்டபூர்வமாக வாடகையினைக் கட்டுப் படுத்துவதுடன், குடியானவர்கள் தொடர்ந்து நிலத்தில் சாகுபடியினை மேற்கொள்வதற்கு உத்தரவாதமளித்தல்.

ஆ. அரசாங்கமானது தனது முடிக்குரிய காணிகளை நிலமற்ற குடியானவருக்கு வழங்குதல் அல்லது விற்பனை செய்தல். இதில் காட்டுநிலங்கள் அல்லது தரிசுநிலங்களையே குடியானவருக்கு வழங்குவதால் இதனை விவசாய நிலங்களாக மாற்றுதற்குப் பெருமளவு முதலீட்டுச்செலவு அவசியமானதாக இருக்கும்.

இ. இறுதிக்கட்டமாக நிலச்சுவானிடமிருந்து மேலதிக நிலத்தினைப் பெற்றுக் குடியானவனுக்குப் பங்கீடு செய்தலாக அமைந்திருக்கும். இதில் நிலச்சுவான் உடைமையாக வைத்திருக்கக்கூடிய நில உடைமையின் அளவு, நிலச் சுவானிடமிருந்து பெறப்படுகின்ற மேலதிக நிலத்திற்கான நட்டஈடு எவ்வளவு, அல்லது நட்டஈடு கொடுக்கப் பட வேண்டுமா என்ற இரண்டு அம்சமும் முக்கியமானதாகும். அத்துடன் நிலச்சுவானிடமிருந்து பெறப்பட்ட நிலமானது தனிப்பட்டவர்களுக்குப் பங்கீடு செய்யப்படுகின்றதா? அல்லது கூட்டு உடைமையாகப் பயன்படுத்தப் படுகின்றதா? என்பதைப் பொறுத்தே காணிச்சீர்திருத்தமானது முதலாளித்துவ முறையிலமைந்த சீர்திருத்தமா அல்லது சமதர்ம முறையிலமைந்த சீர்திருத்தமா என்பதை நிர்ணயிக்கமுடியும்.

காணிச் சீர்திருத்தமானது கட்டாயமாக இம் மூன்று கட்டங்களினூடாகப் படிப்படியாகத்தான் ஏற்படுமென்று கூறமுடியாது. சில நாடுகளில் முதலிரு கட்டங்களும் அமுலாக்கப்படாமலேயே இறுதிச் சீர்திருத்தமானது நடைமுறைப்படுத்தப்படலாம். இது ஒவ்வொரு நாட்டினதும் சமூக பொருளாதார அரசியல் நிலைக்கேற்ப வேறுபட்டதாக இருக்கும்.

விவசாயப் பொருளாதாரங்களில் நிலமே மிக முக்கிய சொத்தாக இருப்பதுடன், சமூக அரசியல் பொருளாதாரரீதியான அதிகாரமானது பிறப்பதற்கான பிரதானமான மூலமாகவும் அது அமைந்திருக்கும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் வருமானரீதியான ஏற்றத்தாழ்விற்குச் சிறுபான்மை மக்கள் குழுவினர் நிலத்தில்கொண்ட தனியுரிமையே முக்கிய காரணமாகும். நிலத்தின் தனியுரிமை முறையானது ஒழிக்கப்படுவது வருமானத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதற்கும் வழி வகுப்பதாக இருக்கும். நிலச் சீர்திருத்தமானது நிலச்சுவாமியின் சுரண்டல்முறையினை ஒழித்து விவசாயி தான் மேற்கொண்ட முயற்சிக்கு முழுமையான பலனைப் பெறுவதற்கு வழிவகுப்பதுடன் கிராமிய சமூகத்தில் எல்லோருக்கும் சமமான சந்தர்ப்பத்தினையும் அளிக்கவேண்டும். இதனாலேயே காணிச் சீர்திருத்தமானது பொருளாதாரரீதியான காரணிகளுக்கு அப்பால் சமூக நீதி என்ற விடயத்திற்குக் கூடிய முக்கியத்துவத்தினைக் கொடுப்பதாகக் கருதப்படுகிறது. உழவனுக்கு நிலம் என்பதே இதன் அடிப்படைத் தத்துவமாகும்.

நிலமானிய முறையின்கீழ் விவசாயியினால் உற்பத்திசெய்யப்படும் உற்பத்தியில் பெரும்பகுதி அல்லது கணிசமான பகுதி நிலச்சுவாமியால் அபகரிக்கப்படுகிறது. இதனால் விவசாயியானவன் சிறந்த உற்பத்தி முறைகளைக் கையாண்டு உற்பத்தியினைப் பெருக்குவதற்கு விருப்பற்றவனாக விரக்தி உற்றவனாகின்றான். நிலச்சுவாமியின் சுரண்டல் முறை ஒழிக்கப்படும்போது இந்நிலை நீக்கப்படுவதால் விவசாய நிலத்தில் உற்பத்தித்திறனை அதிகரிக்கமுடியும். கிராமிய விவசாய நிலங்கள் சிற்றுடைமையாக்கப்பட்டு பங்கீடு செய்யப்படும்போது நவீன உபகரணங்களை அல்லது இயந்திரங்களை விவசாயியினால் கொள்வனவு செய்யமுடியாமல் இருப்பதால் உற்பத்தித்திறனை அதிகரிக்கக் கடினமெனச் சிலர் வாதிடுகின்றனர். ஜப்பான், தைவான் போன்ற நாடுகளில் சிற்றுடைமை விவசாயநிலங்களில் நவீன உற்பத்தி முறைகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுவதுடன் செறிவான பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தியாவில் கேரள மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி 2 ஏக்கருக்குக் குறைவான நிலத்தினை உடைய விவசாயிகள் பெரிய விவசாய நிலப்பரப்பில் செய்யப்படுகின்ற உற்பத்தியினைவிடக் கூடுதலாக உற்பத்தி செய்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிறு விவசாயிக்கு அரசாங்கமானது நியாயமான விலையில் நீண்டகாலத் தவணைமுறையில் இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்குவதன் மூலம் மிகக்கூடிய உற்பத்தியினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

நிலச் சீர்திருத்தமானது கிராமப்புறங்களில் கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதால் கிராமிய வேலையின்மைப் பிரச்சினையினைக் குறைப்பதற்கு ஓரளவு வழிவகுக்குமென வாதிடப்படுகிறது. இன்று பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உணவுப் பற்றுக்குறை, தானிய விலையேற்றம் ஆகியவற்றின் விளைவாக கிராமியப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ விவசாய உற்பத்திமுறை உருவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. முதலாளித்துவ விவசாயிகள் பரந்த நிலப்பரப்பில் இலாப நோக்குடன் உற்பத்தியினை மேற்கொள்ளும்போது உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்காக கூடியளவு இயந்திரமயமாக்கலை மேற்கொள்வர். எனவே, கிராமிய விவசாயத்தில் மேற்கொள்ளப்படும் இம் முதல்செறிவான உற்பத்தி முறையானது பெருமளவு வேலையின்மையினைக் கிராமியப் பொருளாதாரத்தில் உருவாக்குவதாக இருக்கும். காணிச் சீர்திருத்தத்தின் மூலம் நிலமானது சிறு விவசாயிகளுக்கு மறுபங்கீடு செய்யப்படும்போது கிராமியப் பொருளாதாரத்தில் பெருமளவு இயந்திரமயமாக்கலைத் தவிர்க்கமுடியும். சிறிய நிலப்பரப்பில் குறைந்தளவு இயந்திரங்களுடன் கூடியளவு ஊழியத்தினையும் இணைத்து உற்பத்தியினை மேற்கொள்ளுதலே சாத்தியமான உற்பத்தி முறையாக அமைந்திருக்கும். எனவே, நிலச்சீர்திருத்தமானது கிராமியப் பொருளாதாரத்தில் ஊழியச்செறிவான உற்பத்தி முறை மேற்கொள்ளப்படுவதற்குச் சாதகமானதொன்று என்பதே பல பொருளியலாளர்களின் கருத்தாகும்.

காணிச் சீர்திருத்தம் மட்டும் கிராமிய விவசாயிகளின் பிரச்சினைக்கு ஏற்ற தீர்வாக அமையமாட்டாது. இதனுடன் வேறு பல திட்டங்களையும் இணைத்துச் செயற்படுத்தும்போது மட்டுமே காணிச் சீர்திருத்தமானது நாட்டின் சமூக பொருளாதார, அரசியல் விருத்திக்கு ஏற்றதொரு இயக்குவிசையாகச் செயற்படமுடியும். விவசாய உற்பத்திகளுக்குச் சந்தைப்படுத்தல், களஞ்சிய வசதிகள், கிராமியக் கடன் விரிவாக்கம் உள்ளீடுகளை அளித்தல், பெருமளவு விவசாய ஆராய்ச்சி போன்ற நடவடிக்கைகளையும் காணிச் சீர்திருத்தத்துடன் இணைத்து மேற்கொள்ளவேண்டும். இவ் அம்சங்களே காணிச் சீர்திருத்தத்தின் முழுமையான பலன்களை விவசாயி பெறுவதற்கு வழிவகுப்பதாக இருக்கும்.

### 1935க்கும் 1972க்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டங்கள்

இலங்கையில் விவசாயிகளின் நிலப் பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட முதலாவது சட்டமே 1935இல் இயற்றப்பட்ட காணிவிருத்திச் சட்டமாகும். இச் சட்டமானது சனத்தொகை செறிவாக உள்ள இடத்திலுள்ள குடியானவர்களை சனத்தொகை குறைவாகவுள்ள விருத்தி அடையாத பிரதேசங்களில் குடியேற்றி நில உடைமையாளர் ஆக்குவதுடன், உணவு உற்பத்திப் பெருக்கம், கூடிய வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டதாகும். இச்சட்டத்தின்படி நில ஆணையாளர் திணைக்களமே குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதற்குப் பொறுப்புடையதாகும். நில ஆணையாளரே கிராம விரிவாக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய புற்றரை, குடியேற்றத் திட்டம், வனபாதுகாப்பு, புதைபொருள் ஆராய்ச்சி, அரசாங்கத் தேவை, நகரவிருத்தி, சேனைப் பயிர்ச்செய்கை, மண்ணரிப்பினைத் தடுத்தல், கிராமிய தேவாலயம் போன்றவற்றிற்காக முடிக்குரிய வகைப்படுத்தும் அதிகாரத்தினைக் கொண்டவராவர். இலங்கையின் விருத்தியடையாத பல பிரதேசங்களில் பெருமளவு குடியானவர்களைக் குடியேற்றுவதற்கு வழிவகுத்த ஆரம்ப நடவடிக்கையாகவே இச்சட்டமானது அமைந்திருந்ததெனலாம்.

1935ஆம் ஆண்டுக் காணி விருத்திச் சட்டமானது முடிக்குரிய காணிகளை மட்டும் குடியானவருக்குப் பங்கீடுசெய்யும் உரிமையினை அளித்திருந்தது. ஆனல் முடிக்குரிய காணிகளற்ற சனத்தொகை அமுக்கமும் வேலையின்மையும் கூடிய இடங்களில், குடியானவர் பிரச்சினைகளுக்கு இது ஏற்ற தீர்வாக அமையவில்லை. சனத்தொகை குறைந்த விருத்தியடையாத பிரதேசங்களில் குடியானவர்களைப் பெருமளவு குடியேற்றுவதில் பல பிரச்சினைகள் காணப்பட்டதுடன் குடியேற்றத் திட்டங்களும் திருப்திகரமானதாகச் செயற்படவில்லை. சனத்தொகை கூடிய இடங்களிலுள்ள தனியார்களின் மேலதிக நிலங்களைக் குடியானவர்க்குப் பங்கீடுசெய்தல் அவசியமானதாக இருந்தது. 1950ஆம் ஆண்டுக் காணிச் சுவீகரிப்புச் சட்டம், அரசாங்கமானது தனியார் நிலங்களை நட்டஈடு கொடுத்துப் பெற்று பொதுமக்களுக்குப் பங்கிடுசெய்வதற்கு வழிவகுத்தது. ஆனல் இச் சட்டமானது பரந்த அடிப்படையில் இலங்கையில் அமுலாக்கப் படவில்லை.

காணிச் சீர்திருத்த நடவடிக்கைகள், விவசாய சட்டங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் 1958ஆம் ஆண்டு மாசி மாதம் 1ஆம் திகதி இயற்றப்பட்ட நெற்காணிச் சட்டமானது முக்கிய திருப்பு முனையாக அமைந்திருந்தது. இலங்கையில் ஏறக்குறைய 400,000 ஏக்கர் நிலத்தில் அல்லது 40 சதவீதமான நெற்சாகுபடி நிலத்தில் 300,000 விவசாயக் குடியானவர்களால் சாகுபடி மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இவ்விவசாயக் குடியானவருக்கு நிவாரணமளிப்பதையே நெற்காணிச் சட்டம் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தமையினல் குடியானவனின் உரிமைச்சாசனம் என இச்சட்டமானது வர்ணிக்கப்படுகிறது. இச்சட்டமானது நெற்காணிகளை மட்டும் கருத்திற்கொண்டிருந்ததேயொழிய ஏனைய விவசாய நிலங்கள் பற்றி எதுவித விளக்கமும் தெரிவிக்கவில்லை. நெற் காணிச் சட்டமானது பின்வரும் அம்சங்களைக் கொண்டதாகும்.

அ. விவசாயக் குடியானவனுக்குச் சாகுபடி நிலத்தில் நிரந்தரமான பாதுகாப்பு அளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. குடியானவனுல் நிலச் சுவானுக்குச் செலுத்தப்படும் வாடகையினை வரையறை செய்தல்.

இ. சாகுபடிக் குழுக்களை அமைத்தல்

ஈ. இதனை அமுலாக்குவதற்கான நிர்வாக அதிகாரங்களையும் கடமைகளையும் விவசாயசேவை ஆணையாளருக்கு அளித்தல்.

இச் சட்டமானது விவசாயக் குடியானவனுக்குச் சாகுபடி நிலத்தில் தொடர்ந்து பயிரிடுவதற்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் நிலத்தில் நிரந்தர பாதுகாப்புரிமையினை வழங்குகிறது. மேலும் நிலச்சுவான் அநியாய வாடகையினைக் குடியானவனிடம் அறவிடாமல் இருப்பதற்காக வாடகை நிர்ணயிக்கும் உரிமையானது விவசாய சேவை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு 15 புசல் நெல் அல்லது மொத்த உற்பத்தியில் ¼ பங்கு ஆகியவற்றில் எது குறைவாக உள்ளதோ அதுவே ஆகக்கூடிய வாடகையாக அமைந்திருக்கும். அத்துடன் நிலச்சுவானுல் வழங்கப்படும் விதைநெல், உழவு இயந்திர வாடகை போன்ற விவசாய நடவடிக்கைகளுக்கான கடன்களின் வட்டிவீதத்தின் மேல் எல்லையினையும் நிர்ணயிக்கும் அதிகாரமும் விவசாயசேவை ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. விவசாயக் குடியானவன் முயற்சிக்கு உற்பத்தியில் நியாயமான பங்கினைப் பெற வழிவகுப்பதன் மூலம் நிலமானியமுறைச் சுரண்டலின் அளவினை இச்சட்டம் கட்டுப்படுத்த முனைகிறது. இதன்மூலம் நிலத்தின் உற்பத்தித்திறனை முடிந்தவரை குடியானவன் அதிகரிப்பதற்கான ஊக்கமானது அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

இச் சட்டத்தின்மூலம் கிராம மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக விவசாயிகளைக்கொண்டு அமைக்கப்பட்ட சாகுபடிக் குழுக்கள், கிராமிய பொருளாதாரத்தில் முக்கியமான செயற்திறன்மிக்க நிறுவனமாக இன்று காணப்படுகின்றன. இச் சாகுபடிக் குழுக்கள் நீர் விநியோகம், சிறிய நீர்ப்பாசன அமைப்புகளைத் திருத்துதல், இக்குழுவின் எல்லைக்குட்பட்ட விவசாய பிரதேசத்தினை நிர்வகித்தல், பூச்சி, மிருகங்கள் போன்றவற்றினுல் ஏற்படும் பயிர் அழிவுகளை மதிப்பீடு செய்தல், உரம், விவசாய இரசாயனம் போன்றவற்றின் விநியோகத்தினை மேற்பார்வை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. இத்துடன் நிலச்சுவானிடமிருந்து குடியானவனையும், சிறு விவசாயியினையும் பாதுகாப்பதற்காக நிலச்சுவானுக்குக் கொடுக்கவேண்டிய சட்டபூர்வமான வாடகை, விவசாயிகளுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்ட நிறுவனரீதியான கடன்கள் போன்றவற்றினை நிர்வகித்தலும் இக் குழுக்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குழுக்களின் அங்கத்தினர்கள் சொந்த நிலமுடைய விவசாயிகள், விவசாயக் குடியானவர்கள் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். ஒவ்வொரு குழுவும் 12 அங்கத்தவர்களையும், 3 வருட ஆயுட்காலத்தினையும் கொண்டிருப்பதுடன். 400 ஏக்கர் நிலத்தினை நிர்வகிக்கும் சட்டபூர்வமான அதிகாரத்தினையும் கொண்டுள்ளது. 1958லிருந்து ஏறக்குறைய 3750 சாகுபடிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் நெல் விவசாயிகளுக்கு நன்மையளிக்கக்கூடிய செயற்றிட்டங்களான சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவற்றினைப் பொறுப்பேற்று நிறைவேற்றலாம். இச் சாகுபடிக் குழுக்கள் கிராம மட்டத்தில் விவசாயிகளை ஒன்று படுத்தும் ஓர் அமைப்பாக மட்டுமன்றி, விவசாய நடவடிக்கைகளை நிர்வகிக்கவும் மேற்பார்வை செய்யவும் விவசாயிகளை, கூடிய பொறுப்பான பிரசைகளாக மாற்றக்கூடியனவாகவும் வெளிப்படையில் தோற்றமளித்தன.

நெற்காணிச் சட்டமானது விவசாயக் குடியானவனுக்கு எதிர் பார்த்த வெற்றியினை அளிக்கவில்லை. பெருமளவு விவசாயக் குடியானவர், நிலச்சுவானுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவாற்றலோ அல்லது பொருளாதாரரீதியான பலமோ வாய்ந்தவர்களாகக் காணப்படவில்லை. இச்சட்டத்தின் வரையறைகள் பல குடியானவனைப் பாதுகாப்பதற்குச் சக்தியற்றவையாகவும் காணப்பட்டன. மேலும் சாகுபடிக் குழுக்கள்கூட நிலச்சுவானுலோ அல்லது மறைமுகமாக நிலச்சுவானுக்குச் சார்பானவர்களைக் கொண்டதொன்றுகவே அமைக்கப்பட்டுள்ளன.- இதனுல் சாகுபடிக் குழுக்கள் திருப்திகரமாகச் செயற்படாததுமட்டுமன்றிச் சிலசமயங்களில் நிலச்சுவானுக்குச் சார்பானவைகளாகவும் காணப்பட்டன. சுருங்கக்கூறின் நெற்காணிச் சட்டமானது தோல்வியடைந்துள்ளது என்பது மட்டுமன்றி இத்தகைய சட்டங்கள் விவசாயக் குடியானவனின் அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சக்தியற்றவை என்பதனையும் உணர்த்துவதாக உள்ளன.

### 1972 ஆம், 1975 ஆம் ஆண்டுக் காணிச் சீர்திருத்தச் சட்டங்கள்

1972ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி தேசிய அரசப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டமானது முற்றிலுமே எதிர்பாராததொன்றுகும். 1970ஆம் ஆண்டுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுமுன்னணி அரசாங்கமானது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணிச் சீர்திருத்தம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டத்திற்கு முக்கிய காரணியாக 1971இல் ஏப்பிரலில் நடந்த கிளர்ச்சியானது அமைந்திருந்தது. இக் கிளர்ச்சிக்குக் கிராமப் புற மக்களின் வறுமையும், பொருளாதார நெருக்கடிகளும், விரக்தி

இ - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையும் பொறுப்புவாய்ந்த காரணிகளாக அமைந்திருந்தன. இவை அடிப்படையில் விவசாய நிலப்பற்றுக்குறை, சாகுபடி நிலத்தில் சிறுபகுதி சனத்தொகைகொண்ட தனிஉரிமை ஆதிக்கம் ஆகியவற்றின் விளைவுகளாகும். எனவே, கிராமிய மக்களின் அதிருப்தி நிலையினை ஓரளவு நீக்கும் முகமாகவே காணிச் சீர்திருத்தத்தினை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இக் காணிச் சீர்திருத்தச் சட்டமானது நில உடைமைகளை நன்கு வரையறைசெய்து மேலதிகமான நிலத்தினை நஷ்டஈடு கொடுத்துப் பெற்று நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்துகொடுப்பதன் மூலம் நிலஉடைமையிலும் வருமானப்பங்கீட்டிலும் காணப்படுகின்ற சமமின்மையினைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இச் சட்டம் அதன் குறிக்கோள்கள் இரண்டு என வரையறை செய்துள்ளது.

அ. எவரும் உச்சவரம்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் காணிக்குச் சொந்தக்காரராக இருத்தல் ஆகாது என்பதனை உறுதிப்படுத்தல்.

ஆ. ஒருவருக்குச் சொந்தமாயிருக்கும் உச்சவரம்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் காணிகளைக் கையேற்றலும், அவற்றை உற்பத்திப் பெருக்கமும் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வகையிலும் பயன்படுத்தல்.

விவசாய நிலத்தினது உச்சவரம்பானது முழுவதும் நெற்காணியாக இருப்பின் 25 ஏக்கர் எனவும் நெற்காணியாக இல்லாவிடின் 50 ஏக்கர் எனவும் வரையறை செய்யப்பட்டது. இவ் 50 ஏக்கர்களில் நெற்காணியும் உள்ளடக்கி இருப்பின் அதன் முழு அளவும் 25 ஏக்கருக்கு மேலாக இருக்கக்கூடாது எனவும் வரையறை செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த உச்சவரம்பானது பௌத்த விகாரைகள், பொதுக் கம்பனிகள் ஆகியவற்றினது காணிகளை உள்ளடக்காது. இவ்உச்சவரம்பினைக் கணிக்கும்போது காணிச் சொந்தக்காரரின் இருப்பிடத்தைச் சுற்றியுள்ள ½ ஏக்கர் நிலம், காணிச் சொந்தக்காரரின் பணியாளர்கள் உள்ள குடிமனைகளைச் சுற்றியுள்ள ½ பங்கிற்கு மேற்படாத நிலம், குடும்ப இடுகாட்டிற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட நிலப்பரப்பு ஆகியன தவிர்க்கப்படும். இவ்வாறு கணிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேற்பட்ட காணியானது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உடைமையாக இருப்பதுடன் அத்தகைய காணியினை வைத்திருப்பவர்கள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் குத்தகை அடிப்படையில் வைத்திருப்பதாகவே கருதப்பட்டது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் இரண்டாவது முக்கிய அம்சமாக அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈட்டினை வழங்குவதாகும். கடந்த ஐந்தாண்டுகளில் அக்காணியில் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சராசரி ஆண்டு இலாபத்தில் 15 மடங்கிற்கு மேற்படாததாகவும், அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட அல்லது ஆணையாளரால் மதிப்பிடப்பட்ட காணியின் பெறுமதியிலும் எத்தொகை கூடியதோ அத்தொகையே நட்டஈட்டுத் தொகையாகக் கருதப்படுமெனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நெல்லைப் பொறுத்தவரை இது இலாபத்தின் பத்துமடங்காக இருக்கும். காணியைக் கையேற்பதற்கான நட்டஈடானது பணமாக அல்லது ஆண்டிற்கு 7 சதவீத வட்டி அடிப்படையில் 25 ஆண்டுப் பிணையாக வழங்கப்படுவதாக இருக்கும். சில குறிப்பிட்ட வரிகளைக் கொடுப்பனவு செய்வதற்கும் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய தொகைகட்கும் இப் பிணையினை ஒப்படைக்கக்கூடியதாக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட சில முதலீடுகட்கும் இவற்றைப் பணமாக வழங்கலாம். காணிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இச்சட்டத்தின்மூலம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு என ஒன்று உருவாக்கப்பட்டது. மேலதிகமான காணிகளைப் பொறுப்பேற்றல், அவற்றினைப் பகிர்ந்தளித்தல், நட்டஈடு வழங்குதல், நில உரிமைகளைப் பரிசோதித்தல், இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியனவே இதன் முக்கிய கடமைகளாகும்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் 1973ஆம் ஆண்டு 5,63,400 ஏக்கர் நிலம் கையேற்கப்பட்டது. இதில் 31·3 சதவீதமானது காடும், புல்நிலமும், பண்படுத்தப்படாத நிலமுமாகும். மேலும் பெருந்

### அட்டவணை 4. I

**காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 1973ஆம் ஆண்டில் கையேற்கப்பட்ட காணிகள்**

| நிலப்பாவனை வகை | நிலப்பரப்பு (ஏக்கர்களில்) | உடைமையாக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பின் சதவீதமாக |
|---|---|---|
| காடும் பத்தனைப் புல்நிலமும் பண்படுத்தப் படாத நிலமும் | 176,505 | 31·3 |
| தேயிலை | 139,354 | 24·7 |
| தென்னை | 112,523 | 20·0 |
| றப்பர் | 82,563 | 14·7 |
| நெல் | 18,407 | 3·3 |
| கலப்புப் பயிர்கள் | 17,055 | 3·0 |
| ஏனையவை | 16,993 | 3·0 |
| மொத்தம் | 563,400 | 100 |

மூலம்: நில ஆணைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டப் பயிர்களான தேயிலை, றப்பர், தென்னை ஆகியன பயிரிடப்பட்ட நிலங்கள் மொத்தப் பொறுப்பேற்ற நிலத்தில் 59·4 சதவீதமாகும். 1973இல் காணிச் சீர்திருத்த ஆணையாளர்களினால் கையேற்கப்பட்ட நிலங்களில் மிகக்கூடிய பகுதி பெருந்தோட்ட விவசாய நிலமாகவும், அதற்கு அடுத்ததாக சாகுபடிக்குள்ளாக்கப்படாத நிலமாகவுமே காணப்பட்டது. ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட நெற்சாகுபடி நிலம் 18,407 ஏக்கராக அல்லது மொத்தப் பொறுப்பேற்கப்பட்ட நிலத்தில் 3·3 சதவீதமாக இருந்தது. இக் காணிச் சீர்திருத்தச் சட்டமானது நெற்காணிகளைப் பொறுத்த மட்டில் பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை.

1973இல் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் பல்வேறு வகையாகப் பங்கீடு செய்யப்பட்டன. இவற்றுள் 28·1 சதவீதமான காணிகள் மாவட்ட அடிப்படையி

### அட்டவணை 4. II

**1973ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்ட காணிகளில் நிலஉடைமைப் பங்கீடு**

| முகாமை அடிப்படையில் | பரப்பு (ஏக்கர்களில்) | உடைமையாக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பின் சதவீதமாக |
|---|---|---|
| பகுதிக் காணிச் சீர்திருத்த அதிகாரசபைகள் | 46,787 | 8·3 |
| நில ஆணையாளர் | 82,000 | 14·6 |
| மலைநாட்டுக் கூட்டுறவுத் தோட்ட அபிவிருத்திச் சபை (உசவசகம) | 75,000 | 13·3 |
| பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் | 35,326 | 6·3 |
| கூட்டுறவு வசிப்பிடங்கள் | 48,484 | 8·6 |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 35,547 | 6·0 |
| தனிப்பட்ட கிராம மக்கள் | 19,558 | 3·5 |
| மாவட்ட அடிப்படையிலான கூட்டுறவுச் சங்கங்கள் | 158,584 | 28·1 |
| ஏனையவை | 62,114 | 11·3 |
| மொத்தம் | 563,400 | 100 |

மூலம்: நில ஆணைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உசவசகமவிற்கு 13·3 சதவீதமான காணிகளும், நில ஆணையாளரிடம் 14·6 சதவீதமான காணிகளும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் 6 சதவீதமான காணிகளும் ஒப்படைக்கப்பட்டன. பொறுப்பேற்கப்பட்ட காணிகளில் 19,558 ஏக்கர் நிலம் அல்லது 3·5 சதவீதமான காணிகள் மட்டுமே தனிப்பட்ட கிராம மக்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டன. நில ஆணையாளரால் பொறுப்பேற்கப்பட்ட காணிகளில் பெரும்பகுதி பெருந்தோட்டக் காணிகளாகவும் பயன்படுத்தப்படாத நிலமுமாக இருந்தமையினாலுமே இவற்றினை உடனடியாகக் கிராம மக்களுக்குப் பங்கீடு செய்ய முடியாதிருந்தது. நில ஆணையாளரினால் கையேற்கப்பட்ட நெற்காணிகள் மட்டுமே கிராமிய மக்களுக்குப் பங்கீடு செய்யக்கூடியதாக இருந்தன. கிராமிய விவசாயிகளின் சாகுபடி நிலத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்ற நிவாரணமாக இச்சட்டம் அமைந்திருக்கவில்லை.

1975ஆம் ஆண்டு ஐப்பசி 17ஆம் திகதி இயற்றப்பட்ட காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டத்தின்படி பகிரங்க கம்பனிகட்குச் சொந்தமாயிருக்கும் அல்லது அதன் உடைமையிலிருக்கும் காணி ஒவ்வொன்றும் நில ஆணைக்குழுவின் உடைமையாவதற்கு வழி செய்யப்பட்டது. இச் சட்டத்தின்படி 4,17,957 ஏக்கர் நிலமானது நில ஆணைக்குழுவின் உடைமையாக்கப்பட்டது. இலங்கையிலுள்ள பெருந்தோட்டக் காணிகளில் பல, ரூபாய்க் கம்பனிகள் ஸ்ரேளிங் கம்பனிகள் ஆகிய இருவகைக் கம்பனிகளது உடைமையாகவே யிருந்தன. 1975ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்ட காணிகளில் 2,22,813 ஏக்கர் நிலம் ரூபாய்க் கம்பனிகளினதும், 195,144 ஏக்கர் நிலம் ஸ்ரேளிங் கம்பனிகளினதும் உடைமையாகும். பகிரங்கக் கம்பனிகளினது உடைமையாக இருந்த பெருமளவு காணிகள் தேயிலைத் தோட்டங்களாகவே இருந்தன. இதனாலேயே இச் சட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட 239,592 ஏக்கர் நிலமானது தேயிலைப் பெருந்தோட்ட நிலங்களாகக் காணப்பட்டது.

இச்சட்டத்தின்படி பொறுப்பேற்கப்பட்ட றப்பர்க் காணிகள் 94,835 ஏக்கராகும். இவற்றில் ரூபாய்க் கம்பனிகளின் உடைமை 71,431 ஏக்கரும் ஸ்ரேளிங் கம்பனிகளினது உடைமை 23,404 ஏக்கருமாகும். தென்னந்தோட்டங்களைப் பொறுத்தமட்டில் 6,406 ஏக்கர் நிலம் மட்டுமே நில ஆணையாளரின் உடைமையாக்கப்பட்டுள்ளது. எனவே 1975ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டமானது முக்கியமாகத் தேயிலைத் தோட்டங்களை நில ஆணையாளரின் உடைமையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே அமைந்துள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 4. III

**1975ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டத்தின் கீழ் கூட்டுக் கம்பனிகளின் உடைமை அடிப்படையிலும் பயன்படுத்தப்பட்ட காணி அடிப்படையிலும் உடைமையாக்கப்பட்ட காணிகளின் அளவு**

| நிலப் பாவனை | ரூபாய்க் கம்பனி | ஸ்ரேளிங் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| தேயிலை | 107,118 | 130,474 | 239,592 |
| றப்பர் | 71,431 | 23,404 | 94,835 |
| தென்னை | 2,711 | 3,695 | 6,406 |
| ஏனையவை | 41,553 | 37,571 | 79,124 |
| மொத்தம் | 222,813 | 195,144 | 419,957 |

மூலம்: நில ஆணைக்குழு.

1972ஆம், 1975ஆம் ஆண்டுக் காணிச்சீர்திருத்தச் சட்டங்களின் விளைவாக மொத்தம் 981,368 ஏக்கர் நிலமானது நில ஆணையாளரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதிக் காணிகள் இரு அரச நிறுவனங்களான ஜனவாச, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஜனவாசவிடம் 23·85 சதவீதமான நிலமும், 20·02 சதவீதமான நிலம் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் உடைமையாகும். 1977இல் உசவசம ஒழிக்கப்பட்டு அதனால் நிர்வகிக்கப்பட்ட 67,548 ஏக்கர் நிலமும் ஜனவாச, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்குப் பங்கீடு செய்யப்பட்டது. மொத்தமாகக் கிராமிய மக்களுக்கு 55,856 ஏக்கர் நிலம் மட்டுமே பங்கீடு செய்யப்பட்டுள்ளது. நில ஆணையாளரால் கையேற்கப்பட்ட நிலத்தில் ஒரு பகுதி தேயிலை, தெங்கு, றப்பர் ஆராய்ச்சிச் சபை, தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை, இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம், கால்நடை அபிவிருத்திச் சபை போன்ற அரசநிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. காணிச் சீர்திருத்தத்தின் மூலம் பொறுப்பேற்கப்பட்ட மொத்த நிலத்தில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டவை அரசாங்க நிறுவனங்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் உடைமையாக்கப்பட்டிருக்கின்றன. தனியார் உடைமையாக இருந்த நிலமானது அரசாங்கத்தினதும், சமூகத்தினதும் உடைமையாக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் சமதர்மத்தன்மைவாய்ந்த ஒரு நடவடிக்கையாகவும் இது அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 4. IV

### 1972ஆம், 1975ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டங்களினால் கையேற்கப்பட்ட காணிகளின் உடைமைப் பங்கீடு

| முகாமை அடிப்படையில் | பரப்பு (ஏக்கர்களில்) | உடைமையாக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பின் சதவீதமாக |
|---|---|---|
| ஜனவாச | 234,073 | 23·85 |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 196,531 | 20·02 |
| தேர்தல் தொகுதிகளில் அமைந்த கூட்டுறவுச் சங்கங்கள் | 184,677 | 18·82 |
| உசவசம | 67,548 | 6·88 |
| நில ஆணையாளர் | 64,517 | 6·57 |
| கூட்டுறவு வசிப்பிடங்கள் | 55,856 | 5·69 |
| தனிப்பட்ட கிராம மக்கள் | 52,215 | 5·32 |
| ஏனையவை | 125,951 | 12·85 |
| | 981,368 | 100 |

மூலம்: நில ஆணைக்குழு.

### ஜனவாச

இலங்கையில் விவசாயநிலத்தில் நிர்வாகம், முகாமையியல் ஆகியவற்றினைப் பொறுத்தமட்டில் 1976இல் இயற்றப்பட்ட ஜனவாச சட்டமானது திருப்புமுனையாக மட்டுமன்றிப் புதியதொரு பரிசோதனையாகவும் அமைந்திருந்தது. 1972ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 5ஆம் பிரிவின்படி ஜனவாசச் சங்கங்களாகப் பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் இச்சட்டத்தின்படி ஜனவாசவாகப் பதிவுசெய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது. ஜனவாச என்பது 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களினாலும், பெண்களினாலும் முன்பு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டங்களின்படியும் இன்று ஜனவாசச் சட்டத்தின்படியும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைக் குறிப்பதாகும். ஜனவாசவின் நோக்கங்கள் எவை என ஜனவாசச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

(A) i. விவசாயநிலத்தில் கூட்டுமுகாமையியலை ஏற்படுத்துவதுடன் மிருக வளர்ப்பு, விவசாயம்சார்ந்த கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றில் கூட்டு விருத்தியினையும் ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. விவசாயநிலத்தில் ஆகக்கூடிய பயன்பாடு, ஆகக்கூடிய உற்பத்தித்திறன் ஆகியவற்றினை ஆகக்கூடிய வேலைவாய்ப்போடு ஏற்படுத்துவதுடன், ஊழியத்தினது தராதியானதும் தொகைரீதியானதுமான வெளியீட்டு முயற்சிக்கேற்ற விகிதாசாரத்தில் இலாபத்தினைப் பங்கீடுசெய்தல்.

iii. அங்கத்தவரிடையே சமூக கலாசார விருத்தியினை ஏற்படுத்தல்.

iv. அயல் பிரதேச விவசாய நிலங்களிலுள்ள நிலச் சொந்தக்காரர், சாகுபடிசெய்வோர் ஆகியோரிடையே கூட்டு விவசாயமுறையினைத் துரிதமாக ஊக்கப்படுத்தல்.

(B) இதன் அங்கத்தினர்களுக்கு விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள், மற்றும் ஏனைய சேவைகள் போன்றவற்றினை அளித்தல்.

இக் குறிக்கோள்களை அடைவதற்கு ஜனவாசவிற்குத் தேவைப்படும் நிலத்தினை நிலச் சீர்திருத்த ஆணையாளர், ஏனைய அரச நிறுவனங்கள் போன்றவர்களிடமிருந்தோ அல்லது ஏனைய வழிமுறை மூலமோ பெறுவதற்கு ஜனவாசச் சட்டம் அங்கீகாரமளித்துள்ளது. ஜனவாசவிலுள்ள அங்கத்தினர்கள் இதன் நிலத்தினைத் தமது சொந்த நன்மைக்காகப் பயன்படுத்தமுடியாது. ஆனாலும் 30 பேர்ச்சுக்கு மேற்படாத நிலத்தினை மட்டும் பண்ணையில் குடியிருப்பு வசதிக்காக இதன் அங்கத்தினர்கள் பயன்படுத்தமுடியும்.

ஜனவாசாக்களைக் கட்டுப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் ஆகியன ஜனவாச ஆணையாளருடையவை என ஜனவாசச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இவ்ஆணைக்குழு 7 அங்கத்தினரை உள்ளடக்கியதாகும். இதில் இருவர் விவசாயக் காணி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அங்கத்தினர்களாவர். மூன்று அங்கத்தினர்கள் 190 ஜனவாசாக்களை உள்ளடக்கிய ஜனவாச சமாஜத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். ஜனவாச ஆணைக்குழு அசையும் ஆதனங்களைக் குத்தகைக்கு அல்லது உடைமையாக எடுப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் உரிமை படைத்ததாகும். மேலும் நிலக் குடியுரிமைமுறை விவசாய சீர்திருத்தம் பற்றிய எவ்விடயங்களிலும் அளவீடுகளையும், ஆராய்ச்சிகளையும் செய்வதற்கு இதனால் முடியும்.

1973ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 19 ஜனவாசாக்கள் மட்டுமே உருவாக்கப்பட்டிருந்தன. 1977இல் ஜனவரியில் 15 நிர்வாக மாவட்டங்களில் 190 ஜனவாசாக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட நிலத்தில் ஏறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைய 55,000 ஏக்கர் இந்த முகாமை அமைப்பினைக் கொண்டதாக இருப்பதுடன் 15,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் இதில் அங்கம் வகிக்கிறார்கள். மேலும் உசவசகமவினால் நிர்வகிக்கப்பட்ட நிலத்தின் ஒருபகுதியும் இன்று இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மிகப்பெரும் நிலமுகாமை நிறுவனமாக மிகக் குறுகிய காலத்திற்குள் இது வளர்ச்சி அடைந்துள்ளது.

ஜனவாச அமைப்புமுறையானது பெருமளவிற்குக் கூட்டுறவு விவசாயப்பண்ணை முறையினை ஒத்ததாக இருக்கிறது. எனவேதான் இது விசேடத்துவம் வாய்ந்த கூட்டுறவுச் சங்கமெனவும் அழைக்கப் படுகிறது. இதன் நிர்வாகம் பெருமளவிற்கு அங்கத்தவரின் கையில் ஒப்படைக்கப்படுவதால் மரபுரீதியான பெருந்தோட்ட முகாமையி லிருந்து வேறுபட்டதாகவுள்ளது. முகாமையாளரும் மேற்பார்வை யாளரும் பெருமளவு ஊழியத்தின் பௌதீக வேலையினை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதுபோன்ற முறையாக இது அமையவில்லை. ஜனவாச முறையின்கீழ் அதிகாரம் அங்கத்தவரிடையே கூட்டாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவே திட்டமிடல், விற்பனை, ஒழுங்குநடவடிக்கைகள் போன்றன வற்றினை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருக்கும். ஆரம்ப கட்டங்களில் ஜனவாசாக்கள் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் மேற்பார்வையின்கீழ் இயங்கும். ஏனென்றால், ஆரம்ப கட்டங்களில் மேற்பார்வையின்றி அங்கத்தவர்களிடம் சுதந்திரமாக ஒப்படைத்தல் ஆபத்தானதாக இருக்கும் எனக் கருதப்பட்டது.

இவ் ஜனவாசாக்கள் பெருந்தோட்ட விவசாயத்திற்குள்ளேயே உருவாக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்ட விவசாயமானது நீண்ட காலமாக நன்கு நிர்வகிக்கப்பட்டதும், ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்ட ஊழியத்தினைக்கொண்ட ஒரு விவசாய முறையாக இருப்ப தினாலும் ஜனவாசாக்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது இலகுவானதாகும். பெருந்தோட்ட உற்பத்திகள் உலக சந்தைவிலை யினை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திமுறையாக இருப்பதால் உலகசந்தையில் ஏற்படுகின்ற விலை வீழ்ச்சியானது இதன் வளர்ச்சி யினையும் பெரிதும் பாதிப்பதாக இருக்கும். அத்தகைய ஒரு நிலையில் அரசாங்க உதவிப் பணத்தினை நம்பி இயங்கிக்கொண்டிருக்கும் சில அரசாங்கக் கூட்டுத்தாபனங்களைப்போன்று ஜனவாசாக்களும் மாற்ற மடைந்துவிடும். கிராமியப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஜனவாசாக்கள் உருவாக்கப்பட்டிருப்பின் இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். ஆனாலும் இதில் கிடைக்கின்ற அனுபவங்கள் எதிர்காலத்தில் கிராமியப் பொரு ளாதார அமைப்பிற்குள்ளும் இத்தகைய ஜனவாசாக்களை உருவாக் குவதற்கு உதவிபுரிவனவாக அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணிச் சீர்திருத்தம் பற்றிய மதிப்பீடு**

காணிச் சீர்திருத்தத்தினை ஒரு நாட்டு அரசாங்கம் நடைமுறைப் படுத்துவதின் முக்கிய நோக்கம் நிலமானிய முறையினை ஒழித்துக் குடியானவர்களுக்கு விமோசனம் அளிப்பதேயாகும். எனவே நில உடைமைக்கு விதிக்கப்படும் உச்சவரம்பினைப் பொறுத்தே காணிச் சீர்திருத்தமானது நிலமானிய அமைப்பினை எவ்வளவிற்குப் பாதிக்க முடியும் என்ற அம்சம் தங்கியுள்ளது. இலங்கையில் நெற்காணியினது சிக்கன உடைமையானது 3 ஏக்கர் எனவும், பெருந்தோட்டமானது 20 ஏக்கருக்கு மேற்பட்ட காணிப்பரப்பெனவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் நெற் காணிக்கான உச்சவரம்பு 25 ஏக்கரென்றும், ஏனைய காணிகளுக் கான உச்சவரம்பு 50 ஏக்கரென்றும் வரையறை செய்யப்பட்டிருக் கிறது. இலங்கையில் 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் பெரு மளவிற்குப் பெருந்தோட்ட விவசாயத்துறையிலே காணப்படுகின் றன. அடிப்படையில் இக்காணிச் சீர்திருத்தச் சட்டமானது கிராமியப் பொருளாதாரத்தில் காணப்படும் நிலமானிய முறையினை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்டது என்பதனைவிட முதலாளித்துவ முறையிலமைந்த பெருந்தோட்ட விவசாய நிலங்களைக் கையேற்ப தற்கு அரசாங்கத்தினால் இயற்றப்பட்டதொன்றாகவே அமைந் துள்ளது.

இக் காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் உச்சவரம்பானது மிகக் கூடிய பரப்பளவாக விதிக்கப்பட்டமையினாலேயே நில ஆணைக்குழுவி னால் பொறுப்பேற்கப்பட்ட மேலதிகக் காணிகளின் அளவு மிகக் குறைவானதாகும். மொத்தத் தேயிலை நிலத்தில் 63·1 சதவீதமான காணிகளும், மொத்த றப்பர் நிலத்தில் 31·5 சதவீதமான காணி களும், மொத்தத் தென்னை பயிரிடு நிலத்தில் 10·3 சதவீதமான காணிகளும் மேலதிக காணிகளாக அரசாங்கத்தினால் பொறுப்பேற் கப்பட்டுள்ளன.

இலங்கையில் மிகக்கூடிய சாகுபடிப் பயிராகிய நெல்லினது 1,719,000 ஏக்கர் நிலத்தில் 18,407 ஏக்கர் நிலம் அல்லது 1·1 சத வீதமான நிலமே மேலதிக நிலமாகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளதி லிருந்து எவ்வளவு தூரத்திற்குக் கிராமியப் பொருளாதாரத்தின் எல்லையினைக்கூட இச்சட்டம் பாதிக்கவில்லை என்பது புலனாகின்றது. இலங்கையின் மொத்தச் சாகுபடி நிலப்பரப்பாகிய 4,947,690 ஏக்கர் நிலத்தில் மொத்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட மேலதிகநிலம் 19·8 சதவீதமாக மட்டுமேயாகும். காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட மிகக்கூடிய நிலப்பரப்பு பெருந் தோட்ட விவசாயத்துறையில் இருந்து பெறப்பட்டவையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4. V

**1975ஆம் ஆண்டு முடிவில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்ட மேலதிக காணிகளின் அளவு**

| நிலப்பாவனை வகை | மொத்த நிலப்பரப்பு (ஏக்கர்களில்) | ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்ட காணிகளின் அளவு (ஏக்கர்களில்) | மொத்த நிலப் பரப்பின் சதவீதமாக |
|---|---|---|---|
| தேயிலை | 597,691 | 376,946 | 63·1 |
| றப்பர் | 562,494 | 177,398 | 31·5 |
| தென்னை | 1,152,428 | 118,929 | 10·3 |
| நெல் | 1,719,000 | 18,407 | 1·1 |
| நான்கு பயிர்களினதும் மொத்தச் சாகுபடி நிலம் | 4,031,613 | 691,680 | 17·2 |
| முழு இலங்கையினதும் மொத்தச் சாகுபடி நிலம் | 4,947,690 | 981,368 | 19·8 |

மூலம்: நில ஆணைக்குழு,
மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

இதற்கு அடிப்படைக் காரணம் நிலத்தினது உச்சவரம்பு உயர்வாக விதிக்கப்பட்டமையாகும்.

காணிச் சீர்திருத்தச் சட்டமானது விவசாயக் குடியானவனுக்கு நிலஉடைமையினை அளிப்பதனைவிட கூடியளவிற்கு நிலச்சுவாமியின் நிலஉடைமையினை உத்தரவாதப்படுத்தும் ஒன்ருகவே காணப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் நெற்காணியில் 25 ஏக்கர் நிலத்திலும் ஏனைய காணிகளில் 50 ஏக்கர் நிலத்திலும் சட்டரீதியாகத் தனியுரிமையினை நிலைநாட்டுவதற்கு இது வழிவகுக்கின்றது. மேலும் 10 ஏக்கர் நெற்காணியினை வைத்திருப்பவன் அதனை 25 ஏக்கராகவும், 20 ஏக்கர் ஏனைய காணிகளை வைத்திருப்பவன் அதனை 50 ஏக்கராகவும் அதிகரிப்பதற்குக்கூடச் சட்டரீதியான ஊக்கத்தினை இது அளிக்கின்றது. எனவே, இச் சட்டமானது நிலத்தின் தனியுரிமையினைக் கட்டுப்படுத்துவதற்குப் பதில் வளர்க்கக்கூடிய தொன்ருக உள்ளது.

காணிச் சீர்திருத்தமானது பெருந்தோட்ட விவசாயத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருப்பதனால் பெருந்தோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்திலுள்ள தொழிலாளர்கள் நல்ல வேலைநேர நிபந்தனைகள், கூடிய கூலி போன்றவற்றினைப் பெறுவதற்கு இது வழிவகுத்துள்ளது. கிராமிய விவசாயிகளைப் பொறுத்தமட்டில் அவர்களினது காணிப் பசியினைத் தீர்ப்பதற்கு ஏற்ற பரிகாரமாக இது அமையவில்லை. ஏனெனில், மேலதிக நிலமாகப் பொறுப்பேற்கப்பட்ட நெற்காணிகள் 18,407 ஏக்கர் நிலமாக இருந்தமையினால் மிகச் சிறிய தொகை விவசாயக் குடியானவர்களே இதன்மூலம் நன்மையடைய முடியும். ஏறக்குறைய 400,000 ஏக்கர் நிலத்தில் '' அந்த '' முறையில் சாகுபடியினை மேற்கொள்ளும் 300,000 விவசாயக் குடியானவனின் பிரச்சினைகளுக்கு இது ஒரு ஏற்ற தீர்வாகக் கருதமுடியாது.

இலங்கையின் கிராமிய விவசாயத்தில் பல விவசாயிகள் சிக்கனமற்ற நிலஉடைமைகளைக் கொண்டிருப்பதும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக அமைந்துள்ளது. ஒரு ஏக்கருக்குக் குறைவான நிலஉடைமையினைப் பல விவசாயிகள் கொண்டிருப்பதனால் இதில் நவீன உற்பத்தி முறைகளை இலகுவாகப் பிரயோகிக்கமுடியாமல் இருப்பதுடன் விவசாயிகளுக்கு இதிலிருந்து பெறும் வருமானமும் வருடத்தில் 6 மாதங்கள் சீவிப்பதற்குக்கூடப் போதாமல் இருக்கின்றது. கிராமிய விவசாயத்திலுள்ள பெரும் விவசாய நிலப்பரப்புக்களைப் பிரித்து விவசாயிகட்குப் பங்கீடு செய்தல் பொருளாதார ரீதியாகவும் இன்றியமையாதது போன்று சிக்கனமற்ற நிலத்துண்டுகளை ஒன்றுசேர்த்து சிக்கன நிலஉடைமையாக்குதலும் இன்றியமையாததொன்றாகும். நிலச் சீர்திருத்தச்சட்டம் பெரும் நிலப்பரப்புகளைப் பற்றிய விதிகளைக் கொண்டிருக்கின்றதேயொழிய சிறிய நிலத்துண்டுகளை ஒன்றுசேர்த்தல்பற்றி எதுவும் கூறவில்லை.

மேலதிகநிலத்திற்கு நட்டஈடு வழங்குதல்பற்றிய இச்சட்டத்தின் விதிகள் பல நிர்வாக ஊழல்களை ஏற்படுத்துவதற்கும் வழி வகுக்கக் கூடியதாகும். மேலதிகக் காணிகளின் பெறுமதிகள் இருவகையாக மதிப்பீடு செய்யப்படுமெனச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. முதலாவதாகக் காணியினது கடந்தகால உற்பத்தித்திறன் அல்லது இலாபத்தினை அடிப்படையாகக்கொண்டும், அடுத்ததாக உள்நாட்டு இறைவரியாளருக்கு அறிவிக்கப்பட்ட அல்லது ஆணையாளரால் மதிப்பிடப்பட்ட பெறுமதி என்ற அடிப்படையிலும் கணிப்பீடு அமைந்திருக்கும். ஒருவனிடமுள்ள எல்லா நிலமும் ஒரேயளவு செழிப்பினையோ அல்லது உற்பத்தித்திறனையோ கொண்டதாக இருக்கமுடியாது. எனவே மிகக்கூடிய செழிப்புள்ள நிலத்தில் கிடைக்கும் சராசரி இலாபத்தினை, காணியின் பெறுமதியினைக் கணிக்கும்போது பயன்படுத்தலாம். மேலும் தனது உச்சவரம்புக்குட்பட்ட நிலமாக மிகக் கூடிய செழிப்பு நிலத்தினை வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செழிப்புக் குறைந்த நிலத்தினை நிலஆணைக் குழுவிடம் ஒப்படைக்கமுடியும். ஆணையாளரினால் நிலத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும்போது தனது தனிப்பட்ட அல்லது அரசியற் செல்வாக்குகளாலோ அல்லது வேறு வழிமுறைகளாலோ மிகை மதிப்பீடு செய்யப்படுவதற்கும் வழி வகுக்கின்றது. மேலும் இவ்வாறு கணிக்கப்பட்ட நட்டஈட்டினை 25 வருடகால அவகாசத்தில் 7% வட்டியில் நிலச்சொந்தக்காரருக்கு வழங்கும்போது நட்டஈட்டுத் தொகை இரண்டு மடங்கிற்கு மேலாகவும் அதிகரிக்கமுடியும். இது அரசாங்கத்தின் நிதிச்சுமையினை அதிகரிக்குமொன்றாகவும் அமைந்திருக்கும்.

காணிச் சீர்திருத்தமானது ஒரு நாட்டின் நிலமானிய முறையினை ஒழிக்கின்றது மட்டுமன்றிப் புதியதொரு பொருளாதார சமூகத்தினையும் முக்கியமாக உருவாக்குகின்றது எனலாம். இலங்கையில் இக் காணிச் சீர்திருத்தமானது நிலமானிய முறையினை ஒழிப்பதற்கு மட்டுமன்றி சொத்துரிமையினை ஒழிப்பதற்கும் கூட சக்தியற்றதொன்றாகும். நிலச் சொந்தக்காரனின் காணியினைக் கையேற்று நட்டஈட்டினை வழங்கும்போது மொத்தமாக நாட்டின் சொத்துரிமையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது. இதன்மூலம் நிலச்சுவான் முதலாளியாக்கப்படுவானே ஒழிய சொத்துரிமையில் சிறுபான்மையினர் கொண்ட தனியுரிமையானது எந்தவகையிலும் மாற்றமடையவில்லை. இக் காணிச் சீர்திருத்தச் சட்டமானது ஒரு வகையில் நிலச்சுவான் வகுப்பினரை முதலாளிவர்க்கமாக மாற்றியிருக்கின்றதென்று கூறுவதும் பொருத்தமானதாகும்.

தீவிரமான ஒரு காணிச் சீர்திருத்தத்தினை இலங்கை போன்ற பொருளாதார சமூக நிலைகளில் பின்தங்கியுள்ள நாட்டில் ஒரே நேரத்தில் வெற்றிகரமாக ஏற்படுத்திவிடமுடியாது. ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட காணிச்சீர்திருத்தமானது எதிர்காலத்தில் சமூகத்தில் பெரும்பகுதியினர் நன்மையடையக்கூடிய விதத்தில் பரந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுவதற்கு நல்லதொரு முன் சூழ்நிலையாக இருக்கும் என்ற அடிப்படையில் மட்டுமே இதற்கு முக்கியத்துவத்தினைக் கொடுக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 5

# கைத்தொழிலாக்கம்

இன்று நாடுகளின் பொருளாதார நவீனமயமானது கைத்தொழிலாக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதொன்ருகக் காணப்படுகின்றது. கைத்தொழிலாக்கம் என்னும்போது ஒருநாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்தியும், மொத்த ஊழியப்படையில் கைத்தொழில் ஊழியமும் கொண்டுள்ள பங்கானது அதிகரித்துச் செல்லுகின்ற நிலையினையே குறிக்கிறது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கைத்தொழிலாக்கமானது தேசிய பொருளாதாரத்தில் விவசாயத்துறை கொண்டுள்ள முக்கியத்துவத்தினைக் குறைப்பதாக மட்டும் அமையமாட்டாது. அத்துடன் கூடிய வருமானம், கூடிய வேலைவாய்ப்பு, நகராக்கம், விவசாய நவீனமயம் போன்றவற்றினையும் கைத்தொழிலாக்கத்தின் மூலம் அடைவதாக இருக்கவேண்டும். இதனுலேயே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அரசியல் பொருளாதார சமூக வளர்ச்சியினையும், நவீனத்துவத்தினையும் ஏற்படுத்துவதற்குக் கைத்தொழிலாக்கம் அவசியம் எனக் கருதப்படுகின்றது.

**கைத்தொழிலாக்கத்தின் அவசியம்**

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கைத்தொழிலாக்கத்தினை ஏற்படுத்துவதற்குப் பொருளாதார ரீதியான காரணிகள் மட்டுமன்றி மனுேவியல் ரீதியான காரணிகள்கூடப் பொறுப்பாக இருக்கின்றன. நீண்டகாலமாகச் சுயநலன் கருதி மேற்கத்தேய பொருளாதார நிபுணர்களினுல் விளக்கப்பட்டுவந்த சர்வதேச சிறக்குமியல்பில் அல்லது ஒப்பீட்டுச் செலவுத் தத்துவத்தில் இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் நம்பிக்கை இழந்துவிட்டன. இக்கோட்பாடானது வளர்ச்சியடைந்த மேற்கத்தேய வல்லரசுகள் கைத்தொழிற்பொருட்களைச் சிறப்பாக உற்பத்திசெய்யும் நாடுகளாக இருக்கவேண்டும் என்றும், அதேநேரத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அந்நாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் மூலப் பொருட்களையும் சிறப்பாக உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளாகச் செயற்படவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது. இவ்வாறு ஒவ்வொரு நாடும் தம் சமூக பொருளாதார சூழ்நிலைக்கேற்ப ஒருசில பொருட்களைச் சிறப்பாக உற்பத்தி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதன் மூலம் உற்பத்திச் செலவையும் குறைந்தமட்டத்தில் வைத்திருக்க முடியும் என விளக்குகின்றது. இதனுல் உலகநாடுகள் அனைத்தும் மொத்தமாக நன்மையினை அடையமுடியும் என்பதே இக் கோட்பாட்டாளர்களது வாதமாகும்.

அனுபவரீதியாக நோக்கும்போது துரிதமான பொருளாதார சமூகவளர்ச்சிகள், நவீனமயம், தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகிய அனைத்தும் கைத்தொழில் நாடுகளில் ஏற்பட்டுள்ளதனையே அவதானிக்கமுடிகிறது. அதேநேரத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இம்மாற்றங்கள் குறைவாக ஏற்பட்டிருப்பதுடன், பொருளாதார ரீதியான பிரச்சினைகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன. எனவேதான் மூலப்பொருட்களையும் உணவுப்பொருட்களையும் ஏற்றுமதிசெய்து கைத்தொழிற் பொருட்களை இறக்குமதிசெய்து மேற்கு நாடுகளின் காலனித்துவ சந்தைகளாகத் தொடர்ந்து இருப்பதில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இன்று நம்பிக்கை இழந்து விட்டன. எனவே, கைத்தொழிலாக்கத்தின்மூலம் மட்டுமே பொருளாதார சுபீட்சத்தினை மட்டுமன்றி, வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் இடையிலான அகன்று செல்லும் இடைவெளியினையும் குறைத்தல் சாத்தியமானது என்பதில் இந்நாடுகள் நம்பிக்கைவைத்துள்ளன.

இன்று இலங்கைபோன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் மிகமுக்கிய பிரச்சினையாக வேலையின்மையானது காணப்படுகின்றது. இலங்கையில் பெருமளவு ஊழியப்படைக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் துறையாக விவசாயத்துறையானது காணப்பட்டபோதும் அதிகரிக்கும் சனத்தொகைக்கு இத் துறையில் தொடர்ந்து பெருமளவு வேலைவாய்ப்பினை வழங்கமுடியாதுள்ளது. எந்தநாட்டிலும் விவசாயத்துறையினுல் வழங்கப்படும் வேலைவாய்ப்பி னளவு வரையறுக்கப்பட்டதாகும். ஏனெனில், சனத்தொகை அதிகரிக்கும் அளவிற்கு விவசாய நிலப்பரப்பினளவினை அதிகரிக்கவோ அன்றிப் புதிதாக உற்பத்திசெய்யவோ முடியாது. மேலும் விவசாயத்துறையினுல் உயர்கல்விகற்ற அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஊழியத்திற்குப் பெருமளவு வேலைவாய்ப்பினை வழங்குதல் சாத்தியமற்றதாகும். கைத்தொழில் துறையினுல் பயிற்றப்படாத ஊழியத்திலிருந்து உயர்கல்வி கற்ற அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற பலவகையான ஊழியத்திற்கும் வேலைவாய்ப்பினை வழங்க முடியும். எனவே கைத்தொழிலாக்கத்தினை ஏற்படுத்துவதன்மூலமே வேலையற்று விரக்திமனப்பான்மைக்குள்ளாகித் தவருன பாதையில் சென்று பயங்கரவாதிகளாக மாறும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கமுடியுமெனஅபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால் நம்பப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி அடைந்த நாடுகளின் தலா வருமானத்துடன் அபி விருத்தி அடைந்துவரும் நாடுகளின் தலா வருமானத்தினை ஒப்பிடும் போது அது மிகக் குறைவாக இருப்பதுமட்டுமன்றி, பெருமளவு மக்கள் தமது அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையிலுமிருக்கின்றனர்கள். இந்நிலைக்குப் பெருமளவு சனத்தொகை, உற்பத்தித்திறன் குறைந்த விவசாயத்துறையில் தங்கி யிருப்பதே அடிப்படையான காரணமாகும். கைத்தொழிலாக்க மானது இந்நாடுகளில் தொழில்நுட்பவிருத்தி, பேரளவு உற்பத்தி, உற்பத்தித்திறன் அதிகரிப்பு ஆகியவற்றினை ஏற்படுத்துவதன்மூலம் வருமானத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தமுடியும். அத்துடன் விவ சாயத்துறையுடன் பிணைக்கப்பட்டுள்ள மேலதிக ஊழியமானது கைத்தொழில் துறைக்கு மாற்றப்படுவதன்மூலம் விவசாயத்துறையில் தங்கியுள்ள மக்களது வருமானத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவ தற்கு இது வழிவகுப்பதாக இருக்கும்.

ஒரு நாட்டினது பொருளாதார விருத்தியானது வருமானஉயர்வு வேலை வாய்ப்புக்களின் அதிகரிப்பு ஆகியனவற்றுடன் மட்டும் தொடர்புபட்டதன்று. நகரங்களின் வளர்ச்சி, சமூகரீதியான நவீன மயம் ஆகியவற்றுடனும் தொடர்புபட்டதொன்றாகும். கைத்தொழில் வளர்ச்சியானது போக்குவரத்து, பொதுமராமத்து சேவைகளின் வளர்ச்சி, வர்த்தக வளர்ச்சி ஆகியவற்றினை ஏற்படுத்துவதால் நகரங்கள் வளர்ச்சி அடைவதற்குத் தூண்டுதல் அளிப்பதாக இருக் கும். நகரங்களின் வளர்ச்சியானது கல்வி, சுகாதாரம், பொதுத் தொடர்புகள் ஆகியன அதிகளவில் வளர்ச்சி அடைவதற்குச் சாதக மாகவிருக்கும். அத்துடன் பழைய மரபுரீதியான மூடநம்பிக்கைகள், வாழ்க்கைமுறைகள் போன்றவற்றினைக் கைவிட்டு நவீன வாழ்க்கை முறையினைப் பின்பற்றுவதற்குத் தூண்டுதலளிப்பதாக இருக்கும். எனவே, கைத்தொழில் வளர்ச்சியானது பொருளாதாரரீதியான வளர்ச்சிக்கு மட்டுமன்றிச் சமூகரீதியான நவீனமயத்திற்கும் இன்றி யமையாததாகும்.

பொருளாதாரரீதியான காரணிகளால் மட்டுமன்றி மனோவியல் ரீதியான காரணிகளாலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டுமக்கள் பாதிக்கப்பட்டுக் கைத்தொழிலாக்கத்தினை நாடிநிற்கின்றனர்கள். இன்று சர்வதேச அரங்கில் வறியதும், கல்வியறிவற்றமக்களை அதிகம் கொண்டதுமான நாடுகள் விவசாய நாடுகளாகவே இருக்கின்றன. அதே போன்று விஞ்ஞான தொழில்நுட்பத்தில் முன்னேறிய வல்லரசுகள் அனைத்தும் கைத்தொழில் நாடுகளாகவே காணப்படுகின்றன. எனவேதான் 20ஆம் நூற்றுண்டின் முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லவேண்டுமேயானுல் கைத்தொழிலாக்கம் அவசியமானது என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திஅடைந்துவரும் நாட்டுமக்கள் உணரமுற்பட்டுள்ளார்கள். எளிமையான இயற்கை அழகு நிறைந்த கிராமியச் சூழலின் எழில் மிகு தோற்றத்தினைவிடக் கம்பீரத்துடன் நிமிர்ந்துநிற்கும் உருக் காலைப் புகைபோக்கியின் பிரகாசத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டுத் தலைவர்கள் கூடிய மகிழ்ச்சியினை அடைகின்றார்கள். தமது நாட்டில் பேர்மிங்ஹாமினையும், பிற்றஸ்பேக்கினையும் உருவாக்கு வதன்மூலமே ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் சக்திவாய்ந்த தலைவர்களுடன் நிமிர்ந்துநிற்க முடியும் என நினைக்கிறார்கள். அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டுத் தலைவர்கள் இவ்வாறு நினைப்பது போன்று கைத்தொழிலாக்கம் இலகுவான தொன்றல்ல. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மூலதனப் பற்றாக்குறை, போதிய தொழில்நுட்பமின்மை, சந்தைவாய்ப் பின்மை, முதலீட்டாளர் பற்றாக்குறை, சர்வதேச சந்தையின் பாதக மான விளைவுகள், சமூக கலாச்சாரத் தடைகள் போன்றனவும் கைத்தொழிலாக்கத்தினை ஏற்படுத்துவதற்குத் தடையாக அமைந் துள்ளன.

## இலங்கையில் கைத்தொழிற் கொள்கையின் வளர்ச்சி

அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகளின் கைத்தொழிற் கொள்கை களில் துரிதமான கைத்தொழில் வளர்ச்சி, இறக்குமதிப் பிரதியீடு, தனியுரிமைக் கட்டுப்பாடு, பொருளாதார ஆதிக்கம் சிலரிடம் செல்வதனைத் தடுத்தல், கைத்தொழில் விருத்திமூலம் பிரதேசங்களுக் கிடையே ஏற்றத்தாழ்வு ஏற்படுவதனைத் தடுத்தல் ஆகியனவே முக்கிய குறிக்கோளாக இருக்கின்றன. இவ்விலக்குகளை அடைவ தற்கு அரசாங்கத்துறையினை விருத்திசெய்தல், தனியார்துறையினைச் சிறந்தமுறையில் ஒழுங்குபடுத்தி நிருவகித்தல் என்பன இன்றியமை யாததாகும். கைத்தொழில் வளர்ச்சியின் ஆரம்பத்திலிருந்தே இவ் அம்சங்களைக் கருத்திற்கொண்டு அரசாங்கமானது செயற்படாவிட் டால் தவறான முறையினில் கைத்தொழிலாக்கம் ஏற்பட்டு பிரச்சி னைகளை மேலும் மோசமாக்குவதுடன் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியினையும் இது பாதிப்பதாக அமைந்திருக்கும்.

இலங்கையில் 1955ஆம் ஆண்டுவரை கைத்தொழில் வளர்ச்சி யினை ஏற்படுத்துவதற்கான பொதுவானதொரு கொள்கையென ஒன்று இருக்கவில்லை. ஏனெனில் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து கொரிய யுத்தத்தினால் ஏற்பட்ட றப்பர் செழிப்பினாலும், பின்பு ஏற்பட்ட தேயிலையின் விலை ஏற்றத்தினாலும் போதிய வெளி நாட்டுச் செலாவணியினைப் பெறக்கூடியதாக இருந்தது. இதனால் இலங்கையினால் தேவையான கைத்தொழிற்பொருட்களை இறக்குமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடியதாகவிருந்தது. 1952ஆம் ஆண்டு உலக வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தனியார்துறை, அரசாங்கத்துறை ஆகிய இரண்டும் கைத்தொழில் வளர்ச்சியில் பங்குகொள்ளவேண்டிய அவசியத்தினை வற்புறுத்துவதாக இருந்தது. மேலும் நாட்டின் தொழில்நுட்ப அறிவினையும், மூலதன வசதிகளையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்பதுடன், பாரிய தொழிற்சாலைகளை அரசாங்கம் உருவாக்குவதனைக் கண்டித்ததுடன், அனேக சிறு கைத்தொழில்களை அரசு அபிவிருத்திசெய்ய வேண்டுமெனவும் சிபாரிசு செய்திருந்தது. 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட தீவிரமான வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையானது கைத்தொழிற் பொருட்களை இறக்குமதிசெய்ய முடியாத நிலையினை உருவாக்கியது. எனவே இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது வெளிநாட்டுச் செலாவணியினைச் சேமித்தல் என்ற அடிப்படையில் இறக்குமதிசெய்யும் கைத்தொழில் நுகர்வுப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்திசெய்தல் அல்லது இறக்குமதிப் பிரதியீடு என்ற குறிக்கோளைக்கொண்டதாக இருந்தது. இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது குறுங்காலப் பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிகத் தீர்வினை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்திருந்ததேயொழிய நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியினைக் கருத்திற்கொள்ளவில்லை.

இலங்கையில் கைத்தொழிலாக்கத்தினை ஏற்படுத்த எடுத்த முதலாவது முக்கிய நடவடிக்கையாக 1955ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட கூட்டுத்தாபனச் சட்டமானது அமைந்துள்ளது. இச்சட்டத்தின்படி அரசாங்க கைத்தொழிற் செயற்றிட்டங்கள் மூன்று கட்டங்களினூடாகத் தனியார்களினால் பொறுப்பேற்பதற்கு வழிவகுக்கப்பட்டது. முதலாவது கட்டத்தில், செயற்திட்டத்திலுள்ள எல்லா அரசாங்கச் சொத்துக்களும் கூட்டுத்தாபனத்துக்கு மாற்றப்படுவதுடன் அரசாங்கமே முழு உடைமையாளனாகத் தொடர்ந்திருக்கும். இரண்டாம் கட்டத்தில், இதன் பங்குகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதுடன் அரசாங்க உடைமை பெரும்பங்காகவும் இருக்கும். இறுதிக்கட்டத்தில் அரசாங்கப் பங்குகள் சிறுபகுதியாக இருப்பதுடன் இக்கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டுக் கூட்டுப்பங்கு முதல் அமைப்பாக மாற்றப்படும்வரை அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்குமென வரையறை செய்தது. ஆனால் இச்சட்டம் மிகக் குறுகிய ஆயுளைக் கொண்டதாகவே இருந்தது. ஏனெனில் 1957ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டமானது 1955ஆம் ஆண்டு இயற்றப்பட்டசட்டத்தினை நீக்கியதுடன் கைத்தொழில் வளர்ச்சியில் நேரடியாக அரசாங்கத் தலையீட்டினை அதிகரித்ததொன்றாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. இச் சட்டமானது ஏற்கனவே உள்ள நிறுவனங் களைப் பொறுப்பேற்கவும், புதிய கூட்டுத்தாபனங்களை உருவாக்கவும் வழி வகுத்தது.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு ஆட்சிக்குவந்த எல்லா அரசாங்கங்களும் கலப்புப் பொருளாதாரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தமையினுல் இலங்கையின் கைத்தொழிற் கொள்கையி னுல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களை விருத்திசெய்தல் முக்கியமான அம்சமாக இடம்பெற்றிருந்தது. 1957ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்கனவேயிருந்த பல அரசாங்கக் கைத்தொழில்கள், கூட்டுத் தாபனங்களாக மாற்றப்பட்டதுடன் பல புதிய கைத்தொழில் கூட்டுத்தாபனங்களும் உருவாக்கப்பட்டன. இலங்கையில் தனியார் துறை பலவீனமானதாக இருந்ததால் பாரிய கைத்தொழில் முதலீடு களை அரசாங்கமே மேற்கொள்ளவேண்டியிருந்தது. அத்துடன் தனி யார் துறை முதலீடுகள் இலாபம் கூடிய துறைகளிலே முடக்கப்படு வதனுல் இலாபம் குறைந்த அத்தியாவசிய கைத்தொழில் உற்பத்தித் துறைகளில் அரசாங்க முதலீடுகள் அவசியமாக இருந்தன. 1958ஆம் ஆண்டு 12ஆக இருந்த அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாப னங்கள் 1977இல் 28ஆக அதிகரித்துள்ளன. இக் கூட்டுத்தாப னங்கள் சீமெந்து, இரசாயனம், பெற்ருேலியம், உருக்கு, உப்பு, ஓட்டுப்பலகை போன்ற பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமை யாத அடிப்படைக் கைத்தொழில்களாகவும், ஏனையவை சீனி, காகிதம், பால், புடைவை, மா போன்ற அத்தியாவசிய - நுகர்வுப் பொருட் கைத்தொழில்களாகவுமே அமைந்துள்ளன.

இலங்கையில் தனியார்துறைக்குக் கொடுக்கப்பட்ட முதலாவது ஊக்கமாக 1959இல் உருவாக்கப்பட்ட கைத்தொழிற்பேட்டைக் கூட்டுத்தாபனமானது அமைந்திருந்தது. இத்தகைய கைத்தொழிற் பேட்டைகள் தனியார்துறையின் கைத்தொழில் முயற்சிகளை ஊக்கப் படுத்துவதற்காக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடு களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கைத்தொழிற் பேட்டைகளில் அரசாங்கம் கட்டிடம், நீர்விநியோகம், மின்சாரம், போக்குவரத்து மற்றும் பொதுத்தொடர்பு வசதிகளைத் தனிப்பட்ட முதலீட்டாள ருக்குச் செய்துகொடுத்தது. இதனுல் குறைந்தளவு மூலதனத்தி னைக் கொண்ட முதலீட்டாளர்கள் இயந்திரசாதனங்களை மட்டும் கொள்வனவுசெய்து கைத்தொழில்களை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது. எக்கலையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கைத்தொழிற் பேட்டையானது 70 ஏக்கர் பரப்பளவினைக் கொண்டிருந்ததுடன் நான்கு வலயங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. முதலிரு வலயங் களும் சிறுகைத்தொழில்களுக்கும், மூன்ருவது வலயம் பெரும் கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களுக்கும், நான்காவது வலயம் சூழலை மாசுபடுத்தும் கைத்தொழில்களுக்கும் (சீமெந்து உற்பத்தி, இரசாயன உற்பத்தி, தோல் பதனிடுதல் போன்றவை) ஒதுக்கப்பட்டது. இதன் முகாமை கைத்தொழில்பேட்டைக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இங்கு கைத்தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களே ஆரம்பிக்கப்படக்கூடியதாக இருந்தது. சிறு முதலீட்டாளர்களைப் பெருமளவு ஊக்குவித்த ஒரு முயற்சியாக இத்திட்டமானது அமைந்திருந்தது.

1959ஆம் ஆண்டிற்குப் பின்பு தனியார்துறையினருக்கு ஊக்கமளிப்பதற்கு இறைக்கொள்கையானது முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இறக்குமதிப் பொருட்களுக்குக் கூடிய வரிகள், இறக்குமதித் தடைகள், கைத்தொழில் முதலீடுகளுக்கு வரிச்சலுகைகள் என்ற அடிப்படையில் இவை அமைந்திருந்தன. உள்நாட்டுக் கைத்தொழிலாளருக்கு வெளிநாட்டுப் போட்டியற்ற பாதுகாப்பான ஒரு உள்நாட்டுச் சந்தையினை உருவாக்கிக்கொடுப்பதே இறைக்கொள்கையின் முக்கிய குறிக்கோளாக அமைந்திருந்தது. மேலும் 1959ஆம் ஆண்டைத் தொடர்ந்து தீவிரமடைந்த வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடிகளும் இத்தகைய ஒரு கொள்கையினைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்தித்த முக்கிய காரணிகளாக அமைந்திருந்தன. 1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாக இறக்குமதிப் பிரதியீடு என்ற அடிப்படையில் பல தனியார்துறைக் கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டன. இக்காலத்தில் உருவாக்கப்பட்ட பல கைத்தொழில்கள் இறக்குமதிப் பிரதியீட்டினைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனவேயொழிய உள்நாட்டு மூலவளம் போன்றவற்றினைக் கருத்திற் கொண்டிருக்கவில்லை. புதிய கைத்தொழில் முதலீடுகளுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டதனாலும் 1956—1965 வரையுள்ள காலத்தில் கைத்தொழில் உற்பத்தியில் துரிதவளர்ச்சி ஏற்பட்டது.

1965க்குப் பின்பு ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டமும் இறைக்கொள்கையில் முக்கிய அம்சமாக இடம்பெறலாயிற்று. கைத்தொழில் ஏற்றுமதியாளருக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டதுடன் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டன. 1967இல் அறிமுகப்படுத்தப்பட்ட அந்நிய செலாவணியுரிமைச் சான்றிதழ் திட்டத்தின்கீழ் கைத்தொழில் ஏற்றுமதியாளர் கூடிய வருமானத்தினைப்பெற வழிவகுக்கப்பட்டன. மேலும் 1970க்குப் பின்பு அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றக்கூடிய ரூபாய்க் கணக்கு முறையும் கைத்தொழில் ஏற்றுமதியாளருக்குச் சாதகமானதொன்றாகவிருந்தது. அரசாங்கத்தினால் அமுலாக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதிக்கட்டுப்பாடுகள், வரிச்சலுகைகள் ஆகியன திறமையற்ற கைத்தொழில் உற்பத்தியாளர்கள் உருவாகுவதற்கு வழி வகுத்ததுடன் உற்பத்திச்சாதனங்கள் விரயம் செய்யப்படுவதற்கும் வழி வகுத்ததாக 1968ஆம் ஆண்டு வரிவிசாரணைக் குழு அறிக்கை சுட்டிக் காட்டியது. எனவே அரசாங்கம் தீவிரமான கட்டுப்பாட்டு முறைகளை நீக்கி கைத்தொழில் போட்டியினை ஏற்படுத்தல் ஆரோக்கியமான ஒரு கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்குமென இவ் அறிக்கை சிபாரிசுசெய்தது. ஆஞல் வரி விசாரணைக் குழுவினரது அறிக்கையினை உடனடியாக அமுலாக்குவதற்கு செலாவணிப் பிரச்சினையானது முக்கியமான தடையாகக் காணப்பட்டது. 1977ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த புதிய அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மூலம் உள்நாட்டுக் கைத்தொழிலாளருக்கு உருவாக்கி வைக்கப்பட்டிருந்த செயற்கையான போட்டியற்ற சந்தைமுறையினை நீக்கி விட்டதுடன் கைத்தொழிற் பொருட்களுக்கான இறக்குமதித் தடைகள் பலவற்றினையும் நீக்கியுள்ளது. இதன்மூலம் கைத்தொழிற்றுறையானது திறமையான முறையில் உற்பத்தியினை மேற்கொண்டு தரம்கூடிய பொருட்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1955ஆம் ஆண்டிற்குப் பின்பு தனியார்துறையினருக்குக் கைத்தொழில் சம்பந்தமான தொழில்நுட்ப முகாமையியல் தொடர்பான ஆலோசனை வழங்கவும், நீண்டகாலக் குறுங்காலக் கடன்வசதிகளை அதிகரிப்பதற்குமாக நிறுவன ரீதியான பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1955ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் (CISIR) கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும், உற்பத்தித்தரம், தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் போன்றவற்றினையும் முக்கிய தொழிற்பாடுகளாகக்கொண்டிருந்தது. மேலும், 1969ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கைத்தொழில்விருத்திச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட கைத்தொழில்விருத்திச் சபையும் (I. D. B.) மற்றுமொரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக அமைந்திருந்தது. இச்சபையின் முக்கியகுறிக்கோள்களாகத் தனியார்துறை—அரசாங்கத்துறைக் கைத்தொழில்களுக்கிடையே சரியான இணைப்பினை ஏற்படுத்தி விருத்திசெய்தல், உள்நாட்டு இயற்கைவளங்களைப் பயன்படுத்தக்கூடிய வகையிலான உற்பத்தித் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ளல், உள்நாட்டுக்கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தற்கான ஊக்கங்களைஅளித்தல், மூலதனக்கடன்கள், சந்தைப்படுத்தல், முகாமையியல், தொழில்நுட்பம், சட்டம் சம்பந்தமான விடயங்களில் கைத்தொழிலாருக்கு ஆலோசனை வழங்குதல் ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்குமென கைத்தொழில் விருத்திச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது. தனியார் முயற்சிகளை ஊக்கப்படுத்தும் அராங்கக் கொள்கைகளைச் சிறப்பான முறையில் பிரதிபலிக்குமொன்றாகக் கைத்தொழில்விருத்திச் சபையானது அமைந்திருந்தது.

தனியார்துறைக் கைத்தொழிலாளருக்குக் கடன் வழங்குவதற்கான நிதி நிறுவனங்கள் சில 1948ஆம் ஆண்டிற்கு முன்பு அமைக்கப்பட்டபோதும் 1955ஆம் ஆண்டிற்குப் பின்பே இந் நிதிநிறுவனங்கள் சிறப்பானமுறையில் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயக் கைத்தொழில் கடன்நிதிக் கூட்டுத்தாபனம், அடமான வங்கி ஆகியன 1968ஆம் ஆண்டே நாட்டின் பொருளாதார விருத்தியில் சிறப்பான முறையில் பங்குகொள்ளும் வகையில் புனர்நிருமானம் செய்யப்பட்டன. 1955ஆம் ஆண்டு உலகவங்கியின் ஆலோசனையின்படி அமைக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (D. F. C.) கைத்தொழிலாளருக்குக் குறுங்கால நீண்டகாலக் கடன்களை வழங்கும் நோக்கமாக உருவாக்கப்பட்டதொன்றாகும். மேலும் 1961ஆம் ஆண்டு இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டமை, மக்கள்வங்கி உருவாக்கப்பட்டமை போன்றவை நாட்டின் வங்கி முறையினைக் கைத்தொழில் அபிவிருத்தியினை ஏற்படுத்தச் சாதகமான முறையில் மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது வெளிநாட்டுக் கைத்தொழில் முதலீடுகளைக் கவருவதற்குச் சாதகமானதாக அமையவில்லை. இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து கைத்தொழில் முதலீடுகளைக் கவருவதற்கு அரசியல் ரீதியான எதிர்ப்பு முக்கிய காரணியாகவிருந்தது. மேலும் இத்தகைய எதிர்ப்பானது வெளிநாட்டுக் கைத்தொழில் முதலீட்டாளருக்கு முதலீட்டின் எதிர்காலம் பற்றிப் பெரும் நிச்சயமற்ற தன்மையினையும் உருவாக்குவதாக இருந்தது. இதனால் 1970ஆம் ஆண்டுவரை பெருமளவிற்கு வெளிநாட்டிலிருந்து முதலீடுகள் வரக்கூடியதாக இருக்கவில்லை. எனினும் அரசாங்க மட்டத்தில் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவியினால் ரயர், உருக்கு, மா போன்ற பொருட்களை உற்பத்திசெய்யும் கைத்தொழில் ஆலைகளே நிறுவப்பட்டன. 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு ஜப்பான் நாட்டுப் பல்தேசியக் கூட்டுத்தாபனங்களால் மட்பாண்டம், ஆடைகள் உற்பத்தி போன்றவற்றில் சில முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுடனும் தனியார் நிறுவனங்களுடனும் இணைந்த கூட்டு முதலீட்டு முயற்சிகளாகவே மேற்கொள்ளப்பட்டவையாகும். 1977ஆம் ஆண்டிலேற்பட்ட அரசியல் மாற்றமானது வெளிநாட்டு முதலீடுகள் வருவதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு ஊக்கமளிப்பனவாக அமைந்துள்ளன. அரசாங்கத்தினது சுதந்திர வர்த்தகவலயத் திட்டமானது வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் மிகப்பெரும் செயற்றிட்டமாக அமைந்துள்ளது.

**கைத்தொழில் அமைப்பு**

ஒருநாட்டினது கைத்தொழில் அமைப்பினை நிறுவனங்களினது பருமன், உற்பத்திசெய்யப்படும் பொருட்கள், உடைமையாளர்கள் என்ற அடிப்படையில் பாகுபடுத்தமுடியும். கைத்தொழில் நிறுவனத்தின் பருமனை அடிப்படையாகக்கொண்டு பாரிய கைத்தொழில்கள், சிறுகைத்தொழில்கள் என இருவகையாக வகைப்படுத்தலாம். இவ்வாறு கைத்தொழில்களை வகைப்படுத்தும்போது அளவீடுகளாக உற்பத்திவகை, தொழிலாளர் தொகை, முதலீட்டளவு, உற்பத்தி, தொழில்நுட்பம், உரிமைவகை, சந்தை ஆதிக்கம், திறமை ஆகியன சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அருமையாகக் காணப்படும் முதலினையும் பெருமளவில் கிடைக்கும் ஊழியத்தினையும் பிரதான அளவீடுகளாகக்கொண்ட போதிலும் கைத்தொழில்களின் பருமன் குறித்து நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவில் 5 இலட்சத்துக்குட்பட்ட முதலினையும், சக்தி பாவனைகொண்ட 50 தொழிலாளர்களை அல்லது சக்தி பாவனையற்ற 100 தொழிலாளர்களுக்குக் குறைவான தொழிலாளர்களையும் கொண்ட கைத்தொழில்கள் சிறுகைத்தொழில்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் 2 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாததும் 2,000 ரூபாய்க்குக் குறையாததுமான மூலதனத்தினைக்கொண்ட கைத்தொழில்களையும், தொழிலாளர் தொகை 75க்கு மேற்படாத கைத்தொழில்களையுமே சிறுகைத்தொழில்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் பாரிய கைத்தொழில்கள் ஒருவருக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கு 60,000 முதலும் சிறுகைத்தொழில்கள் ஒருவருக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதற்கு 250—1000 ரூபாவரையும் தேவைப்படுமென ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சிறு கைத்தொழில்களை மூன்று வகையாக வகைப்படுத்த முடியும்.

அ. குடிசைக் கைத்தொழில்கள்: குடும்ப ஊழியத்தினை முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ கொண்ட உற்பத்திமுறை.

ஆ. சிறு கைத்தொழில்கள்: 25க்கும் 75க்கும் இடையிலான கூலிக்கமர்த்தப்பட்ட ஊழியத்தினைக்கொண்ட உற்பத்தி முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. கைத்திறமை வாய்ந்த கைத்தொழில்கள்: இது குடிசைக் கைத்தொழிலாக அல்லது சிறு கைத்தொழிலாக கலைத் திறமைவாய்ந்த கைவினைஞர்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்தியாகும். இதற்கு உதாரணமாக நெசவுக் கைத் தொழில், தங்க, பித்தளை, வெண்கல, உலோகத் தொழில்கள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவை இலங்கையின் மரபுரீதியான கலாசாரத்தினைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன.

இக் கைத்தொழில்களில் பல சுற்றுப்பிரயாண வளர்ச்சியினால் ஊக்குவிக்கப்பட்டு விருத்தி அடைந்துள்ளன. இலங்கைபோன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றில் சிறு கைத்தொழில் களை வளர்ச்சியடையச் செய்வதற்கு அரசாங்கங்கள் நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும்.

அ. சிறு கைத்தொழில்கள் ஊழியச் செறிவானதாக இருப்ப தால் கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தக் கூடியனவாகும்.

ஆ. சிறு கைத்தொழில்களில் குறைந்த காலத்தில் வெளியீட் டினை ஏற்படுத்த முடிவதால் பணவீக்கம், சென்மதி நிலுவைப் பிரச்சினை ஆகியவற்றினைக் குறைப்பதற்கு இவை சாதகமானவையாக உள்ளன.

இ. கிராமப்புறங்களில் உள்நாட்டு மூலவளங்களைப் பயன் படுத்திச் சிறு கைத்தொழில்களை உருவாக்கமுடிவதால், சனத்தொகை மிக்க நகரங்களை உருவாக்கி சமூகப் பிரச் சினைகள் ஏற்படாது இருப்பதனைத் தடைசெய்ய முடியும்.

ஈ. நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கிடையே நிலுவையான கைத்தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்துவதன்மூலம் பிர தேச ஏற்றத்தாழ்வுகளை மட்டுமன்றி வருமானப் பங்கீட் டின் ஏற்றத்தாழ்வினையும் குறைக்கமுடியும்.

உ. ஒவ்வொரு நாட்டினதும் மரபுரீதியான தொழில்நுட்பத் தினையும் பாரம்பரிய உற்பத்தி முறைகளையும் இதன்மூலம் விருத்திசெய்யமுடியும்.

ஊ. இக் கைத்தொழில்களை உருவாக்கக் குறைந்தளவு வெளி நாட்டுச் செலாவணியே தேவைப்படும்.

இலங்கையில் பாரிய கைத்தொழில்கள் பெருமளவிற்குக் கொழும்பு நகரைச் சுற்றி அமைந்திருப்பதுடன், இப் பொருட்களுக் கான சந்தை இலங்கை முழுவதுமே காணப்படுகின்றன. பாரிய கைத்தொழில்கள் நவீன தொழில்நுட்பத்துடன் நவீன பொருட்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் உற்பத்தி செய்யும் கைத்தொழில்களாக மட்டும் இலங்கையில் அமைந்திருக்கவில்லை. இன்று மரபுரீதியான தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டு நவீன பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உதாரணமாக நவீன கைப்பைகள், சப்பாத்து முதலியவற்றினைக் குறிப்பிடலாம். பாரியக் கைத்தொழில்கள், தனியார்துறைக் கைத்தொழில்கள் என்பன மூலதனப் பற்றுக்குறை காரணமாக ஊழியச் செறிவான கைத்தொழில்களாக இருப்பதுடன் நுகர்வுப் பொருட் கைத்தொழில்களாகவும் உள்ளன. அரசாங்கக் கைத்தொழில்கள் முதல் செறிவான கைத்தொழில்களாக மட்டுமன்றி சீமெந்து, காகிதம், இரசாயனம் போன்ற பெரிய கைத்தொழில்களாகவும் காணப்படுகின்றன.

இலங்கைக் கைத்தொழில்களை உடைமையாளர்களின் அடிப்படையில் :

அ. தனியார் உடைமை,

ஆ. அரசாங்க உடைமை,

இ. கூட்டுறவுச் சங்கங்களின் உடைமை,

ஈ. வெளிநாட்டினரின் உடைமை

என நான்கு வகையாகப் பாகுபடுத்த முடியும். ஆனால் கைத்தொழில்களில் பெரும்பகுதியானவை தனியார்களினதும் அரசாங்க கூட்டுத்தாபனங்களினதுமாகவே அமைந்திருக்கின்றன. சிறுகைத்தொழில்களான கைத்தறி நெசவு போன்றவை கூட்டுறவுச் சங்கங்களின் உடைமையாகவுள்ளன. வெளிநாட்டாரது உடைமையான கைத்தொழில்களாக நீண்டகாலமாகப் பெருந்தோட்ட விவசாயத்துடன் தொடர்பான கைத்தொழில்களே காணப்பட்டன. ஆனால் 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு இலங்கையின் கைத்தொழில் அமைப்பில் வெளிநாட்டாரது பங்கு சிறிது சிறிதாக அதிகரித்து வருகின்றது.

உற்பத்திப் பொருட்களின் அடிப்படையில் இலங்கையின் கைத்தொழில்களை :

அ. நுகர்வுப்பொருள் கைத்தொழில்கள்,

ஆ. இடைநிலைப் பொருள் கைத்தொழில்கள்,

இ. முதலீட்டுப் பொருள் கைத்தொழில்கள்

என மூன்றுவகையாக வகைப்படுத்தலாம். இதில் நுகர்வுப்பொருட் கைத்தொழில் உற்பத்திகள் 50 சதவீதத்திற்கு அதிகமாக இருப்பதுடன் இவை பெருமளவிற்குத் தனியார்களின் உடைமையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி ஏறக் குறைய 30 சதவீதமாகவும் முதலீட்டுப் பொருளின் உற்பத்தி 20 சத வீதத்திற்குக் குறைவானதாகவும் இருப்பதுடன் இக் கைத்தொழில் கள் பெருமளவிற்கு அரசாங்க உடைமைகளாகவுமுள்ளன. நுகர் வுப் பொருட் கைத்தொழில்கள் குறைந்த முதலீட்டினையும் குறுங் காலத்தில் மிக்ககூடிய இலாபத்தினையும் பெறக்கூடியதாக இருப்பத ஞல் தனியார் கைத்தொழில் முதலீடுகள் பொதுவாக நுகர்வுப் பொருள் கைத்தொழில் முதலீடுகளாக அமைந்திருக்கின்றன. இலங்கைபோன்ற நாடுகளில் அரசியல் நிச்சயமற்ற தன்மைகளினுல் நீண்டகால முதிர்ச்சியைக் கொண்ட பாரிய முதலீடுகளில் தனியார் துறையினர் முதலீட்டினை முடக்குவதற்கு அச்சம்கொண்டவர்க ளாகக் காணப்படுவதும் இதற்கு மற்றுமொரு காரணமாகும்.

**கைத்தொழில்களின் வளர்ச்சி**

இரண்டாவது மகாயுத்தம்வரை இலங்கையில் பெரும் கைத் தொழில்கள் என்னும்போது தேயிலை, றப்பர்ப் பொருட்களைப் பத னிடுதல் அதற்கான உபகரணங்களை உற்பத்திசெய்தல் என்ற அடிப் படையிலேயே அமைந்திருந்தது. மேலும் தீப்பெட்டி, புடைவை, உப்பு, பாதணிகள், குளிர்பானங்கள், பியர், மதுபானம் போன்ற நுகர்வுப் பொருட்களை உற்பத்திசெய்கின்ற சிறியளவில் அமைந்த கைத்தொழில்களும் ஓரளவு வளர்ச்சியடைந்திருந்தன. இதில் உப்பும் சாராயமும் மட்டுமே அரசாங்கக் கண்காணிப்புக்கு உட் பட்ட தொழில்களாக இருந்தன. இரண்டாவது மகாயுத்த நெருக் கடிகளின் விளைவாக ஏற்பட்ட பொருட்தட்டுப்பாடு காரணமாக அரசாங்கம் சில கைத்தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தியினை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இந்த அடிப்படை யில் 1941இல் உருக்குத்தகடு, ஒட்டுப்பலகை, பாதணிகள், போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும், 1942இல் காகிதம், அசற்றிக் அமிலத் தொழிற்சாலைகளும், 1943இல் மருந்து உற்பத்தித் தொழிற்சாலையும், 1944இல் கண்ணுடி, மட்பாண்டம் போன்ற உற்பத்திகளது தொழிற்சாலைகளும் அமைக் கப்பட்டன. இத் தொழிற்சாலைகளில் பெருமளவிற்கு இந்தியாவி லிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் அல்லதுஉள்நாட்டுஉபகரணங்கள் ஆகியனவே பயன்படுத்தப்பட்டன. இக் கைத்தொழில் உற்பத்திகள் தரம் குறைந்ததும், சிக்கனமற்றது மாக இருந்தபோதிலும்கூட உள்நாட்டுக் கேள்வியும் போட்டியற்ற தன்மையும் காணப்பட்டதால் இலாபத்துடன் இயங்கக்கூடியதாக இருந்தது. ஆனுல் யுத்தத்தின் முடிவில் பொருட்களின் இறக்கு மதிகள் மேற்கொள்ளப்படவே ஒட்டுப்பலகை தவிர்ந்த ஏனைய கைத்தொழில்கள் நட்டம் காரணமாக மூடவேண்டிய நிலை ஏற்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. ஓட்டுப்பலகைக் கைத்தொழில் மொத்தத் தேயிலைப் பெட்டிக்கான கேள்வியில் 10 சதவீதத்தினை மட்டும் பூர்த்திசெய்யக்கூடியதாக இருந்தது.

1948ஆம் ஆண்டைத் தொடர்ந்து புதிய அரசாங்கமானது சீமெந்து, சீனி, உருக்கு, காகிதம், இரசாயனப்பொருட்கள்போன்ற பொருட்களை உற்பத்திசெய்வதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பித்தது. இக்காலத்தில் வெளிநாட்டிலிருந்து கைத்தொழில் நுகர்வுப் பொருட்கள் பெருமளவு இறக்குமதிசெய்யப்பட்டமையினால் இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழிற் பொருட்களுடன் தரரீதியாகவும் விலைரீதியாகவும் போட்டியிட்டு உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடிய துணிகரமான முதலீட்டாளர்கள் அதிகளவில் காணப்படவில்லை. எனவே, உள்நாட்டு வர்த்தக வகுப்பினர் கைத்தொழிற் பொருட்களை இறக்குமதிசெய்து விற்பனைசெய்வதன்மூலம் கூடியளவு இலாபத்தினைப் பெறக்கூடியதாக இருந்தமையினால் கைத்தொழில் முதலீடுகளில் அதிகளவு நாட்டம் கொண்டிருக்கவில்லை. 1955ஆம் ஆண்டைத் தொடர்ந்து அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமும், வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினைகள் காரணமாக கைத்தொழிற் பொருட்களின் இறக்குமதிகள் படிப்படியாகத் தடைசெய்யப்பட்டதன் காரணமாகவும், கைத்தொழில் முதலீடுகள் மேற்கொள்ளல் கூடிய இலாபம் அளிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கியது. இதன் விளைவாகவே 1955ஆம் ஆண்டைத் தொடர்ந்து உள்நாட்டுக் கைத்தொழில்களின் துரித வளர்ச்சியினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

1960ஆம் ஆண்டிலிருந்து கைத்தொழில்துறையிலுள்ள மொத்த நிறுவனங்கள், ஊழியத்தின் எண்ணிக்கை, உற்பத்திப் பெறுமதி ஆகியவற்றில் துரிதமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன. 1961இல் 315ஆக இருந்த கைத்தொழில்நிறுவனங்களின் எண்ணிக்கையானது 1971இல் 1897ஆக அல்லது 6 மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் 1972ஆம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனம் சிறிய பீடி தயாரிக்கும் நிறுவனங்களை ஒன்றுகத் திரட்டி அறிக்கையினைச் சமர்ப்பித்தமையினாலேயே நிறுவனங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1976இல் மீண்டும் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 1508ஆக அதிகரித்துள்ளது. கைத்தொழில் ஊழியத்தினது எண்ணிக்கையும் 1961இல் 19,988ஆக இருந்து 1976இல் 113,463ஆக அதிகரித்துள்ளது. கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியானது 1961இல் 331·7 மில்லியன் ரூபாவாக இருந்து 1971இல் 2,207·7 மில்லியன் ரூபாவாக்வும், 1976இல் 6,061·4 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. ஏறக்குறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5. I

கைத்தொழிற் துறையில் மொத்த நிறுவனங்கள்,
மொத்த ஊழியம், மொத்த உற்பத்திப் பெறுமதி 1961 — 1976

| வருடம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஊழியர்களின் எண்ணிக்கை | உற்பத்திப் பெறுமதி (மில்லியன் ரூபாய்) |
|---|---|---|---|
| 1961 | 315 | 19,988 | 331·7 |
| 1963 | 433 | 26,304 | 432·4 |
| 1965 | 1,381 | 56,835 | 847·0 |
| 1967 | 1,830 | 73,955 | 954·2 |
| 1969 | 1,962 | 103,726 | 1,626·8 |
| 1971 | 1,897 | 110,141 | 2,207·7 |
| 1973 | 1,419 | 105,715 | 2,758·6 |
| 1975 | 1,489 | 107,944 | 5,556·0 |
| 1976 | 1,508 | 113,463 | 6,061·4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

15 வருடகால இடைவெளியில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 5 மடங்காகவும் ஊழியத்தின் எண்ணிக்கை 6 மடங்காகவும் அதிகரிக்க உற்பத்திப் பெறுமதியானது 19 மடங்காக அதிகரித்துள்ளது. கைத்தொழில்துறையில் அதிகரித்த வேலைவாய்ப்பினைவிட உற்பத்திப் பெருக்கம் பலமடங்காக இருப்பதற்கு உற்பத்தியாளர்கள் கூடியளவில் முதல்செறிவான உற்பத்தி முறைகளைப் பின்பற்றியமை காரணமாக அமையலாம்.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில்கூட கைத்தொழில் முதலீட்டாளர்கள் முதல் செறிவான உற்பத்தி முறைகளையே பெருமளவு தேர்ந்தெடுப்பது முக்கியமான பிரச்சினையாக அமைந்துள்ளது. கைத்தொழில் முதலீட்டாளர்கள் மனித ஊழியத்திற்குப் பதிலாக இயந்திரங்களை அதிகளவில் பயன்படுத்துவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள. முதலாவதாக, பெருமளவு ஊழியத்தினை வேலைக்கமர்த்துவதால் வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் ஏற்படுவதன்மூலம் உற்பத்தியானது பாதிக்கப்படுவதால் இதனைப் பெருமளவு இயந்திரங்கள் பயன்படுத்துதல்மூலம் ஓரளவு தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரண்டாவதாக, இன்று பல நாடுகளில் முதல் சந்தையானது வளர்ச்சியடைந்திருப்பதனால், பெருமளவு முதலினை இலகுவாகப் பெறக்கூடியதாக இருப்பதால் முதல்செறிவான உற்பத்திமுறையினை உற்பத்தியாளர்கள் பயன்படுத்துவதற்குத் தூண்டுதல் அளிப்பதாக உள்ளது. இலங்கையிலும் வளர்ச்சியடைந்த தொழிற்சங்க இயக்கம் அரசாங்கத்தினால் கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முதலீட்டாளர்களுக்கு இலகுவானமுறையில் கடன்களைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றன முதல் செறிவான உற்பத்தி முறையினைக் கைத்தொழிலாளர்கள் பின்பற்றுவதற்குத் தூண்டுதல்களாக அமைந்திருந்தன.

கைத்தொழில்களின் வகைப்படி உற்பத்திப் பெருக்கத்தினை நோக்கும்போது நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியிலேயே பெருமளவு

அட்டவணை 5. II

**கைத்தொழில் வகைப்படி கைத்தொழில் உற்பத்தி 1952—1976**
(சதவிதமாக)

| கைத்தொழிற் தொகுதி | 1952 | 1966 | 1971 | 1976 |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்பு | 17·5 | 28·4 | 33·7 | 28·3 |
| 2. புடைவைகள், ஆடை அணிகள், தோற் கைத் தொழில்கள் | 6·2 | 20·9 | 13·9 | 11·2 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளின் தயாரிப்புகள் | 1·1 | 0·4 | 1·2 | 2·1 |
| 4. தாள், தாள்உற்பத்திகள் | 6·0 | 4·0 | 3·2 | 3·3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாஸ்திக்கு, உற்பத்திகளின் தயாரிப்பு | 47·3 | 20·2 | 24·0 | 38·5 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்பு | 3·2 | 5·6 | 1·0 | 5·9 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் | — | 0·5 | 2·6 | 2·3 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரமும் போக்குவரத்துச் சாதனங்களினதும் தயாரிப்பு | 15·7 | 18.6 | 12·4 | 7·8 |
| 9. தயாரிக்கப்பட்ட ஏனைய உற்பத்திகள் | 3·0 | 1·4 | 1·0 | 0·4 |
| | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பானது இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சியானது இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாக இறக்குமதிப் பிரதியீட்டினைக் குறிக்கோளாகக்கொண்டு வளர்ச்சி அடைந்தமையே இதற்கு அடிப்படைக் காரணமாகும். உணவு, குடிபானம், புகையிலை, புடைவை, ஆடைஅணிகள், தோற்பொருட்கள் ஆகியன 1952இல் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 23·7 சதவிதமாக இருந்து 1976இல் 39·5 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆனால் நீண்டகாலக் கைத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத உலோகப் பொருட்கள், இயந்திரமும் போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற பொருட்களும் 1952இல் மொத்த உற்பத்தியில் 15·7 சதவீதமாக இருந்து 1976இல் 7·8 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இலங்கையின் கைத்தொழில் உற்பத்தியில் இன்று 50 சதவீதத்திற்கு மேற்பட்டவை நுகர்வுப்பொருட்களாக இருப்பதன்மூலம் கைத்தொழில் வளர்ச்சியானது நுகர்வுப்பொருள் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி அடைந்துள்ளது என்பது புலனாகின்றது.

இலங்கையில் கைத்தொழிற்துறையின் வளர்ச்சியானது தனியார் துறை, அரசாங்கத்துறை ஆகிய இரண்டினது இணைந்த வளர்ச்சியாகவே உள்ளன. மேலும் இலங்கையின் கைத்தொழிற் துறையில் அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள்கொண்டபங்கானது படிப்படியாக அதிகரித்துவந்துள்ளன. 1966ஆம் ஆண்டு மொத்தக் கைத்தொழில் ஊழியத்தில் அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன ஊழியத்தின் பங்கு 15·6 சதவீதமாக இருந்து 1976இல் 41·2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதேபோன்று மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் பங்கு 1968இல் 18·2 சதவீதமாக இருந்து 1976இல் 61 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1970ஆம் ஆண்டிற்குப் பின்பே அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் பங்கு கைத்தொழிற்துறையில் அதிகளவில் அதிகரித்துள்ளது. ~~ஏனெனில், 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்~~ தாபனங்களின் பங்கு கைத்தொழிற் துறையில் அதிகளவில் அதிகரித்துள்ளது. ஏனெனில் 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு இலங்கையில் தனியார்துறைக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்கு ஊக்கங்கள் பெருமளவு அளிக்கப்படவில்லை. இதனால் கைத்தொழில் உற்பத்திப் பெருக்கமும் கைத்தொழில் ஊழியத்தின் அதிகரிப்பும் பெருமளவிற்கு அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சியினூடாகவே ஏற்படவேண்டியிருந்தது. மேலும் இலங்கைபோன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5. III

**மொத்தக் கைத்தொழில் உற்பத்தி, கைத்தொழில் ஊழியம் ஆகியவற்றில் அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் பங்கு 1966 — 1976**

(சதவீதமாக)

| காலம் | மொத்த ஊழியம் | உற்பத்திப் பெறுமதி |
|---|---|---|
| 1966 | 15·6 | — |
| 1967 | 15·7 | — |
| 1968 | 29·6 | 18·2 |
| 1969 | 27·3 | 26·2 |
| 1970 | 30·5 | 30·0 |
| 1971 | 33·8 | 35·3 |
| 1972 | 39·6 | 35·9 |
| 1973 | 48·9 | 38·9 |
| 1974 | 56·9 | 51·4 |
| 1975 | 51·0 | 52·0 |
| 1976 | 41·2 | 61·0 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்,

துறை நன்குவளர்ச்சியடையாத நிலையிலிருப்பதால் கைத்தொழிலாக்கத்தில் அரசாங்கக் கைத்தாழிற் கூட்டுத்தாபனங்களின் பங்கு மிக முக்கியமானதாக உள்ளது.

**கைத்தொழிலாக்கத்தின் மதிப்பீடு**

இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியினை மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்தொழிற்றுறை கொண்டுள்ள பங்கு, கைத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, கைத்தொழில் ஊழியத்தின் அளவு, உற்பத்திப் பெறுமதி ஆகிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யும்போது 1960ஆம் ஆண்டுக்குப் பின்பு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஆனால் ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டினது கைத்தொழில் வளர்ச்சியினை மேற்கூறிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்வது பூரணத்துவம் வாய்ந்ததொன்றாக அமையமாட்டாது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கைத்தொழிலாக்கமானது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி, பிரதேசம், வருமானம் ஆகியவற்றிற்கிடையிலான ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல், சாதாரண பொதுமக்களின் பொருளாதார தேவைகளைப் பூர்த்திசெய்தல் போன்றவகைகளில் அமைந்துள்ளதா என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்தல் பயனுடையதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கை மக்களின் அனேக கைத்தொழில் நுகர்வுப் பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதுடன், மக்களின் நுகர்விலும் உள்நாட்டுக் கைத்தொழிற் பொருட்கள் முக்கிய இடத்தினை வகிப்பதாக உள்ளது. ஆனால் இக் கைத்தொழில் நுகர்வுப் பொருட்களில் அநேகமானவை வெளிப்புறத்தில் 'இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது' (Made in Sri Lanka) எனக் குறிப்பிடப் படுவதன்மூலம் மட்டுமே இலங்கையின் உற்பத்திகளாகக் காட்சி யளிக்கின்றன. இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட ஒரு பொருள் என்னும்போது மூலப்பொருள் என்ற ஆரம்பநிலையிலிருந்து ஒவ் வொரு கட்டமும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். ஆனால் இன்று இலங்கையில் தனியார் கைத் தொழில்கள் பல, மூலப்பொருள்கள் என்ற போர்வையில் இடை நிலைப் பொருட்களை அல்லது முடிவுப் பொருட்களை இறக்கு மதி செய்து அவற்றினைப் பெட்டிகளில் அடைத்தல் அல்லது உதிரிப் பாகங்களை இணைத்தல் என்ற அடிப்படையிலேயே தொழிற் படுகின்றன. தனியார்துறையில் இன்று காணப்படும் பல கைத் தொழில்களை இலங்கையின் கைத்தொழில்கள் எனக் கூறுவதனைவிட வெளிநாட்டுக் கைத்தொழில் நிறுவனங்களின் ஒரு பகுதியாகத் தொழிற்படுகின்றன என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையின் அடிப்படையில் இறக்குமதிப் பிரதி யீட்டினையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனால் உயர்வகுப்பினரதும் மத்திய வகுப்பினரதும் கைத்தொழில் நுகர்வுப் பொருட்களை உற்பத்திசெய்வதில் தனியார்துறையினர் அதிக அக்கறைகொண்டிருந்தனரேயொழிய உள்நாட்டு மூலப்பொருள், வேலைவாய்ப்பு, சந்தை வாய்ப்பு, நீண்டகாலக் கைத்தொழில் வளர்ச்சிக்கான சாத்தியங்கள் போன்றவற்றினைக் கருத்திற்கொள்ள வில்லை. மேலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பண வீக்கநிலை, ஏற்றத்தாழ்வான வருமானப் பங்கீடு, பொருட்தட்டுப் பாடு, சந்தைத் தனியுரிமை போன்றவை காணப்படுவதால், இத் தகைய ஆடம்பரப் பொருட்களை மிகக் கூடியவிலையில் விற்று அதிக இலாபத்தினைப் பெறக்கூடியதாக இருக்கும். இலங்கையில் பல கைத்தொழிற் பொருட்களின் விலையில் 200 சதவீதத்திற்கு மேலான இலாபம்கூட உள்ளடக்கப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் பெரு மளவு தனியார்துறையினால் உற்பத்திசெய்யப்படும் வாசனைப் பொருள்கள், மின்சாரஉபகரணங்கள், ஆடைவகைகள் போன்றவை சாதாரண மக்களின் நுகர்வுத் தேவையினைப் பூர்த்திசெய்யக்கூடிய தொன்றாகக் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல கைத்தொழில்கள் இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களில் தங்கியிருப்பதால் இவற்றின் வளர்ச்சியானது செலாவணிப் பிரச்சினைகளை அதிகரிப்பதாகவும் அமைந்திருக்கும். 1976ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி அநேக கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும். மேலும் இலங்கையில் எல்லாக் கைத்தொழில்

அட்டவணை 5. IV

கைத்தொழில்களின் இயலளவுப் பயன்பாடும் உற்பத்தியில் வெளிநாட்டு மூலப்பொருட்களின் பங்கும் — 1976

(சதவீதமாக)

| கைத்தொழில் தொகுதி | இயலளவுப் பயன்பாடு | வெளிநாட்டு மூலப் பொருட்களின் பங்கு |
|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்பு | 75 | 36·7 |
| 2. புடைவைகள், ஆடை அணிகள், தோற் கைத் தொழில்கள் | 56 | 73.7 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளின் தயாரிப்புகள் | 45 | 43·0 |
| 4. தாள், தாள்உற்பத்திகள் | 58 | 60·3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாஸ்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு | 66 | 94·0 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்பு | 76 | 32·0 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் | 39 | 100·0 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரமும் போக்குவரத்துச் சாதனங்களினதும் தயாரிப்பு | 53 | 83·0 |
| 9. தயாரிக்கப்பட்ட ஏனைய உற்பத்திகள் | 45 | 77·1 |
| சராசரி | 64 | 69.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 1976.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் வெளிநாட்டு மூலப்பொருட்களின் பங்கு 69·5 சதவீதமாக வுள்ளது. இவ்வாறு கைத்தொழில்கள் வெளிநாட்டு மூலப்பொருள்களில் தங்கியிருப்பதால் முழு இயலளவில் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் இது தடையாக அமைந்துள்ளது. இலங்கையில் அதிகளவில் வெளிநாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழில்களின் இயலளவுப் பயன்பாடு குறைவானதாகவும், குறைந்தளவு வெளிநாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழில்களின் இயலளவுப் பயன்பாடு அதிகமாகவும் காணப்படுகின்றது. உணவு, குடிபானம், புகையிலை ஆகிய கைத்தொழில்களில் வெளிநாட்டு மூலப்பொருள் 36·7 சதவீதமாகவும், இயலளவுப் பயன்பாடு 75 சதவீதமாகவும், பெற்றோலியம், நிலக்கரி தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருள்களின் உற்பத்தியில் வெளிநாட்டு மூலப் பொருள்களின் பங்கு 32 சதவீதமாகவும், இயலளவுப் பயன்பாடு 76 சதவீதமாகவும் உள்ளது. அடிப்படை உலோகப் பொருட்களில் வெளிநாட்டு மூலப்பொருட்களின் பங்கு 100 சதவீதமாகவும், இயலளவுப் பயன்பாடு 39 சதவீதமாகவும், தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள் போன்றவற்றின் உற்பத்திகளில், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பங்கு 83 சதவீதமாகவும், இயலளவுப் பயன்பாடு 53 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள அநேக கைத்தொழில்கள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் தங்கியிருப்பது குறைந்த இயலளவுப் பயன்பாட்டுக்கு முக்கிய காரணமாகும்.

இலங்கையின் கைத்தொழில்கள் பெருமளவிற்கு வெளிநாட்டு மூலப்பொருட்களில் தங்கியிருக்கின்ற நிலையானது கைத்தொழில் அமைப்பினில் ஒரு தளம்பல் நிலையினையும், நிச்சயமற்ற தன்மையினையும் ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது. அரசாங்கமானது வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும்போதும், உயர்ந்த இறக்குமதி வரிகளை விதிக்கும் போதும் கைத்தொழில் உற்பத்தித் தொகையில் வீழ்ச்சியினையும் உற்பத்திச்செலவினில் அதிகரிப்பினையும் ஏற்படுத்துவதாக இருக்கும். சர்வதேசச் சந்தையில் ஏற்படும் விலைமாற்றங்களும், வர்த்தகச் சகட ஓட்டத் தாக்கங்களும்கூட இலங்கையின் கைத்தொழிற் றுறையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. சுருக்கமாகக் கூறின், சர்வதேச வர்த்தகமானது இலங்கையின் கைத்தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றினைப் பாதிக்கக்கூடிய நிலையிலிருக்கின்றது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள், குறைந்தளவு இயலளவுப் பயன்பாடு, அரசாங்கத்தின் உயர்ந்த இறக்குமதி வரிகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அனைத்தும் இணைந்து உள்நாட்டுக் கைத்தொழிற் பொருட்களின் விலையினை அதிகளவு அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிப்பதற்குக் காரணங்களாகின்றன. இதனால் இறுதியில் நுகர்வோர்களே கூடிய விலைகொடுத்துத் தவறான கைத்தொழிலாக்கத்திற்குப் பலியாகவேண்டி உள்ளனர்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பலவற்றில் கைத்தொழிலாக்கமான சொத்து, வருமானம் ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதற்குப் பதில் மேலும் இடைவெளியினை அதிகரித்துச் செல்வதற்கே வழிவகுத்துள்ளது. இலங்கையிலும் கைத்தொழில் அமைபபில் சில பெரிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலை உருவாகியுள்ளது. கைத்தொழில் விஞ்ஞான அமைச்சினால் 1975/76ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி 8 சதவீதமான கைத்தொழில் நிறுவனங்கள் மொத்தக் கைத்தொழில் வெளியீட்டில் 55 சதவீதத்தினை உற்பத்தி செய்வதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையானது இலங்கையின் கைத்தொழில்அமைப்பில் கைத்தொழில் தனியுரிமையானது வளர்ச்சி அடைந்துவருவதனையே எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. இது நாட்டின் பொருளாதார வளங்களும் பொருளாதாரப் பலமும் ஒரு சிலரின் கைக்குள் திரண்டு செல்வதற்கு வழிவகுப்பதாகவிருக்கும். மேலும், கைத்தொழில் தனியுரிமை வளர்ச்சியானது ஊழியச் செறிவுமிக்க சிறிய கைத்தொழில்களின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். எனவே, இலங்கையில் கைத்தொழில் துறையில் தனியுரிமை வளர்ச்சி அடைவதனைத் தடுப்பதற்கு அரசாங்கமானது தகுந்த நடைமுறைக் கொள்கைகளை அமுலாக்கல் அவசியமானதாகும்.

இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியானது பிரதேச ரீதியான பொருளாதார ஏற்றத்தாழ்வினை மேலும் அதிகரிப்பனவாகவே உள்ளது. இலங்கையில் 1976ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 2368 கைத்தொழில்களில் 1719 கைத்தொழில்கள் அல்லது 72·6 சதவீதமானவை கொழும்பு மாவட்டத்திலேயே அமைந்திருக்கின்றன. ஏனைய 21 மாவட்டங்களிலும் 27·4 சதவீதமான கைத்தொழில்களே காணப்படுகின்றன. இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிட கொழும்பு மாவட்டமானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பே பெருமளவு வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால் கைத்தொழில் வளர்ச்சியானது கொழும்பு மாவட்டத்தின் வளர்ச்சியினை மேலும் துரிதப்படுத்தி ஏனைய மாவட்டங்களுக்கும் கொழும்பு மாவட்டத்திற்கும் இடையிலான ஏற்றத் தாழ்வினை அதிகரிப்பதாகவேயுள்ளது. இலங்கையிலுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களில் 80 சதவீதமானவை கொழும்பிலிருந்து 15 மைல் சுற்றளவிலேயே இருக்கின்றன. தனியார்துறைக் கைத்தொழில்கள் பெருமளவு இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களில் தங்கியிருப்பதால் கொழும்புத் துறைமுகத்திற்கு அண்மையில் தொழிற்சாலைகள் அமைந்திருப்பது வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 5. V

### இலங்கையில் கைத்தொழில்களின் அமைவிடம் 1976
(மாவட்டரீதியாக)

| மாவட்டப் பிரிவு | பதிவுசெய்யப்பட்ட மொத்தக் கைத்தொழில்கள் | சதவிதம் |
|---|---|---|
| கொழும்பு | 1719 | 72·6 |
| கண்டி | 103 | 4·3 |
| மாத்தறை | 101 | 4·2 |
| கழுத்துறை | 95 | 4·0 |
| யாழ்ப்பாணம் | 59 | 2·5 |
| குருநாகல் | 55 | 2·3 |
| காலி | 48 | 2·3 |
| கேகாலை | 32 | 1·4 |
| புத்தளம் | 30 | 1·3 |
| மாத்தளை | 22 | 0·9 |
| வதுளை | 22 | 0·9 |
| ஏனைய 11 மாவட்டங்கள் | 82 | 3·3 |
| | 2368 | 100 |

மூலம்: மக்கள் வங்கி, பொருளியல் நோக்கு, 1977 ஒக்டோபர்.

கூடியதாகும். அத்துடன் தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திகளில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவை கொழும்பு நகரிலேயே சந்தைப்படுத்தப்படுகின்றன. இதனாலேயே அநேக தனியார்துறைக் கைத்தொழில்கள் கொழும்பிற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் அரசாங்கக் கைத்தொழில்களில் பெரும்பான்மையானவையே கொழும்பிற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் பெருமளவான கைத்தொழில்கள் அமைந்திருத்தல் அண்டவெளியை அசுத்தப்படுத்தி நீண்டகாலத்தில் சமூகத்தின் சுகாதார நிலைமையைப் பாதிப்பதால் பல புதிய பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு உருவாக்குவனவாக இருக்கும். எனவே இலங்கையின் கைத்தொழில்களின் அமைவிடத்தினைப் பன்முகப்படுத்தல் நீண்டகால நோக்கில் அவசியமானதொன்றாகும்.

இலங்கையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கைத்தொழிற் கொள்கையானது ஒரு ஆரோக்கியமான கைத்தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்தத் தவறிவிட்டது. மேலும் தவறான முறையில் கைத்தொழில் துறையில் சாதனங்கள் முடக்கப்பட்டுள்ளமை நீண்டகாலக் கைத்தொழில் வளர்ச்சியினைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் கைத்தொழில் துறையினை அரசாங்கமானது சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 6

# சனத்தொகை வளர்ச்சியும் சனத்தொகைக் கொள்கையும்

இன்று பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வேகமான சனத்தொகைப் பெருக்கம் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்ருகக் காணப்படுகின்றது. இந்நாடுகளில் ஒவ்வொரு 35—40 வருடங்களில் சனத்தொகையானது இரண்டுமடங்காக அதிகரிப்பதாக உள்ளது. உற்பத்தியில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பெருமளவிற்கு அதிகரிக்கும் சனத்தொகையினது நுகர்விற்குப் பயன்படுகிறதேயொழிய ஏற்கனவேயுள்ள சனத்தொகையினது நுகர்வினை அதிகரிப்பதற்குச் சாதகமாக இருப்பதில்லை. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஒரு மூளையுடனும் உழைக்கின்ற இரு கரங்களுடனும் பிறக்கின்றதென்பதனைவிட ஒரு வாயுடனும் வயிற்றுடனும் பிறக்கின்றது என்பது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குப் பொருந்துவதாக உள்ளது. இதனுலேயே பொருளாதார விருத்தியில் சனத்தொகைக் கட்டுப்பாடானது மிக முக்கியமானதொரு அம்சமாக இன்று காணப்படுகின்றது,

### சனத்தொகை வளர்ச்சி

இலங்கையின் சனத்தொகைக் கணிப்பீடானது 1871ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டபோது மொத்தச் சனத்தொகையானது 2·4 மில்லியனுகக் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீடானது மேற்கொள்ளப்பட்டபோது மொத்தச் சனத்தொகையானது 12·7 மில்லியனுக அல்லது 100 வருடத்தில் 5 மடங்காக அதிகரித்திருந்தது. 1976இல் இலங்கையின் சனத்தொகையானது 13·9 மில்லியனுக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1946ஆம் ஆண்டுவரை இலங்கையின் சனத்தொகையானது வேகமான வளர்ச்சியினைக் கொண்டிருக்கவில்லை. இக்காலப் பகுதியில் வருடத்திற்குரிய சனத்தொகை வளர்ச்சி வீதமானது 1953ஆம் ஆண்டளவில் 2·8 சதவீதமாகவும், 1963இல் 2·7 சதவீதமாகவும், 1971இல் 2·2 சதவீதமாகவும் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டுவரை வருடத்திற்குரிய சராசரி வளர்ச்சி வீதமானது ஏறக்குறைய 2·6 சதவீதமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6. I

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி 1871—1971

| காலம் | மொத்தச் சனத்தொகை (மில்லியன்களில்) | வருடச் சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1871 | 2·4 | — |
| 1881 | 2·8 | 1·4 |
| 1891 | 3·0 | 0·9 |
| 1901 | 3·6 | 1·7 |
| 1911 | 4·1 | 1·4 |
| 1921 | 4·5 | 0·9 |
| 1931 | 5·3 | 1.6 |
| 1946 | 6·7 | 0·9 |
| 1953 | 8·1 | 2·8 |
| 1963 | 10·6 | 2.7 |
| 1971 | 12·7 | 2·2 |
| 1976* | 13·9 | 1·7 |

மூலம்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

* கணிக்கப்பட்டது.

இருந்தது. 1960ஆம் ஆண்டிலிருந்து சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் சிறு வீழ்ச்சி ஏற்படத் தொடங்கி 1970க்குப் பின்பு இது கூடிய வீழ்ச்சிப்போக்கினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 1976இல் சனத்தொகை வளர்ச்சி வீதமானது 1·7 சதவீதமாக மட்டுமே உள்ளது.

எந்த ஒரு நாட்டினது சனத்தொகை வளர்ச்சியும் இயற்கை அதிகரிப்பு, குடிப்பெயர்ச்சி அதிகரிப்பு (Migration Increase) ஆகிய இரு காரணிகளாலும் நிர்ணயிக்கப்படும். 1946ஆம் ஆண்டுவரை இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பிற்கு குடிப்பெயர்ச்சி அதிகரிப்பானது பொறுப்புவாய்ந்த ஒரு காரணியாக அமைந்திருந்தது. குடிப்பெயர்ச்சி அதிகரிப்பென்னும்போது ஒருநாட்டிலிருந்து வெளியேறுபவர்களைவிட வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறுபவர் தொகை அதிகமாக இருக்கின்ற நிலையினைக் குறிப்பிடுகின்றது 1871லிருந்து 1946ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் சராசரிக் குடிப்பெயர்ச்சி அதிகரிப்பானது ஏறக்குறைய 27 சதவீதமாகக் காணப்பட்டது. 19ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து பெருந்தோட்ட விவசாயத்துறையின் விருத்திக்காகத் தென்னிந்தியத் தொழிலாளர்களைப் பெருமளவில் இலங்கையில் குடியேற்ற முனைந்தமையினுலேயே இந்நிலை ஏற்பட்டது. 1931லிருந்து பெருந்தோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தின் தேக்கநிலைமையினாலும் 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினாலும் குடிப்பெயர்ச்சியானது பெருமளவு தடைப்பட்டது.

### அட்டவணை 6. II

#### மொத்தச் சனத்தொகை அதிகரிப்பில் இயற்கை அதிகரிப்பு குடிப்பெயர்ச்சி அதிகரிப்பு ஆகியவற்றின் பங்கு 1871—1971

(சதவீதமாக)

| காலம் | இயற்கை அதிகரிப்பு | குடிப்பெயர்ச்சி அதிகரிப்பு |
|---|---|---|
| 1871—1881 | 33·3 | 66·7 |
| 1881—1891 | 58·2 | 41·8 |
| 1891—1901 | 40·4 | 59·6 |
| 1901—1911 | 65·9 | 34·1 |
| 1911—1921 | 81·4 | 18·6 |
| 1921—1931 | 81·3 | 18·7 |
| 1931—1946 | 94·8 | 5·2 |
| 1946—1953 | 94·6 | 5·4 |
| 1953—1963 | 101·2 | —1·2 |
| 1963—1971 | 104·8 | —4·8 |

மூலம்: குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

1960க்குப் பின்பு குடிப்பெயர்ச்சியானது சனத்தொகை அதிகரிப்பில் எந்தவிதப் பங்கினையும் செலுத்தவில்லை. 1964ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கையின்படி $5\frac{1}{4}$ இலட்சம் இந்தியத்தொழிலாளர்கள் ஒவ்வொரு வருடமும் 35,000 பேர்கள் என்ற அடிப்படையில் 15 வருடங்களில் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு வழிசெய்யப்பட்டது. இந்நடவடிக்கையானது சனத்தொகை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தும் ஒரு காரணியாகச் செயற்படுவதாகக் கூறமுடியாது. இவ்வுடன்படிக்கை 1964இல் கைச்சாத்திடப்பட்டாலும் 1971லிருந்தே இந்தியாவிற்கு இந்தியத் தொழிலாளரை அனுப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி வருடமொன்றுக்கு 35,000 தொழிலாளர்கள் அனுப்பப்படுவார்கள் என வரையறை செய்யப்பட்டபோதிலும் நடைமுறையில் 15,000—20,000 தொழிலாளர்களே அனுப்பப்படுகின்றனர். இத்தொகை மொத்தச் சனத்தொகை அதிகரிப்பில் சிறிய பாதிப்பினை மட்டுமே ஏற்படுத்த முடியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்பட்ட வேகமான சனத்தொகைப் பெருக்கத்திற்கு இயற்கை அதிகரிப்பே பெருமளவு பொறுப்பாக இருந்தது. இயற்கையான சனத்தொகை அதிகரிப்பானது இறப்பு விகிதத்திற்கும் பிறப்பு விகிதத்திற்குமிடையிலுள்ள வேறுபாட்டினைக் குறிப்பதாகும். இவ் வேறுபாடானது 1946ஆம் ஆண்டுவரை பெருமளவாக இருக்கவில்லை. 1946ஆம் ஆண்டு வரை இறப்பு விகிதமும் பிறப்பு விகிதமும் உயர்வாக இருந்தபோதிலும் பிறப்பு விகிதமானது இறப்பு விகிதத்தினைவிடச் சிறிதளவே உயர்வானதாகக் காணப்பட்டது. 1960ஆம் ஆண்டுவரை பிறப்பு விகிதத்தில் பெருமளவு மாற்றம் ஏற்படாத நிலையில் இறப்பு விகிதத்தில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1931க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் 1000த்திற்கு 23ஆக இருந்த இறப்பு விகிதமானது 1951—1960க்கும் இடைப்பட்ட காலத்தில் 1000க்கு 10·4ஆக வீழ்ச்சி அடைந்தது. 1946க்குப் பின்பு இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே பிறப்பு விகிதத்திற்கும் இறப்பு விகிதத்திற்கு மிடையில் அகன்ற இடைவெளியினை ஏற்படுத்தக் காரணமாக அமைந்ததுடன் துரித சனத்தொகைப்பெருக்கத்திற்கும் காரணமாக இருந்தது.

## அட்டவணை 6. III

இறப்பு விகிதம், பிறப்பு விகிதம், இயற்கை அதிகரிப்பு விகிதம்
1871—1970

| காலம் | பிறப்பு விகிதம் (ஆயிரத்திற்கு) | இறப்பு விகிதம் (ஆயிரத்திற்கு) | இயற்கை அதிகரிப்பு விகிதம் (%) |
|---|---|---|---|
| 1871—1881 | 27·4 | 22·7 | 0·47 |
| 1881—1890 | 29·4 | 24·3 | 0·51 |
| 1891—1900 . | 34·4 | 27·6 | 0·68 |
| 1901—1910 | 38·1 | 28·8 | 0·93 |
| 1911—1920 | 37·6 | 30·4 | 0·72 |
| 1921—1930 | 39·8 | 26·5 | 1·33 |
| 1931—1940 | 36·8 | 23·0 | 1·38 |
| 1941—1950 | 37·7 | 17·1 | 2·06 |
| 1951—1960 | 37·3 | 10·4 | 2·69 |
| 1961—1970 | 32·7 | 8·2 | 2·45 |

மூலம்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

1960ஆம் ஆண்டிற்குப் பின்பு இறப்பு விகிதத்தில் மட்டுமன்றி, பிறப்பு விகிதத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டுச் செல்வதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் 1871—1881ஆம் ஆண்டு வரையுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் ஆயிரத்திற்கு 27·4ஆக இருந்த பிறப்புவிகிதமானது **1951—1960**ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் ஆயிரத்திற்கு 37·3ஆக அதிகரித்த பின்பு 1961—1970ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் ஆயிரத்திற்கு 32·7ஆக மீண்டும் வீழ்ச்சியை எய்தியது. அண்மைக்காலத்தில் பிறப்புவிகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுச் செல்வது இலங்கையின் சனத்தொகைப் போக்கினில் குறிப்பிடக் கூடியதொரு அம்சமாக அமைந்துள்ளது. எனினும் கூடிய பிறப்பு விகிதத்தினைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகவுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வாழ்க்கைத்தர அதிகரிப்பினது விளைவால் ஏற்பட்ட தொன்றாகும். பொருளாதார வளர்ச்சியின்போது மக்களின் வருமானத்தில் கூடிய அதிகரிப்பேற்படுவதனால் போஷாக்குள்ள உணவு, சுகாதார வசதிபடைத்த இருப்பிடம், மருத்துவ சேவைகள் போன்றவற்றினைப் பெருமளவு பெறமுடிவதனால் இறப்பு விகிதத்தில் வீழ்ச்சியேற்படுவது இயல்பாகும். ஆனால் இலங்கையில் இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது விரைவான பொருளாதார வளர்ச்சியினது விளைவு எனக் கூறமுடியாது. அரசாங்கத்தினது சமூக செலவீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இறப்பு விகித வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. **1930**ஆம் ஆண்டைத் தொடர்ந்து பரந்த அடிப்படையில் தொற்றுநோய்களைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ வசதிகள், சுகாதார வசதிகள் போன்றன பெருமளவிற்கு நோய்களைக் கட்டுப்படுத்தக் காரணமாக இருந்தன. 2ஆம் மகாயுத்தத்தின் பின்பு மலேரியா நோயினை ஒழித்துக்கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட டீ. டீ. ரி. இயக்கமானது (D. D. T. Campaign) இறப்பினைக்கட்டுப்படுத்திய முக்கியகாரணியாக அமைந்திருந்தது. இதனாலேயே **1946**ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் ஏற்பட்ட பெரும் சனத்தொகை அதிகரிப்பினை (Michael Lipton) மைக்கல் லிப்டன் என்பவர் '' டீ. டீ. ரி. சந்ததியினர் '' (D. D. T. Generation) என வர்ணித்தார். மேலும் இலங்கையில் இலவசக் கல்வி, உணவுமானியம் போன்றவையும் இறப்பினைக் கட்டுப்படுத்துவதற்குத் துணைக் காரணிகளாக அமைந்துள்ளன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பல அயனமண்டத்தில் அமைந்திருப்பது கூடிய பிறப்பு விகிதத்திற்கு முக்கிய காரணியாகவுள்ளது. அயனமண்டலத்திலுள்ள ஆண்களும், பெண்களும் குறைந்த வயதிலேயே பருவமடைவதுண்டு. பருவமடைந்த ஒரு பெண்ணுக்கு திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையினை நடத்துதல் அல்லது தொடர்ந்து கல்வி கற்று வேலைவாய்ப்பினைப் பெறுதல் ஆகிய இரு தெரிவுகள் மட்டுமே உள. இலங்கையில் நீண்ட காலமாகப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கான வேலைவாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருந்ததனால் திருமணம் செய்தல் மட்டுமே சாத்தியமான ஒரு தெரிவாக அமைந்திருந்தது. மேலும் திருமணம் செய்யாது ஒரு பெண் வீட்டில் இருத்தல் என்பது பெற்றோர்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் அமைந்திருந்தது. இதனால் பெண்கள் மிக இளமைப் பருவத்தில் திருமணம் செய்வதனால் கூடிய பிள்ளைகளைப் பெறும் சக்தி வாய்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இலங்கையில் சராசரியாகப் பெண்களுக்கான பிள்ளைப்பேற்று வயது 15 இலிருந்து 45 வயது வரை எனக் கணிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, 18 வயதினில் திருமணஞ்செய்யும் பெண் தனது குடும்ப வாழ்க்கையில் ஏறக்குறைய 27 வருடங்கள் பிள்ளைகளைப் பெறக்கூடிய சக்தி படைத்தவளாகக் காணப்படுவாள். இதனாலேயே அயனமண்டலத்திலுள்ள ஆசிய நாட்டுப் பெண்கள் கூடிய பிள்ளைகளைப் பெறும் சக்தி படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இலங்கையின் சமூக பொருளாதார நிலையும்கூட நீண்டகாலமாகப் பிறப்பு விகிதமானது உயர்வாக அமைந்திருப்பதற்குத் தூண்டுதலாக இருந்தது. விவசாய சமூகங்களில் ஆண்பிள்ளைகள் பெற்றோர்களுக்கு ஒரு சொத்தாக மட்டுமன்றி வயது முதிர்ந்த காலத்தில் காப்புறுதியாகவும் காணப்படுகின்றார்கள். கூடிய பிள்ளைகள் இருப்பது விவசாயிகளுக்கு வயலில் வேலைசெய்வதற்கு இலகுவாக இருப்பதுடன், அவர்களின் முதுமைக்காலத்தில் சிறந்த பாதுகாவலராகவும் இருக்கமுடியுமென்பது பொதுவான நம்பிக்கையாகும். எமது நாட்டில் விவசாயிகளுக்கு முதுமைக்காலத்தில் ஓய்வூதியமோ, காப்புறுதியோ இன்மையினால் முழுக்கமுழுக்கப் பிள்ளைகளையே நம்பியிருக்கவேண்டியுள்ளது. மேலும் சமூக சமயவாழ்க்கை முறையும் பிள்ளைச்செல்வத்தினை ஊக்குவிக்கக்கூடியதொன்றாகவுள்ளது.

1960ஆம் ஆண்டிற்குப் பின்பு பிறப்புவிகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதற்கு இரு காரணிகள் முக்கியமானவையாகும். இலங்கையில் 1953லிருந்து ஆரம்பிக்கப்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கமானது இன்று பரந்த அடிப்படையில் வெற்றிகரமாக ஏற்படுத்தப்பட்டமை முதலாவது காரணமாகும். அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, வேலையின்மை, வீட்டுப் பிரச்சினை போன்றவற்றினால் மக்கள் அதிகளவு பிள்ளைகளைப் பெற விரும்பாது குடும்பக்கட்டுப்பாட்டினை மேற்கொள்வது முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அத்துடன் மருத்துவத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாகப் பல்வேறு வகையான குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை இலகுவானதும் ஆபத்தற்றதும் மட்டுமன்றி குறைந்த செல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைக் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. இம்முறைகளை இலங்கைபோன்ற கல்வியறிவில் கூடிய மக்களைக்கொண்ட சிறிய நாட்டில் பரந்த அடிப்படையில் வெற்றிகரமாக மேற்கொள்வது இலகுவானதாக அமைந்துள்ளது.

அண்மைக்காலத்தில் திருமணவயதில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது இரண்டாவது காரணமாகும். 1896இல் 21 வயதுக்குட்பட்ட பெண்களில் 75·9 சதவீதத்தினரும் ஆண்களில் 6·6 சதவீதத்தினரும் திருமணம் செய்தவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் 1951இல் 21 வயதிற்குட்பட்ட பெண்களில் 32 சதவீதத்தினரும் ஆண்களில் 0·6 சதவீதத்தினருமே திருமணம் செய்தவர்களாக இருந்தனர். 1901ஆம் ஆண்டு ஆண்களின் திருமணத்திற்குரிய சராசரி வயது 24·6 ஆகவும் பெண்களது 18·3ஆகவுமிருந்தது. 1953இல்

### அட்டவணை 6. IV

**திருமணத்திற்குரிய சராசரி வயது 1901—1971**

| காலம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 1901 | 24·6 | 18·3 |
| 1911 | 26·5 | 20·8 |
| 1921 | 27·0 | 21·4 |
| 1946 | 27·0 | 20·7 |
| 1953 | 27·2 | 20·9 |
| 1963 | 27·9 | 22·1 |
| 1971 | 28·0 | 23·5 |

மூலம்: United Nations, **Population of Sri Lanka**, 1977.

ஆண்களின் திருமணத்திற்கான சராசரிவயது 27ஆகவும், 1971இல் 28 ஆகவும் அதிகரித்துள்ளது. இதேபோன்று பெண்களினது திருமணத்திற்குரிய சராசரி வயது 1953இல் 20·9லிருந்து 1971இல் 23·5ஆக உயர்ந்துள்ளது. இன்று பெண்கள் பெருமளவிற்கு உயர் கல்வியினைக் கற்கவும் வேலைவாய்ப்புப் பெறவும் முடிவதாலேயே அவர்களின் திருமணத்திற்கான வயது பிற்போடப்பட்டுள்ளது, ஆண்களைப் பொறுத்தமட்டில் வேலையின்மைப் பிரச்சினையானது அவர்களின் திருமணவயதினைப் பிற்போடும் சக்திவாய்ந்த காரணியாக அமைந்துள்ளது. ஏனெனில், எமது நாட்டில் ஆண்களுக்குத் திருமணத்திற்கான புருசஇலட்சணமாக உத்தியோகமே காணப்படுகின்றது. இருபாலாரது திருமணவயதில் ஏற்பட்ட அதிகரிப்பானது பிள்ளைகளைப் பெறக்கூடிய அளவினைக் கட்டுப்படுத்துவதால் பிறப்பு விகிதத்தில் இது வீழ்ச்சியினை ஏற்படுத்தக் காரணமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சனத்தொகையின் பரம்பல்**

ஒருநாட்டினது சனத்தொகைப் பிரச்சினையினை விளக்குவதற்கும் மனிதவளத் திட்டமிடலைச் சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கும் சனத்தொகையின் பரம்பலை அறிதல் அவசியமானதாகும். சனத்தொகைப் பரம்பலினைப் பிரதேச ரீதியாகவும், நகர கிராம அடிப்படையிலும், வயது, கல்வி என்ற வகையிலும் விளக்கமுடியும். இலங்கையின் சனத்தொகைப் பரம்பலிலே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகைப் பரம்பலில் காணப்படுகின்ற பல பொதுவான பண்புகளை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காலனித்துவ ஆட்சியின் போது விருத்திசெய்யப்பட்ட வலயத்தில் கூடிய சனத்தொகையினையும் விருத்திசெய்யப்படாத பகுதியில் குறைந்த சனத்தொகையினையும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையிலும் ஈரலிப்புப் பிரதேசம் எனப் புவியியலாளர்களால் விளக்கப்படுகின்ற 75″க்குக் கூடிய மழை பெறும் வலயங்களே பிரித்தானிய அரசாங்கத்தினல் பெருந்தோட்ட விவசாய வளர்ச்சிக்காக விருத்திசெய்யப்பட்ட வலயமாகும். 1871ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 58·4 சதவீதமான சனத்தொகையானது விருத்தி

அட்டவணை 6. V

**விருத்தியடைந்த வலயம், விருத்தியடையாத வலயம் ஆகியவற்றினிடையே சனத்தொகைப் பரம்பல் 1871—1971**

*(சதவீதமாக)*

| காலம் | விருத்தியடைந்த வலயம் (ஈரலிப்புப் பிரதேசம்) | விருத்தி அடையாத வலயம் (வரண்ட பிரதேசம்) |
|---|---|---|
| 1871 | 58·4 | 41·6 |
| 1881 | 59·6 | 40·4 |
| 1891 | 60·5 | 39·5 |
| 1901 | 62·7 | 37·3 |
| 1911 | 63·2 | 36·8 |
| 1921 | 63·8 | 36·2 |
| 1931 | 65·8 | 34·2 |
| 1946 | 66·3 | 33·7 |
| 1953 | 64·6 | 35·4 |
| 1963 | 62·0 | 38·0 |
| 1971 | 60·5 | 39·5 |

மூலம்: United Nations, **Population of Sri Lanka, 1977.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்த வலயத்திலேயே காணப்பட்டது. 1971ஆம் ஆண்டில் விருத்தி அடைந்த வலயத்தில் காணப்பட்ட சனத்தொகையானது 60·5 சதவீதமாக அதிகரித்தது. கடந்த 100 வருடங்களாக இலங்கையின் சனத்தொகையில் பெரும்பகுதி விருத்தியடைந்த வலயத்திலேயே செறிந்துள்ளது. 1871இல் விருத்தியடையாத வலயத்தின் சனத்தொகையானது 41·6 சதவீதமாக இருந்து 1971இல் 39·5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. விருத்தியடையாத வலயமானது 75″க்குக் குறைவான மழைவீழ்ச்சியினைப் பெறுகின்ற வலயமாக இருப்பதனால் பெருந்தோட்ட விவசாயத்திற்கு ஏற்றதாக இருக்கவில்லை. இதனால் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இவ்வலயமானது விருத்திசெய்யப்படாமையினால் கூடிய சனத்தொகைக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கூடியதாக இவ்வலயம் காணப்படவில்லை. 1948ஆம் ஆண்டிற்குப் பின்புகூட விருத்தியடையாத வலயங்களில் மக்கள் குடியேறுவதனைஊக்குவிப்பதற்கான பெரும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கையின் ஒரு சதுர மைலுக்கான சனத்தொகைச் செறிவினைவிட விருத்தியடைந்த வலயத்தின் ஒரு சதுர மைலுக்கான சனத்தொகைச் செறிவு இருமடங்கினைவிட அதிகமாகக் காணப்படுகிறது. விருத்தியடையாத வலயத்தின் ஒரு சதுர மைலுக்கான சனத்தொகைச் செறிவானது முழு இலங்கையின் ஒரு சதுரமைலுக்கான சனத்தொகைச் செறிவின் அரைவாசியாகவுள்ளது. 1871ஆம் ஆண்டு முழு இலங்கையின் ஒரு சதுர மைலுக்கான சனத்தொகைச் செறிவு 94·8 ஆகவும், விருத்தியடைந்த வலயத்தினது ஒரு சதுர

அட்டவணை 5. VI

சனத்தொகைச் செறிவு 1871—1971

(ஒரு சதுரமைலுக்கு)

| காலம் | முழு இலங்கை | விருத்தியடைந்த வலயம் (ஈரலிப்பு வலயம்) | விருத்தியடையாத வலயம் (வரண்ட வலயம்) |
|---|---|---|---|
| 1871 | 94·8 | 239·7 | 51·3 |
| 1901 | 140·8 | 382·3 | 68·3 |
| 1931 | 209·5 | 597·7 | 93·0 |
| 1946 | 262·8 | 755·0 | 115·1 |
| 1953 | 319·7 | 904·7 | 147·2 |
| 1963 | 417·7 | 1,122·3 | 206·3 |
| 1971 | 500·9 | 1.313·4 | 257·3 |

மூலம்: United Nations, **Population of Sri Lanka,** *1977.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைலுக்கான சனத்தொகைச்செறிவு 239·7 ஆகவும், விருத்தியடையாத வலயத்தினது ஒரு சதுரமைலுக்கான சனத்தொகைச் செறிவு 51·3 ஆகவும் இருந்தது. இந்தத் தொடர்பு விகிதத்தில் கடந்த 100 ஆண்டுகளாகப் பெருமளவு மாற்றங்கள் ஏற்படாமையினை அட்டவணை 6. VIஇன் மூலம் அவதானிக்கமுடிகின்றது. 1971ஆம் ஆண்டு முழு இலங்கையின் சனத்தொகைச் செறிவானது ஒரு சதுர மைலுக்கு 500·9 பேராகும். இது உலகின் ஒரு சதுரமைலுக்கான அடர்த்தியினைவிட 8 மடங்கு கூடியதாகும். இதே காலத்தில் விருத்தியடைந்த வலயத்தினது ஒரு சதுர மைலுக்கான சனத்தொகைச் செறிவு 1313·4 பேராகவும் விருத்தியடையாத வலயத்தின் சனத்தொகைச் செறிவு 257·3 பேராகவும் இருந்தது. கடந்த 100 வருடங்களில் விருத்தியடைந்த வலயத்திலும் விருத்தி அடையாத வலயத்திலும் சனத்தொகைச் செறிவு ஐந்துமடங்கால் அதிகரித்துள்ளது.

இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களையும் குறைந்த அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள், இடைநிலை அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள், கூடிய அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள் என மூன்று வகைகளாகப் பாகுபடுத்தமுடியும். இதில் சதுர மைலுக்கு 400க்குக் குறைவான சனத்தொகையினைக் கொண்ட மாவட்டங்களைக் குறைந்த அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள் எனவும், 400—1000 வரை சனத்தொகையினைக் கொண்ட மாவட்டங்களை இடைநிலை அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள் எனவும், 1000க்குமேற்பட்ட சனத்தொகையினைக் கொண்ட மாவட்டங்களை உயர் அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்கள் எனவும் வகைப்படுத்தலாம். அட்டவணை 6. VIIஇன் படி குறைந்த அடர்த்தியினைக்கொண்ட 10 மாவட்டங்களும் விருத்தியடையாத வலயத்திலேயே அமைந்துள்ளன. இடைநிலை அடர்த்தியினைக் கொண்ட 6 மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனையவை விருத்தியடைந்த வலயத்திலுள்ளன. விருத்தியடைந்த வலயத்திலுள்ள கொழும்பு, கழுத்துறை, காலி, கண்டி, மாத்தறை, கேகாலை ஆகிய ஆறு மாவட்டங்களுமே இலங்கையிலுள்ள உயர் அடர்த்தி வலயங்களாக உள்ளன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 20 சதவீதத்தினைக் கொண்ட கொழும்பு, காலி, கழுத்துறை, குருணாகலை, கேகாலை, மாத்தறை ஆகிய 6 மாவட்டங்களில் மட்டும் மொத்தச் சனத்தொகையில் 55 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் வசிக்கின்றார்கள். ஆனால் மொத்த நிலப்பரப்பில் 34 சதவீதத்தினைக் கொண்டுள்ள விருத்தி அடையாத வலய மாவட்டங்களான வவுனியா, மன்னார், மொனருகலை, பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றில் மொத்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6. VII

1971ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி மாவட்டரீதியான சனத்தொகை அடர்த்தி

| சனத்தொகை அடர்த்திப் பிரிவு | மாவட்டங்கள் |
|---|---|
| சதுரமைலுக்கு 200 பேருக்குக் குறைவு | மன்னர், வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மொனருகலை. |
| சதுரமைலுக்கு 200—400 பேருக்கு இடைப்பட்டது | புத்தளம், சிலாபம், மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை. |
| சதுரமைலுக்கு 400—800 பேருக்கு இடைப்பட்டது | யாழ்ப்பாணம், குருநாகலை, மாத்தளை, வதுளை, இரத்தினபுரி. |
| சதுரமைலுக்கு 800—1000 பேருக்கு இடைப்பட்டது | நுவரெலியா. |
| சதுரமைலுக்கு 1000—2000 பேருக்கு இடைப்பட்டது | களுத்துறை, காலி, கண்டி, மாத்தறை, கேகாலே. |
| சதுரமைலுக்கு 2000 பேருக்கு மேல் | கொழும்பு. |

மூலம்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

சனத்தொகையில் 8 சதவீதமானவர்களே வசிக்கின்றனர்கள். விருத்தி அடையாத வலயத்திலுள்ள 11 மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமே இடைநிலைச் சனத்தொகையினைக் கொண்டதாக உள்ளது. ஏனைய 10 மாவட்டங்களும் சிறந்தமுறையில் விருத்தி செய்யப்படாமையே குறைவான சனத்தொகையடர்த்திக்குக் காரணமாகும்.

இன்று ஒரு நாட்டினது பொருளாதார வளர்ச்சி நிலையினை அறிந்துகொள்வதற்கான ஒரு சுட்டெண்ணுக நகர கிராமிய சனத்தொகைபற்றிய கணிப்பீடானது அமைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியின்போது மொத்தச் சனத்தொகையில் நகர சனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையின் பங்கு அதிகரித்துச் செல்வது பொதுவானதொரு அம்சமாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் நகர சனத்தொகையின் பங்கு அதிகமாகவும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நகர சனத்தொகையின் பங்கு குறைவாகவும் அமைந்திருக்கும். மொத்தச் சனத்தொகையில் நகர சனத்தொகையின் பங்கு அவுஸ்திரேலியாவில் 85·56 சதவீதமாகவும், ஜப்பானில் 72·17 சதவீதமாகவும் உள்ளது. அபிவிருத்திஅடைந்துவரும் நாடுகளான இந்தியாவின் சனத்தொகையில் நகர சனத்தொகையானது 19·91 சதவீதமாகவும், மலேசியாவில் 27·88 சதவீதமாகவும் உள்ளது. அநேக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நகர சனத்தொகையின் பங்கு 30 சதவீதத்திற்குக் குறைவானதாகும்.

## அட்டவணை 6. VIII

**உலக நாடுகள் சிலவற்றினது நகர சனத்தொகையின் பங்கு**
(சதவீதமாக)

| நாடுகள் | குடிசனமதிப்பு ஆண்டு | நகர சனத்தொகை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | 1971 | 85·56 |
| இந்தியா | 1971 | 19·91 |
| ஜப்பான் | 1970 | 72·17 |
| மலேசியா | 1970 | 27·88 |
| நியூசிலாந்து | 1970 | 31·74 |

மூலம்: U. N. World Demographic Year Book 1973.

இலங்கையில் 1871ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டில் நகர சனத்தொகையானது 10·8 சதவீதமாகவும், கிராமிய சனத்தொகையானது 89·2 சதவீதமாகவும் இருந்தது. கடந்த 100 வருடங்களில் இலங்கையின் நகர சனத்தொகையில் பெரும் அதிகரிப்போ கிராமிய சனத்தொகையில் பெரும் வீழ்ச்சியோ ஏற்படவில்லை. 1971ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி, இலங்கையின் நகர சனத்தொகையானது 22·4 சதவீதமாகவும் கிராமிய சனத்தொகையானது 77·6 சதவீதமாகவும் மட்டுமே மாற்றமடைந்திருந்தது. கடந்த 100 வருடங்களில் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் வளர்ச்சியோ அல்லது அடிப்படையான மாற்றங்களோ ஏற்படாததன் விளைவாக நகர கிராமிய சனத்தொகையில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. இலங்கையில் நகரம், கிராமம் பற்றிய பாகுபாடானது நிருவாக ரீதியான வரையறையேயொழிய நகரத்திற்கான தகைமை விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவையல்ல. பொதுவாக இலங்கையில் நகர சனத்தொகை என்னும்போது மாநகரசபை, நகரசபை, பட்டினசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 6. IX

### நகர கிராமிய சனத்தொகையின் பங்கு 1871—1971

(சதவீதமாக)

| காலம் | நகர சனத்தொகை | கிராமிய சனத்தொகை* |
|---|---|---|
| 1871 | 10·8 | 89·2 |
| 1901 | 11·6 | 88·4 |
| 1931 | 13·9 | 86·1 |
| 1946 | 15·4 | 84·6 |
| 1953 | 15·3 | 84·7 |
| 1963 | 19·1 | 80·9 |
| 1971 | 22·4 | 77·6 |

மூலம்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

* பெருந்தோட்ட சனத்தொகையினையும் உள்ளடக்கியது.

ஆகிய தலத்தாபனப் பிரிவுகளில் வாழும் மக்களையே குறித்து நிற்கின்றது. ஆனால், இலங்கையில் பல மாநகரசபை எல்லைக்குள்ளேயே பின்தங்கிய கிராமங்களும் காணப்படுகின்றன. அதாவது, நகர சனத்தொகையெனக் கணிக்கப்படும் சனத்தொகைக்குள்ளேயே கணிசமான அளவு கிராமிய சனத்தொகையானது காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் உண்மையான நகர சனத்தொகையானது, புள்ளிவிபரரீதியாகக் கணிக்கப்பட்ட சனத் தொகையினைவிட மிகக் குறைவாகவே இருக்கமுடியும்.

இலங்கையின் மொத்த நகர சனத்தொகையில் 51 சதவீதம் கொழும்பு மாவட்டத்திலேயே காணப்படுகின்றது. மேலும் இலங்கையில் சனத்தொகைகூடிய முதல் 6 நகரங்களான கொழும்பு, தெகிவளை, யாழ்ப்பாணம், மொறட்டுவை, கண்டி, கோட்டை ஆகியவற்றில் நான்கு நகரங்கள் கொழும்பு மாவட்டத்திலேயே இருக்கின்றன. இலங்கையில் பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வு பரந்த அடிப்படையில் விருத்தியடைந்த வலயம் விருத்தியடையாத வலயம் என்ற அடிப்படையில் பாகுபடுத்தப்படுகின்றது. உள்ளார்ந்தரீதியாக நோக்கும்போது கொழும்பு மாவட்டம், ஏனைய மாவட்டங்கள் என்ற அடிப்படையில் பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வினை விளக்குதலே பெருமளவிற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கையின் சனத்தொகையில் இளம் வயதினரின் பங்கு அதிகளவில் காணப்படுவது குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகவுள்ளது. கூடிய பிறப்பு விகிதத்தினைக்கொண்ட நாடுகளது சனத்தொகையில் கூடியபங்கு சிறுவர்களாகவும், இளைஞர்களாகவும் இருப்பது இயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகும். 1911 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்போது 14 வயதுக்குட்பட்டோர் மொத்தச் சனத்தொகையில் 41 சதவீதமாகக் காணப்பட்டனர். 1971ஆம் ஆண்டு இத் தொகையானது 39 சதவீதமாகக் குறைந்தது. இதே போன்று 15 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்களின் எண்ணிக்கையானது 1911இல் 56·7 சதவீதமாகவும் 1971இல் 56·8 சதவீதமாகவும் இருந்தது. 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கையானது 1911இல் 2·3 சதவீதமாக இருந்து 1971இல் 4·2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். இறப்பு விகிதமானது வீழ்ச்சியடையும்போது முதியவர்களின் எண்ணிக்கையிலும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்படுவதாகவிருக்கும்.

அட்டவணை 6. X

வயது அடிப்படையில் சனத்தொகைப் பரம்பலும் அண்டிவாழ்பவர் விகிதமும் 1911—1971

(சதவீதமாக)

| குடிமதிப்பு ஆண்டு | வயதுப் பிரிவு 0—14 | 15—65 | 65க்கு மேல் | அண்டி வாழ்பவர் விகிதம் |
|---|---|---|---|---|
| 1911 | 41·0 | 56·7 | 2·3 | 76·1 |
| 1921 | 39·4 | 58·2 | 2·4 | 71·8 |
| 1946 | 37·3 | 59·2 | 3·5 | 68·8 |
| 1953 | 39·6 | 56·9 | 3·5 | 76·1 |
| 1963 | 41·6 | 54·8 | 3·6 | 84·2 |
| 1971 | 39·0 | 56·8 | 4·2 | 76·1 |

மூலம்: United Nations, **Population of Sri Lanka,** *1977.*

சனத்தொகையில் 14 வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை பெருமளவு காணப்படுவதனால் உற்பத்தியில் ஈடுபடக்கூடிய ஊழியப் படையினளவு குறைவானதாகவே காணப்படுகின்றது. உற்பத்தியில் ஈடுபடக்கூடிய ஊழியப்படை என்னும்போது சிறுவர்கள் முதியவர்களைத் தவிர்ந்த சனத்தொகையினை அல்லது 15 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்களையே கருதுகின்றது. இலங்கையில் ஊழியப்படையானது மொத்தச் சனத்தொகையில் ஏறக்குறைய 56 சதவீதமாகவே காணப்படுகின்றது. இதனாலேயே இலங்கையில் அண்டிவாழ்பவர்கள் விகிதம் மிக அதிகமானதாக அமைந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மற்றவர்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் அண்டிவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்கள் விகிதம் உயர்வானதாகக் காணப்படுகின்றது. சனத்தொகையில் அதிகமாகக் காணப்படும் குழந்தைகள், பெற்ருேர்களில் தங்கியிருப்பவர்களாகவே உள்ளனர். பொதுவாகக் குழந்தைகள் உடைக்கத்தெரிந்த ஊழியமேயொழிய உற்பத்தியினை மேற்கொள்ளக் கூடிய ஊழியமாகக் கருதப்படுவதில்லை. இதேபோன்று முதியவர் களும் உழைக்க முடியாத சனத்தொகையாகும். மேலும் ஊழியப் படையிலுள்ள பெண்களின் அளவு மிகக் குறைவாக இருப்பதனுல் உற்பத்தியில் ஈடுபடுபவர்களில் 15 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிருர்கள். அண்டி வாழ்பவர்களின் விகிதமானது இந்தியாவில் 82·3 சதவீதமாகவும், மலேசியாவில் 94·3 சதவீதமாகவும், தாய்லாந்தில் 92·9 சதவீதமாகவும் உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உற்பத்தி

## அட்டவணை 6. XI

### நாடுகள்ரீதியாகச் சனத்தொகையின் வயதமைப்பும் அண்டிவாழ்பவர் விகிதமும்

(சதவீதமாக)

| நாடுகள் | குடிமதிப்பு ஆண்டு | வயதுப் பிரிவு 0—14 | 15—64 | 65க்கு மேல் | அண்டிவாழ் பவர் விகிதம் |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 1971 | 41·8 | 54·9 | 3·3 | 82·3 |
| ஜப்பான் | 1970 | 23·9 | 69·0 | 7·1 | 44·9 |
| மலேசியா | 1970 | 45·6 | 51·5 | 2·9 | 94·3 |
| பிரான்ஸ் | 1968 | 23·8 | 62·8 | 13·4 | 59·1 |
| இங்கிலாந்து | 1971 | 23·9 | 63·0 | 13·1 | 58·8 |
| அமெரிக்கா | 1970 | 28·5 | 61·6 | 9·9 | 62·2 |
| தாய்லாந்து | 1970 | 45·1 | 51·0 | 3·9 | 92·9 |

மூலம்: United Nations, Demographic Year Book 1973.

யீடுபடுகின்ற சனத்தொகையினளவு அதிகமாக இருப்பதனுல் அண்டி வாழ்பவர்களின் விகிதமும் குறைவாக அமைந்திருக்கும். வளர்ச்சியடைந்த நாடுகளில் அண்டி வாழ்பவர்களின் விகிதம் 65 சதவீதத்திற்குக் குறைவானதாகவே அமைந்திருக்கும்.

ஆசிய நாடுகளிலே சனத்தொகையில் கூடியபங்கு கல்வியறிவு உள்ளவர்களைக்கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்ருகும். இலங்கையின் சனத்தொகையில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் 1953இல் 58·4 சதவீதமாக இருந்து 1970இல் 84 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1953ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் பள்ளிக்கூடம் செல்லாதவர்கள், ஆரம்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 6. XII

கல்வித்தகமைரீதியான சனத்தொகைப் பரம்பல் 1953—1970
(சதவீதமாக)

| கல்வித் தகைமை | 1953 | 1963 | 1970 |
|---|---|---|---|
| பள்ளிக்கூடம் செல்லாதவர்கள் | 41·6 | 36·6 | 16·0 |
| ஆரம்பக் கல்வி | 46·8 | 39·3 | 39·0 |
| இடைநிலைக் கல்வி | 9·8 | 19·6 | 32·0 |
| க. பொ. த. (சாதாரணம்) சிரேஷ்ட பொதுத் தராதரம் (G. C. E. (O/L), S. S C.) | 0·9 | 3·4 | 12·0 |
| உயர்கல்வியும், தொழில்நுட்பப் பயிற்சியும் | 0·9 | 1·1 | 1·0 |

மூலம்: குடிசன மதிப்பீடு 1953, 1963.
சமூக பொருளாதார அளவீடு 1969/70.

கல்வி அற்றவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டது. இடைநிலைக் கல்வி கற்றவர்களினதும், கல்விப் பொதுத் தராதரம், சிரேட்ட பொதுத் தராதரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களினதும் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் உயர்கல்வி, தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையானது கடந்த 25 வருடங்களாக ஏறக்குறைய 1 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றது. சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்காமைமட்டுமன்றி குறைந்த பொருளாதார வளர்ச்சி காரணமாக உயர்கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி பெற்றோர்களுக்கான வேலைவாய்ப்புக்களிலும் பெருமளவு அதிகரிப்பு ஏற்படாமையுமே இதற்குக் காரணமாகும்.

### சனத்தொகை வளர்ச்சியும் பொருளாதார விருத்தியும்

சனத்தொகை வளர்ச்சியானது பொருளாதார விருத்திக்குச் சாதகமானதா அல்லது விருத்தியினைக் கட்டுப்படுத்தக்கூடியதா என்ற விடயம்பற்றிப் பொருளியலாளர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்குச் சனத்தொகை வளர்ச்சியானது சாதகமானது என வாதிடுவோர் மனிதனை உற்பத்திக்காரணி என்ற அடிப்படையில் அணுகுகின்றார்கள். மனிதனே சிறந்ததும், பயன்கூடியதுமான ஒரு உற்பத்திக் காரணி என இவர்கள் வாதிடுகின்றனர். இன்று பொருளியலாளர்கள் மனிதவளங்களையும், இயந்திரங்கள், உபகரணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் என்பனபோன்று பொருளாதார வளமாகவே கருதுகின்றூர்கள். மனிதர்கள் நிர்வாக, விஞ்ஞான, பொறியியல், தொழில் நுட்ப, கைத்திற வல்லமைகளைக் கொண்டிருப்பதால் பொருளாதார விருத்திக்கு இவை இன்றியமையாதனவாக இருக்கின்றன. கூடிய மனிதசக்திகளைக் கொண்ட நாடுகளில் இவை அதிகமாகக் காணப்படும் சாத்தியங்கள் இருப்பதனுல் துரிதமான பொருளாதார விருத்தியினை ஏற்படுத்தல் இலகுவாக இருக்கும் என்பது இவர்கள் வாதமாகும்.

சனத்தொகைகூடிய நாடுகளில் ஊழியமானது மிக அதிகமாகக் காணப்படுவதால், கைத்தொழிலாக்கத்திற்குத் தேவையான மலிவான ஊழியத்தினைப் போதியளவு பெறக்கூடியதாக இருக்கும். மலிவான ஊழியமானது கைத்தொழிலாக்கத்திற்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். பொதுவாகப் பொருட்களின் உற்பத்திச் செலவில் கூடிய பங்கினை அல்லது கணிசமான பங்கினை ஊழியமானது கொண்டிருக்கின்றது. எனவே, மலிவான ஊழியமானது காணப்படும்போது கைத்தொழிற் பொருட்களின் உற்பத்திச் செலவானது குறைவாக இருப்பதனுல் குறைந்தவிலையில் பொருட்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்தக்கூடியதாக இருக்கும். இன்று ஜப்பான் போன்ற நாடுகளின் கைத்தொழிற் பொருட்களுக்குப் பெரும் சந்தைவாய்ப்புக்கள் இருப்பதற்குக் கூடிய தரம் மட்டுமன்றி குறைந்தவிலையுமே காரணமாகும்.

சனத்தொகை கூடிய நாடுகளில் உற்பத்திப் பொருட்களுக்குப் பெருமளவு உள்நாட்டுக் கேள்வியானது காணப்படும். பெருமளவு உள்நாட்டுக் கேள்வி காணப்படுகின்ற நாடுகளில் கைத்தொழிலாளர்கள் நிச்சயமற்ற வெளிநாட்டுச் சந்தையினில் தங்கியிராது உள்நாட்டுச் சந்தையினை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதனுல் கைத்தொழிற் றுறையில் முதலீடு செய்வதற்கான ஊக்கம் அதிகமாகக் காணப்படும். இந்தியாவில் பெருமளவு கைத்தொழில்கள் பெரும் உள்நாட்டுச் சந்தையினை அடிப்படையாகக்கொண்டே ஆரம்பத்தில்வளர்ச்சி அடைந்தன.

பொருளாதார விருத்தியினைச் சனத்தொகை வளர்ச்சியானது கட்டுப்படுத்தக்கூடியது என வாதிடுபவர்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அனுபவங்களையும் பிரச்சினைகளையும் ஆதாரமாகக் காட்டுகின்றூர்கள். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் குறைந்த தலாவருமானத்திற்கும், குறைந்த சேமிப்பிற்கும் அண்டி வாழ்பவர்களின் விகிதம் அதிகமாக இருப்பது முக்கிய காரணமாகும். இந் நாடுகளில் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதனுல் உற்பத்தியில் ஈடுபடாத நுகர்வோர்களது தொகை அதிகமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. சனத்தொகை அதிகமாகக் காணப்பட்டபோதி லும் இச்சனத்தொகையிலே உற்பத்தியில் ஈடுபடும் ஊழியத்தின் அளவு குறைவாக இருப்பதால் தலாவருமானமும் குறைவாக அமைந்துள்ளது. மேலும் ஒருவரது உழைப்பில் அல்லது உற்பத்தி யில் பலர் தங்கியிருப்பதால் வருமானத்தில் பெரும்பகுதி சேமிப் பாக அன்றி நுகர்வாகவே செல்கின்றது. இந்நிலை குறைந்த பொரு ளாதார வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தனியார்துறையானது வளர்ச்சியடையாத நிலையிலிருப்பதனுல் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத பல முதலீடுகளை அரசாங்கமானது மேற்கொள் ளுதல் அவசியமானதாக உள்ளது. சனத்தொகையானது அதி கரித்துச் செல்லும்போது சனத்தொகையில் சிறுவர்கள், இளை ஞர்கள் ஆகியோரின் தொகை அதிகமாகவிருக்கும். இதனுல் கல்வி சுகாதார—மருத்துவ வசதி போன்றவற்றிற்காக அரசாங்கம் பெரு மளவு சமூகச் செலவீடுகளையும், சமூக-பொது முதலீடுகளையும் மேற் கொள்ளவேண்டியுள்ளது. இதனுல் அரசாங்கத்தினுல் மேற்கொள் ளப்படும் செலவுகளில் பெரும்பகுதி சமூகநலன் சார்ந்தவையாக அமைந்திருக்குமேயொழிய நேரடியாகப் பொருளாதார வளர்ச்சி யினை ஏற்படுத்தக்கூடியவையாக அமைந்திருக்கமாட்டாது. எனவே, சனத்தொகை அதிகரிப்பானது, பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகளை அரசாங்கத்துறையானது மேற் கொள்வதற்குத் தடையானதொன்ருக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அமைந்துள்ளது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்குப் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி இன்று தேவைப்படுகின்றது. இந்நாடுகள் ஒரு சில பொருட்களின் ஏற்றுமதியிலேயே தங்கியிருப்பதனுல் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியினைக் கைத்தொழிலாக்கத்திற்குப் பெற முடியாத நிலையிலுள்ளன. இந்நிலையில் சனத்தொகை அதிகரிப் பின் காரணமாக உணவு, உடை, மருந்துவகைகள் போன்றவற் றினை இறக்குமதி செய்வதற்குப் பெருமளவு வெளிநாட்டுச் செலா வணியினைச் செலவிடவேண்டி இருப்பதனுல் பொருளாதார வளர்ச் சிக்குத் தேவைப்படும் முதலீட்டுப் பொருட்களையும், மூலப் பொருட் களையும் இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியானது பற்றுக்குறையாகக் காணப்படுகின்றது. இதனுல் இந்நாடுகளினது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியினைத் தடைப்படுத்தும் வெளிநாட்டுச் செலவாணிப் பிரச்சினை தோன்றுவதற்குச் சனத் தொகை அதிகரிப்பும் ஒரு காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் விவசாயப் பொருளாதாரங்களாக இருப்பதால் சனத்தொகை அதிகரிப்பானது விவசாயத்துறையில் பெரும் நிலப்பிரச்சினையினை ஏற்படுத்துவதாகவுமிருக்கும். 1946ஆம் ஆண்டு 4,267,000 ஏக்கராக இருந்த சாகுபடி நிலமானது 1969இல் 4,827,000 ஏக்கராக அதிகரிக்க, சனத்தொகையானது இதே காலப்பகுதியில் 5,712,000 பேராக இருந்து 9,736,000 பேராக அதிகரித்துள்ளது. சாகுபடி நிலத்தின் பரப்பளவு அதிகரிப்பானது வருடமொன்றுக்கு 0·7 சதவீதமாக இருக்க, சனத்தொகை அதிகரிப்பு இக்காலப்பகுதியில் 2·5 சதவீதமாகக் காணப்பட்டது. இதனால் விவசாயத்துறையில் பெரும் நிலப்பற்றுக்குறை மட்டுமன்றி விவசாயநிலம் துண்டாடப்படுவதற்கும் சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக அமைந்துள்ளது.

சனத்தொகைப் பெருக்கமானது பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமானதா அல்லது சாதகமற்றதா என்பது நாடுகளின் பொருளாதார அமைப்பு நிலையினைப் பொறுத்தே அமைந்திருக்கும். சமூக உடைமைப் பொருளாதாரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் மத்திய அரசாங்கத்தினால் நிபுணர்களின் உதவியுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனால் சனத்தொகை அதிகரிப்பினைப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தல் இலகுவானதாக அமைந்திருக்கும். ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பல கலப்புப் பொருளாதாரத்தினைக் கொண்டிருப்பதால் சனத்தொகை அதிகரிப்பைப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாகத் திட்டமிடுதல் சிறந்தமுறையில் மேற்கொள்ளுதல் கடினமானதாகும். இதனாலேயே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குச் சனத்தொகை அதிகரிப்பு பொருளாதார விரயமாகவே இன்று காணப்படுகின்றது.

**சனத்தொகை வளர்ச்சியும் வேலையின்மையும்**

இன்று இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையானது பொருளாதார சமூகரீதியான பிரச்சினையாக மட்டுமன்றி அரசியல்ரீதியான ஒரு பிரச்சினையாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. வேலையற்றவர்களிற் பெரும்பகுதியினர் இளம் சந்ததியினராக விருப்பதாலும் சனநாயக அரசியலில் இவர்களது வாக்குரிமை சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றமையினாலும் இது அரசியல்ரீதியில் முக்கியமான தொன்றாக உள்ளது. எந்தவொரு மனிதனும் நேர்மையான வாழ்க்கையினை நடத்துவதற்கு உறுதியான வருமானத்தினை அளிக்கக் கூடிய நிரந்தரமானதொரு தொழில் அவசியமானதாகும். வேலையற்றவர்கள் நேர்மையான வாழ்க்கை வாழும் சந்தர்ப்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமுதாயத்தில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ''பசியுள்ளவனின் வயிறுதான் புரட்சிதோன்றும் இடம்!'' என்ற அரிஸ்டோட்டலின் கூற்றுனது வேலையற்றவர்கள் இன்றைய சமூகத்தின் அமைதியான வாழ்க்கைக்குச் சவாலாக இருப்பதன்மூலம் நிருபணமாகிவருகின்றது. வேலையின்மை சமூகரீதியில் அநீதியானதும் பொருளாதாரரீதியில் வளர்ச்சியினைத் தடுப்பதும் மட்டுமன்றி அரசியல்ரீதியில் ஆபத்தானதும்கூட என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் வேலையின்மை என்னும்போது அது ஊழியத்தினையும் பயன்படுத்தப்படாத மூலதனத்தினையும் குறித்துநிற்கிறது. ஆனால், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வேலையின்மை என்னும்போது அது ஊழியத்தினை மட்டுமே கருதுவதாக இருக்கும். ஊழியத்தின் வேலையின்மையானது வெளிப்படையான வேலையின்மை, மறைமுக வேலையின்மை அல்லது கீழுழைப்பு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியதாகும். மறைமுக வேலையின்மையானது கிராமியத்துறைக்குள் மட்டுமன்றி இன்று நவீனதுறைக்குள்ளும் காணப்படுகின்றது. பட்டதாரிகள் இலிகிதராக வேலை பார்த்தல் போன்றவற்றினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினையானது 1960ஆம் ஆண்டிலிருந்தே முக்கியமானதொருபிரச்சினையாக வளர்ச்சியடைந்து வரலாயிற்று. மொத்தவேலையின்மை பற்றிய கணிப்பீடுகளைப் பெருமளவிற்கு நம்பத்தகுந்தனவாகக் கருதமுடியாது. ஏனெனில் மறைமுக வேலையின்மை பற்றிய புள்ளிவிபரங்கள் கணிப்பீட்டிற்குள் அதிகளவில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் வேலையற்றவர்கள் அனைவரும் தம்மை வேலையற்றவர்களாகப் பதிவுசெய்வதுமில்லை. எனவேதான் இப்புள்ளிவிபரங்கள் ஒரு பொதுவான மதிப்பீடு என்பதனைக் கருத்திற்கொள்ளவேண்டும். 1963இல் இலங்கையின் வேலையற்றவர்கள் தொகை 236,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இத்தொகையானது 1971ஆம் ஆண்டு 5,50,000 பேர்கள் அல்லது மொத்த ஊழியப்படையில் 12 சதவீதமென ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1971ஆம் ஆண்டிற்குப் பின்பு வேலையற்றவர்களின் எண்ணிக்கையில் வேகமான அதிகரிப்பானது ஏற்பட்டுவருவதனை அவதானிக்கமுடிகிறது. 1963லிருந்து 1971ஆம் ஆண்டுவரையுள்ள 8 வருடகாலப் பகுதியில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை இரண்டுமடங்காகவும் 1971லிருந்து 1978ஆம் ஆண்டு வரையுள்ள 7 வருடத்தில் இத்தொகையானது ஏறக்குறைய மூன்று மடங்காகவும் அதிகரித்துள்ளது. 1978இல் வேலையற்றோரது எண்ணிக்கை 1·5 மில்லியனுக இருப்பதன்மூலம் இப்பிரச்சினையின் தேசிய முக்கியத்துவத்தினை ஓரளவு உணரக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6. XIII

இலங்கையில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 1963—1978

| காலம் | மொத்தம் |
|---|---|
| 1963 | 236,000 |
| 1971 | 550,000 |
| 1973 | 793,000 |
| 1975 | 984,000 |
| 1978* | 1,500,000 |

மூலம்: பொருளியல் நோக்கு: ஆடி, 1977.
* பொதுவான மதிப்பீடு.

இலங்கையில் வேலையற்றவர்களின் 60 சதவீதத்தினர் 15—24 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் 90 சதவீதத்தினர் 15—30 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் உளர். 1950ஆம் ஆண்டி லிருந்து பெண்களின் வேலையின்மையும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இது குடும்பச் சேவைகளை ஆற்றிய கிராமியப் பெண்கள் கல்வியறிவு வளர்ச்சி, சமூகவிருத்தி போன்றவற்றினுல் வேலைவாய்ப் பினைப் பெற முயன்றதன் விளைவாகும். மொத்த வேலையற்றவர் களில் ஆண்கள் 74 சதவீதமாகவும், பெண்கள் 26 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். 1969/70ஆம் ஆண்டு சமூக பொருளாதார அளவீட்டின்படி வேலையற்றவர்களில் 5 சதவீதத்தினர் ஒருபோதும் பள்ளிக்கூடம் செல்லாதவர்களாகவும், 30 சதவீதத்திற்கு அதிக மானவர்கள் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களாகவும் உளர். உயர்கல்வி கற்றவர்கள் (பட்டதாரிகள், தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்கள்) பெருமளவு வேலையற்றிருக் கிருர்கள் என்பதனைவிட மறைமுக வேலையின்மைக்குட்பட்டிருக் கிருர்கள் என்பதே உண்மையாகும். மொத்த வேலையற்றவர்களில் 77 சதவீதத்தினர் கிராமப்புறத்தினைச் சேர்ந்தவர்கள் ஆவர். எனவேதான் இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினையைப் படித்த கிராமப்புற இளைஞர்களின் பிரச்சினையாக அணுகுவதே பொருத்த மானதாகும்.

இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினைக்கான காரணிகளைச் சனத்தொகை வளர்ச்சி அடிப்படையிலன்றி, அதிகரித்துவரும் ஊழியப்படையினை உறிஞ்சிச்செல்லச் சக்தியற்ற குறைந்த பொரு ளாதார வளர்ச்சி, மூலவளங்களைச் சிறந்த முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தாமை போன்றவற்றின் அடிப்படையில் அணுகுதல் பொருத்தமானதாகும். இலங்கையில் முதல் தட்டுப்பாடு, செலா வணிப் பற்றுக்குறை, தொழில்நுட்பம் போதியளவு இன்மை, சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத் தடைகள் போன்றவற்றினுல் பொருளாதா வளர்ச்சியானது மிகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதனுல் ஒவ்வொரு வருடமும் புதிதாக ஊழியச் சந்தைக்கு வேலைதேடி வருபவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதற்குப் பொருளாதார வளர்ச்சியானது போதியதாகக் காணப்படவில்லை. இன்று கைத்தொழில் துறையில் மட்டுமன்றி விவசாயத்துறையில்கூட முதல் செறிவான உற்பத்தி முறைகள் பின்பற்றப்படுகின்றன. முயற்சியாளர்கள் முதல் செறிவான உற்பத்திமுறைகளைப் பயன்படுத்துவதற்கு இலாபநோக்கம் மட்டுமன்றி, தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளும் முக்கிய காரணமாகும். கிராமியப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துவரும் முதலாளித்துவ விவசாய முறையின் விளைவாக முதல் செறிவான உற்பத்தி முறைகளினது பயன்பாடு அதிகரித்துவருகின்றது. இதனுல் இன்று மனிதர்களை இயந்திரங்கள் விழுங்குகின்ற நிலையானது நகர்ப் பொருளாதாரத்தில் மட்டுமன்றிக் கிராமியப் பொருளாதாரத்திலும் ஏற்பட்டு வருகின்றது,

இலங்கைபோன்ற பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே மனித சக்தித் திட்டங்கள் (கல்வி வளர்ச்சி) மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இலங்கையில் மேற்கத்தேய கல்விமுறை என மிஷனரிமாரினுல் உருவாக்கி வளர்க்கப்பட்ட கல்வி முறையானது நாட்டின் பொருளாதார தேவையுடனும் வளர்ச்சியுடனும் இணைந்ததொன்ருகக் காணப்படவில்லை. சர்வதேச தரத்தில் அமைந்த கல்விமுறையானது நாட்டின் பொருளாதார வளங்களை விருத்திசெய்யக்கூடியவர்களையன்றி காகிதத்தளவில் தகுதிபெற்றவர்களையே உற்பத்திசெய்யும் ஒன்ருகக் கருதப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களும், மனித சக்தித் திட்டங்களும் சமகாலத்தில் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தால் இத்தகைய பிரச்சினைகள் தீவிர நிலையினை அடைந்திருக்க மாட்டாது.

சாகுபடி நிலத்திற்கான பற்ருக்குறையே கிராமப்புறத்தில் வேலையின்மைப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாகும். விருத்தியடைந்த வலயத்திலுள்ள மக்களுக்கே நிலப்பிரச்சினையானது முக்கியமான பிரச்சினையாக உள்ளது. விருத்தி அடைந்த வலயத்திலுள்ள பெருமளவு நிலப்பரப்பு பெருந்தோட்ட விவசாயத்துக்குட்பட்டதாகும். விருத்தி அடையாத வலயத்தில் புதிய நிலங்களைச் சாகுபடிக்குள்ளாக்குவதற்குப் பெருமளவு மூலதனம் அவசியமாகும். இதனுல் பெருமளவு நிலமுள்ள விருத்தியடையாத வலயத்தில், விருத்தியடைந்த வலயத்திலுள்ள மக்கள் குடியேற முடியாமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு வேலையின்மையினை உருவாக்குவதாக உள்ளது. இத்துடன் சமூக கலாசாரக் காரணிகளும்கூட புதிய பிரதேசத்தில் மக்கள் குடியேறவும் சில தொழில்களில் ஈடுபடவும் தடையாக இருப்பதனால் வேலையின்மைப் பிரச்சினையினை ஏற்படுத்துவதற்கு ஓரளவு காரணங்களாயமைகின்றன.

**சனத்தொகைக் கொள்கை**

இன்று நாடுகளின் பொருளாதாரக் கொள்கையில் சனத்தொகை பற்றிய கொள்கையானது மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. ஒரு அரசாங்கத்தின் சனத்தொகைக் கொள்கையானது சனத்தொகையின் அளவு, சனத்தொகையினை நிர்ணயிக்கின்ற காரணிகள் (இறப்பு, பிறப்பு, குடிப்பெயர்ச்சி, புவியியல்ரீதியான பரம்பல்), சனத்தொகையின் தன்மை போன்றவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடைமுறைக் கொள்கையினையே குறிக்கின்றது. இலங்கையில் சனத்தொகைக் கொள்கையானது இதுவரைகாலமும் தனித்துவமானதொன்றாக அன்றி பல்வேறு அமைச்சுகளால் பொருளாதார வளர்ச்சி கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுடன் இணைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகைக் கொள்கையில் சனத்தொகைக் கட்டுப்பாடே முக்கியமாகவுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பிறப்பினைக் கட்டுப்படுத்தல் முதலீட்டின் மூலம் வெளியீட்டினை அதிகரிப்பதன் விளைவினை விடக் கூடியதாக இருக்குமெனை அறியப்பட்டுள்ளது. இது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குப் பதிலாக தலா வருமானத்தில் 2½ மடங்கு வருட அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடியதாகும்.

இலங்கையில் குடும்பக்கட்டுப்பாடானது குடும்பநலன் என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிறிய குடும்பமே வளமான குடும்பம் என்பது இதன் அடிப்படைத் தாற்பரியமாகும். ஆனால் எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதார வளங்களைச் சிறந்தமுறையில் பயன்படுத்துவதற்கு வருடாந்தம் சனத்தொகையில் எவ்வளவு அதிகரிப்பு ஏற்படவேண்டும் என்பன போன்ற கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய திட்டவட்டமான கணிப்பீடுகளின்றிப் பிறப்பினைக் கட்டுப்படுத்தும் போது சிலசமயங்களில் எதிர்காலத்தில் சனத்தொகைப் பற்றாக் குறை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலும் குடும்ப அங்கத்தினர்கள் அதிகமாகவுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைகளிடம் கூட்டு வாழ்க்கைமுறை, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத நற்பண்புகள் வளர்ச்சியடைவதுபோன்று சிறிய குடும்பத்திலுள்ள பிள்ளைகளிடம் ஏற்படுவது கடினம். எனவே குடும்பக்கட்டுப்பாடு பரந்த அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் மேற்கொள்ளப்படும்போது, சமூக விரோத மனப் பான்மை கொண்ட சந்ததியினர் உருவாகாமல் இருப்பதற்கான வழிவகைகள் சிறுபிராயத்திலிருந்தே ஏற்படுவதற்கான நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல் அவசியமானதாகும்.

மனிதசக்தி திட்டமிடலின் முக்கிய அம்சமான கல்விமுறை யில் சுதந்திரமடைந்த காலம்தொட்டு சில மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டாலும் அடிப்படையான மாற்றங்கள் எதுவும் அண்மைக்காலத்தில் ஏற்படவில்லை. இன்றைய கல்விமுறையானது கலைப்பட்டதாரிகள் போன்றவர்களைத் தேவைக்கு மிக அதிகமாக வும், பொறியியலாளர்கள் மருத்துவர்கள், போன்றவர்களைத் தேவை யினை விட மிகக் குறைவாகவும் உற்பத்திசெய்கின்ற ஒரு கல்வி முறையாகவே இருக்கின்றது. அத்துடன் சர்வதேச தரத்தில் அமைந்த கல்விமுறையாக இருப்பதனால் தரமான ஊழியமானது (பொறியியலாளர், மருத்துவர்) வெளிநாட்டுக்குச் செல்வதன்மூலம் தரமான ஊழியப்பற்றுக்குறையினை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்து விடுகின்றது. எனவேதான் மனிதசக்தித் திட்டமிடலானது தேசிய பொருளாதாரநலனை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப் படல் அவசியமானதாகும்.

சனத்தொகையின் புவியியல் ரீதியான பரம்பலை ஒழுங்குபடுத்து வதற்குக் குடியேற்றத் திட்டங்கள் தவிர வேறு நடைமுறைக் கொள்கைகள் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. விருத்தியடைந்த வலயத்திலுள்ள மேலதிக சனத்தொகை விருத்தி யடையாத வலயத்தினை நோக்கி நகர்வதற்கு, விருத்தியடையாத வலயத்தில் ஈர்ப்புச் சக்திமிக்க நவீன வசதிகள் படைத்த நகரங் களை உருவாக்குதல் அவசியமானதாகும். அனுராதபுரம், திரிகோண மலை, வவுனியா, புத்தளம் போன்ற இடங்களில் நவீன நகரங்களை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் அதிகளவில் உள. கொழும்பி லுள்ள அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்ற வற்றின் ஒரு பகுதியினை முதலில் அனுராதபுரத்திற்கு மாற்றுவதன் மூலம் இப்பிரதேசத்தில் நகராக்கத்தினைத் தீவிரப்படுத்தக்கூடியதாக இருக்கும். விருத்தியடையாத வலயங்களில் பல புதிய நகரங்கள் உருவாகும்போது இவ்வலயத்திலுள்ள இயற்கை வளங்கள் அதி களவில் பயன்படுத்தப்படுவதுடன் பெருமளவு வேலைவாய்ப்புக்களை யும் உருவாக்குவதாக இருக்கும். இதன்மூலம் விருத்தியடைந்த வலயத்திலுள்ள சனத்தொகை அமுக்கத்தினைக் குறைக்கமுடியும். இன்று இலங்கையில் மேலதிக சனத்தொகைப் பிரச்சினை என்பதனை விட சனத்தொகைப் பரம்பலைச் சிறந்தமுறையில் ஒழுங்குபடுத்தலே உண்மையான பிரச்சினையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 7

# வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளும்

*19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பல நாடுகளில் நவீன பொருளாதார வளர்ச்சியினை மட்டுமன்றி, உலகநாடுகளின் மத்தியில் ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சியினையும் ஏற்படுத்திய மிக முக்கியகாரணியாக வெளிநாட்டு வர்த்தகம் அமைகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் வெளிநாட்டு வர்த்தகமானது துரித பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தது போலன்றி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் எதிர்க் கணியமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை வல்லரசுகளின் நவீன காலனித்துவப் பிடிக்குள் பிணைத்து ஒருபக்கச் சார்பான பொருளாதாரச் சுரண்டலுக்கு வழிவகுக்கும் முறையிலேயே சர்வதேச வர்த்தக அமைப்பானது இன்று காணப்படுகின்றது. இன்றைய சர்வதேச வர்த்தகமானது வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகள் (மையநாடுகள்), முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதிசெய்யும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் (சுற்றயல் நாடுகள்) என்ற அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. முதல் விளைவுப் பொருட்கள் என்று கூறும்போது பொதுவாக உணவுப் பொருட்கள், மூலப்பொருட்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியதாகும்.*

*இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் முதற் கால்பகுதியிலிருந்து பெருந்தோட்ட விவசாயத்தின் ஆரம்பத்துடன் வெளிநாட்டு வர்த்தகமானது முக்கிய இடத்தினைப் பெறலாயிற்று. ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப்போன்றே இலங்கையிலும் ஏற்றுமதிப் பொருளாதாரமானது பெருந்தோட்ட விவசாயத்துடன் தோன்றி வளர்ந்ததொன்றாகும். ஏற்றுமதிப் பொருளாதாரம் என்னும்போது தேசிய வருமானத்தில் ஏற்றுமதியும், இறக்குமதியும் பெரும் விகிதாசாரத்தினை வகிப்பதனை மட்டும் குறிப்பதாக இருப்பதில்லை. அத்துடன் பேரினப் பொருளியல் அளவீடுகளான அரசாங்க வருமானம், செலவீடு, தனியார் முதலீடு, இறக்குமதி, தேசிய வருமானம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியனவும் பெருமளவிற்குத் தொழிற்பாட்டுரீதியாக ஏற்றுமதி வருமானத்தில் தங்கியிருக்கின்ற நிலையினைக் குறிப்பதாகும். இன்று இலங்கையின் தேசிய வருமானத்தில் ஏற்றுமதித் துறையின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து வருகின்றபோதிலும் தேசிய பொருளாதாரத்தினைப் பாதிக்கக்கூடிய சக்திவாய்ந்த காரணியாக வெளிநாட்டு வர்த்தகமானது காணப்படுகின்றது.

**வெளிநாட்டு வர்த்தகத்தின் தன்மையும் போக்கும்**

பல அபிவிருந்தியடைந்துவரும் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியமான அம்சம் மிகக் கூடிய சிறப்புத் தேர்ச்சியாகும். இந்நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தில் பெரும்பகுதி ஒரு சில விவசாயப் பொருட்களினுலும் மூலப் பொருட்களினுலும் பெறப்படுவதனையே சிறப்புத் தேர்ச்சி என்ற பதம் குறிக்கின்றது. பர்மா அரிசி, தேக்குமரம், எண்ணெய் விதைகள் போன்றவற்றின் ஏற்றுமதியிலிருந்து 85·7 சதவிதமான ஏற்றுமதி வருமானத்தினையும், நைஜீரியா மசகுஎண்ணெய், கொக்கோ ஆகியவற்றிலிருந்து 96·8 வீதமான ஏற்றுமதி வருமானத்தினையும் பெறுகிறது. 1977இல்

அட்டவணை 7. I

**நாடுகள்வாரியாக மொத்த ஏற்றுமதியில்**
**விவசாயப் பொருட்களினதும் மூலப் பொருட்களினதும் பங்கு**
*(சதவீதமாக)*

| காலம் | நாடுகள் | பொருட்கள் | ஏற்றுமதி |
|---|---|---|---|
| 1977 | பிறேசில் | கோப்பி, சோயாபீன், சீனி | 39·4 |
| 1976 | பர்மா | அரிசி, தேக்குமரம், எண்ணெய் விதைகள் | 85·7 |
| 1976 | மலேசியா | றப்பர், தகரம், மரம், பாம் எண்ணெய் | 61·1 |
| 1976 | நைஜீரியா | மசகுஎண்ணெய், கொக்கோ | 96·8 |
| 1977 | பிலிப்பைன்ஸ் | சீனி, தெங்குப் பொருட்கள், செம்பு, மரம் | 56·4 |
| 1976 | உகண்டா | கோப்பி, பருத்தி | 89·1 |
| 1977 | ஜமேக்கா | அலுமினியம், பொக்சைட், சீனி | 77·9 |
| 1977 | இலங்கை | தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் | 72·0 |

மூலம்: International Financial Statistics, 1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மொத்தஏற்றுமதிவருமானத்தில் 72 சதவீதமானவை தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகிய மூன்று விவசாயப் பொருட்களின்மூலம் பெறப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படுகின்ற சிறப்புத்தேர்ச்சிமிக்க ஏற்றுமதித்துறையானது இந்நாடுகளை நீண்டகாலம் ஆட்சிசெய்த மேற்கத்தேய வல்லரசுகளினால் உருவாக்கி வளர்க்கப்பட்டதொன்றாகும்.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் பெரும்பங்கிற்கு 1950ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களே பொறுப்பாகவிருக்கின்றன. 1950—1953ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகிய மூன்றும் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 90 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்தன. 1977ஆம் ஆண்டிலும் இம் மூன்று ஏற்றுமதிப் பொருட்களும் 72 சதவீதமான ஏற்றுமதி வருமானத்திற்குப் பொறுப்பாக இருந்தன. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பகுதியானது தேயிலையின் ஏற்றுமதிமூலமே பெறப்படுவதாகவுள்ளது. 1950—1953ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 48 சதவீதமும் 1977இல் 53 சதவீதமும் தேயிலை ஏற்றுமதி மூலமே பெறப்பட்டது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை கொண்டுள்ள பங்கு இன்றுவரை பெருமளவு மாற்றமின்றி இருக்கின்றது. இதனாலே இலங்கையினதை ஏற்றுமதிப் பொருளாதாரம் என்று கூறுவதனைவிடத் தேயிலை ஏற்றுமதிப் பொருளாதாரம் எனக் கூறுவது அதிகளவிற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

அட்டவணை 7. II

**இலங்கையின் ஏற்றுமதிகளின் அமைப்பு 1950 — 1977**

(சதவீதமாக)

| காலம் | தேயிலை | றப்பர் | தெங்குப் பொருட்கள் | ஏனைய ஏற்றுமதிகள் |
|---|---|---|---|---|
| 1950—53 | 48 | 26 | 16 | 10 |
| 1960 | 60 | 21 | 10 | 9 |
| 1965 | 62 | 16 | 14 | 8 |
| 1970 | 55 | 22 | 12 | 11 |
| 1972 | 60 | 14 | 14 | 12 |
| 1974 | 39 | 21 | 10 | 30 |
| 1975 | 49 | 17 | 10 | 24 |
| 1977 | 53 | 14 | 5 | 28 |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்,

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த ஏற்றுமதி வருமானத்தில் றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகியன படிப்படியான வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவுள்ளன. 1950—53ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் மொத்த வருமானத்தில் றப்பர் கொண்டிருந்த பங்கு 26 சதவீதமாகவிருந்து 1977இல் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதேபோன்றே தெங்குப் பொருட்கள் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கொண்டிருந்த பங்கானது 1950—1953இல் 16 சதவீதமாக இருந்து 1977இல் 5 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒப்புரீதியாக நோக்கும்போது றப்பரினைவிட தெங்குப் பொருட்கள் மொத்த வருமானத்தில் கொண்டுள்ள பங்கினது வீழ்ச்சி அதிகமானதாகும். ஏனெனில் தேயிலை, றப்பரினைப் போலன்றி தெங்குப்பொருட்களுக்கு உள்நாட்டு நுகர்வு அதிகமாக இருப்பதால் சனத்தொகை அதிகரித்துச் செல்லும் நிலையில் இதன் ஏற்றுமதியினை அதிகரிப்பது கடினமாகும். மேலும் அண்மைக்காலத்தில் தெங்குப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஏற்றுமதி வருமானத்தில் இதன் பங்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணமாகும்.

இலங்கையின் ஏற்றுமதிகளை மரபுரீதியான ஏற்றுமதிகள், மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் என அண்மைக்காலத்தில் வகைப்படுத்தப்பட்டு விளக்கப்படுகிறது. இப்பாகுபாடானது தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் மரபுரீதியான ஏற்றுமதிகள் என்ற அடிப்படையிலும் இவை தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் என்ற அடிப்படையிலும் அமைந்துள்ளது. மரபுரீதியற்ற ஏற்றுமதிக்குள் மாணிக்கக் கற்களும், கறுவா, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களும் உள்ளடக்கப்படுவது இப் பாகுபாட்டினைப் பொருத்தமற்றதாக்கிவிடுகிறது. ஏனெனில், இலங்கையில் பிரித்தானியர் வருகைக்கு முன்பிருந்தே மாணிக்கக் கற்கள், கறுவா, ஏலம் போன்ற பொருட்கள் ஏற்றுமதிப் பொருட்களாக இருந்திருக்கின்றன. வரலாற்றுரீதியாக நோக்கும்போது இவை இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களாகும். பெற்றோலிய உற்பத்திகள், ஆடைவகைகள் போன்றவற்றிற்கு மட்டுமே மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் என்பது பொருத்தமானதாக அமைந்திருக்கும். எனவேதான் பொதுப்படையாக மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் என்ற பாகுபாடு பொருத்தமற்றதாக இருப்பதனால் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிகள் என்ற பதம் இங்கு பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் 1970ஆம் ஆண்டு வரை தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள் ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 10 சதவீதமானதாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதியினைப் பன்முகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் பல பொருட்களின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டன. முக்கியமாக இரத்தினக் கற்கள், ஆடைவகைகள், எரிபொருட்கள், மீன், இறால் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இதனால் 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு றப்பர், தெங்குப் பொருட்கள் போன்றவை ஏற்றுமதி வருமானத்தில் கொண்டிருந்த பங்கானது வீழ்ச்சியடைய அதனைப் புதிய ஏற்றுமதிப் பொருட்களின் அதிகரிப்பு ஈடுசெய்தது. 1970ஆம் ஆண்டு றப்பர், தெங்குப் பொருட்கள் ஆகிய இரண்டும் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கொண்டிருந்த பங்கானது 34 சதவீதமாக இருந்து 1977இல் 19 சத வீதமாக அல்லது 15 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேகாலப் பகுதியில் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிகளின் பங்கானது 17 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதிகளில் தேயிலையின் பங்கில் ஒரு மாற்றமற்ற நிலையினையும், றப்பர், தெங்குப் பொருட்களின் பங்கில் ஒரு வீழ்ச்சிப் போக்கினையும், இவை தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிப் பொருட்களின் பங்கில் ஒரு அதிகரிப்புப் போக்கினையும் அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்கள் மிகக்கூடிய பங்கினை வகிக்கின்றன. நுகர்வுப் பொருட்களில் அரிசி, மா, சீனி ஆகிய மூன்று பொருட்களே கூடிய பங்கினை வகிக்கின்றன. 1950—1953ஆம் ஆண்டுக்காலப்பகுதிகளில் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்கள் 57 சதவீதமாகவும், இதில் அரிசி, மா, சீனி ஆகிய மூன்று பொருட்களும் கொண்டிருந்த பங்கானது 31 சதவீதமாகவும் அமைந்திருந்தது. 1976இல் மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 36·9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தபோதிலும், அரிசி, மா, சீனி ஆகியன இதில் 29·7 சத வீதமான பங்கினைக் கொண்டிருந்தன. சீனி இறக்குமதியானது 1950—1953ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளில் மொத்த இறக்குமதியில் 5 சதவீதமாக இருந்து 1976இல் 1·4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு உலக சந்தையில் சீனி விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இதன் நுகர்வினை அரசாங்கம் கட்டுப்படுத்த முனைந்ததுமட்டுமன்றி, உள்நாட்டில் கருப்பட்டி, சீனி ஆகியவற்றின் உற்பத்தியினை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகளும் காரணமாகும்.

1970ஆம் ஆண்டுவரை நடுத்தரப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் ஆகியவற்றில் இறக்குமதியில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் எதுவும் எற்படவில்லை. நடுத்தரப்பொருட்கள் எனும் போது முக்கியமாக உதிரிப்பாகங்கள், பருத்திநூல் போன்ற முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 7. III

### இலங்கையின் இறக்குமதிகளின் அமைப்பு 1950—1976
(சதவீதமாக)

| பொருட்களின் வகை | 1950-53 | 1960 | 1965 | 1970 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|
| 1. நுகர்வுப் பொருட்கள் | 57·0 | 60·0 | 52·8 | 55·8 | 50·5 | 36·9 |
| அ. அரிசி | 18·0 | 14·1 | 9·8 | 13·7 | 20·2 | 13·7 |
| ஆ. மா | 8·0 | 5·3 | 6·6 | 11·2 | 19·1 | 14·6 |
| இ. சீனி | 5·0 | 3·7 | 4·9 | 7·3 | 4·7 | 1·4 |
| ஈ. புடைவை | 10·0 | 10·0 | 7·3 | 5·3 | 0·4 | 1·0 |
| 2. நடுத்தரப் பொருட்கள் | 38·0 (2 & 3) | 20·3 | 28·1 | 19·5 | 36·0 | 48·2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | | 18·1 | 17·7 | 23·5 | 12·4 | 13·7 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் | 5·0 | 1·6 | 1·4 | 1·2 | 1·1 | 1·2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்,
புள்ளிவிபரத் திணைக்களம்.

பெருத உற்பத்திப் பொருட்களை அல்லது மூலப்பொருட்களை உள்ளடக்கியதாகும். முதலீட்டுப் பொருட்கள் எனும்போது நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத இயந்திரங்கள், தளபாடங்கள், மற்றும் கைத்தொழில் விவசாய உபகரணங்களைக் குறிப்பதாகும். 1970ஆம் ஆண்டு இடைநிலைப் பொருட்கள் மொத்த இறக்குமதியில் 19·5 சதவீதமாக இருந்து 1976இல் 48·2 சத வீதமாக அல்லது 28·7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதேகாலப் பகுதியில் நுகர்வுப்பொருட்கள் 55·8 சதவீதமாக இருந்து 36·9 சதவீதமாகவும், முதலீட்டுப் பொருட்கள் 23·5 சதவீதமாக இருந்து 13·7 சதவீதமாகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கேற்ப, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் அதிகரிப் பேற்பட்டிருப்பின் அது உற்பத்திப் பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்ற அடிப்படையில் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்குச் சாதகமானதாக அமைந்திருக்கும். ஆனல், இலங்கையின் மொத்தஇறக்குமதியில் முதலீட்டுப்பொருட்கள் கொண்டுள்ள பங்கிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையில் இறக்குமதிப் பிரதியீடு என்ற அடிப்படையில் வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலிருந்து மூலப் பொருட்களையும் உதிரிப்பாகங்களையும் இறக்குமதி செய்து உள்நாட்டில் கைத்தொழிலாக்கத்தினை மேற்கொள்ள முனைந்தமையினாலேயே இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் நுகர்வுப் பொருட்கள் மட்டுமன்றி நடுத்தரப் பொருட்கள் கூட பெருமளவிற்கு நுகர்வுப் பொருட்களாகவே அமைந்துள்ளன. இந்த அடிப்படையில் நோக்கின் 1950ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையின் மொத்த இறக்குமதியில் மிகப்பெரும் பகுதி நுகர்வுப் பொருட்களாகவே காணப்படுகின்றன. சுருங்கக்கூறின் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமானது விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதனையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது இலங்கையின் பொருளாதாரமானது உலக பொருளாதாரத்துடன் மிக இறுக்கமாக இணைக்கப்பட்டிருப்பதனையே காட்டுகின்றது.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் 1950ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் பெரிய பிரித்தானியாவும் ஏனைய பொதுநலவாய நாடுகளுமே முக்கிய இடத்தினை வகித்தன. 1953ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 51·7 சதவீதம் பொதுநலவாய நாடுகளுக்கும் இதில் 25·91 சதவீதமானவை பெரிய பிரித்தானியாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கையின் ஏற்றுமதிகளில் பெருமளவினைக் கொள்வனவு செய்த நாடாகப் பெரிய பிரித்தானியா காணப்பட்டது. பொதுநலவாயநாடுகளுக்குள் பெரிய பிரித்தானியாவிற்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலியாவிற்கே 1950ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் பெருமளவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1956ஆம் ஆண்டிலிருந்து பொதுநலவாய நாடுகளுக்கான ஏற்றுமதியில், குறிப்பாகப் பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியாவிற்கான ஏற்றுமதிகளில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1956இல் மொத்த ஏற்றுமதியில் 56·35 சதவீதமானவை பொதுநலவாய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க 1976இல் 32·15 சதவீதமே ஏற்றுமதி செய்யப்பட்டது. இதேகாலப் பகுதியில் மொத்த ஏற்றுமதியில் பெரிய பிரித்தானியாவின் பங்கானது 30·24 சதவீதத்திலிருந்து 9·68 சதவீதமாகவும், அவுஸ்திரேலியாவின் பங்கானது 5·57 சதவீதத்திலிருந்து 2·69 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் பாகிஸ்தானுக்கான ஏற்றுமதியானது 1953இல் 0·37 சதவீதமாக இருந்து 1970இல் 2·13 சதவீதமாகவும், 1976இல் 7·56 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இதற்கு கிழக்குப் பாகிஸ்தான் பங்காளதேசமாகப் பிரிந்தமையினால், பாகிஸ்தான், தேயிலை போன்ற பொருட்களை இலங்கையிலிருந்து பெற முற்பட்டமையே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7. IV

இலங்கை ஏற்றுமதிகளின் நாடுகள் அடிப்படையிலான பாகுபாடு
(சதவீதமாக)

| நாடுகள் | 1953 | 1956 | 1960 | 1966 | 1970 | 1976 |
|---|---|---|---|---|---|---|
| பொதுநலவாய நாடுகள் | 51·70 | 56·35 | 51·34 | 40·70 | 38·24 | 32·15 |
| பெரிய பிரித்தானியா | 25·91 | 30·24 | 28·28 | 24·75 | 22·79 | 9·68 |
| அவுஸ்திரேலியா | 8·84 | 5·57 | 6·49 | 4·41 | 3·62 | 2·69 |
| பாகிஸ்தான் | 0·37 | 0·40 | 2·12 | 2·53 | 2·13 | 7·56 |
| இந்தியா | 2·75 | 4·33 | 1·96 | 1·23 | 1·07 | 0·04 |
| ஏனைய பொதுநலவாய நாடுகள் | 13·83 | 15·81 | 12·49 | 7·78 | 8·63 | 8·56 |
| வெளிநாடுகள் | 48·30 | 43·65 | 48·66 | 59·30 | 61·76 | 67·85 |
| சீனு | 16·28 | 11·06 | 6·74 | 10·55 | 12·61 | 10·03 |
| பர்மா | 0·06 | 0·09 | 0·38 | 0·08 | 0·12 | — |
| ஜப்பான் | 0·61 | 0·59 | 3·11 | 2·49 | 3·35 | 4·44 |
| ஐக்கியஅமெரிக்கா | 7·98 | 8·50 | 9·28 | 8·04 | 7·21 | 6·97 |
| ஏனைய நாடுகள் | 23·37 | 23·41 | 29·15 | 38·14 | 38·47 | 46·41 |

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்

பொதுநலவாய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான ஏற்றுமதியானது 1956இலிருந்து படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. 1956இல் மொத்த ஏற்றுமதியில் 43·65 சதவீதத்தினைக் கொண்டிருந்த பொதுநலவாய நாடுகள் அல்லாத வெளிநாடுகளின் பங்கானது 1976இல் 67·85 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில் சீனு, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் மொத்த ஏற்றுமதியில் கொண்டிருந்த பங்கில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனுல் ஜப்பானுக்கான ஏற்றுமதியானது 1956இல் மொத்த ஏற்றுமதியில் 0·59 சதவீதமாக இருந்து 1976இல் 4·44 சதவீதமாக அதிகரித்துள்ளது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் 1956ஆம் ஆண்டிற்குப் பின்பு குறிப்பிடக்கூடிய முக்கிய அம்சம் மத்திய கிழக்கு நாடுகள், சோவியத் யூனியன், கிழக்கு ஜேர்மனி, போலாந்து போன்ற நாடுகளுடன் ஏற்பட்ட வர்த்தக விருத்தியாகும். பொதுநலவாய நாடுகள் அல்லாத நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதி பெருமளவு அதிகரித்தமைக்கு இந்நாடுகளுடன் ஏற்பட்ட வர்த்தக விருத்தியே முக்கிய காரணமாகும். இலங்கையின் ஏற்றுமதியானது 1950ஆம் ஆண்டிலிருந்து பொருட்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னடிப்படையில் அதிகளவில் பன்முகப்படுத்தப்படாவிட்டாலும், நாடுகள்ரீதியாக பெருமளவிற்குப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இலங்கையின் இறக்குமதி வர்த்தகமும் 1950ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் பெருமளவிற்கு பொதுநலவாய நாடுகளுடனே நடைபெற்று வந்தன. 1953ஆம் ஆண்டளவில் மொத்த இறக்குமதியில் 56·06 சதவீதமானவை பொதுநலவாயநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாக இருந்தன. இதில் 22·34 சதவீதமானவை பெரிய பிரித்தானியாவிடமிருந்தும், 12·44 சதவீதமானவை இந்தியாவிடமிருந்தும், 10·85 சதவீதமானவை அவுஸ்திரேலியாவிடமிருந்தும் பெறப்பட்டவையாக இருந்தன. பொதுநலவாயநாடுகள் அல்லாத நாடுகளான சீனாவிடமிருந்து 13 சதவீதமானவையும், பர்மாவிடமிருந்து 8·05 சதவீதமானவையும் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்விருநாடுகளிலிருந்தும் பெருமளவு அரிசி இறக்குமதி செய்யப்பட்டமையே இறக்குமதி வர்த்தகத்தில் இந்நாடுகள் அதிகபங்கினைக் கொண்டிருந்தமைக்குக் காரணமாகும்.

### அட்டவணை 7. V

இலங்கை இறக்குமதிகளின் நாடுகள் அடிப்படையிலான பாகுபாடு
(சதவீதமாக)

| நாடுகள் | 1953 | 1956 | 1960 | 1966 | 1970 | 1976 |
|---|---|---|---|---|---|---|
| பொதுநலவாய நாடுகள் | 56·06 | 46·47 | 48·41 | 36·48 | 39·80 | 27.98 |
| பெரிய பிரித்தானியா | 22·34 | 21·15 | 22·13 | 16·77 | 14·26 | 5·87 |
| அவுஸ்திரேலியா | 10·85 | 5·80 | 4·90 | 4·88 | 4·84 | 5·81 |
| பாகிஸ்தான் | 0·48 | 0·43 | 1·37 | 4·17 | 2·52 | 6·77 |
| இந்தியா | 12·44 | 13·06 | 13·69 | 6·68 | 9·70 | 3·86 |
| ஏனைய பொதுநலவாய நாடுகள் | 9·95 | 6·03 | 6·32 | 3·98 | 8·48 | 5·67 |
| வெளிநாடுகள் | 43·94 | 53·53 | 51·59 | 63·52 | 60·20 | 72·02 |
| சீனு | 13·00 | 8·21 | 6·75 | 10·70 | 12·52 | 11·20 |
| பர்மா | 8.05 | 8·92 | 6·25 | 8·59 | 3·85 | 4·93 |
| ஜப்பான் | 4·35 | 7·02 | 8·43 | 6·20 | 8·45 | 8·01 |
| ஐக்கியஅமெரிக்கா | 3·24 | 2·47 | 3·58 | 3·94 | 5·72 | 8·08 |
| ஏனைய நாடுகள் | 15·30 | 26·91 | 26·58 | 34·09 | 29·66 | 39·80 |

மூலம் : புள்ளிவிபரத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி வர்த்தகத்தில் பொது நலவாய நாடுகள் கொண்டிருந்த பங்கானது வீழ்ச்சிப்போக்கினைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. 1956இல் மொத்த இறக்குமதியில் 46·47 சதவீதமாக இருந்த பொதுநலவாய நாடுகளின் பங்கானது 1976இல் 27·98 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் மொத்த இறக்குமதியில் பெரிய பிரித்தானியாவின் பங்கானது 21·15 சதவீதத்திலிருந்து 5·87 சதவீதமாகவும், இந்தியாவின் பங்கானது 13·06 சதவீதத்திலிருந்து 3·86 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. பொதுநலவாயநாடுகள் பாகிஸ்தானுடன் அண்மைக்காலங்களில் பெருமளவு வர்த்தக வளர்ச்சி ஏற்பட்டமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். 1953இல் மொத்த இறக்குமதியில் 0·48 சதவீதமான பொருட்கள் மட்டுமே பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் 1976இல் பாகிஸ்தானிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மொத்த இறக்குமதியில் 6·77 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கையின் இறக்குமதி வர்த்தகமும் 1956க்குப் பின்பு பெருமளவிற்குப் பொதுநலவாய நாடுகள் அல்லாத ஏனைய நாடுகளை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்துள்ளது. 1953இல் பொதுநலவாயநாடுகள் அல்லாத ஏனைய வெளிநாடுகளிடமிருந்து பெறப்பட்ட இறக்குமதியானது மொத்த இறக்குமதியில் 43·94 சதவீதமாக இருந்தது. இத்தொகை 1956இல் 53·53 சதவீதமாகவும் 1976இல் 72·02 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இலங்கை 1956ஆம் ஆண்டிற்குப் பின்பு பெருமளவு பொருட்களை ஜப்பான், சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள் போன்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய முற்பட்டமையினாலேயே பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் வீழ்ச்சிப்போக்குக் காணப்படலாயிற்று. இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் மட்டுமன்றி, இறக்குமதி வர்த்தகம்கூட 1956ஆம் ஆண்டிலிருந்து நாடுகள் வாரியாகப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் பொதுநலவாய நாடுகளின் பங்கானது தொடர்ச்சியாகக் குறைந்து செல்லும் தன்மையுடையதாக உள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமானது நாடுகள்வாரியாகப் பன்முகப்படுத்தப்பட்டமையும் இருபக்க வர்த்தகத்தின் வளர்ச்சியும் சமகாலத்தில் ஒன்றுடனொன்று இணைந்த நிகழ்ச்சியாகவே ஏற்பட்டுள்ளது. இலங்கை பொதுநலவாய நாடுகளுடன் மேற்கொண்ட வர்த்தகமானது பலபக்க வர்த்தகமாகவே அமைந்திருந்தது. 1956ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளினால் இருபக்க வர்த்தக உடன்படிக்கைகளை மேற் கொள்ளல் பெருமளவிற்குப் பயன்கூடியதாக அமைந்திருந்தன. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனு போன்ற வற்றுடன் வர்த்தகங்கள் இருபக்க உடன்படிக்கையின் அடிப்படை யிலேயே நடைபெறுகின்றன. இருபக்க வர்த்தக உடன்படிக்கைகள் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மைகள், விலைத்தளம்பல்கள் போன்றவற்றினைத் தவிர்த்து வெளிநாட்டு வர்த் தகத்தில் உறுதியான நிலை ஏற்படுவதற்குச் சாதகமானவையாகும். இதனாலேயே முதல்விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அபி விருத்தி அடைந்துவரும் நாடுகள் வெளிநாட்டு வர்த்தகத்தில் உறுதியினை ஏற்படுத்த இருபக்க வர்த்தக உடன்படிக்கைகளை மேற் கொள்ள முனைகின்றன. இன்று இலங்கையின் வெளிநாட்டு வர்த் தகத்திலும் இருபக்க வர்த்தகமானது வெளிநாட்டு வர்த்தக உறுதிக்கு மட்டுமன்றி வெளிநாட்டு வர்த்தகத்தைப் பன்முகப்படுத்து வதற்கும் முக்கிய காரணியாக உள்ளது.

## ஏற்றுமதி இறக்குமதி விலை தொகைக் குறிகாட்டியும், வர்த்தகமாற்று வீதமும்

அநேகமான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குச் சர்வதேச வர்த்தகத்தில் நிலவுகின்ற பாதகமான விலைத்தளம்பலானது குறிப் பிடத்தக்கதொரு அம்சமாகவும் மிக முக்கியமானதொரு பிரச்சினை யாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதி விலைக் குறி காட்டியானது 1950ஆம் ஆண்டளவில் 121ஆகவும் - 1956இல் 125ஆகவும் அதிகரித்திருந்தது. ஆனால் 1956ஆம் ஆண்டிற்குப் பின்பு 1971ஆம் ஆண்டுவரை ஏற்றுமதி விலைக் குறிகாட்டி வீழ்ச்சிப் போக்கினையே கொண்டிருந்தது. 1971ஆம் ஆண்டிற்குப் பின்பு எண்ணெய் விலை ஏற்றமும் உலகரீதியான பணவீக்கமும் ஏற்றுமதிப் பொருட்களின் விலை ஏற்றத்திற்குப் பெருமளவு காரணமாக அமைந் திருந்தன. இதனால் 1971இல் 117ஆக இருந்த ஏற்றுமதி விலைக் குறிகாட்டியானது 1977இல் 382ஆக அதிகரித்தது. இலங்கையின் ஏற்றுமதி விலைக் குறிகாட்டி 1971ஆம் ஆண்டிற்குப் பின்பே வேக மான அதிகரிப்பினைக் கொண்டிருந்தது.

பொதுவாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின் சாதகமான விளைவுகளை ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் உலக சந்தையில் அதிகரித்துச் செல்லுகின்ற சூழ்நிலை யிலேயே பெறமுடியும். ஆனால் ஏற்றுமதித் தொகையினை அதிகரிக்கும் போது மட்டுமே இவ் விலை அதிகரிப்பினால் பூரணமான நன்மை களைப் பெறலாம். எனினும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்கள் விவசாய உற்பத்திகளாக இருப்பதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7. VI

ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றின் விலை, தொகை, குறிகாட்டியும், வர்த்தகமாற்று விகிதமும் 1950—1977
குறிகாட்டி 1967 = 100

| காலம் | ஏற்றுமதி விலைக் குறிகாட்டி | ஏற்றுமதி தொகைக் குறிகாட்டி | இறக்குமதி விலைக் குறிகாட்டி | இறக்குமதி தொகைக் குறிகாட்டி | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1950 | 121 | 75 | 78 | 82 | 165 |
| 1953 | 115 | 79 | 93 | 103 | 125 |
| 1956 | 125 | 81 | 83 | 109 | 151 |
| 1959 | 122 | 82 | 83 | 136 | 148 |
| 1962 | 109 | 97 | 77 | 108 | 142 |
| 1965 | 113 | 105 | 100 | 86 | 112 |
| 1968 | 117 | 103 | 126 | 101 | 93 |
| 1971 | 117 | 99 | 150 | 90 | 78 |
| 1974 | 213 | 85 | 370 | 56 | 58 |
| 1975 | 199 | 102 | 433 | 69 | 46 |
| 1976 | 239 | 97 | 383 | 75 | 62 |
| 1977 | 382 | 89 | 471 | 97 | 81 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்.

விலை அதிகரிக்கும்போது உடனடியாக ஏற்றுமதித் தொகையினை அதிகரித்தல் கடினமானதொன்றாகும். இலங்கையினது ஏற்றுமதி விலைக் குறிகாட்டியும் இவ் அம்சத்தினைப் பிரதிபலிப்பதாக உள்ளது. 1956ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி விலைக் குறிகாட்டி உயர்வாக இருந்தபோது ஏற்றுமதித் தொகைக் குறிக்காட்டி 81 ஆக மட்டுமே காணப்பட்டது. 1956ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரை ஏற்றுமதி விலைகள் பெருமளவிற்கு இலங்கைக்குச் சாதகமானதாக இருக்கவில்லை. ஏற்றுமதித் தொகைக் குறிகாட்டியானது 1962இல் 97ஆகவும் 1965இல் 105 ஆகவும் 1971ல் 99ஆகவும் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதி விலைக் குறிகாட்டி வேகமாக அதிகரித்துச் செல்ல ஏற்றுமதித் தொகைக் குறிகாட்டியானது 1974இல் 85 ஆக இருந்து 1975இல் 102ஆக அதிகரித்து 1977இல் 89ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையானது ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் போன்றே ஏற்றுமதிப் பொருட்களின் விலையேற்றத்தின் சாதகமான பலாபலன்களைப் பெறுவதற்கு ஏற்றுமதித் தொகையினைக் குறுங்காலத்தில் அதிகரிக்க முடியாத நிலையானது தடையாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இறக்குமதி விலைக் குறிகாட்டியானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டதாகவுள்ளது. 1950ஆம் ஆண்டு 78ஆக இருந்த இறக்குமதி விலைக் குறிகாட்டி 1965-ல் 100ஆக அதிகரித்துள்ளது. 1965ஆம் ஆண்டிற்குப் பின்பு இறக்குமதிப் பொருட்களின் விலைகள் வேகமான அதிகரிப்புப் போக்கினைக் கொண்டிருந்தன. 1971ஆம் ஆண்டு 150ஆக இருந்த இறக்குமதி விலைக் குறிகாட்டியானது 1974இல் 370ஆகவும் 1977இல் 471ஆகவும் அதிகரித்தது. 1971க்குப் பின்பு ஏற்றுமதிப் பொருட்களின் விலைஅதிகரிப்பினை விட இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பானது மிகக் கூடியதாகவுள்ளது. இவ் ஆறுவருட காலப்பகுதியில் இறக்குமதிப் பொருட்களின் விலை ஏறக்குறைய மூன்று மடங்கால் அதிகரித்துள்ளது.

இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பிற்கேற்ப இறக்குமதிப் பொருட்களின் தொகையிலும் வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டாலும் ஒப்புரீதியாக நோக்கும்போது இவ்வீழ்ச்சியானது மிகக்குறைவாகவே உள்ளது. 1950இல் 82ஆக இருந்த இறக்குமதித் தொகைக் குறிகாட்டி 1959-ல் 136ஆக அதிகரித்தது. 1950ம் ஆண்டிற்குப் பின்பு இறக்குமதித் தொகைக் குறிகாட்டியானது குறைந்து சென்று 1974-ல் 56ஆக வீழ்ச்சியடைந்தது. ஆனால் 1977இல் இறக்குமதித் தொகைக் குறிகாட்டியானது 97ஆக மீண்டும் அதிகரித்துள்ளது. இதற்கு அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையே முக்கிய காரணமாகும். இலங்கையில் இறக்குமதிகளின் அளவானது இறக்குமதிப் பொருட்களின் விலையினாலன்றி இறக்குமதிக் கட்டுப்பாடுகளினாலேயே பெருமளவு நிர்ணயிக்கப்படுகிறது. ஏனெனில், உள்நாட்டில் பணவீக்கம் காணப்படுகின்ற நிலையில் இறக்குமதிப் பொருட்களின் விலை ஏற்றம் அல்லது கூடிய இறக்குமதி வரிகள் அதனளவினைக் கட்டுப்படுத்தச் சத்தியற்றவையாகும். இதனாலேயே அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்திய காலங்களில் இறக்குமதிக் குறிகாட்டியில் அதிகரிப்பேற்படுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் ஏற்றுமதித் தொகைக் குறிகாட்டி, இறக்குமதித் தொகைக் குறிகாட்டி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் விலையினால் அதிகளவு பாதிக்கப்படாதனவாகக் காணப்படுகின்றன.

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் நீண்டகாலப் போக்கில் பாதகமான வர்த்தக மாற்று விகிதத்தினைக் கொண்டிருப்பதே இந்நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று சர்வதேச வர்த்தகத்தின் சாதகமான விளைவுகளை அடைய முடியாமைக்கு முக்கிய காரணமென வாதிடப்படுகின்றது. வர்த்தக மாற்று விகிதமே ஒரு நாட்டினது இறக்குமதியாற்றலை அளவிட்டுக் கூறும் குறிகாட்டியாகும். வர்த்தகமாற்று விகிதமானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$\frac{\text{ஏற்றுமதி விலைக் குறிகாட்டி}}{\text{இறக்குமதி விலைக் குறிகாட்டி}} \times 100$ என்ற சமன்பாட்டின் அடிப் படையிலேயே கணிக்கப்படுகின்றது. ஒரு நாடு குறிப்பிட்ட ஒரு தொகைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் எவ்வளவு தொகைப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும் என்பதனையே இக் குறிகாட்டியானது எடுத்துக்காட்டுகிறது. வர்த்தக மாற்று விகிதம் 100 சத வீதத்திற்கு அதிகமாக இருக்கும்போது ஒரு நாடு சாதகமான வர்த்தகமாற்று விகிதத்தினைக் கொண்டுள்ளது. அல்லது சர்வதேச வர்த்தகம் அந்நாட்டுக்குச் சாதகமாக அமைந்துள்ள தென்பது பொருளாகும். சாதகமான வர்த்தகமாற்றுவிகிதம் காணப் படும்போது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் அளவினை விடக் கூடியளவு பொருட்களை இறக்குமதி செய்யும் ஆற்றலை ஒரு நாடு பெற்றிருக்கும். இதேபோன்று வர்த்தகமாற்று விகிதமானது 100சத வீதத்திற்குக் குறைவாக இருக்கும்போது அது பாதகமான வர்த்தக மாற்று விகிதமாகக் கருதப்படும். பாதகமான வர்த்தக மாற்று விகிதம் காணப்படும்போது ஒரு நாடு ஏற்றுமதி செய்யும் பொருட் களின் அளவினைவிட அதன் மூலம் இறக்குமதி செய்யும் பொருட் களின் அளவு குறைவாக இருக்கும். இதனாலேயே பாதகமான வர்த்தக மாற்று விகிதம் காணப்படும்போது சர்வதேச வர்த்தக மானது அந்நாட்டுக்குப் பாதகமாக அமைந்துள்ளதெனக் கருதப் படும்.

இலங்கையினது வர்த்தகமாற்று விகிதமானது 1950ஆம் ஆண்டில் 165ஆக இருந்து 1953இல் 125ஆக வீழ்ச்சியடைந்து 1956இல் 151ஆக மீண்டும் அதிகரித்தது. 1966ஆம் ஆண்டிலிருந்து 1975ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கினை இது கொண் டிருந்தது. 1975ஆம் ஆண்டு இலங்கையினது வர்த்தகமாற்று விகித மானது 46இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இதனால் சர்வதேச வர்த்தகத்தில் மிகவும் பாதகமான காலகட்டமாக இவ்வாண்டு கருதப்படுகிறது. 1975ஆம் ஆண்டிற்குப் பின்பு இலங்கையின் வர்த்தகமாற்று விகிதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டு 1977இல் 97ஆக உயர்வடைந்துள்ளது. இவ்வாறு 1975ஆம் ஆண்டிற்குப் பின்பு வர்த்தக மாற்று விகிதத்தில் படிப்படியான அதிகரிப்பு ஏற்பட்டாலும் 1977ஆம் ஆண்டுவரை வர்த்தகமாற்று விகிதம் இலங்கைக்குப் பாதகமானதாகவே காணப்பட்டது.

### இலங்கையின் சென்மதி நிலுவையும் அதன் பிரச்சினைகளும்

சென்மதி நிலுவையானது ஒரு நாட்டிற்கும் ஏனைய உலக நாடு களுக்குமிடையே நடைபெறும் எல்லாவிதமான சட்ட ரீதியான பொருளாதார கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் சித்தரித்துக் காட்டும் பட்டியலாகும். பொதுவாக, சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு, முதற் கணக்கு என இரு பிரிவுகள் உண்டு. இதில் நடைமுறைக் கணக்கானது பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளை மட்டும் கொண்டதாக இருக்கும். பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி கட்புலனாகும் வர்த்தகமென்றும் சேவைகளின் ஏற்றுமதி இறக்குமதி கட்புலனாகா வர்த்தக மென்றும் கூறப்படுவதுண்டு. முதற் கணக்கில் நீண்டகாலக் குறுங்கால முதலீட்டு அசைவுகள், தங்க ஏற்றுமதி இறக்குமதி போன்ற நடவடிக்கைகளே பதியப்படுவனவாகும்.

சர்வதேச வர்த்தகத்தில் ஒரு நாட்டின் நிலையினையும் அதன் பிரச்சினைகளையும் அறிவதற்கு சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குப் பற்றிய ஆய்வு முக்கியமானதாகும். இலங்கையின் வர்த்தக நிலுவையானது 1957ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாகக் குறைநிலைப் போக்கினையே கொண்டிருந்தது. வர்த்தக நிலுவை என்பது பொருள் ஏற்றுமதிப் பெறுமானத்திற்கும், பொருள் இறக்குமதிப் பெறுமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை அல்லது கட்புலனாகும் வர்த்தக மீதியைக் காட்டுவதாகும். இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் கட்புலனாகும் வர்த்தகமே மிகக் கூடிய பங்கினை வகிக்கின்றது. 1957ஆம் ஆண்டில் 95 மில்லியன் ரூபாவாக இருந்த வர்த்தக நிலுவைக் குறை நிலையானது 1960இல் 210 மில்லியன் ரூபாவாக உயர்ந்து 1965இல் 13 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது, இலங்கையில் 1976ஆம் ஆண்டிற்கு முன்பு, 1965ஆம் ஆண்டிலே வர்த்தக நிலுவையானது மிகக் குறைவான குறைநிலையினைக் கொண்டிருந்தது. 1966ஆம் ஆண்டிலிருந்து 1973ஆம் ஆண்டுவரை வர்த்தக நிலுவைக் குறை நிலையானது முற்பட்ட காலங்களை விட உயர்வாக இருந்தபோதிலும் பெரும் அதிகரிப்புப் போக்கினைக் கொண்டிருக்கவில்லை. 1966இல் 344 மில்லியன் ரூபாவாக இருந்த குறைநிலையானது 1973இல் 298 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சி அடைந்தது. இக்காலகட்டத்தில் 1969ஆம் ஆண்டில் மட்டுமே வர்த்தக நிலுவைக் குறைநிலையானது 746 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் மிகக் கூடிய வர்த்தக நிலுவைக் குறை நிலைகள் 1974இல் 1263 மில்லியன் ரூபாவாகவும், 1975இல் 1421 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்திருந்தது. இதேபோன்று 1957ஆம் ஆண்டிற்குப் பின்பு முதன் முதலாக வர்த்தக நிலுவை மிகுநிலையானது 1977ஆம் ஆண்டில் 490 மில்லியன் ரூபாவால் ஏற்பட்டது. ஏறக் குறைய 20 வருடகாலப் பகுதியில் 1965ஆம் ஆண்டில் மிகக் குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 7. VII

**இலங்கையின் சென்மதி நிலுவை 1957 — 1977 (மில்லியன் ரூபாய்களில்)**

| காலம் | ஏற்றுமதி | இறக்குமதி | வர்த்தக நிலுவை | *தேறிய கட்புலனாகாதவை | நடைமுறைக் கணக்கின் நிலுவை | தேறிய நீண்டகால மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1957 | 1969 | −1764 | − 95 | −100 | − 195 | − 18 | − 213 |
| 1958 | 1624 | − 1713 | − 89 | − 64 | − 153 | + 8 | − 145 |
| 1959 | 1773 | −1918 | − 185 | − 25 | − 208 | + 32 | − 176 |
| 1960 | 1796 | −2006 | − 210 | − 11 | − 221 | + 22 | − 199 |
| 1961 | 1707 | −1794 | − 87 | − 7 | − 93 | + 11 | − 82 |
| 1962 | 1763 | −1906 | − 143 | + 3 | − 140 | + 39 | − 101 |
| 1963 | 1708 | −1869 | − 161 | − 7 | − 168 | + 80 | − 88 |
| 1964 | 1767 | −1960 | − 193 | + 33 | − 160 | + 8 | − 152 |
| 1965 | 1909 | −1922 | − 13 | + 72 | + 59 | + 58 | + 117 |
| 1966 | 1674 | −2018 | − 344 | − 53 | − 290 | +137 | − 153 |
| 1967 | 1650 | −1985 | − 335 | + 46 | − 289 | +161 | − 128 |
| 1968 | 1976 | −2356 | − 380 | + 25 | − 355 | +224 | − 131 |
| 1969 | 1909 | −2655 | − 746 | − 51 | − 797 | +275 | − 522 |
| 1970 | 2016 | −2332 | − 316 | − 35 | − 350 | +184 | − 166 |
| 1971 | 1931 | −2218 | − 287 | + 71 | − 216 | +404 | + 188 |
| 1972 | 1898 | −2153 | − 255 | + 59 | − 196 | +292 | + 96 |
| 1973 | 2346 | −2644 | − 298 | +138 | − 161 | +190 | + 29 |
| 1974 | 3400 | −4663 | −1263 | +356 | − 907 | +298 | − 609 |
| 1975 | 3913 | −5334 | −1421 | +649 | − 772 | +613 | − 159 |
| 1976 | 4707 | −5416 | − 709 | +659 | − 50 | +715 | + 665 |
| 1977 | 6640 | −6150 | + 490 | +769 | +1259 | +754 | +2013 |

மூலம்: இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கைகள்.
* மாற்றுக்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியது.

வர்த்தகநிலுவைக் குறைநிலையினையும், 1977இல் மட்டும் மிகு நிலையினையும் கொண்டிருக்க ஏனைய காலப்பகுதிகளில் வர்த்தக நிலுவையானது இலங்கைக்குப் பாதகமானதாகவே அமைந்திருந்தது.

வளர்ச்சியடைந்த நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் கட்புலனாகும் வர்த்தகத்தினைப் போன்றே கட்புலனாகா வர்த்தகமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கப்பல்—விமானப் போக்குவரத்துச் சேவைகள், காப்புறுதி வங்கிச் சேவைகள், சுற்றுப்பிரயாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றினலும் வளர்ச்சியடைந்த நாடுகள் பெருமளவு வருமானத்தினைப் பெறுகின்றன. இதனல் வர்த்தக நிலுவைக் குறைநிலையானது கட்புலனுகா வர்த்தக நிலுவை மிகையினல் ஈடு செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கு மிகுநிலையினை அடைவதற்கும் காரணமாக இருக்கும். இலங்கையில் 1973ஆம் ஆண்டு வரை கட்புலனுகா வர்த்தகம் பெருமளவிற்கு வளர்ச்சியடையவில்லை. 1972ஆம் ஆண்டிற்கு முன்பு கட்புலனுகா வர்த்தகம் சில காலங்களில் மிகுநிலையினைக் கொண்டிருந்தாலும் அது நடைமுறைக் கணக்கில் மிகுநிலையினை ஏற்படுத்துவதற்குப் போதியதாகக் காணப்படவில்லை. 1965ஆம் ஆண்டில் மட்டுமே வர்த்தக நிலுவை 13 மில்லியன் ரூபா குறைநிலையாக இருக்க கட்புலனுகா வர்த்தக மிகுநிலை 72 மில்லியன் ரூபாவாக இருந்ததால் நடைமுறைக் கணக்கு 59 மில்லியன் ரூபாவால் மிகுநிலையினைக் கொண்டிருந்தது.

1971ஆம் ஆண்டிலிருந்து கட்புலனுகா வர்த்தகத்தில் மிகுநிலை காணப்பட்டாலும் 1973ஆம் ஆண்டிற்குப் பின்பு இம் மிகுநிலையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. 1971ஆம் ஆண்டு 71 மில்லியன் ரூபாவாக இருந்த கட்புலனுகா வர்த்தக மிகுநிலையானது 1973இல் 138 மில்லியன் ரூபாவாகவும் 1977இல் 769 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்தது. 1973ஆம் ஆண்டிலிருந்து சுற்றுப்பிரயாணம், துறைமுகத்தில் வெளிநாட்டுக் கப்பல்களுக்கான சேவைகள், காப்புறுதி, வட்டி, பங்கிலாபம் போன்றவற்றினல், பெறப்பட்ட வருமானத்தில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் வெளி நாடுகளிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகளின் அதிகரிப்பும் கட்புலனுகா வர்த்தக மிகுநிலைக்கு முக்கிய காரணமாகும். கட்புலனுகா வர்த்தகத்தில் ஏற்பட்ட மிகுநிலையானது 1973ஆம் ஆண்டிற்குப் பின்பு நடைமுறைக்கணக்கின் குறைநிலையினைக் குறைப்பதற்குப் பெருமளவு பொறுப்பாக அமைந்திருந்தது. 1975ஆம் ஆண்டு வர்த்தக நிலுவைக் குறைநிலையானது 1421 மில்லியன் ரூபாவாக இருந்தபோதிலும் நடைமுறைக் கணக்குக் குறைநிலையானது 772 மில்லியனுக இருந்தமைக்கு கட்புலனுகா வர்த்தக மிகுநிலையே காரணமாகும். 1976இல் வர்த்தக நிலுவைக் குறைநிலையானது 709 மில்லியன் ரூபாவாக இருக்க கட்புலனுகா வர்த்தக மிகுநிலை 659 மில்லியன் ரூபாவாக இருந்தமையினல் நடைமுறைக் கணக்கு குறைநிலை 50 மில்லியன் ரூபாவாக மட்டுமே இருந்தது. 1977இல் வர்த்தக நிலுவை மிகுநிலை 490 மில்லியன் ரூபாவாகவும், கட்புலனுகா வர்த்தக மிகுநிலை 769 மில்லியன் ரூபாவாகவும் இருந்தமையினல் முதன் முதலாக நடைமுறைக் கணக்கு மிகுநிலையானது 1259 மில்லியன் ரூபாவாக இருந்தது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் அண்மைக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்புலனாகா வர்த்தகத்தில் துரிதமான வளர்ச்சியானது ஏற்பட்டு உள்ளமை முக்கியமானதொரு அம்சமாகக் காணப்படுகிறது.

1957ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை வர்த்தக நிலுவையானது தொடர்ச்சியான குறைநிலையினைக் கொண்டிருந்த போதிலும் சென்மதி நிலுவையின் அடிப்படை நிலுவையானது சில காலப்பகுதிகளில் மிகுநிலையினைக் கொண்டிருந்தது. இதற்கு நீண்டகால மூலதனப் பாய்ச்சலே காரணமாகும். இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து வரும் நீண்டகால முதலீடுகள் பெருமளவிற்கு முதலீடாக அன்றிக் கடனாகவே வருகின்றன. இதனால் எதிர் காலத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்தல், கடனுக்கான வட்டி என்ற அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவேண்டியிருப்பதால், சென்மதி நிலுவையில் குறைநிலையினை அதிகரிப்பதாக அமைந்திருக் கும். 1965ஆம் ஆண்டிலிருந்து தேறிய நீண்டகால முதலீடுகளில் தொடர்ச்சியான அதிகரிப்பேற்பட்டுவந்துள்ளது. 1958ஆம் ஆண்டு 8 மில்லியன் ரூபாவாக இருந்த தேறிய நீண்டகால முதலீடானது 1965இல் 137 மில்லியன் ரூபாவாகவும், 1977இல் 754 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. 1965ஆம் ஆண்டிலிருந்து தேறிய நீண்டகால மூலதனம் அடிப்படை நிலுவையின் குறைநிலையினைக் குறைப்பதற்குப் பெருமளவிற்குப் பொறுப்பு வாய்ந்த காரணியாக இருந்துள்ளது.

நடைமுறைக் கணக்கின் குறைநிலையினை ஒரு நாடு பல்வேறு வழிகளில் நிதியீட்டம் செய்து சமப்படுத்த முடியும். இந் நிதியீட்ட மானது சென்மதி நிலுவை மிகுநிலை அனுபவித்த காலங்களில் சேகரித்து வைக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன் படுத்தல், தங்கத்தினை ஏற்றுமதி செய்தல், சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுதல், உலகநாடுகளிடம் கடன்பெறுதல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம். இலங்கையில் 1960ஆம் ஆண்டுவரை நிதியீட்டத்திற்கு வெளிநாட்டுச் சொத்துக் களே பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனால் 1957ஆம் ஆண்டில் 1275·7 மில்லியன் ரூபாவாக இருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1960ஆம் ஆண்டில் 734 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சி அடைந்தன. இதனால் 1961ஆம் ஆண்டிற்குப் பின்பு நிதியீட்டமானது சர்வதேச நாணய நிதியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டது.

1962ஆம் ஆண்டிற்குப் பின் நிதியீட்டத்திற்காக வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து மிகக் குறைவான தொகையே பயன்படுத்தப் பட்டன. வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து குறைந்த தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7. VIII

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1956—1977
(மில்லியன் ரூபாய்களில்)

| காலம் | மொத்தச் சொத்துக்கள் | சொத்துக்களில் மாற்றம் |
|---|---|---|
| 1956 | 1,228·8 | + 284·5 |
| 1957 | 1,275·7 | + 46·9 |
| 1958 | 1,061·9 | — 213·8 |
| 1959 | 933·2 | — 128·7 |
| 1960 | 734·0 | — 199·2 |
| 1961 | 541·3 | — 192·7 |
| 1962 | 531·7 | — 9·6 |
| 1963 | 503·9 | — 27·8 |
| 1964 | 462·3 | — 41·6 |
| 1965 | 351·0 | — 111·3 |
| 1966 | 439·9 | + 88·9 |
| 1967 | 317.6 | — 122·3 |
| 1968 | 448·9 | + 131·3 |
| 1969 | 463·6 | + 14·1 |
| 1970 | 377·1 | — 85·9 |
| 1971 | 402·6 | + 25·5 |
| 1972 | 498·1 | + 95·5 |
| 1973 | 726·7 | + 228·6 |
| 1974 | 851·2 | + 124·5 |
| 1975 | 888·8 | + 37·6 |
| 1976 | 833·9 | — 54·9 |
| 1977 | 1,402·2 | + 568·3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்ட றிக்கைகள்.

யாவது நிதியீட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட போதிலும் 1967ஆம் ஆண்டில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 317·6 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்திருந்தது. 1971ஆம் ஆண்டுவரை வெளிநாட்டுச் சொத்துக்களில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் 1973ஆம் ஆண்டில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 726·7 மில்லியன் ரூபாவாகவும், 1977இல் 1402·2 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்திருந்தது. இது 1957ஆம் ஆண்டிலிருந்த வெளிநாட்டுச் சொத்துக்களைவிட அதிகமானதாகும். ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகையானது வெளிநாட்டு வர்த்தகத்தின் ஸ்திரநிலையினைப் பாதுகாப்பதற்குப் போதியதெனக் கருத முடியாது. ஏனெனில், 1956ஆம் ஆண்டு இறக்குமதிப் பொருட்களின் விலையினைவிட இன்றைய விலை ஏறக்குறைய 5 மடங்காகக் காணப்படுகின்றது. எனவே, வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் அதிகரித்தல் வெளிநாட்டு வர்த்தக ஸ்திரத் தன்மைக்கு இன்றியமையாததாகும்.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மட்டுமன்றி, வளர்ச்சி அடைந்த நாடுகள்கூட சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை எதிர்நோக்குவனவாக உள்ளன. சென்மதி நிலுவையானது ஒவ்வொரு கொள்வனவுக்கும் ஒவ்வொரு கொடுப்பனவு உண்டு என்ற இரட்டைப் பதிவுத் தத்துவ அடிப்படையில் பதியப்படுவதால் கணக்கின் அடிப்படையில் சமனாகவே காணப்படும். கணக்கின் அடிப்படையில் காணப்படும் சமநிலை சென்மதி நிலுவையின் உண்மையான சமநிலையினைக் குறிப்பதில்லை. நடைமுறையில் சென்மதி நிலுவையானது ஒன்றில் குறைநிலையாகவோ அல்லது மிகுநிலையாகவோ அமைந்திருக்கும். வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான சென்மதி நிலுவைக் குறைநிலையும், சென்மதி நிலுவை மிகுநிலையும் பொதுவாகச் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் எனக் கூறப்படுவதுண்டு. ஒரு நாடு தொடர்ச்சியாகச் சென்மதி நிலுவைக் குறைநிலையை அனுபவிக்கும்போது அந்நாட்டினது வெளிநாட்டுச் சொத்துக்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதுடன் பல உலக நாடுகளிடம் படுகடன் நாடாகவும் மாறிவிடும். இதனால் சர்வதேச வர்த்தகத்தில் தொடர்ந்து பங்குபற்றுவதால் பல பிரச்சினைகளை இந்நாடு எதிர்நோக்கவேண்டி இருக்கும். இதேபோன்று சென்மதி நிலுவையில் தொடர்ச்சியாக மிகுநிலை அனுபவிக்கும்போது ஒரு நாடு தனது வெளிநாட்டுச் சொத்துக்களைச் சேகரித்து வைப்பதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும். இன்று இலங்கை போன்ற நாடுகள் எதிர்நோக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் தொடர்ச்சியான சென்மதி நிலுவைக் குறைநிலையினால் ஏற்பட்டதொன்றாகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சென்மதி நிலுவைக் குறைநிலையினை அனுபவிப்பதற்குப் பாதகமான வர்த்தகமாற்று விகிதமே அடிப்படைக் காரணமெனக் கூறப்படுகிறது. இவ்விளக்கமானது பூரணமானதொரு விளக்கமாக அமையாவிட்டாலும் இதில் பெருமளவு உண்மையுண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. பாதகமான வர்த்தகமாற்று விகிதமானது ஏற்றுமதிப் பொருட்களினது விலை வீழ்ச்சி, இறக்குமதிப் பொருட்களினது விலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றம் ஆகியவற்றின் விளைவால் ஏற்படுவதாகும். 1972ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதிப் பொருட்களினது விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்த போதிலும் இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பானது ஒப்புரீதியில் உயர்வாக இருந்தமையினால் வர்த்தகமாற்று விகிதமானது பாதகமானதாகவே அமைந்திருந்தது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன், உலகின் மொத்த நிரம்பலில் இந்நாடுகளின் ஏற்றுமதி சிறிய பங்கினையே கொண்டுள்ளது. இதனால் இந்நாடுகள் தமது ஏற்றுமதிப் பொருட்களின் விலையினை நிர்ணயிக்கச் சத்தியற்றனவாக இருப்பதனால் உலக சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலையினையே ஏற்றுக்கொள்ள வேண்டியனவாக உள்ளன. உலக சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலைகள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சாதகமான விலைகளாகவே அமைந்திருக்கும். மேலும் இலங்கையின் இறக்குமதிப் பொருட்கள், கூலி உயர்வு கூடிய வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து பெறப்படுவதனால் கூடிய விலைகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. எனவேதான் இன்றைய சர்வதேச வர்த்தக அமைப்பானது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குப் பாதகமான வர்த்தக மாற்று விகிதத்தினை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கிறது.

பாதகமான வர்த்தகமாற்று விகிதமானது காணப்படுகின்ற நிலையிற்கூட ஒரு நாடு தனது ஏற்றுமதியினைக் கூட்டி இறக்குமதியினைக் குறைத்துக்கொள்ள முடியுமேயானால் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் இல்ங்கையினைப் பொறுத்தமட்டில் ஏற்றுமதிப் பொருட்களில் பெரும்பகுதி விவசாயப் பொருட்களாக இருப்பதனால் உற்பத்தியினைக் குறுங்காலத்தில் பெருக்குதல் கடினமானதாகும். இறக்குமதிப் பொருட்கள் பெருமளவிற்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களாகவும், முதலீட்டுப் பொருட்கள், மூலப் பொருட்கள் ஆகியனவாகவும் இருப்பதனால் இதன் தொகையினைக் குறைக்கும்போது உள்நாட்டு நுகர்வு மட்டுமன்றி நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிகூடப் பாதிக்கப்படுவதாக இருக்கும். மேலும் சனத்தொகைப் பெருக்கம், பணவீக்கம் ஆகியன காணப்படுகின்ற நிலையில் இத்தகைய இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் நடைமுறையில் சாத்தியமானதல்ல. இலங்கையில் பாதகமான வர்த்தகமாற்று விகிதம் காணப்படும்போது ஏற்றுமதியினை அதிகரித்து இறக்குமதியினைக் குறைக்க முடியாத நிலை சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் தீவிரமடைவதற்கு மிக முக்கியமான காரணியாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் தீவிரமடைவதற்கு கள்ளக்கடத்தலும், செலாவணி மோசடிகளும் பொறுப்புவாய்ந்த காரணிகளாக இருக்கின்றன. இலங்கையில் 1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து அரசாங்கமானது தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், செலாவணிக் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்த முனைந்தபோது இச் சட்டபூர்வமற்ற பொருளாதார நடவடிக்கைகள் அதிகளவில் அதிகரிக்கத் தொடங்கின. செலாவணி மோசடிகள் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே நடைபெற முடியும். ஒரு ஏற்றுமதியாளன் தனது ஏற்றுமதிப் பொருளுக்கான உத்தியோக பூர்வமான விலையினை உண்மையான வெளிநாட்டுச் சந்தை விலையினை விடக் குறைவாகக் காட்டி மேலதிகமான வெளிநாட்டுச் செலாவணியினை வெளிநாட்டில் சட்டபூர்வமற்ற முறையில் பெற்றுக் கொள்ள முடியும். இதேபோன்று வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குச் சுற்றுப்பிரயாணிகளாக வருபவர்கள் அல்லது வெளிநாட்டில் வேலைபார்க்கும் இலங்கையர்கள் இலங்கைக்குக் கொண்டுவரும் செலாவணியின் ஒரு பகுதியினைச் சட்டபூர்வமற்ற நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இதனால் இலங்கையானது உண்மையாகப் பெறக்கூடிய ஏற்றுமதி வருமானத்தினைவிடக் குறைவாகவே பெறக்கூடியதாக இருக்கும். பொருட்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர்கள் இறக்குமதிப் பொருட்களின் உண்மையான விலையினை விடக் கூடிய விலையினை உத்தியோகபூர்வமான விலையாகக் காட்டி மேலதிகமாக உள்ள வெளிநாட்டுச் செலாவணியினைச் சட்டபூர்வமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்த முனையலாம். செலாவணி மோசடிகள் ஒரு நாட்டினது ஏற்றுமதி வருமானத்தினைக் குறைத்து இறக்குமதிக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதனால் சென்மதி நிலுவையில் குறைநிலையினை ஏற்படுத்தும் காரணியாக அமைந்திருக்கும்.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அனுபவிக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு இந்நாடுகளின் பொருளாதாரங்கள் பன்முகப்படுத்தப்படாமையும் முக்கிய காரணமாகும். சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இலங்கையில் உணவு உற்பத்திப் பெருக்கம், கைத்தொழிலாக்கம் ஆகியன வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டிருப்பின் எமது பொருளாதாரத்தில் சர்வதேச வர்த்தகத்தின் தாக்கங்கள் குறைவாகவே ஏற்பட்டிருக்கும். இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருக்கும் ஏற்றுமதிப் பொருளாதார அமைப்பினைக் கொண்டு இருப்பதே இந்நாடுகள் எதிர்நோக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கும் ஏனைய பல பிரச்சினைகட்கும் பெருமளவு காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் இன்று இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் எமது பொருளாதாரம் தன்னிறைவு அற்ற பொருளாதாரமாக உலக பொருளாதாரத்துடன் இறுக்கமாக இணைக்கப்பட்டிருப்பதேயாகும்.

## சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைக் கொள்கைகள்

சென்மதி நிலுவையானது தொடர்ச்சியாகக் குறைநிலையினை அனுபவிக்கும்போது, அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்படும் நடைமுறைக்கொள்கைகள், ஏற்றுமதியினை ஊக்குவித்தல், இறக்குமதியினைக் கட்டுப்படுத்தல் என்ற அடிப்படையிலேயே அமைந்திருக்கும். இலங்கையில் இந் நடைமுறைக் கொள்கைகள் 1957ஆம் ஆண்டினைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டாலும் 1960ஆம் ஆண்டிற்குப் பின்பே தீவிரமான முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டன.

### 1. வரிக்கொள்கையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளும்

1957ஆம் ஆண்டைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு உயர்ந்த இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன, ஆனல் உள்நாட்டில் ஏற்பட்ட பணவீக்கம் காரணமாக உயர்ந்த இறக்குமதி வரிகள் இறக்குமதிகளைக் குறைப்பதற்குச் சக்தியற்றனவாகக் காணப்பட்டன. இதனுல் 1960க்குப் பின்பு பல தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் அமுலாக்கியது. உயர்ந்த இறக்குமதி வரிகளை விட இறக்குமதிக் கட்டுப்பாடுகளே பணவீக்கப் பொருளாதாரத்தில் இறக்குமதிகளைக் குறைப்பதற்கு ஏற்ற சாதனமாகும். இறக்குமதிக் கட்டுப்பாடுகளைச் சிறப்பான முறையில் அமுலாக்குவதற்கு உள்நாட்டிலேற்பட்ட இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்கள் பெரும் தடையாக அமைந்திருந்தன. இறக்குமதியினைக் குறைப்பதற்காக உள்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பல இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்கள் வெளிநாட்டு மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டமையினுல் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அதிகளவில் அமுலாக்கும் போது உள்நாட்டுக் கைத்தொழில்களின் வளர்ச்சியினை அது பாதிப்பதாக அமைந்திருந்தது. 1960ஆம் ஆண்டிற்குப் பின்பு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட கள்ளக் கடத்தல் போன்ற நடவடிக்கைகள் அதிகரிப்பதாக அமைந்திருந்தன. எனவேதான் பரந்த அடிப்படையில் சிறப்பான முறையில் இதனை அமுலாக்க முடியாமல் போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்த வரிக்கொள்கை ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. வரிச் சலுகைகள் முக்கியமாகப் பெருந்தோட்ட ஏற்றுமதி தவிர்ந்த ஏனைய பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்குப் பெருமளவு அளிக்கப்பட்டன. முக்கியமாகக் கைத்தொழில் உற்பத்திகள், ஆடை வகைகள், பாதணிகள், மாணிக்கக்கற்கள் போன்றவற்றின் ஏற்றுமதிகளுக்கே இந்த ஊக்கங்கள் அளிக்கப்பட்டன. 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு மாணிக்கக்கல் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக வருமானவரிச் சலுகைகள் மட்டுமன்றி, மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு முறையில் வெளிநாட்டுச் செலாவணிச் சலுகைகளும் அளிக்கப்பட்டன. இதனால் மாணிக்கக்கல் ஏற்றுமதியானது அதிகரித்தது என்பதனைவிட இதுவரை கள்ளக் கடத்தலின் மூலம் நடைபெற்ற மாணிக்கக்கல் ஏற்றுமதி சட்டபூர்வமான முறையில் செய்யப்பட்டது என்பதே பொருத்தமானதாகும். மாணிக்கக்கல் ஏற்றுமதிக்களிக்கப்பட்ட சலுகைகள் ஏனைய பொருட்களின் ஏற்று மதிக்கும் ஓரளவு விரிவுபடுத்தப்பட்டது. இதனால் 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு பல புதிய பொருட்கள் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியினை உழைப்பதற்கு வழி வகுப்பனவாக இருந்தன.

## II. வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டம்

1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், செலாவணிக் கட்டுப்பாடுகளும் அமுலாக்கப்பட்டபோது அவை உள்நாட்டு நுகர்வினை மட்டுமன்றி பொருளாதார வளர்ச்சியினையும் பாதிப்பனவாக இருந்தன. வெளிநாட்டுச் செலாவணியானது நுகர்வுப் பொருள் இறக்குமதிக்கு மட்டுமன்றி கைத்தொழில் விவசாயத்துறைக்குத் தேவையான மூலப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் போன்றவற்றினை இறக்குமதி செய்யவும் தேவைப் பட்டது. இதனால் வெளிநாட்டுச் செலாவணியினைப் பல்வேறு தேவைகட்கிடையேயும் மதிப்பீடு செய்து பங்கீடு செய்யும் ஒரு முறையாகவே வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டமானது அமைந்திருந்தது.

வெளிநாட்டுச் செலாவணி வரவுசெலவுத் திட்டமானது 1963இல் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் 1965ஆம் ஆண்டில்தான் அது சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வெளி நாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டக் குழுவில் திட்டமிடல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும், நிதி, வர்த்தகம், கைத்தொழில், விவசாய அமைச்சர்களின் நிரந்தரக் காரியதரிசிகளும், மத்திய வங்கியின் சிரேஷ்ட ஆளுனரும் இடம்பெற்றனர். இக் குழுவினாலேயே வெளிநாட்டுச் செலாவணி பற்றிய ஒதுக்கீடு பரிசீலனை செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிக்கான தேவை அதிகரித்துச் செல்லும் நிலையில் பற்றாக்குறையாகப் பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணியினைச் சிறந்த முறையில் பங்கீடு செய்தல் கடினமானதாகும். இத்தகைய நிலையில் அது இயல்பாகவே பல ஊழல்களுக்கும் வழிவகுத்துவிடும். இதனால் இம் முறையானது சிறப்பான முறையில் இயங்க முடியாதிருந்தது.

## III. நாணய மதிப்பிறக்கம்

1960ஆம் ஆண்டிற்குப் பின்பு மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு ஏற்ற பரிகாரமாக அமையவில்லை. 1967ஆம் ஆண்டளவில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இலங்கை நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தமையினால் 1967இல் 20 சதவீதத்தினால் இலங்கை நாணயம் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது. இதனால் 1 பவுண் 13 ரூபா 65 சதம் என்றிருந்த தொடர்பு விகிதமானது 1 பவுண் 14 ரூபா 29 சதமாக மாறியது. மேலும் இலங்கை ரூபாவின் தங்கப் பெறுமதியும் 2·88 கிறேயினிலிருந்து 2·30 கிறேயினாகக் குறைக்கப்பட்டது. நாணய மதிப்பிறக்கமானது இறக்குமதிப் பொருட்களின் விலையில் அதிகரிப்பினை ஏற்படுத்தி இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும். இதே போன்று ஏற்றுமதிப் பொருட்களின் விலை வெளிநாட்டினருக்குக் குறைக்கப்படுவதால் ஏற்றுமதியில் அதிகரிப்பேற்படும். எனவே, நாணய மதிப்பிறக்கத்தின் மூலம் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டு ஏற்றுமதி ஊக்குவிக்கப் படுவதால் சென்மதி நிலுவையின் குறைநிலை தீர்க்கப்படுமெனப் பொதுவாக நம்பப்படுகிறது.

இலங்கையில் ஏற்றுமதிப் பொருட்கள் நெகிழ்ச்சி குறைந்த முதல் விளைவுப் பொருட்களாக இருப்பதால் விலை வீழ்ச்சியானது ஏற்றுமதிகளை அதிகரிப்பதாக அமையமாட்டாது. மேலும் ஏற்றுமதிப் பொருட்கள் விவசாயப் பொருட்களாக இருப்பதால் குறுங் காலத்தில் உற்பத்தியினை அதிகரித்தல் முடியாததொன்றாகும். இறக்குமதிப் பொருட்களும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களாகவும், முதலீட்டுப் பொருட்களாகவும், இருப்பதால் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் கடினமானதாகும். அத்துடன் பணவீக்கப் பொருளாதாரங்களில் விலையேற்றத்தின்மூலம் கேள்வியினைக் கட்டுப் படுத்தல் நடைமுறையில் சாத்தியமற்ற தொன்றாகும். இதனால் நாணய மதிப்பிறக்கமானது எதிர்பார்த்தளவிற்கு ஏற்றுமதிகளை அதிகரித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாகச் செயற்பட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் (FEECS)

1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட நாணய மதிப்பிறக்கமானது போதிய வெற்றியினை அளிக்காதமையினால் 1968ஆம் ஆண்டு மே மாதம் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டமானது நாணய மாற்று விகிதத்தினை மாற்றாது உத்தியோக பூர்வமான நாணய மாற்று விகிதம், தேய்வடைந்த அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட நாணய மாற்று விகிதம் என இருவகை நாணயமாற்று விகிதங்களை உருவாக்கியது. இதன்படி ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களை A வகைப் பொருட்கள் B வகைப் பொருட்கள் என இருவகைப்படுத்தியது. A வகைப் பொருட்களில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் போன்ற ஏற்றுமதிப் பொருட்களும், உணவுப் பொருட்கள், மருந்துவகைகள், உரம், கல்வி சம்பந்தமான இறக்கு மதிப் பொருட்கள் என்பனவும் உள்ளடங்கும். இப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி உத்தியோக பூர்வமான நாணயமாற்று விகிதத்தில் நடைபெற்றது. ஏனைய ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் B வகைப் பொருட்களாகக் கருதப்பட்டதுடன் இவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி தேய்வடைந்த நாணயமாற்று விகிதத்தில் நடைபெற்றது. இதனால் B வகைப் பொருட்களை இறக்குமதி செய்வது கூடிய செலவுடையதாகும், இவ்வகைப் பொருட்களை ஏற்றுமதி செய்வது இலாபகரமானதாகவும் அமைந்திருந்தது.

இத்திட்டம் அமுலாக்கப்பட்ட காலம் முதல் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி மூலம் பெற்ற வெளிநாட்டுச் செலாவணியினை மத்திய வங்கியிடம் ஒப்படைத்தனர். மத்திய வங்கி ஆரம்பத்தில் வாரந் தோறும் வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ் பத்திரங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தது. இப் பத்திரங்களைக் கொள்வனவு செய்பவர்கள் இறக்குமதி செய்வதற்கான செலாவணிக் கட்டுப் பாட்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாகவும், வங்கிகளிடம் இப் பத்திரங்களை ஒப்படைத்துச் செலாவணியினை விற்பனை விலையில் கொள்வனவு செய்ய உரிமை உடையவர்களாகவும் இருந்தனர். ஆரம்பத்தில் இப்பத்திரங்களின் விலையினை நிர்ணயிக்கும் உரிமை சந்தையிடம் ஒப்படைக்கப்பட்டாலும் பின் இதன் விலை உறுதி செய்யப்பட்டது. முதலில் இது 144 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டு பின் 165 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமானது 1977ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்தது. இத் திட்டம் பல புதிய பொருட்களின் ஏற்று மதிகளை ஊக்குவித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியது மட்டுமன்றி அரசாங்கத்திற்குக் கூடிய வருமானத்தினை அளிக்கும் முறையாகவும் காணப்பட்டது. இதனைற்றான் இத்திட்டம் அரசாங்கத்தின் செலாவணிக் கறுப்புச் சந்தையென வருணிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. கட்டுப்பாடற்ற வர்த்தகம்

1977ஆம் ஆண்டு புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் எற்கனவே வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக அமுலாக்கப்பட்ட செயற்கையான கட்டுப்பாடுகளும், சலுகைகளும் முற்முக நீக்கப்பட்டு ஓரளவு கட்டுப்பாடற்ற வெளிநாட்டு வர்த்தகம் ஏற்படுத்தப்பட்டது. ஏற்கனவேயிருந்த செயற்கையான கட்டுப்பாடுகளும் சலுகைகளும் தவறுன சாதன ஒதுக்கலுக்கும், செலாவணி மோசடிகள், கள்ளக்கடத்தல், கறுப்புச்சந்தை போன்ற நடவடிக்கைகளினுல் புதியதொரு பணக்கார வர்த்தகம் தோன்றி வளர்ச்சியடைவதற்கும் வழி வகுத்திருந்ததால் இது ஏற்படுத்தப்பட்டது. கட்டுப்பாடற்ற வர்த்தகத்தில் முக்கிய அம்சமாக சந்தையினுல் நிர்ணயிக்கப்பட்ட நாணய மாற்று விகித முறை உருவாக்கப்பட்டது. இதனுல் செலாவணி மோசடிகளைத் தவிர்த்து ஏற்றுமதி மூலம் கிடைக்கும் முழுச் செலாவணியினையும் சட்டபூர்வமான முறையில் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினுல் நாட்டின் நுகர்விற்கும் முதலீட்டிற்கும் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடிவதுடன் கள்ளக்கடத்தல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் முடிகிறது. கட்டுப்பாடற்ற வர்த்தக முறையானது சென்மதி நிலுவைச் சமநிலையினைச் சந்தைச் சக்திகளின் செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாகும். இத்திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதனை எதிர்காலக் கணிப்பீடுகள் மூலமே மதிப்பீடு செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 8

# 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை

ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கையானது, வேலையின்மையினளவினைக் குறைத்தல், மெய்வருமானத்தினை அதிகரித்தல் அல்லது பொருளாதார வளர்ச்சி, வருமான ஏற்றத்தாழ்விலுள்ள அகன்ற இடைவெளியினைக் குறைத்தல், சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பண விக்கத்தினைக் கட்டுப்படுத்தல் போன்ற பல குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். ஆனால், இக் குறிக்கோள்கள் யாவற்றையும் ஒரே நேரத்தில் அடைதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். ஏனெனில், இப் பேரினப் பொருளியற் குறிக்கோள்களை ஒரே நேரத்தில் அடையும் போது இவற்றிற்கிடையே காணப்படுகின்ற முரண்பாடுகள் முக்கிய பிரச்சினையாக விருக்கும். உதாரணமாக, வேலைவாய்ப்பினை அதிகரிக்கின்ற பொருளாதாரத் திட்டங்கள் பணவிக்கத்தினை ஏற்படுத்துவதாகவும், அதே நேரத்தில் குறைந்த உற்பத்தித் திறன் உடையதாகவும் காணப்படும். இதேபோன்று கூடியளவு உற்பத்தித் திறன் கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் முதல் செறிவு வாய்ந்தனவாக இருப்பதனால் குறைந்தளவு வேலை வாய்ப்பினையே ஏற்படுத்துவனவாக விருக்கும். எனவே எல்லாக் குறிக்கோள்களையும் ஒரே நேரத்தில் அடைதல் நடைமுறையில் சாத்தியமற்றதால், ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் பொருளாதாரக் கொள்கையினை உருவாக்கும் போது எப்பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்ததோ அதனையே தனது பொருளாதாரக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது ஆட்சிக்கு வந்தபோது வேலையின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய இரண்டும் மிகத் தீவிர பிரச்சினைகளாகக் காணப்பட்டன. இவ்விரு பிரச்சினைகளும் 1970ஆம் ஆண்டிற்குப் பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் தீவிரமாக அதிகரித்தன. 1970ஆம் ஆண்டளவில் 5,50,000ஆக இருந்த வேலையின்மையினளவானது 1978இல் 15 இலட்சமாக அதிகரித்திருந்தது. இதே போன்று 1970இல் 138·2ஆக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 1977இல் 203·2ஆக அதிகரித்திருந்தது. இதனால் புதிய அரசாங்கமானது வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய இரு பிரச்சினைகளையும் முக்கிய பிரச்சினைகளாக எதிர்நோக்குகின்றன. இவ்விரு பிரச்சினைகளில் வேலையில்லாப் பிரச்சினைக்கே அரசாங்கம் முதலிடமளிக்க வேண்டியுள்ளது. ஏனெனில், நாட்டினது மொத்த சனத்தொகையிலும், மொத்த வாக்காளர்களிலும் இளைஞர்கள் முக்கியத்துவம் வகிப்பதால் மட்டுமன்றி சமூகத்தின் அமைதிக்கும் வேலையில்லாப் பிரச்சினையானது பெரும் சவாலாக இருப்பதால் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் அவசியமாகிறது. புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையானது வேலையில்லாப் பிரச்சினைக்குத் துரிதமாகத் தீர்வு காண்பதனையே முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது. இதற்கு அடுத்த படியாகவே பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் ஆகிய குறிக்கோள்கள் இடம்பெறுகின்றன.

### சுதந்திர வர்த்தகப் பொருளாதாரம்

சுதந்திரமான வர்த்தகப் பொருளாதாரம் எனும்போது அது எந்தவித கட்டுப்பாடுகளும், அரசாங்க தலையீடுகளும் அற்ற ஒரு பொருளாதாரத்தினைக் குறிப்பதில்லை. அத்தகையதொரு பொருளாதாரம் நடைமுறையில் சாத்தியமற்றதாகும். சுதந்திரமான வர்த்தகப் பொருளாதாரம் காணப்படுகின்ற நாடுகளில்கூட சுங்க வரிகளையும் ஏனைய வரிகளையும், இறக்குமதியிலும் ஏற்றுமதியிலும் ஓரளவான நிபந்தனைகளையும் மட்டுமன்றி, நாட்டின் சாதன ஒதுக்கலிலும் அரசாங்கமானது தலையிடுவதனை அவதானிக்க முடிகின்றது. இன்று இலங்கையில் சுதந்திரமான வர்த்தகப் பொருளாதாரமானது உருவாக்கப்பட்டுள்ளதென்று கூறும்போது 1977ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பொருளாதார நிலையுடன் ஒப்பிடுகையில் கட்டுப்பாடுகளும் அரசாங்க நடவடிக்கைகளும் குறைவானதொரு பொருளாதார நிலையில் காணப்படுகிறது என்பதே இதன் அடிப்படைத் தாற்பரியமாகும். கோட்பாட்டு ரீதியில் விளக்கப்படுவது போன்றதொரு சந்தைப் பொறிமுறையானது இலங்கையில் தொழிற்படுவதற்கு அரசாங்க மானியங்கள், கட்டுப்பாட்டு விலைகள், பங்கீட்டு முறைகள், இறக்குமதிகளில் நிபந்தனைகள் போன்றவை தடையாக அமைந்துள்ளன. எனவேதான் சுதந்திர வர்த்தகப் பொருளாதாரம் என்ற கருத்தினையே பெருமளவு குறித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசாங்கமானது சுதந்திரமான வர்த்தகப் பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கு இலங்கையின் கடந்தகால அனுபவங்கள் மட்டுமன்றி, அண்மைக்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படுகின்ற ஓரளவு சாதகமான சூழ்நிலைகளும் கூடக் காரணமாகும். 1950ஆம் ஆண்டிற்குப் பின்பு பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகள் குறைவாகக் காணப்பட்ட காலப்பகுதிகளில் கூடிய பொருளாதார வளர்ச்சியினையும், கட்டுப்பாடுகள் அதிகமாகக் காணப்பட்ட காலப்பகுதிகளில் குறைவான பொருளாதார வளர்ச்சியினையும், அவதானிக்க முடிகிறது. 1951ஆம் ஆண்டிலிருந்து 1955ம் ஆண்டு வரை வருடச் சராசரி வளர்ச்சி விகிதமானது 4·6 சதவீதமாக இருந்தது. ஆனால் 1956இல் இருந்து 1965ஆம் ஆண்டு வரை பொருளாதாரக் கட்டுப்பாடுகள் கூடிய காலப்பகுதியில் வருடச் சராசரி வளர்ச்சி விகிதமானது 3·7 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. 1966ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை பொருளாதாரக் கட்டுப்பாடுகள். தளர்த்தப்பட்டபோது சராசரி வளர்ச்சி விகிதமானது 5·2 சதவீதமாக அதிகரித்தது. 1970ஆம் ஆண்டு மீண்டும் பொருளாதாரத்தில் கூடிய கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் 1976ஆம் ஆண்டு வரை வருடத்திற்குரிய சராசரி வளர்ச்சி விகிதமானது 2·8 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

அட்டவணை 8. I

இலங்கையின் வருடச் சராசரி வளர்ச்சி விகிதம்

(சதவீதமாக)

| காலம் | வளர்ச்சி விகிதம் |
|---|---|
| 1951—1955 | 4·6 |
| 1956—1960 | 3·7 |
| 1961—1965 | 3·7 |
| 1966—1970 | 5.2 |
| 1971—1976 | 2·8 |

மூலம்: Ceylon Daily News, September 2, 1977.

இலங்கையின் பொருளாதாரத்தில் தனியார் துறை, அரசாங்கத் துறை ஆகிய இரண்டுமே முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. இந் நிலையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கூடிய வருமான வரி, விலைக்கட்டுப்பாடுகள் போன்றவற்றினை அரசாங்கம் மேற்கொள்ளும்போது தனியார் துறையின் உற்பத்தி முயற்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு பாதிக்கப்படுவனவாக அமைந்திருக்கும். மேலும் கட்டுப் பாடுகளை அதிகரிக்கும்போது கள்ளக்கடத்தல், செலாவணி மோசடிகள், பதுக்கல், கறுப்புப் பணம் போன்றவை அதிகரிப் பதனால் இவை பொருளாதாரச் சீர்கேடுகளை மேலும் அதிகரிப்பன வாகவிருக்கும். தனியார் துறையினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை களை மேற்கொள்ளும் அதே நேரத்தில் அரசாங்கத்துறையினைச் சிறந்த முறையில் விருத்தியடையச் செய்திருப்பின் உயரிய பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தல் சாத்தியமானதாக இருக்கும். ஆனால் அரசாங்கத் துறையில் காணப்படும் நிர்வாகச் சீர்கேடுகள், சிவப்புநடா முறை, திறமையின்மை போன்ற காரணிகள் இத்துறையில் உற்பத்திப் பெருக்கத்தினை ஏற்படுத்து வதற்குத் தடையாக அமைந்திருக்கின்றன. எனவே, கட்டுப்பாடு களைத் தளர்த்தும்போது தனியார் துறையினர், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்றவற்றினை இலகுவாக இறக்குமதி செய்ய முடிவதால் பெருமளவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவதுடன் பொருளாதார சீர்கேடுகளும் பெருமளவு கட்டுப்பாட்டுக்குட் பட்டதாக இருக்கும்.

இவ்விறந்தகால அனுபவங்களுடன் 1975ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பினால் ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் கூட சுதந்திரமான வர்த்தக பொருளாதாரக் கொள்கையினை அமுலாக்குவதற்குச் சாதகமாக அமைந்திருந்தன. சுதந்திரமான வர்த்தகக் கொள்கையினை ஒரு நாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் போதியளவு வெளி நாட்டுச் செலாவணியினைப் பெறக்கூடியதாக இருத்தல் இன்றி யமையாததாகும். இதனை ஏற்றுமதி வருமானத்தால் மட்டுமன்றி ஆரம்பத்தில் வெளிநாட்டுக் கடன்கள் மூலமும் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. சாதகமான வெளிநாட்டு வர்த்தகம், நல்லெண்ணத்தின் அடிப்படையிலமைந்த வெளிநாட்டுக் கடன்கள் ஆகிய இரு காரணிகளுமே அரசாங்கத்தின் சுதந்திரமான வர்த்தகக் கொள்கையின் ஆயுட் காலத்தினைத் தீர்மானிப்பனவாக அமைந் திருக்கும்.

சுதந்திரமான வர்த்தகக் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்துறை, தனியார்துறை மட்டுமன்றி வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முதலீடுகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினையும் உற்பத்திப் பெருக்கத்தினையும் ஏற்படுத்துவதற்கான ஊக்கங்கள் இன்று அளிக்கப்பட்டுள்ளன. முன்னைய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தினை அமுலாக்கியது போன்று புதிய அரசாங்கமும் மூன்று பெரும் பொருளாதாரச் செயற்திட்டங்களான மகாவலித்திட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் ஆகியவற்றினைத் துரிதமாகச் செயற்படுத்த முனைந்துள்ளது. இம் மூன்று செயற்திட்டங்களும் அதிகரித்து வரும் வேலையில்லாப் பிரச்சினைக்குக் குறுங்காலத்தில் துரிதமான தீர்வு காணும் திட்டங்களாக அமைந்துள்ளது.

**மகாவலித் திட்டம்**

மகாவலி கங்கையினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் 1930ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டாலும், மகாவலியின் நவீன பாரிய திட்டமானது 1965—1968க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளினதும் உலக உணவு ஸ்தாபன (UNDP/FAO) நிபுணர்களினதும் உதவியுடன் உருவாக்கப்பட்டதாகும். இத் திட்டமானது இலங்கையின் 39 சதவீதமான நிலப்பரப்பினையும் விருத்தியடையாத வலயத்தில் (வரண்டபிரதேசம்) 55 சதவீதமான நிலப்பரப்பினையும் உள்ளடக்கியதாகும். இத் திட்டமானது 30 வருடத்தில் பூர்த்திசெய்யப்படக்கூடிய வகையில் வகுக்கப்பட்டதுடன் இதன்கீழ் 900,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதியினைப் பெறக்கூடியதாக இருக்கும். இதில் 650,000 ஏக்கர் நிலம் புதிதாக நீர்ப்பாசனத்துக்குள்ளாக்கப்படுவதுடன் 250,000 விவசாயக் குடும்பங்களும் இதில் குடியேற்றப்படும். அத்தோடு இத் திட்டம் பூர்த்தியடையும்போது மொத்தமாக 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கப்படும். மேலும் இத் திட்டத்தின் மூலம் 500 மெகாவார்ட் நீர் மின்சாரம் பெறப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மகாவலித் திட்டமானது பல பயன்தரு திட்டமாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் அரிசி, பருப்பு, மிளகாய், சோளம், மரக்கறிவகைகள் போன்றவை பயிரிடப்படுவதுடன் பல கைத்தொழில் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இத் திட்டத்தின் மூலம் போதியளவு மின்சாரம் கிடைப்பதனால் பல கைத்தொழிற்சாலைகளை இப் பகுதியில் ஆரம்பிக்க முடிவதுடன் நகர ஆக்கம், சுற்றுப்பிரயாண விருத்தி போன்றவற்றினையும் ஏற்படுத்த முடியும். எனவே இத் திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படும் போது நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் இதனால் பெருமளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

புதிய அரசாங்கமானது 30 வருட காலத்திற்கு வகுக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய கட்டங்களையெல்லாம் ஏககாலத்தில் ஆரம்பித்து 6 வருடங்களுக்குள் முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆறுவருடத்தில் மகாவலித்திட்டம் முடிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது என்னும்போது 30 வருடத்தினுள் செயற்படுத்த இருந்த எல்லா அம்சங்களும் பூரணமாக நிறைவேற்றப்பட்டதாகவன்றி பெருமளவு முடிக்கப்பட்டதாகவே இருக்கும். இதன்மூலம் குறுகிய காலத்தில் நாட்டில் வேலையற்றிருக்கும் பெருமளவு ஊழியத்திற்கு வேலை வாய்ப்பினை அளிக்க முடிவதுடன் உற்பத்திப் பெருக்கத்தினையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மகாவலித் திட்டத்தினை 6 வருடத்தில் செயற்படுத்த முனையும் அரசாங்கமானது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இத் திட்டத்தினைச் செயற்படுத்தத் தேவையான நிதியினை உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து பெறுதல் சாத்தியமற்றதாகும். 1968ஆம் ஆண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டபோது ஏற்படும் மொத்தச் செலவு 6,700 மில்லியன் ரூபாவெனக் கணிக்கப்பட்டிருந்தது. ஆனல் இன்று உபகரணங்கள், ஊழியம் போன்றவற்றின் விலையேற்றத்தினல் ஏற்படும் மொத்தச் செலவானது 20,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. புதிய அரசாங்கத்திற்கு ஜேர்மன், ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகள் திட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்குமான நிதியினை வழங்க முன்வந்துள்ளன. இந் நாடுகள் இத் திட்டத்திற்கு வழங்குகின்ற நிதியானது நல்லெண்ணத்தி னடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. வாக்குறுதியளித்தபடி இந் நாடுகள் நிதியினை வழங்குமேயானல் நிதிப் பற்றாக்குறைப் பிரச்சினை ஏற்பட முடியாது.

இத் திட்டத்திற்கு வாங்கப்படும் பெருமளவு கடன் எதிர் காலத்தில் கடனுக்கான வட்டியுடன் திருப்பிக் கொடுக்கவேண்டியிருப்பதனல் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமையானது அதிகரிக்கும். இதனல் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் இலங்கையின் ஏற்றுமதியினைக் கூட்டி இறக்குமதியினைக் கட்டுப்படுத்தல் வேண்டும். மகாவலித் திட்டத்தின் மூலம் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுமேயானல் இலங்கை தனது இறக்குமதியினைப் பெருமளவு குறைக்கக் கூடியதாக விருக்கும். இத்திட்டம் உள்நாட்டில் பெரும் உற்பத்திப் பெருக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கடனனது பெரும் சுமையாகவே அமைந்திருக்கும்.

பாரிய பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பணவீக்க விலை அதிகரித்தல் தவிர்க்கமுடியாததொன்றாகும். மகாவலித் திட்டத்தின்மூலம் 6 வருடத்தில் ஏறக்குறைய 20,000 மில்லியன் ரூபா பொருளாதாரத்தில் செலுத்தப்படவிருக்கிறது. இத்துடன் இவ் ஆறுவருடத்தில் அரசாங்கத்தின் குறைநிலை வரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுத் திட்டங்கள் மூலமும் பெருமளவு பணம் பொருளாதாரத் தினுள் செலுத்தப்படவிருக்கிறது. இவ்வாறு பண நிரப்பலில் ஏற்படும் அதிகரிப்பானது பெருமளவு பணவீக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். எனவே எதிர்காலத்தில் அரசாங்கமானது அதிகரிக்கின்ற மக்களின் வருமானத்தில் கணிசமான பங்கினைச் சேமிப்பாகவும், வரியாகவும் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் விலைக்கட்டுப்பாடு, பங்கீட்டு முறை போன்றவற்றினைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதுடன், பதுக்கலுக்கும் கறுப்புச் சந்தைக்கும் எதிராக தீவிரமான நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல் வேண்டும். சுருங்கக் கூறின் பணவீக்கத் தினைக் கட்டுப்படுத்தச் சாதகமான இறைக்கொள்கை, நாணயக் கொள்கை ஆகியவற்றினைக் கையாளுதல் அவசியமாகும்.

30 வருட மகாவலித் திட்டத்தினை ஆறுவருடத்தில் முடிக்க முனையும்போது பெருமளவிற்கு முதல் செறிவான பாரிய இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றினைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இதனால் அரசாங்கம் எதிர்பார்க்குமளவு வேலை வாய்ப்பினை அளிக்க முடியாத நிலை ஏற்படுவதுடன் இத் திட்டத் தினைப் பெருமளவிற்கு ஊழியச் செறிவான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியே செயற்படுத்துமாறு மகாவலித் திட்ட சபையிடம் பணித்துள்ளது. இத் திட்டத்தினை அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஏற்ப பெருமளவு ஊழியச் செறிவான தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி வெற்றிகரமாக அமுலாக்குதல் எமது நாட்டுப் பொறி யியலாளர்களிலேயே தங்கியிருக்கிறது.

மகாவலித் திட்டத்தின் பூரண வெற்றியானது 6 வருடத்திற்குள் அதன் முக்கிய கட்டங்கள் முடிக்கப்படுவதனால் மட்டுமன்றி, அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியினைப் பெறுவதன் மூலமும் நிர்ணயிக்கப்படுவதாக இருக்கும். இத் திட்டத்தின் மூலம் வருடந் தோறும் 1,900 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உற்பத்தி யினைப் பெறமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. 250,000 விவசாயக் குடும்பங்களை வெற்றிகரமாகக் குடியேற்றும்போதே இது சாத்திய மானதாகும். எனவே குடியேற்றத்திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான சமூக பொருளாதார ஆய்வுகள் இப் பகுதியில் மேற்கொள்ளப்படுவதுடன் குடியேற்றத் திட்டங்களைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான நிருவாகிகளையும் பெருமளவு பயிற்றுவித்தல் அவசியமானதாகும். இலங்கையில் 1935ஆம் ஆண்டிலிருந்து பல குடியேற்றத் திட்டங்கள் மேற்கெள்ளப்பட்ட மையினால் அவற்றால் ஏற்பட்ட அனுபவங்களை இத் திட்டத்தில் பெருமளவு பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம் (Colombo Master Plan)**

கொழும்பு இலங்கையினது தலைநகராக மட்டுமன்றி உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக மைய ஸ்தானமாகவும், பெருமளவு நவீன கைத்தொழில்கள் நிறைந்த பிரதேசமாகவும் காணப்படுகிறது. இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளின் மையமாகக் கொழும்பு அமைந்திருப்பதனுல் இலங்கையின் ஏனைய பிரதேச மக்களை, வேலைவாய்ப்பு வசதியான வாழ்க்கை என்ற அடிப்படையில் ஈர்க்கும் சக்தி வாய்ந்த நகரமாகவும் காணப்படுகின்றது. ஏனைய பிரதேச ஊழியத்துடன் ஒப்பிடும்போது கொழும்பு மாவட்டத்தி லுள்ள ஊழியமானது தொழில் தேர்ச்சி பெற்ற ஊழியமாக இருப்பதுடன் கைத்தொழில் முயற்சிக்கு அத்தியாவசியமான பல பொருளாதார அடிப்படை அமைப்புக்களும் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. சிறந்த வீதிப் போக்குவரத்து, நீர் மின்சார வசதிகள், இருப்பிட வசதிகள், துறைமுகம், தந்தி - தொலைபேசித் தொடர்புகள் போன்ற யாவும் இங்கு சிறப்பான முறையில் காணப்படுகின்றன.

அண்மைக்காலங்களில் கொழும்பு நகரில் வேலையற்றவர்கள் விகிதம் 22·6 சதவீதமாக அதிகரித்துள்ளது, இதற்கு கொழும்பு நகரினது சனத்தொகையிலேற்பட்ட அதிகரிப்பு மட்டுமன்றி, பிற இடங்களிலிருந்தும் கொழும்பிற்கு வேலைதேடி வருபவர்களினது தொகையிலேற்பட்ட அதிகரிப்பும் காரணமாகும். நகரப்புறங் களிலேற்படும் வேலையின்மையின் அதிகரிப்பானது பல பாரதூரமான சமூகச் சீர்கேடுகள் உருவாகுவதற்கும் வழி வகுப்பதாகவிருக்கும். கொழும்பு நகரின் வேலை வாய்ப்பினை கைத்தொழில்களை அதிகரிப் பதால் மட்டுமன்றி பல சேவைகளை அதிகரிப்பதன் மூலமும் ஏற்படுத்த முடியும். பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படும்போது அதாவது 2001ஆம் ஆண்டளவில் இதன் மூலம் ஏற்படுத்தப்படும் வேலை வாய்ப்பானது 1,619,000ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டமானது 14 நகரங்களை உள்ளடக்கியதாகும். இது கொழும்பு, தெகிவளை கல்கிசை ஆகிய இரு மாநகரப் பிரிவுகளையும், 12 நகர பட்டின சபைகளையும் உள்ளடக்கியதாகும். இத்துடன் சில கிராம சபைப் பிரிவுகளும் இதனுள் உள்ளடக்கப்படுகின்றன. பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டத்திற்குள் 215 சதுர கிலோமீட்டர் பிரதேசம் உள்ளடக்கப் படுவதுடன் இதில் 82 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பானது, கொழும்பு மாநகர எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரினது எல்லையானது இத் திட்டத்தின் மூலம் விசாலமாக்கப் படுவது இதில் முக்கியமானதொரு அம்சமாகும். இந்த நகரப்புற விருத்தியானது பின் வரும் குறிக்கோள்களைக் கொண்டதாகும்.

அ. வீட்டுத்துறையினரது வருமானத்தையும், வேலை வாய்ப் பையும் அதிகரித்தல்.

ஆ. எல்லோருக்கும் குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வசதி படைத்த வீடுகளை அளித்தல்.

இ. எல்லா வீடுகளுக்கும் போதிய நீர் வசதிகளை அளித்தல்.

ஈ. நகரத்தின் சுகாதார வசதிகளை அதிகரித்தல்.

உ. வெள்ளப் பாதுகாப்பு அளித்தல்

ஊ. போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல்

எ. நகரின் கலாசார வளர்ச்சியினை விருத்தி செய்தல்.

ஏ. சூழல் மாசுபடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டமானது பூரணமாக நிறைவேற்றப்படும்போது கொழும்பு நகரினால் அளிக்கக்கூடிய வேலைவாய்ப்பானது பல மடங்காக அதிகரித்து விடும். கொழும்பு நகர் பரந்ததாக்கப்படும்போது வர்த்தக வளர்ச்சி, ஏனைய பொழுது போக்கு வசதிகளின் அதிகரிப்பு, கைத்தொழில்களின் வளர்ச்சி ஆகியனவும் ஏற்பட்டு வேலைவாய்ப்பினளவினை அதிகரிக்கும். மேலும் இன்று கொழும்பு மாநகர பிரதேசத்திற்குள் காணப்படும் மேலதிக சனத்தொகைப் பிரச்சினைகளுக்கும் இது ஏற்றதொரு தீர்வாக அமையும். . இத் திட்டமானது பெருமளவிற்குப் பொருளாதார அடிப்படை முதலீடுகளான போக்குவரத்து வசதிகள் நீர் மின்சார விநியோகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் பெருமளவு நிலையான முதலீட்டுச் செலவினையும் கொண்டதாகும்.

**சுதந்திர வர்த்தக வலயம்**

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தினை அமைப்பதற்குச் சில பரிசிலனைகள் 1970ஆம் ஆண்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டாலும் 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தி னலேயே ஆக்கபூர்வமான நடைமுறைத் திட்டமானது வகுக்கப் பட்டு உருவாக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுதந்திர வர்த்தகவலயம் எனும்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களும் உள்நாட்டு முதலீட்டாளர்களும் குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கக் கட்டுப்பாடுகளுடனும் வரிச் சலுகைகளுடனும் கைத் தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய பிரதேசத்தினைக் குறிக்கின்றது. இங்கு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவோ அல்லது உள்நாட்டிலிருந்து பெறப்பட்டதாகவோ இருக்கலாமென்பதுடன் இவ் வுற்பத்திகள் ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டதாகவு மிருக்கும். இது இலங்கையின் கட்டுநாயக்க சர்வதேச விமானத் தளத்திற்கு அண்மையிலுள்ள 200 சதுரமைல் பிரதேசத்தினை உள்ளடக்கியதுடன், இதன் நிர்வாகம் முழுவதும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக ஆணையாளரின் கட்டுப் பாட்டுக்குட்பட்டதாகும்.

சுதந்திர வர்த்தக வலயமானது வேலைவாய்ப்பினை அதிகரித்தல், வெளிநாட்டுச் செலாவணியினை உழைத்தல் ஆகிய இரண்டினையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டத்தில் நேரடியாக 40,000லிருந்து 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப் பினையும், மறைமுகமாக 80,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பினையும் அளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயமானது பூரணமான வெற்றியினை அளிக்கும்போது 300,000 மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க முடியுமெனப் பொருளியற்றிட்டமிடலாளர்களால் நம்பப்படுகின்றது. மேலும் இத் திட்டத்தின்மூலம் பிரதேச அபிவிருத்தி, தொழில் நுட்ப முகாமையியல் பரிவர்த்தனை போன்றவற்றுடன் உள்நாட்டுச் சேமிப் பினையும் அதிகரிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுநாயக்காவில் ஆரம்பிக்கப்படும் சுதந்திர வர்த்தக வலய மானது வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய பல அம்சங் களைக் கொண்டுள்ளது. இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது கட்டுநாயக்கா அமைந்துள்ள தென்மேற்குப் பிரதேசமானது பொருளாதார ரீதியில் நன்கு விருத்தியடைந்த வலயமாகக் காணப் படுகிறது. வீதிப் போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்து, தபால் தந்திச் சேவைகள், மின்சாரம் போன்ற பல பொருளாதார அடிப்படை அமைப்புக்கள் இப் பிரதேசத்தில் விருத்தி செய்யப்பட் டுள்ளன. மேலும் கொழும்புத் துறைமுகமும், கட்டுநாயக்காவிலுள்ள சர்வதேச விமான நிலையமும் இப் பிரதேசத்திற்கு விசேட சிறப் பளிப்பனவாக உள்ளன. இதனால் இப் பிரதேசத்தில் வெளிநாட்டு முதலீட்டாளரைக் கவருவதற்குச் சாதகமான சூழ்நிலையினை உரு வாக்குவதற்கு அரசாங்கம் பெருமளவு செலவீடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீட்டினை மேற்கொள்ள மலிவான ஊதியம், உள்நாட்டுச் சந்தை வாயப்பு ஆகிய இரண்டுமே முக்கிய காரணங்களாகும். இலங்கையில் இவ்விரு காரணிகளும் சிங்கப்பூரினைவிடச் சாதகமாகக் காணப்படுகின்றன. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள ஊழியம் கல்விகற்றதும் தொழில் தேர்ச்சிபெற்றதுமான ஊழியமாக இருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளருக்கு முதலீடுகளை மேற்கொள்ளுவதற்கு மேலும் தூண்டுதலளிப்பதாக இருக்கும். சுதந்திர வர்த்தக வலயத்தின் வெற்றியானது அதில் முதலீடு செய்யப்படும் வெளிநாட்டு முதலீட்டு அளவினைலன்றி, அதனுல் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பு, உழைக்கப்படுகின்ற வெளிநாட்டு செலாவணி ஆகிய இரு காரணிகளிலுமே நிர்ணயிக்கப்படும்.

புதிய அரசாங்கத்தின் முக்கிய செயற்றிட்டங்களான மகாவலித் திட்டம், பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் ஆகிய மூன்றும் கூடியளவிற்கு வேலைவாய்ப்பினை அதிகரிப்பதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களாகும். அத்துடன் மகாவலித் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியினையும், பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் சேவைகளின் வளர்ச்சியினையும் சுதந்திர வர்த்த வலயத்தின் மூலம் வெளிநாட்டுச் செலாவணியினையும் உழைக்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

### Books


1. Bansil, P. C. *Ceylon Agriculture* (Dhanpatkai & Sons, Delhi 1971).
2. Birger Moler, *Employment Approaches to Economic Planning in developing Countries* (Tryckeri Balder AB, Sweden, 1972),
3. Central Bank of Ceylon, *Senza Lectures* (Colombo, 1968).
4. Das Gupta, B. B. *A Short Economic Survey of Ceylon* (Associated News Paper of Ceylon Ltd. Colombo, 1949).
5. Farmer, B. H. *Pioneer Peasant Colonisation in Ceylon* (Royal Institute of International Affairs, London, 1957).
6. Gavin, W. Jones and Selvaratnam, *Population Growth and Economic Development* (Marga Publication. Colombo, 1972).
7. Henry, M. Oliver, *Economic Opinion and Policy in Ceylon* (Duke University Press, London, 1957).
8. Indraratna, A. D. V. de S. *The Economy of Ceylon* (M. D. Gunasena & Company Ltd., Colombo, 1966).
9. Industrial Development Board, *Research and Industry* (Colombo, 1970).
10. Jennings, Ivor, *The Economy of Ceylon* (Oxford University Press, London, 1951).
11. Kanesalingam, V. *Pricing Policy of Public Enterprises* (Industrial Development Board, Colombo, 1972).
12. Karunaratne, Neil Dias, *Techno-Economic Survey of Industrial Potential in Sri Lanka* (Documentation and Publications Division of the Industrial Development Board of Ceylon, 1973).
13. Karunatilake, H. N. S. *Banking and Financial Institutions in Ceylon* (Central Bank of Ceylon, Colombo, 1971).
14. Karunatilake, H. N. S. *Central Banking and Monetary Policy in Sri Lanka* (Lake House Investment Limited Book Publishers, Colombo, 1973).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Karunatilake, H. N. S. *Economic Development in Ceylon* (Prager Publishers. New York, 1971).

16. Kurukulasuriya, C. *Co-operation—It's Rises and Growth in Ceylon* (Co-operative Federations of Ceylon, Colombo, 1971).

17. Marga Institute, *The Co-operative System and Rural Credit in Sri Lanka* (Marga Publication, Colombo, 1974).

18. Marga Institute, *Welfare and Growth in Sri Lanka* (Marga Publication, Colombo, 1974).

19. Marga Institute, *Youth Land and Employment*, (Marga Publication, Colombo, 1974).

20 Mendis, M. W. J. G. *Mahaweli Development Project in, Sri Lanka* (Lake House Investment Limited Book Publishers Colombo, 1973).

21. Obeyasekera, G. *Land Tenure in Ceylon* (Cambridge University Press, London, 1967).

22. Ramachandra, N. *Foreign Plantation Investment in Ceylon 1889—1958* (Central Bank of Ceylon, Colombo, 1963).

23. Ratnaweera, D. de S. *New Agricultural Settlements Schemes* (The Colombo Apothecaries & Co. Ltd., Colombo, 1977).

24. Richards, P. J. *Employment and Unemployment in Ceylon* (Development Centre of the Organisation for Economic co-operation and Development, Paris, 1971).

25. Samarasinghe, S. W. R. de A (ed.) *Agriculture in the Peasant Sector of Sri Lanka* (Ceylon Students Seminar, Peradeniya, 1977.)

26. Sarkar, N. K. *The Demography of Ceylon* (Government Press Colombo, 1957).

27. Silva, K. M. de (ed.), *Sri Lanka A Survey* (C. Hurst & Company, London, 1977).

28. Snodgrass, R. E. *Ceylon, An Exports, Economy in Transition* (Yale University Press, U. S. A. 1966).

29. Thiagarajah, A. *The Economic Development of Ceylon* (Sri Shanmuganathan Press, Jaffna, 1966).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. Tilakaratna, W. M. *Agricultural Credit in a Developing Economy* (Central Bank of Ceylon, Colombo, 1963).

31. United Nation, *Population of Sri Lanka* (1977).

32. Warnasena, Rasaputran, *Influence of Foreign Trade on the Level and Growth of National Income of Ceylon 1926—1957* (Central Bank of Ceylon, Colombo, 1964).

33. Wijesinghe, Mallory E. *The Economy of Sri Lanka, 1946—1975* (Ranco Printers & Publishers Ltd., Colombo, 1976).

34. Williams, K. *The National Income of Ceylon* (Colombo, 1952).

35. Wriggins, Howard W. *Ceylan—Dilemmas of a New Nation* (Princeton University Press, New Jersey, 1960).

## Periodicals and Reports

1. Central Bank of Ceylon, *Annual Reports 1950—1977.*

2. Central Bank of Ceylon, *Monthly Bulletines 1950—1977.*

3. Central Bank of Ceylon, *Report of the Survey of Rural Credit and Indebtedness 1969.*

4. Central Bank of Ceylon, *Staff Studies* (All Publications).

5. Central Bank of Ceylon, *Survey of Defaults in the Repayment of New Agricultural Loans*, 1972.

6. Central Bank of Ceylon, *The Determinants of Labour Force Participation Rates in Sri Lanka*, 1973.

7. Department of Agrarian Service, *Thattumaru and Kattimaru Study* (Colombo, 1972).

8. Department of Census and Statistics, *Census of Population 1953, 1963, 1971.*

9. Department of Census and Statistics, *The Socio-Economic Survey of Ceylon* 1969/70.

10. Department of Census and Statistics, *Statistical Abstract of Ceylon* (All Publications).

11. Department of Census and Statistics, *Statistical Pocket Book of Sri Lanka 1970—1977.*

12. Department of Census and Statistics, *Survey of Industrial Production* 1968.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Government of Sri Lanka, *Five Year Plan*, 1971.

14. Government of Sri Lanka, *Report of the Commission of Inquiry of Agency Houses and Brokering Firms* (Sessional papers No. XII. Colombo, 1974).

15. Government of Sri Lanka, *Taxation Inquiry Commission Report* (Sessional Papers No. X, Colombo, 1968).

16. I. B. R. D. Report, *The Economic Development of Ceylon* (Colombo, 1952).

17. International Labour Organisation, *Marching Employment Opportunities aud Expectation* (Geneva, 1971).

18. Marga Institute, *Marga* (All Volume).

19. Minister of Finance, *Budget Speech 1950—1977*.

20. Ministry of Finance, *Public Sector Progress*, 1973.

21. Ministry of Planning and Economic Affairs, *The Problem of Foreign Exchange and Long-term Growth of Ceylon* 1968.

22. Peoples Bank of Ceylon, *Economic Review* (All Publications)·

23. The Planning Secretariat, *The Ten Year Plan* (Colombo, 1959).

## Unpublished Thesis

1. Edirisooriya, G. *Capacity Utilization and Economic Development with Special Reference to the Parastatal Sector In Sri Lanka* (Thesis Submitted in Fulfillement of the Degree of M.Litt. in Economics), University of Glasgow, 1977.

2. Jeyaratnarajah, R. *An Analysis of Commercial Banks in Sri Lanka Economy 1950—1970*, (Thesis submitted in Fulfillment of the Degree of Masters in Economics), University of Sri Lanka, Peradeniya Campus, 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thevathasleis.
Main Road.
Nepalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org